அயல்மகரந்தச் சேர்க்கை

அப்துல் காதர்



அயல்மகரந்தச் சேர்க்கை

அப்துல் காதர்

நேஷனல் பப்ளிஷர்ஸ்
2, வடக்கு உஸ்மான் சாலை,
(கோடம்பாக்கம் மேம்பாலம் அருகில்),
தியாகராய நகர், சென்னை - 600 017.
✆ : 2834 3385

நூல் விவரக் குறிப்பு

■

அயல்மகரந்தச் சேர்க்கை
(கட்டுரைகள்)

■

அப்துல் காதர்

■

முதற் பதிப்பு
டிசம்பர் 2006

■

உரிமை
முகமது தாரிக் உசேன், B.E., M.B.A.,

■

வடிவமைப்பு
கீற்று
போன் : 9894780514

■

அச்சு
சபரி பிராசஸ்
ஜானி ஜான்கான் ரோடு,
சென்னை - 600 014.
செல் : 9841043072

■

வெளியீடு
நேஷனல் பப்ளிஷர்ஸ்
2 (புது எண் 3), வடக்கு உஸ்மான் சாலை, முதல் மாடி,
(கோடம்பாக்கம் மேம்பாலம் அருகில்)
தியாகராயநகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 2834 3385

■

விலை
ரூபாய் 100.00

எதற்கும் வளையாது
என்னை
முன்னே நிற்கும்
முதுகெலும்பாக நிமிர்த்திய
அத்தா
மொ. பீ.சி. திவான் முகையித்தீன்



அவர்கள் நினைவாக...

உள்ளே...

உப்புச் சிப்பி

பேராசிரியர் அப்துல்காதர்

படைப்பாளர் மூளைக்குள்
பலகணி திறக்கும்
சங்கத்தமிழ் மதுரையைச்
சாளரம் ஆக்கும்

புகுந்து வரும் வாசகப்
புல்லாங்குழல்
கண்களையும் இமைமூட வைக்கும்
புதிய காற்று.

அயல்மொழி மகரந்தங்களை
அள்ளிச் சுமந்தது
ஓர்
அன்னையைப் போல!

என் எழுதுகோலைச் சூலாக்கி வெளிவந்த
இலக்கியத் தொடர்
"அயல்மகரந்தச் சேர்க்கை"

2003 நவம்பர் முதல்
வெளியிட்ட
புதியகாற்றின்
சுவாசப்பை
இராஜா ஹசன் –
புலரும் சமூகப்
புழுக்கம் தீர்க்கக்
காற்றைக் கை விசிறி யாக்கிய
நூலை நெய்த
பேராசிரியர்
ஹாமீம் முஸ்தபா –

அயல்மகரந்தச் சேர்க்கைப்
புத்தகப்பூ விரிக்கும்
நேஷனல் பப்ளிஷர்ஸ்
தம்பி
ஷாஜஹான்

இந்தக் குழந்தையின்
காலடித்
தூசியையும்
மகரந்தம் எனக் கொண்டாடும்
சிலம்பொலியார்
கவிஞர்
சிற்பி பாலசுப்பிரமணியம்
உணர்ச்சிக் கவிஞர்
காசி ஆனந்தன்
ஆகியோர்
அனைவர்க்கும் நன்றி!

பதிப்பூ வாசல்

ஷாஜஹான்
நேஷனல் பப்ளிஷர்ஸ், சென்னை.

2003 நவம்பர் முதல்
'அயல்மகரந்தச் சேர்க்கை'
இலக்கியத் தொடர்வண்டி
புதியகாற்று
மாத இதழ்த்
தண்டவாளத்தில்
பயணித்து வருகிறது.

ஏராளமான
இலக்கியப் பயணிகளை
ஈர்த்து வருகிறது!

அதன்
முதல்
39 கட்டுரைகள்
தற்போது
நூலாக்கம் பெற்று
வெளிவருகின்றன

எழுத்துவடிவம் பெறாமலே
அண்ணன்
கவிமாமணி
அப்துல்காதர்
கருத்துகள்

காற்றில்
கரைந்து விடுமோ
எனக்
கவலைப்பட்டோம்

ஆனால்

புதியகாற்றில்
மகரந்தப் பயணம்
தொடர்கிறது!

தொடர்வெளியிட்ட
புதியகாற்று
இதழ் ஆசிரியர்
சகோதரர்
இராஜா ஹஸன்
பொறுப்பாசிரியர்
நூலை
வடிவமைத்த
பேராசிரியர் தம்பி
ஹாமீம் முஸ்தபா

எழுதுகோலைத்
துலாக் கோலாக்கிப்
புத்தகத்தை மதிப்பீடு செய்துள்ள
செந்தமிழ்ச் செம்மல்
சிலம்பொலியார்
சிந்தனை அருவி
சிற்பி பாலசுப்பிரமணியம்
ஈழப்பாவேந்தர்
காசிஆனந்தன்

நூலை வெளியிட்ட
வாணியம்பாடி முத்தமிழ் மன்றம்
ஆகியோர் அனைவர்க்கும்
அன்பு நன்றிகள்!



மகரந்தக் கதவு திறக்கிறது

சிலம்பொலி செல்லப்பன்

அப்துல் காதர்! - தமிழகத்தின் மூலை முடுக்குகளிலும், ஏன் உலகில் தமிழறிந்த மக்கள் இருக்குமிடங்களிலெல்லாம் ஒலித்துக் கொண்டிருக்கும் ஒரு சிறப்புப் பெயர். இவர் சீரிய சிந்தனையாளர்; கனிச் சாற்றுக் கவிஞர்; கருத்து வளம் மிக்க கட்டுரையாளர்; நாவன்மை மிக்க பேச்சாளர் எனும் தகுதிகளைப் பெற்றுள்ளவர். தாம் எழுதிய 'அயல் மகரந்தச் சேர்க்கை' எனும் நூலுக்கு அணிந்துரை எழுத என்னைப் பணித்துள்ளார்.

"தங்கள் முத்திரையோடு கூடிய அணிந்துரைதான் புத்தகத்தின் தகுதியை மிகுதியாக்கும். எனவே தங்கள் எழுதுகோல் எனக்காகத் தாய்ப்பால் சுரக்கட்டும்" எனத் தமக்கேயுரிய அணிமொழியில் எனக்கு எளிதில் எழுதிவிட்டார். ஆனால் இந்நூலுக்கு அணிந்துரை எழுதுவது அவ்வளவு எளிதாயில்லையே!

சொல்லுக்குச் சொல் சுவையேற்றும் நூலின் நடைச் சிறப்பைச் சொல்லுவதா? உணர்ச்சி, குறியீடுகளின் நேர்த்தியைக் கூறுவதா? படிமங்கள் படர்ந்திருக்கும் பாங்கினைப் பகர்வதா? ஒன்றையொன்று ஒப்பிட்டுச் சொல்லும் உயர்திறனை வியப்பதா? பாடல்களின் பொருளை விளக்கும் நேர்த்தியைப் போற்றுவதா? கதைகளைக் கூறிக் கருத்துக்கு வலிமை சேர்க்கும் ஆற்றலைப் பாராட்டுவதா? அரசியல், பொருளாதார, சமூக அவலங்களைச் சுட்டிக் காட்டும் நக்கீரத் தன்மையை நவில்வதா? அறிஞர்களின் வரலாறுகள், பொன் மொழி களைக் கூறி உள்ளம் கொள்ளை கொள்வதை உரைப்பதா? இவரைப் போல் எழுதும் வல்லமை நமக்கு வாய்க்காதா என நம்மை மயங்க வைப்பதைச் சொல்வதா? இவற்றுள் எதை எழுதுவது? இவை எல்லாமே இணைந்தது தான் இந்நூல் என்னும் ஒரு வரியே பொருத்தமான அணிந்துரையாம்!

மலர் மணம்:

இந்நூலுள் முப்பத்து ஒன்பது அரிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இவை அனைத்துமே தேம்பூங்கட்டியாய் இனிப்பூட்டு

கின்றன; வீசு தென்றலாய்ச் சிலிர்ப்பூட்டுகின்றன; தண்ணிய சுனை நீராய்க் குளிர்விக்கின்றன. 'அறம் செய விரும்பு' எனும் ஔவையின் ஆத்திச்சூடி போல, கட்டுரைத் தலைப்பு ஒவ்வொன்றும் ஒரு கவிதை அடியாய் அமைந்திருக்கக் காண்கிறோம். மணம் தேக்கியுள்ள மல்லிகை, முல்லை மொட்டுக்களாய்த் தலைப்புகள் ஒளிர்ந்து, இதழ் விரிந்து விரிந்து மணம் பரப்பி மகிழ்வூட்டுகின்றன.

அரிய தொடர்கள்:

அயல் மகரந்தச் சேர்க்கை எனும் இந்நூலில் உள்ள ஒவ்வொரு தொடரும், நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, அசைபோட்டு அசைபோட்டு நெஞ்சில் நிறுத்த வேண்டுவன என்றாலும் சில மட்டும் படிப்போர் பார்வைக்கு இங்கே தரப்பட்டுள்ளன.

கிளியோபாட்ரா பருவ மாற்றங்களால் உருவ மாற்றமடையாத மார்க்கண்டேய மலர்.

முற்றுப் புள்ளியின் கன்னத்தில் செல்லமாகக் கிள்ளுங்கள்; அது கமா ஆகிவிடும்.

புகைப்படம் வெளிச்சத்தில் உருவாகி இருட்டில் பிரசவிக்கிறது. மனிதன் இருட்டில் பதிவாகி வெளிச்சத்தில் பிரசவிக்கிறான்.

குழந்தை இல்லாத வீட்டு வாழ்க்கை சதங்கை இல்லாத நாட்டியம்.

மின்னலால் வானம் கிழிபடுவதில்லை; இடிகளால் வானம் பிளந்து விடுவதில்லை.

விழிகளே விளக்காகிவிட்டால் எந்த இருளுக்கும் அஞ்ச வேண்டியதில்லை.

துளைபடும் மூங்கிலே புல்லாங்குழல் ஆகிறது.

வேம்புச் சாற்றினை நீராய்ப் பாய்ச்சினாலும் கரும்புக்குக் கசப்பு வருமா என்ன?

வண்டுகள் இல்லாத ஊரில் பூஞ்சோலைகள் பூப்படைந்து என்ன பயன்?

செவிட்டுப் பூமியில் சிந்துபைரவி பாடி என்ன பயன்?

குறைகளைச் சுட்டிக் காட்டினால் உள்ளம் புண்படுகிறது; அதை அவரே உணரும்படிச் செய்தால் உள்ளம் பண்படுகிறது.

தன்னம்பிக்கை உள்ளவன் காலங்கள் செல்வமாகின்றன;
தன்னம்பிக்கை இல்லாதவன் செல்வங்கள் காலமாகின்றன.

உள்ளாவி தன்னை வெள்ளாவி வைத்து மனத்தைச் சலவை செய்து கொண்டவனுக்கு வாழ்வில் இருள் என்பதே இல்லை.

பழுத்திருக்கும் மரத்தில் பழங்களைத் தேடாமல் அதில் மரப் பட்டை இடுக்கில் புழுத்திருக்கும் புழுக்களைத் தேடும் மனிதர்களும் உண்டு.

வெள்ளை ஒளிப் பார்வையைக் கருப்பு விழிதான் வழங்கு கிறது - வாழ்வின் இருண்ட வேளைகளில் தான் உண்மையான உறவுகளைக் காணமுடியும் என்பது போல.

எவரெஸ்டு குனிந்தொரு கூழாங்கல்லை எடுப்பதுபோல அந்தக் குழந்தையைத் தூக்கி எடுத்தார் அப்துல் கலாம்.

நிலவு பூமிக்குக் கடிதம் எழுதத் தொடங்கி நிறைவு தராததால் சலித்துக் கொண்டு எறிந்த காகிதத் துணுக்குகள் தாம் நட்சத்திரங்கள்.

முரண், இயைபு, அடை, வினா, உவமை, உருவகங்கள், காதரின் எழுத்துக் குளத்தில் துள்ளும் கயல்களாய் இங்குப் பளிச்சிடுகின்றன.

புதிய சொல்லாட்சிகள்:

புதிய உணர்வுகளைச் சொல்லப் பழைய சொற்கள் போதாமையால் எழுத்தாளர்கள் புதிய சொற்களைப் படைத்துக் கொள்கின்றனர். நடைமுறையில் வழங்கிவரும் சொற்களை இணைத்துப் புதிய பொருள்தரும் சொல்லாக்கங்களைச் செய்வதன் வாயிலாக எழுத்தாளர்கள் தம் மொழி ஆளுமையைப் புலப்படுத்துவதோடு மொழிக்கு வளமும் சேர்க்கின்றனர்.

இளங்கோவடிகள் சூரியனை, 'வான்கண்' என்றார். பாரதியார் சிறிய நெருப்புத் துண்டினை 'அக்கினிக் குஞ்சு' என்றும் குயிலின் பாடலை, 'மின்னற் சுவை' என்றும் கூறியிருக்கக் காண்கிறோம். இயற்கையின் எழிலை 'அழகின் சிரிப்பு' என்றும் சிறந்த 'இல்லறத் தலைவியைக் 'குடும்ப விளக்கு' என்றும், புதிய சொல்லாக்கங்களால் பாரதிதாசன் படைத்துக் காட்டியுள்ளார். உவமைக் கவிஞர் சுரதா, கனியை 'விதைக்குடும்பம்' என்றும், பனியை 'நிலா வடிக்கும் வியர்வை' என்றும் புதிய பாங்கில் சொல்லியிருப்பதை அறிவோம்.

இவ்வாறு பண்டை நாள் தொட்டு இற்றை நாள்வரை எழுத் தாளர்கள் சொற்சேர்க்கை செய்து சுவை சேர்த்து வருகின்றனர். இந் நூலில் நூற்றுக்கும் மேற்பட்ட வித்தகச் சொற்சேர்க்கையைக் காண முடிகிறது.

கருவுற்றுள்ள மங்கையை, 'பிள்ளைக் கனி மரம்' என்றும், மரணத்தினை 'மூச்சின் முற்றுப்புள்ளி' என்றும், கண்தானம் செய்பவரை, 'கண்ணப்பர்' என்றும் காதர் எழுதிடக் காண்கிறோம்.

வெயில் நுழைய முடியாதவாறு அடர்ந்து, நெருங்கி, இலைகள் தழைத்துள்ள காடுகள் சமூக விரோதிகளால் அழிக்கப்பட்டு வருகின்றன. 'ஈப்புகுந்தால் சிறகொடியும் இண்டங்காடுகள் இன்று இடுகாடுகளாகி வருவதால் மழை இல்லாதாயிற்று. ஆதலின், காடுகளை அழிப்போரைக் காதர், 'மழைக் கொலையாளிகள்' எனப் பொருத்தமாய்க் கூறுகிறார்.

'கான்வென்ட்' பள்ளிகளுக்குச் செல்லும் 'பிள்ளைகள்' முதுகு வளையுமாறு பெரிய பைகளைச் சுமந்து செல்கின்றனர். இவர்களை முதுகில் தொந்தி முளைத்த 'பிள்ளையார்களாய்க்' காண்கிறார், காதர். பிள்ளைகள், பிள்ளையார்களாகி விட்டனர். ஆனால் தொந்தி வயிற்றில் இல்லை; முதுகில்! பட்டாம்பூச்சி மேல் 'பேப்பர் வெயிட் பரிதாபம் இனி வேண்டாம்' எனக் காதரோடு சேர்ந்து நாமும் வேதனைப்படுகிறோம்

'கேக்கின்' மீது மெழுகுவர்த்தியைக் குத்திவைத்து அதனை ஊதி, பின்னர் கேக் வெட்டப்பட்டுப் பிறந்த நாள் விழாக் கொண்டாடப் படுகிறது.

"வெள்ளை மெழுகுவர்த்திகளை ஊதிக் கொண்டாடப்பட்ட 'இந்திய சுதந்தரம் பிறந்த நாளில்' இந்திய கேக் இரண்டாக வெட்டப்பட்டது" - காதர் மொழி இது.

வெள்ளை - வெள்ளை நிறம் என்ற பொருளையும் வெள்ளை ஏகாதிபத்தியம் என்னும் பிறிதொரு பொருளையும் தருகிறது. இந்தியா சுதந்தரம் பெற்ற நாளில் வெள்ளை ஏகாதிபத்தியம் அகற்றப்பட்டது. இந்தியா, பாகிஸ்தான் என நாடு இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இப் பிரிவினையை கேக் வெட்டப்படுவதோடு ஒப்பிட்டுள்ளார்.

எண்ணி எண்ணி எழுதப்படுவன அல்ல இவை; காதரிடம் சொற்கள் இயல்பாகவே வந்து விழுகின்றன. எல்லோராலும் இப்படி எழுத முடிவதில்லை. காதருக்கோ இது, 'கருவிலே உண்டான திரு'.

இவ்வாறு சொல் விளையாடல்கள் செய்யும் வேளையில் ஆங்கில, அயல் மொழிச் சொற்கள் வந்து புகுந்து விடுகின்றன.

சமுதாயச் சிந்தனைகள்:

சமுதாயக் கேடுகளை, அரசியல் அக்கிரமங்களை, எழுத்தாளர்களின் வக்கிரங்களைக் கண்டிப்பதில் காதர் சிறிதும் தயவு தாட்சணியம் காட்டுவதில்லை.

'அழகுப் பெண்ணின் தாயார் என்றால், அத்தை என்று அர்த்தம்' என்கிறது இன்றையத் திரைப்படப் பாடல் ஒன்று. இதைக் கேட்ட

அப்துல் காதர், 'அவன் தங்கை அழகியானால் தன் அன்னையை அத்தையாக்கிக் கொள்வானா?' எனச் சினம் பொங்க வினவுகிறார். 'அவள் அழகாயில்லாததால் எனக்குத் தங்கையாகி விட்டாள்' என்கிறது ஒரு புதுக் கவிதை. அவன் தங்கையே அழகியாயிருந்தால் அவளை என்ன முறை கொள்வாரோ அக்கவிஞர்?

காதல் மென்மையானது; கண்ணியம் மிக்கது. பெரிய திரையிலும் சின்னத் திரையிலும் நட்சத்திரங்கள் ஆடும் ஆட்டங்கள் மெல்லிய காதலைப் புல்லியதாக்கி விடுகின்றன. காதல் மணம் காம நெடியாகி விட்டது. 'காமிராவின்' முன் ஆடுவதால் அவை 'காமக்' கூத்தாகி விட்டனவோ என வேதனைப்படுகிறார் காதர். "படுக்கை நிலை நிகழ்வை, நின்ற நிலையில் கொச்சையாக வெளிப்படுத்தும் பச்சை ஆபாசம் தான் நவீன நடனம்" என ஆங்கிலக் கவி ஜோயி ஆடம்ஸ் கூறுவதை எடுத்துக் காட்டி (Modern dance is the vertical expression of horizantal idea - Joey Adams) தேகத்தின் அனைத்து வாசல் வழியிலும் தென்றல் புகுவது மாதிரி நயத்தக்க நாகரிகத்தோடு காதலை வெளிப் படுத்தும் மரபு அறவே இல்லாது போய்விடுமா? என்ற கவலையையும் வெளிப் படுத்துகிறார். திரையில் தான் துணியிருக்கிறதே, அதனால் நம்மீது எதற்குத் துணி எனச் சினிமா நங்கையர் துணிந்து விட்டனரோ என நையாண்டித்தனத்துடன் பண்பாட்டுச் சீரழிவைக் கண்டிக்கிறார்.

அறையில் கூட அவ்வாறு நடப்பது ஆபாசம் என்றெண்ணப்படு வனவற்றைத் திரையில் வெளிச்சமிடுகின்றனர். கலை, கண்ணிய மிக்கதாய் இருக்க வேண்டும்; பண்பாட்டினை உயர்த்துவதாய் இருக்க வேண்டுமேயன்றி அழிப்பதுவாய் இருத்தல் கூடாது. சென்ற நூற்றாண்டின் இடைப்பகுதியில் நான் சிறுவனாயிருந்த காலத்தில் ஊர்த் திருவிழாக்களின்போது நடைபெற்ற நாடகங்களைக் கண்டதுண்டு. வள்ளித் திருமணம் நாடகம். வள்ளியை மணக்க முருகன் முதலில் வேடனாக அடுத்துக் கிழவனாக வருவது தான் கந்தன் கதை. ஆனால் நாடகத்தில் முருகன் வளையல்காரனாகவும் வரும் மற்றொரு காட்சியும் இடம் பெறும். "எஸ். ஜி. கிட்டப்பா வேலனாக, வேடனாக, வளையல் காரனாக, விருத்தனாக நடிப்பதைக் காணத் தவறாதீர்கள்" என விளம் பரமும் செய்யப்படுவதுண்டு. ஒரு பெண்ணின் கையைத் தொட்டு வளையல் போடுவது தான் அன்றைய நாடகங்களின் பெரிய பாலியல் காட்சி. இதற்கே "பெண்ணைத் தொட்டு நடிக்கிறார்களே" என்று வியந்து பேசினர் அன்று. இன்றைய காட்சிகளைப் பார்த்து என்ன சொல்வது? சமுதாயம் இதையும் ஏற்கிறது என்றால், விரும்புகிறது என்றால், என்ன பொருள்? இது மக்கள் குற்றமா? படத் தயாரிப் பாளர்கள் குற்றமா? நடிகர்கள் குற்றமா? யார் குற்றம்? காதர் போன்ற வர்களின் எழுத்துக்களைப் படிப்பதன் பயன் இதற்கொரு முடிவினைத் துணிந்து காண்பதுதான்.

"தானிருந்த கட்சிக் கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றம் என்ன என்பதையும், இது பற்றித் தான் அந்தக் கட்சியில் இருந்தபோது செய்த முயற்சிகள் என்ன, தெரிவித்த யோசனைகள் என்ன என்பதையும் விளக்கிவிட்டு, புதிதாகச் சேரப்போகிற கட்சியின் யோக்கியதை என்ன? நாணயம் என்ன? அதனால் மக்களுக்கு ஏற்படப் போகும் நன்மை என்ன என்பதை கட்சிக்கும், தனக்கு வாக்களித்த வாக்காளர்களுக்கும் தெரிவித்த பின்னரே கட்சியிலிருந்து விலக வேண்டும்.

யோக்கியமான காரணம் காட்டாமல் - பதவியை இராஜிநாமாச் செய்யாமல் கட்சி மாறுபவர்கள் அயோக்கியர்கள் என்று சுவரில் எழுதுங்கள்; கல்லில் இவற்றை அடித்து (செதுக்கி) முச்சந்தியில் நடுங்கள்" எனக் காரணமின்றிக் கட்சி மாறுபவர்களைத் தந்தை பெரியார் மிகவும் வன்மையாகக் கண்டித்துள்ளார். பெரியாரின் இக்கருத்துகள் கசப்புடையனவாய்த் தோன்றினாலும், நடைமுறைப்படுத்தப்பட்டால் அரசியலில் தூய்மை நிலவுமல்லவா?

"அரசியலில் நேர்மை இல்லை; அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சிகள் வேதனையளிக்கின்றன. அணி மாற்றம், கூட்டணி மாற்றம், கொள்கை மாற்றம், நேரெதிர்த் தாவல் - இவையெல்லாம் தேசிய நடப்புகளாகி விட்டன" எனக் காதர் தம் உள்ளக் காயங்களை மனந்திறந்து வெளிப் படுத்தியுள்ளார். தந்தை பெரியாரின் எழுத்துக்களில் காணப் பெறும் வேகத்தையும், தீப்பிழம்புகளை வாரி வீசும் தன்மையையும் காதரின் எழுத்திலும் காணமுடிகிறது.

இனிக்கும் காதல்:

காதல் பற்றிய செய்திகளைக் காதலினும் இனிப்புடன் கூறியிருக்கிறார் காதர். முன்னோர் மொழிந்த பொருளைப் பொன்னாய்க் கொண்டு தம் கீர்த்தி மிகு வேலைப்பாட்டால் புதிய அணிகலன்களைச் செய்து தந்துள்ளார். 'மலரினும் மெல்லிது காதல்' என்றார் திரு வள்ளுவர். அக்கூற்றுக் கேற்ப செய்திகளை நுண்ணியனவாயும் கண்ணிய மிக்கவையாயும் அமைய வேண்டும் என்பதில் காதர் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார்.

திருவள்ளுவர் காதலை ஒரு விந்தைத் தீயாய்க் காண்கிறார். தீ, தொட்டால் தான் சுடும்; ஆனால் காதல் தீயோ விட்டு நீங்கினவரைச் சுடுகிறது.

தொடிற்சுடின் அல்லது காம நோய்போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ

எனக் கேட்கிறது திருக்குறள். பிரிவாற்றாமையால் துடிக்கும் தலைவனின் கூற்று இது.

விலகியிருக்கும்போது நெருப்பாய்ச் சுட்டவள், இணைந்திருக்கும் போது பனியாய்க் குளிர்கிறாளே! இத்தகைய தன்மையை இவள் எங்கிருந்து பெற்றாள் எனக் காதலியுடன் கூடியிருக்கும் காதலன் பாராட்டி மகிழ்கிறான்.

நீங்கிற் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்?

என்பது அத்தலைவனின் வினா.

ஆந்திர நாட்டு ஹால மன்னன், பிராகிருத மொழியிலிருந்து 700 பாடல்களைத் தெலுங்கில் பெயர்த்து 'காதா சப்த சதி' என ஒரு நூலாய்த் தொகுத்தான். அதிலுள்ள பாடல் ஒன்றும் காதலைத் தீயோடு ஒப்பிடுகிறது. தீ, உலர்ந்துள்ள மரத்தில் பற்றும். ஈர விறகில் பற்றாது. ஆனால் காதல் தீயோ உலர்ந்த நெஞ்சில் பற்றாது; ஈர நெஞ்சில் 'குப்' எனப் பற்றும் என்கிறது அப்பாடல்.

பிறதீப் போல்அது அறவே இல்லை,
காதல் தீயின் கணக்கு வேறாம்;
காய்ந்த மனத்தில் ஓய்ந்தே போகும்,
ஈர நெஞ்சில் சீருடன் பற்றும்

என்பது கவிஞர் இராமதேவனின் பாடல்.

காதலையும் நெருப்பையும் இணைத்துப் பெருங்கவிஞர் காலிப் வழங்கும் கஜல் ஒன்றினைக் காதர் இந்நூலில் காட்டியுள்ளார்.

காதல் நம் வசத்தில் இல்லை
அது ஒரு
அதிசய நெருப்பு
பற்ற வைத்தால் பற்றாது
அணைத்தால் அணையாது.

என்பதுவே அக்கஜல்.

சுய ஈர்ப்பின் உரசலில் பற்றிக் கொள்ளுமே தவிர, வலிந்து பற்ற வைத்தால் பற்றாது காதல் நெருப்பு. காமம் என்பது அகல் விளக்கு; காற்று அதனை எளிதில் அணைத்துவிடும். காதல் ஒரு காட்டுத் தீ. காற்றடிக்க, காற்றடிக்க அது மூண்டு எரியுமே தவிர, அணைந்து போகாது என்பது இக்கஜலுக்குக் காதர் தந்துள்ள விளக்கம்.

வெயிற்காலத்தில் மந்தையில் மாடுமேய்த்து அந்தியில் வீட்டிற்கு ஓட்டிச் சென்றவன் கொல்லைப் புறத்திற்குக் குளிக்கச் சென்றான். அவன் மனைவி அங்குத் தொட்டியின் நீரை மொண்டு முதுகில் ஊற்றித் தேய்த்து நின்றாள். அப்போது அவன்,

**தொட்டியின் தண்ணீர் கொதித்த தென்றான் - அவள்
தொட்ட இடம் மட்டும் சிலிர்த்த தென்றான்**

தொட்டியின் தண்ணீர் வெப்பத்தால் சுட்டதாம். ஆனால் அவள் தொட்ட இடமோ குளிர்ச்சியில் சிலிர்த்ததாம். காதலின் இன்பக் கிளு கிளுப்பை இவ்வாறு பாடியுள்ளார் பாவேந்தர் பாரதிதாசன்.

காதலை அதிசய நெருப்பாய்ச் சொன்ன கவிஞர்கள் வரிசையில் தன்னையும் இணைத்துக் கொள்ளும் காதர்,

"காதல் தேவனாம் மன்மதனை எரித்துச் சாம்பலாக்கியது சிவனின் நெற்றிக்கண். அதற்குப் பழிவாங்குவதற்காகவோ என்னவோ கண் களாலேயே காதல் சுடரை ஏற்றி வைக்கிறார்கள், காதலர்கள்" என்கிறார். மேலும் அவர் காதல் பற்றிக் கூறியுள்ளவை மதுவாய்ப் போதையூட்டி மயக்குகின்றன. படியுங்கள், மயங்குங்கள்.

ஆண்பாலும் பெண்பாலும் அன்பால் ஆக்கும் பால் காமத்துப் பால். (ஐம்பால் சேர்ந்த சீம்புப் பால் இது)

காதல், காற்றைப் போல எல்லோரையும் தோஷமின்றித் தொட்டுக் கொள்ளும். காதல், எல்லை தாண்டிய பயங்கரவாதம். அதைத் தடுக்க எந்தச் சக்தியாலும் முடியாது. பயங்கரவாதம் அழிக்கப்படவேண்டிய ஒன்று; ஆனால் காதலில் பயங்கரவாதமோ வரவேற்கப்பட வேண்டிய ஒன்று.

காதல் ஒரு விந்தை வினைத்தொகை; மெய்யெழுத்துகளைத் தடவி உயிரெழுத்துக்களைப் படிக்கும் ஒப்பற்ற மொழி. காதல், ஊசி கீறக் கீற உன்னத இசை எழுப்பும் ஒரு கிராமஃபோன்; நீர் விழ, விழ கான்கிரீட் வலுப்படுவது போலக் கண்ணீர் விழ, விழக் காதல் கட்டடம் உறுதியாகி விடுகிறது.

காதல் சூரியன் காற்றில் அணையுமா?

காதல் வெள்ளம் கல்லணைக்குக் கட்டுப்படாது; பஞ்சணைக்கே கட்டுப் படும் பாச வெள்ளம் அது.

கொடுக்கிற போதே வசூலாகிற ஒரே கடன் முத்தம்.

சமாதி கட்டப்பட்ட காதல்தான் சரித்திரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

உன் மதம் என் மதம் ஆகும் மன்மதம்.

'மெய்தொட்டுப் பயிறல்' என்பது அகப்பொருளில் ஒரு துறை. இப்போதெல்லாம் திரைப்படங்களில் காட்டப்படுவது போலக் கண்டதும் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்து அணைத்துக் கொள்வது. கண்ணால் அவனைப் பார்ப்பாள். அவன், அவள் கூந்தலில் சூடியுள்ள

மலர்களில் தேனுண்ணும் வண்டுகளிடம், "வண்டுகளே! என் தலைவியின் கூந்தலைப் போல மணமுள்ள பூக்களை நீங்கள் அறிந்ததுண்டா?" என்று கேட்டவாறு மெதுவாய் அவளை நெருங்கி, வண்டுகளை ஓட்டுபவன் போலக் கையைக் கூந்தலில் வைப்பான். நுண்மையும் மென்மையும் மிக்க இக்காதல் காட்சியை,

கொங்குதேர் வாழ்க்கை அம்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ!
பயிலியது கெழிஇய நட்பின் மயில்இயல்
செறிஎயிற் றரிவை கூந்தலின்
நறியுவும் உளவோ நீஅறியும் பூவே!

எனும் குறுந்தொகைப் பாடல் காட்டுகிறது.

இதே மாதிரியானதொரு காட்சி வடபுல மன்னன் பத்ருஹரியின் பாடல் அமைந்திருப்பதைக் காதர் எடுத்துக் காட்டுகிறார்.

அன்பே!
இந்தப் பூக்கள்
கொடியில் வாழ்வதைக் காட்டிலும்
உன் கூந்தலில்
சாவதையே விரும்புகின்றன

என்கிறான் பத்ருஹரியின் கவிதைக் காதலன். இப்படிக் கூறிய வண்ணம் அவன் அவள் கூந்தலைத் தடவியிருப்பான். 'மெய்தொட்டுப் பயிறலுக்கு' வடமொழிக் கவிஞன் வடித்துள்ள பாடல் இது.

"காலம் காலமாகச் சூரியனும் தாமரையும், நிலவும் அல்லியும் முறையே காதலன் காதலியாகப் பாடப் பெற்று வருகின்றன. இதனை ஏற்றுக் கொள்ள இயலுமா" என அப்துல் காதர் ஒரு வாதத்தை வைக்கிறார். சூரியன் காதலி அல்லிதான், நிலவின் காதலி தாமரைதான் எனத் தீர்ப்பளிக்கிறார். தன் தீர்ப்பு நியாயத் தீர்ப்பு என்பதற்கான காரணங்களையும் சொல்லியுள்ளார்.

"சூரியன் வருகையில் தாமரையும், நிலவு வருகையில் அல்லியும் நாணமின்றி இதழ் அவிழ்ந்து, காதலனை நேருக்கு நேர் பார்த்து விரிகின்றன. எந்தக் காதலி, காதலனைக் கண்டவுடன் இப்படி நடந்துக் கொள்வாள்? மாறாகச் சூரியன் வந்தவுடன் அல்லி நாணிக் கூம்பி விடுகிறது; நிலவு வரும் போது தாமரையும் வெட்கத்தோடு இதழ் குவித்துத் தலை கவிழ்கிறது; எனவே சூரியன் - அல்லி, நிலவு - தாமரை என்பவை தாம் நிஜமான ஜோடிகளாக இருக்க முடியும்" என்பன அவர் கூறியுள்ள காரணங்கள்.

தீர்ப்பு சரியா? அல்லது மேல்முறையீடு செய்ய வேண்டுமா? சிந்திக்க வேண்டும்.

சூரியனைக் கண்டதும் தாமரை குப்பென இதழ் விரித்து விடுவதில்லை. இதழ்கள் மெதுவே மெதுவே விரிந்து பின்னரே முழு மலராய் விரிகிறது. காதலனைக் கண்டவுடன் சிறு முறுவல் பூத்து, காதல் வளர வளர முறுவல் முகம் மலரும் முழுச் சிரிப்பாக மாறுகிறது. காதலன் மறைந்ததும் வருத்தத்தைத் தோற்றும் வகையில் முதலில் முக மலர் குவிந்து, வருத்தம் மீதூர மீதூரத் தலை நிமிர முடியாது குனிந்து குனிந்து வாடுகிறாள். சூரியன் மறைந்ததும் தாமரை மலர் குவிகிறது. தண்டு சிறிது சிறிதாகவே வளைகிறது. தொப்பென வளைந்து விடு வதில்லை. இதுவே காதலின் மெய்ம்மைத் தன்மை. ஆதலின் தாமரையே சூரியனின் காதலி; இது போன்றே அல்லியே நிலவின் காதலி என்றும் சொல்லலா மல்லவா?

வழக்காடு மன்ற, பட்டி மன்றத் தலைவராய் காதர் நாடெங்கும் வலம் வந்து கொண்டிருப்பவர். ஆதலின் சூரியனின் காதலி தாமரையே! எனும் வழக்காடு மன்றத் தலைப்பையும், சூரியனின் காதலி தாமரையா, அல்லியா? எனும் பட்டிமண்டபத் தலைப்பையும் (இதே போன்று நிலவுக்கும் சொல்லலாம்) தந்துள்ளார். வல்லவர்கள் வாதிட்டு முடிவு காணுக.

இசுலாமியக் கருத்துகள்:

அப்துல்காதர் அழுத்தமான இசுலாம் நம்பிக்கை கொண்டவர். இசுலாமியக் கடமைகளைத் தவறாது ஆற்றி வருபவர். இந் நூலிலுள்ள கட்டுரைகள் பெரும்பாலானவற்றில் நபிகள் நாயகம் அவர்களுடைய வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளையும், அவருடைய மொழிகளையும், இறைமறையாம் திருக்குர்ஆன் கூற்றுகளையும் உரைத்துள்ளார்.

அரேபியாவில் திருமக்காவில் முகம்மது (ஸல்) பிறந்தார். அவர் பிறந்த காலத்தில் அரேபிய மக்கள் உருவங்களைத் தொழுதும், குடித்தும், விலைமாதர்களை மருவியும் வெறிகொண்டிருந்தனர். முகம்மது (ஸல்) ஓயாத சிந்தனையால் உள்ளம் பக்குவப்பட்டு நாற்பதாம் வயதில் நபிப் பட்டம் பெற்றார். திருக்குர்ஆன் இறையுரைகள் இறங்கலாயின. தாமறிந்த உரைகளை அவர் எடுத்துச் சொன்னபோது அங்கிருந்த இருள் நெஞ்சினரால் பல்வித இன்னல்களுக்கும் இழிவுகட்கும் ஆளானார். சொந்த ஊரில் மக்கள் இவ்விதக் கொடுமைகள் செய்த வேளையில், மதீனா மக்களின் ஆதரவு பெற்றார். மக்காவிலிருந்து தப்பி மதீனா சென்றார். இசுலாத்தைத் தீவிரமாய்ப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றியும் கண்டார். மக்கள் ஓரிறையைத் தொழுது ஒழுக்க வாழ்வு வாழச் செய்தார். பல இனம் பல நெறி எனப் பாகுபட்டுக் கிடந்த வர்களை ஓரினமாக்கி ஒரே நெறியில் நிற்கச் செய்தார். எண்ணிய எண்ணத்திலும் எடுத்த செயலிலும் தாம் வாழ்ந்த காலத்திலேயே வெற்றிகள் கண்டார். அவரது மறைவின் பின்னர் இசுலாம் உலகெங்கும் பரவிச் சிறந்தது. இன்று உலகில் ஒரு மிகப்பெரிய சமுதாயமாக விளங்கி வருகிறது.

இச்செய்தியைக் காதர் தமக்கேயுரிய சதங்கை நடையில் கலீர் கலீர் என உவமையோடு ஒலித்திடச் செய்கிறார். இதோ அவர் எழுத்து:

"தன் இனத்தைச் சரிப்படுத்தி நெறிப்படுத்த வந்த பெருமானார், தான் வாழ்ந்த காலத்து அரபுச் சமூக அமைப்பின் சூழலுக்கு இரையாகி விடவில்லை. உப்புக் கடலில் உருவாகி வாழ்ந்தாலும் மீனின் உடம்பில் உப்பு ஒட்டுவதில்லை; தப்புக் கடலில் பிறந்தாலும் இந்த மூமீன் (தூய நெறிப் பூரணர்) உடம்பில், உயிரில் தப்புப் படிந்ததில்லை. உப்புக் கடலில் மீன் தன் மீது உப்புப்படியாமல் வாழ்ந்ததே தவிர உப்புச் சூழலை மாற்றியதில்லை. ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) தவறான சமூகச் சூழலில் தானும் கரைந்து விடாதது மட்டுமின்றி,அந்தச் சூழலையே சலவை செய்தவர். எல்லாவற்றையும் வெளுக்கும் நெருப்பு அழுக்காவதில்லை யல்லவா?

தொடக்கத்தில் சொந்த மண்ணே வேர் இறக்க அனுமதிக்காததால் வெளியேறிய முகம்மது (ஸல்) எனும் எளிய மருந்துச் செடிக்கு அகில உலகமே ஆணிவேராகி விட்ட நிலையைக் காதர் பெருமையுடன் எழுதியுள்ளார்.

நாயகம் (ஸல்) அவர்களின் மேனி எப்போதும் ஒளி வீசிக் கொண்டே இருக்கும். இதனை, "ஊசி கீழே விழுந்து விட்டால் நாயகத்தின் வீட்டகத்தாருக்குத் தேடிக் கண்டெடுக்கச் சிரமமில்லை; அண்ணலாரின் முக வெளிச்சத்திலேயே அது அகப்பட்டுவிடும்" எனக் காதர் அண்ணலார் வீட்டினர் விளக்கெடுக்காததற்கான விளக்கவுரையை அரபுக் கவிதை ஒன்றைக் கொண்டு தந்திருக்கிறார்.

நாயகமவர்களின் கொள்கையை வெறுத்த ஒருவன் நாயகத்தின் முகம் குரங்கு முகம் என்றான். கொட்டுத் தேள் வார்த்தை கேட்டு நாயகம் கோபப்படவில்லை. சிரிப்புக்கொண்டு செய்த உதட்டில் நகை அரும்ப, "ஒரு சகோதரன் முகம் மற்றவனுக்குக் கண்ணாடி" என்றார். பழித்துப் பேசியவன் நாயகக் கண்ணாடியில் தன் முகத்தைத்தான் பார்த்திருக்க வேண்டும்.

நாயக மொழிகளைக் (ஹதீசுகளை) காதர் இந்நூல் வானில் வெள்ளி மீன்களாக அள்ளித் தெளித்திருக்கிறார். மீன்கள் கண் சிமிட்டும் அழகைக் கீழே காணுங்கள் :

நீ வைத்திருக்கும் பொருளைவிட வழங்கும் பொருளுக்கு மதிப்பு அதிகம்.

தாயின் காலடியில் தான் சொர்க்கம் இருக்கிறது.

சிறந்த அறப்போர் என்பது அநியாய ஆட்சியாளர் முன் சத்தியத்தை எடுத்துரைப்பதேயாம்.

பொதுப்பணம் நீ பெற்றெடுத்த பெண்ணைப் போன்றது.

ஒருமைப்பாட்டுணர்வு :

காதர் அழுத்தமான இசுலாம் நம்பிக்கை உள்ளவராயினும், அவர் சமய ஒருமைப்பாட்டு உணர்வு மிக்கவர். காதரின் எழுத்திலும் பேச்சிலும் ஆலய மணியோசையும், பள்ளி வாசல் பாங்கோசையும், மாதா கோவிலின் 'ஆமென்' அருள்ஓசையும் ஒன்றிணைந்து செல்லக் காணலாம். சைவ, வைணவ, இசுலாமிய, கிறித்துவ, பௌத்த, சமண சமயங்களிலுள்ள உயர்ந்த கருத்துகளை, தக்க இடங்களில் எடுத்துக் கூற அவர் தவறுவதில்லை. இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்கள் ஒரு நிகழ்ச்சியில் குத்து விளக்கேற்றி வைத்த போது,

குத்து விளக்கு
இந்துமதப் பாரம்பரியம்;
ஏற்ற என்கையில் இருப்பது
மாதா கோயிலில் எரியும் மெழுகுவர்த்தி;
ஏற்றுவது
அப்துல் கலாம்

என ஒருமைப்பாட்டுணர்ச்சியைத் தம் பேச்சில் வெளிப்படுத்தியதைக் கூறும் காதர், இதனை ஒருமைப்பாட்டுணர்ச்சி என்பதோடு இந்தியப் பண்பாடும் இதுவே என்கிறார்.

இப்பண்பாட்டினைத் தம்முடைய ஒரு கவிதையிலேயும் வெளிப் படுத்தியுள்ளார். காதர் பேனாவுடன் பேசுகிறார் :

நீ மூடி அணிந்திருக்கிற
காரணத்தால்
முசுலிமா?
முள் முடி சூடியிருக்கிற
காரணத்தால்
ஏசு மார்க்கத்தில் இருக்கிறாயா?
எழுதினால், பட்டை அடிக்கிறாய்
நீ என்ன சைவனா?
மூடியின் நெற்றியில்
நாமம் தரித்திருக்கிறாய்
நீ என்ன வைஷ்ணவனா?

பேனா அவரைப் பார்த்துத் திருப்பிச் சொன்னது :

முட்டாளே!
என்னை ஏன் தனித்தனியாய்ப்
பிரித்துப் பார்க்கிறாய்;
உலகம் முழுவதும்
நான்
ஒன்றின் வடிவத்தில் தானே இருக்கிறேன்:

பேனாவைக் கொண்டு ஒருமைப்பாட்டினை மிக அருமையாய் விளக்குகிறார். பேனாவின் மூடி - தொப்பி - முசுலிம் அடையாளம்; முள் கிரீடம் - பேனா முள் முனை - கிறித்துவ அடையாளம்; பட்டை அடித்தல் - திருநீறு பூசுதல் - சைவம்; பேனா மூடியில் உள்ள கிளிப் - நாமக் கோடு - வைணவ அடையாளம். பேனாவின் வடிவம் உலகில் எங்கிருந்தாலும் (ஒன்று) தானே! பேனா, எந்த நிறத் திலிருந்தாலும், உயரத்திலிருந்தாலும் அதன் வடிவம்! (ஒன்றே). அருமையான சிந்தனை.

பிற்சமயத்தார் பெயரும்
அவர் பெயரே கண்டாய்

என்று மாற்றுச் சமயங்களிலும் உண்மையைத் தரிசித்த வள்ளல் இராமலிங்க அடிகளாரின் உள்ளம் கவிஞர் காதருக்கும் வாய்த்திருக்கிறது.

வாழ்த்து :

காதர் வண்டு, இலக்கியப் பூங்காவில் நுழைந்து, பூக்கள் தோறும் கருத்துத் தேனுண்ட போது நடைபெற்ற பண்பு இணைப்பாகிய அயல் மகரந்தச் சேர்க்கையால் மாந்த நேயம் எனும் முளைகளைக் கொண்ட வீரிய விதைகள் விளைந்துள்ளன. சமூக வயலில் இவற்றை விதைத்துப் பயிராக்கிப் பயன் பெறுவோமாக!

அயல் மொழிக் கவிதைகள், கருத்துகள் எனும் மையத்தின்மேல் வட்டம் வரையும் கருவியின் (காம்பசின்) கூர்மையான, முழு நீளமுள்ள காலினை ஊன்றி, மற்றொரு காலில் நம் நாட்டு இலக்கிய உணர்வூறும் பேனாவைச் செருகி வரைந்துள்ளார்.

அவர் மேலும் மேலும் மிகுதியான வட்டங்களை வரைந்து கொண்டே செல்ல வேண்டுமெனும் விழைவுடனும், என்றும் நின்று நிலவும் அன்புடனும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

■

இன்னும் இது பொழியட்டும்



சிற்பி பாலசுப்பிரமணியம்

கேட்கும் சொற்களெல்லாம் நந்தவனங்களாய்ப் பூத்துக் கொள்ள அசாதாரணமான ஆற்றலோடு மேடைத் தமிழை அரங்கேற்றும் அதிசயம் பேராசிரியர் அப்துல் காதர்.

மண்ணுக்கு அடியில் கிடக்கும் விதைகளைப்போல் அகராதிகளில் உறங்கிக் கிடக்கும் சொற்கள் பச்சைச் சிறகுகளோடு சிலிர்த்துக் கடக்கும் சொற்கள் பச்சைச் சிறகுகளோடு சிலிர்த்துக் கொள்ளவும், பளிச்சென்று முகம் காட்டவும் வரமாக வரும் பருவமழை அப்துல்காதர்.

``Genius finds in everyday words
The Music of the woodland birds"

என்ற உண்மையை அனுபவம் ஆக்குவதற்கென்றே எடுத்த அவதாரம் போன்றவை அப்துல்காதரின் உரைகள்.

இன்று உலகம் முழுமையும் அறியப்பட்ட தமிழ் நாவலர்களில் தனியிடம் பெற்றவர் பேராசிரியர் அப்துல்காதர்

ஏறத்தாழ முப்பதாண்டுக் காலமாக அவரை அறிந்தும் உணர்ந்தும் வந்திருக்கிற எனக்குள் அமிழ்ந்து கிடக்கும் ஓர் ஆதங்கம் இருந்தது.

விதைப்புத் தானிய மணிகளை விசிறிவிடுகிற இந்தச் சொல்லேர் உழவனின் கரங்கள் பக்குவப் பண்ணை நிலங்களைப் பார்த்து விதைத்தால் பரவாயில்லை. பாறைகளின் மீதும் விதைக்கின்றனவே, அய்யோ பயனின்றிப் போகுமே என்பது தான் ஆதங்கம். வளமான தமிழை வசீகர மாக உச்சரிக்கும் உதடுகள் காற்றின் கன்னங்களைச் சிவக்க வைத்தாலும், காதுகளுக்கு அப்பால் 'காற்றை அடக்கும் கணக்கறிவார் இல்லை".

தலைமுறை தலைமுறையாகக் கேட்கப்பட்டு வந்த வேதம், எழுதப் பட்ட பிறகு எல்லார்க்கும் உரியதாயிற்று. பனை ஓலையில் படுத்துக் கிடந்த தமிழுக்குப் பச்சை ரத்தம் பாய்ச்சியதும் அச்சுக்கலை அல்லவா?

வாணியம்பாடிப் பேராசிரியரின் வனப்புத் தமிழில் மனம் பறி கொடுத்திருந்த எனக்கு ஏற்பட்டிருந்த அச்சமும் கவலையும் அடியோடு போய்த் தொலையும் வண்ணம், "அயல்மகரந்தச் சேர்க்கை" இதோ நிகழ்ந்திருக்கிறது. காய்கள் கனிகளாகும்; விரைவில் ஒரு காடே பிறக்கும் என்ற நம்பிக்கை பூத்திருக்கிறது.

"புதியகாற்"றில் நான் நேசித்து வாசித்த கட்டுரைகள் புத்தகப் பறவையாகி வாசக வானங்களில் வண்ணச் சிறகுகள் விரிப்பது பெருமகிழ்ச்சி தருகிறது.

பேச்சு ஒரு கலை; எழுத்து இன்னொரு மகத்தான கலை. ஆயினும் எழுதுவது பெரும்பாலும் பல எழுத்தாளர்களுக்கு ஒரு கை ஓசையாகத் தான் இருக்கும். ஆனால், பேராசியர் அப்துல்காதர் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு வெகு இயல்பாகக் கூடுவிட்டுக் கூடு பாய்ந்துவிடுகிறார். எண்ணுவது போல் பேசுவதும், பேசுவது போல் எழுதுவதும் ஒன்றை உணர்த்துகின்றன. அவருக்கு உள்ளம் வேறு உரை வேறு அல்ல என்ற உண்மை அது.

"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்"

என்ற மகாகவியின் சொற்களுக்குப் பேராசியரின் எழுத்தும் எண்ணங்களும் உரைகல் ஆகின்றன.

பேராசிரியரின் கட்டுரைகளில் இலக்கியமும் சமூகமும் கைகோத்துக் கொள்கின்றன. உணர்வின் சிறகு இலக்கியமென்றாலும், அது சமூகத்தின் குருதி நாளங்களைச் சுத்தப்படுத்தும் உயிர் வளி என்பதை அவர் மறந்து விடவில்லை. அதனால் ஊருக்கு நல்லது சொல்லும் வாயாகவே கவிஞர்களையும், படைப்பாளிகளையும் இனம் காண்கிறார் பேராசிரியர்.

எங்குதான் மனித நேயம் இல்லை? அது மரணித்தவனின் கல்லறை வாசகத்தில் கூட இருக்கிறது என்று அருமையாகப் பேராசிரியர் சுட்டிக் காட்டுகிற போது, மனிதனாகப் பிறந்ததில் பெருமையாக இருக்கிறது.

``Excuse me for not rising" என்ற கல்லறை வாசகத்தில் தேங்கும் மனிதப் பண்பு வியக்க வைக்கிறது.

பேராசிரியர் அப்துல்காதர் சொற்களை மந்திரமாக்கும் சாகசம் வல்லவர். ஒரு கர்ப்பிணிப் பெண்ணைப் போல் அர்த்தத்தைப் பூரிப்போடு சுமக்கின்றன அவருடைய வாக்கியங்கள்.

"நீதி தேவதையின் வாகனம் நத்தையாக இருக்க வேண்டும்"
"பிச்சைக்காரன் குழந்தை கூடக் கை ஏந்திக் கொண்டு பிறப்பதில்லை"

இப்படியாக வலம் வரும் வார்த்தை வீச்சுக்கள் தேர்ந்த போராளியின் வாள் வீச்சுக்களாக நூல் முழுவதும் விரவிக் கிடக்கின்றன.

பேராசியரின் விரிந்து பரந்த இலக்கியப் பயிற்சி ஒவ்வொரு கட்டுரையிலும் முத்திரை பதிக்கிறது.

ஷேக்ஸ்பியர், பாபா ஷேக் பரீத், ஜான் டன், எனத் தொடங்கி வாணியம்பாடிக் கல்லூரி இளங்கவிஞர் வரை எட்டாத எல்லைகளைத் தம் எழுத்தால் தொட்டுப் பார்க்கிறார்.

திருக்குர் ஆன் முதல் திருக்குறள் வரை அவருடைய பார்வை பட்டுத் தெறிக்கிறது.

வெறுப்பும், வசையும் கோலோச்சும் எழுத்துகளைப் படித்துக் காயமடைந்த நெஞ்சுகளுக்கு நல்லொழுக்கத்தில் சாணை பிடிக்கப்பட்ட பேராசிரியரின் எழுத்துகள் அகக்களிப்பையும் ஆறுதலையும் மீட்டுத் தருகின்றன. 'பண்பாட்டு வரைமுறை தாண்டும் வக்கிர'ங்களைப் பேராசிரியர் அழுத்தம் அத்தனையையும் திரட்டிக் கண்டனம் செய்கிறபோது நேர்மை நர்த்தனம் செய்கிறது.

மதம், சாதி, இனம் என ஆயிரம் இயந்திரத் துப்பாக்கிகளால் மனிதம் சல்லடைக் கண்களாகத் துளைக்கப்படுவதைப் பேராசிரியரின் தமிழ் உள்ளம் ஏற்க மறுதலிக்கிறது. சர்வதேச பயங்கரவாதத்தின் ஊற்றுக் கண்ணை அடையாளம் காண்கிற அதே சமயம், ஒரு குழந்தையின் அழுகை ஒலி கேட்டு ஓதும் வேதத்தைப் பாதியில் நிறுத்திய பெருமானாரின் கருணைக் கடலிலும் முக்குளிக்கிறது.

விவேகானந்தமும், இராமலிங்கமும், பரமஹம்சமும் அண்ணல் நபி மொழியும் அமுத வாசகங்களோடு பின்னிப் பிணைந்து மானுட வாழ்வின் மறக்கமுடியாத அனுபவங்களைத் தருகின்றது பேராசிரியரின் வித்தகத் தமிழ்.

கட்டுரைகளில் தலைப்புகளிலேயே இலக்கிய ஒயில் மணி மகுடம் சூட்டிக் கொள்கிறது. 'நாவின் நடைவண்டி', 'கரிசலாங் கண்ணிக்குக் காமாலை', 'விதைநெல் வாய்க்கரிசியாகிறது' என்ற ஒவ்வொரு தலைப்பும் கவிதையாய்ச் சூல் கொள்கின்றன.

பூமிக்கு அடியில் ஓடுகிற நீரூற்றை வித்தகர்கள் சிலர் அடையாளம் காண்பதைப் பார்த்திருக்கிறோம். Water Diviners எனப்படும் இவர்கள் சொன்ன இடத்தில் கிணறு வெட்டினால் தண்ணீர் பொங்கு மாங்கடலாகி விடுகிறது.

இந்த நுட்பத்தைப் பேராசிரியரிடமும் பார்க்க முடிகிறது. இவர் Wisdom Diviner. மேலோட்டமான வரிகளுக்கு உள்ளே ஒரு சமூக வரலாறு உறைந்து கிடப்பதைக்கூட கண்டு பிடித்து விடுகிறார்.

நான் படித்து மெய்சிலிரித்துப் போன ஓர் இடத்தைத் தொட்டுக் காட்ட விரும்புகிறேன். எல்லோருக்கும் தெரிந்த திருக்குறள்;

"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்"

சமூகத்தின் உயர்வு தாழ்வுகளை வள்ளுவர் கடிந்து கூறுகிறார் என்ற அளவில் நாம் கண்ட குறள் இது. நம் பேராசிரியர் ஆழத்தில் மூழ்குகிறார்.

"பிரம்ம தேவனின் நெற்றியில் பிறந்ததால் பிராமணன் உயர்ந்தவன், காலிலிருந்து தோன்றியதால் சூத்திரன் தாழ்ந்தவன், மனுதர்மம் என்ற பெயரால் வழங்கப்படும் வருணாசிரம நெறியாகப் பிறழ உணர்ந்த வகைப்பாட்டினை எப்படி ஏற்க இயலும்? இதற்கு எதிர்ப்புக் குரல் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே தோன்றிவிட்டது"

இந்த வரிகளைப் படித்ததும் என் நெற்றியில் சிந்தனை வரிகள் கோடிட்டன. "மேலிருந்தும்', 'கீழிருந்தும்" என்று வள்ளுவப் பெருமான் சொன்னது அச்சு அசலாக மனு நீதி குறித்த விமர்சனம் என்பதை உணர்ந்து சிலிர்த்தேன்.

இப்படிப் பேராசிரியர் அப்துல்காதர் ஆச்சரியங்களைக் கட்டுரை தோறும் விதைத்துக் கொண்டே போகிறார்.

பாரதியார் பூனைகளைப் பற்றிப் பாடிய பாடல் எல்லோருக்கும் தெரிந்தது. "வெள்ளை நிறத்தொரு பூனை' என்ற பாடலை அறியாதவர்கள் இருக்க மாட்டார்கள். "பிள்ளைகள் பெற்றதப் பூனை' என்று அவர் எழுதியதை ஏளனம் செய்தவர்கள் உண்டு - மனிதரைப் போலப் பிள்ளை பெற்றதாகச் சொல்கிறார் என்று. கவிஞன் உள்ளம் அறியாது கேலி செய்கிறவர்களைப் பேராசிரியர் மறுத்து மொழிகிறார்.

"பூனையை மனித நிலைக்கு உயர்த்திய உயிர்நேயம்
இறுக்கும் இலக்கணக் கட்டவிழ்த்து இரக்கமாகச்
சுரக்கிறது"

என்பது பேராசிரியரின் திருவாசகம். தம் கருத்துக்குத் தொல்காப்பியத்தையும் சான்றுக்கு அழைக்கிற இலாவகம் மெச்சத் தகுந்தது.

நட்பின் இறுக்கம், இயற்கையின் நெருக்கம், ஆன்மிகச் சாரம், கவிதையின் ஈரம், காதலின் கனிவு, புதுமையின் துணிவு, பூக்கள் தரும்

வரம், ஜனநாயகம் என்ற பாழ்மரம் - இப்படி வாழ்வின் அடி முதல் முடி வரை ஆராய்கின்றன பேராசிரியரின் உரை பெறும் கட்டுரைகள்.

உலகம் கண்டறிந்த உயர் பேராசான்களில் ஒருவரான ஷேக்ஸ்பியர் சொன்னார்,

``The Poets' eyes in a fine frenzy
Rolls from Earth to Heaven
And from Heaven to Earth"

கவிஞனின் கண்கள் மண் முதல் விண் வரை அளாவுகின்றன, துழாவுகின்றன என்றார்.

பேராசிரியர் தி.மு. அப்துல் காதரின் ஒளிக்கிரணங்கள் பூத்த தமிழும் வாழ்வின் அனைத்துப் படி நிலைகளையும், அனைத்துலகப் பார்வையோடு ஆராய்கின்றது - முதியவைகளையும் புதியவைகளையும் இணைக்கின்றது ஒய்வே இல்லாமல்.

பேச்சுத் தமிழைத் தன் மூச்சுத் தமிழாகக் கொண்டிருக்கும் பேராசியரின் எழுத்துத் தமிழ் பழுத்துக் கனிகிறது. மனதுக்குள் வந்து மழை விதைகளாய்க் குவிகிறது.

கவிஞர் தேனரசன் குறிப்பிட்டது போல,

"இந்த மழை போதாது
இன்னும் இது பொழியட்டும்
அந்த வெள்ளம் வருவதற்கும்
ஆறு சமப்படுவதற்கும்"

பாலசுப்பிரமணியம்



பேரெழில் வெளிச்சம்

காசி ஆனந்தன்

பேராசிரியர் அப்துல்காதர் அவர்களின் இலக்கியப் பேராற்றல் தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பட்டுத் தெறிக்கும் பேரெழில் வெளிச்சம்.

இலக்கிய ஆய்வில் தானே தனக்கு நிகர் என இருப்பவர் என் இனிய நண்பர்.

பார்வை புதிதாய், எண்ணம் புதிதாய், சொல்லாடல் புதிதாய்ப் பாயும் தமிழ் அவர்.

தமிழினத்தை மயக்கும் இலக்கியத்தின் நயன் அல்ல - தமிழினத்தை இயக்கும் இலக்கியத்தின் பயன்.

'அயல் மகரந்தச் சேர்க்கை' ஓய்வறியா இலக்கியர் அப்துல்காதர் அவர்களின் தொடர் பணியால் அமைகிறது.

உலக இலக்கியங்களும் தமிழ் இலக்கியமும் கைகோத்து நிகழ்த்தும் உலா.

'மாஸ்கோவில் பூமிக்குக் கீழே அணுக்குண்டாலும் அழிக்க முடியாத அறை ஒன்றை ரஷ்யர்கள் கட்டியுள்ளார்கள். அதற்குள் அவர்கள் பொன்னையோ - பொருளையோ பாதுகாத்து வைக்கவில்லை. அந்த அறையில் உலகின் தலைசிறந்த நூல்களை வைத்துள்ளார்கள். உலகம் முழுவதும் அழிந்தாலும் இலக்கியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அவர்கள் ஈடுபாடும் - அழிவுக்குப் பிறகு தோன்றும் உலகுக்கு வழிகாட்ட நூல்களே உதவும் என்ற அவர்கள் நம்பிக்கையும் மெய்சிலிர்க்க வைக்கிறது. அந்த அறை நூலகத்தின் முதல் நூல் திருக்குறள் என்பதை அறியும் போது மனதுக்குள் மழை விழுகிறது, என்கிறார் அப்துல்காதர்.

அயல் மகரந்தங்கள் இடையே தமிழ் மகரந்தம் பெற்றுள்ள தனிச் சிறப்பை அப்துல்காதர் அவர்கள் பதிவு செய்கிறார்.

அயல்நாட்டு இலக்கியன் ஒருவன், உலகத்தால் கசக்கிப் பிழியப்பட்ட பெண் ஒருத்தியின் கல்லறையில் எழுதிவைத்திருக்கும் இலக்கிய வரிகளை அயல் மகரந்தச் சேர்க்கை பதிவு செய்கிறது.

'இறுதியில்
அவள் உறங்குகிறாள்
தனியாக'

உயிருள்ள கல்லறை வரிகள் நெஞ்சை உருக்க - உணர்விழந்து நிற்கிறோம்.

அப்துல் காதர் அவர்கள் தம் நூலில் ஆபிரகாம் லிங்கனின் கருத்தொன்றை அழுத்தமாக வலியுறுத்துகிறார்.

'ஒருவன் சரியாக நடக்கும் போது அவன்கூடச் சேர்ந்து நில். அவன் தவறாக நடக்கும் போது அவனை விட்டு விலகு'

இதைச் சொல்லிவிட்டு அப்துல்காதர் அவர்கள் தவறாக நடக்கும் அரசியல்வாதிகளை ஓங்கி அடிக்கிறார்.

"பாதிரியாரிடம் யாரோ ஒருவர் கேட்டார், 'ஓர் அரசியல்வாதியைப் பார்த்தால் அவருக்காகப் பிரார்த்தனை செய்வீர்களா?" பாதிரியார், 'இல்லை - ஓர் அரசியல் வாதியைப் பார்த்தால் நாட்டுக்காகப் பிரார்த்தனை செய்வேன்" என்றார்.

இது அப்துல்காதர் அவர்களின் இயல்பான நகைச்சுவை.

சீனத்தலைவர் மா-சே-துங் அவர்கள் பண்புகெட்டு நின்ற மாந்தனை நினைத்துச் சினங்கொண்டார் - சீறி வெடித்தார் என்கிறார் நூலாசிரியர்.

"காடுகள் ஊடே புகுந்து
விலங்குகளைக் கண்டு
சிறுகீறல் கூட இன்றி வந்தேன்...
வரும் வழியில் – சமவெளியில்
மனிதர்களைக் கண்டேன்...
தற்போது காயங்களோடு
திரும்பிக் கொண்டிருக்கிறேன்!'

இது மா-சே-துங் இலக்கியம் - அயல் மகரந்தச் சேர்க்கை.

அப்துல்காதர் அவர்கள் காட்டும் பிறிதொரு காட்சி அயல் மகரந்தமாய் நெஞ்சை அசைக்கிறது.

கருப்புநாட்டு இலக்கியன் ஒருவன், தனது காதலியின் முகத்திலும் அடிமைப்பட்ட கருப்பின மக்களையே பார்க்கிறான் அப்துல்காதர் அவர்களின் நெஞ்சில் அவன் பாடல் கனலைக் கொட்டுகிறது.

'பெண்ணே!
உன் முகம்
ரோஜாத் தோட்டம்தான்...
இருந்தாலும் –
அந்தக் கருப்பு மச்சம்

நீக்ரோ
தோட்டக்காரனைப் போல?

பேராசிரியர் அப்துல்காதர் அவர்கள் - அயல் மகரந்தச் சேர்க்கையில் - பெண்ணியத்தின் குரலாய் வெடிக்கிறார்

'சமைக்கிறவளை - உண்டி சுருக்குதல் பெண்டிர்க் கழகு' என்று பட்டினி போடுகிறோம்.

இரத்தத்தையே பாலாக்கித் தந்தவளின் இரத்தப் போக்கைத் தீட்டெனச் சிறுமைப்படுத்துகிறோம். தைத்து உடை தந்தவளைக் கிழித்தெறிகிறோம்' என்கிறார் அப்துல்காதர்.

அப்துல்காதர் அவர்களுக்கே உரிய தமிழ்நடையால் வீறு கொண்டு சிலிர்த்து நிற்கிறது அயல் மகரந்தச் சேர்க்கை.

'நார் கழுத்திறுக்கும் போது சிரிக்கும் பூ'

'பள்ளத்தில் இருக்கும் மனிதன் எதிரே இருக்கும் மலையை நிமிர்ந்து பார்க்கிறான். மலை உச்சிக்குச் சென்ற உடனே தலை குனிந்து கீழே பார்க்கிறான். தாழ்வில் நிமிர்வும் உயர்வில் தாழ்வும் தேவை.

பழுத்திருக்கும் மரத்தில் பழங்களைத் தேடாமல் - அதில் புழுத்திருக்கம் மரப்பட்டை இடுக்கில் புழுக்களைத் தேடும், மரக்கொத்தி மனிதர்களும் உண்டு


இரண்டு சரிவுகளின் உச்சியில்தான் சிகரம் நிற்கிறது.

நீதி தேவதையின் வாகனம் நத்தையாக இருக்க வேண்டும். அப்பன் போட்ட வழக்கு, கொள்ளுப் பேரன் - எள்ளுப் பேரன் காலத்திலும் முடிவதில்லை.

இவையெல்லாம் அப்துல்காதர் அவர்களின் நெஞ்சில் விளைந்த இலக்கிய மணிகள்.

அயல்மகரந்தச் சேர்க்கை - இலக்கியங்கள் பற்றிய இலக்கியம் - அது - தமிழனாய் இருந்து மாந்தரைப் பார்க்கிறது. மாந்தனாய் இருந்து தமிழனைப் பார்க்கிறது.

முற்றுப்புள்ளியின் கன்னத்தைக் கிள்ளினால்...



மனிதனின் கைகள் காடுகளை அழிக்கின்றன. ஆனால் மலரில் மொய்த்து எழும் வண்டு தன் கால்களில் ஒரு கானகத்தையே சுமந்து செல்கிறது. மலரின் மகரந்தம் சின்னச் சின்ன "ஹனிஹாப்டர்" களில் பயணம் செய்து, அடுத்த பூவுக்குள் இறக்குமதியாகிறது. இது இயல் மகரந்த சேர்க்கை. ஒரே வகையில் மகரந்தச் சேர்க்கை நிகழாமல் அதே இனத்தின் வேறு வகைப் பூவில் மகரந்தம் சேரும்போது அயல் மகரந்தச் சேர்க்கை ஆகிறது. விளைவு புதிய கலப்பில் வண்ணமும், வாசமும் வேறு பட்டு, வீரிய விதைகள் உருவாகிவிடுகின்றன. இயற்கையில் கலப்பு இயல்பானது உன்னதமானது; மனிதனின் கண்டு பிடிப்பான 'கலப்படம்' செயற்கையானது. சீரழிப்பது.

'என்னால்
வாழவும் முடியவில்லை
ஏனென்றால்
உணவிலும் கலப்படம்
என்னால்
சாகவும் முடியவில்லை
நானருந்திய
நஞ்சிலும் கலப்படம்'

என ஆனந்த விகடன் பொன்விழாக் கவியரங்கில் 'கவிக்கோ' பாடிய கவிதை வரிகள் சான்றாகி நிற்கின்றன. கலப்படத்தில் 'இரண்டுங் கெட்டான்' விளைச்சல்கள் தாம் சாத்தியம். இலக்கிய உலகிலும் இந்த விபத்து தற்போது 'ஹைக்கூ' என்ற ஜப்பானியக் கவிதை வடிவத்தைப் பின் பற்றிய தமிழ்க் கவிஞர்கள் சிலரால் எதிர்கொள்ளப்பட்டு வருவதைக் காணலாம். இயல்பான அயல் மகரந்தச் சேர்க்கை எப்படியிருக்க வேண்டும்? வால்மீகி இராமாயணம் கம்ப ராமாயணம் ஆனது போல இருக்க வேண்டும்.

'வேணு கானம் தென்றலோடு
சேர்ந்த பின்னாலே
கானம் வேறு காற்று வேறாய்த்
தெரிவதே இல்லை'

என்ற பழைய அம்பிகாபதி திரைப்பாடலில் அமைந்தது போலக் கலப்பு அமைந்தால் புதிய இலக்கியத் தளம் விரிவடைய வாய்ப்பு உள்ளது. பன்மொழி இலக்கிய அறிமுகம்தான் இவ்விலக்கியத் தொடரின் பயணத் திசை. முழுமையானது இறைமை மட்டும் தான். பரிபூரணத் தன்மை நோக்கித்தான் புலர்தலும் உலர்தலும், உதிர்தலும். இலக்கியமும் ஒரு தேடலின் தொடக்கமே. 'ஆலாய்ப் பறக்கிறான்' என்ற சொல்முறை மக்கள் நாவில் உண்டு. 'ஆலா' என்பது ஒரு நீர்ப்பறவை. அது உடல் முழுவதும் நீரில் மூழ்கிக் கழுத்து மட்டும் வெளியில் தெரியும் வண்ணம் நீந்தும். கழுத்து வரையில் தண்ணீரில் மூழ்கியிருந்தாலும், அது எப்போதும் தாகத்தோடே இருக்கும். இலக்கிய இதயமும் அப்படித்தான். ஓர் உடைந்து போன வளையல் துண்டைச் சலனமற்ற குளத்தில் எறிவோம். ஆனால், அது முழு அலை வளையங்களை எழுப்பிக் கொண்டு இருக்கும். அதனை ஒத்ததே இலக்கியப் பதிவுகளும். கிளியோபாத்ரா பருவ மாற்றங்களால் உருவ மாற்றம் அடையாத மார்க்கண்டேய மலர்

ஷேக்ஸ்பியர் இதனை,

'Age can not wither her'

என்று தொடங்குகிறார் கிளியோபாத்ராவின் ஓவியத்தை. பிறக்கையிலேயே தாடியோடு பிறக்கிற காரணத்தால்தான் தூரிகைகூட, காரிகைச் சித்திரம் தீட்டுகையில் பித்துப் பிடிக்காமல்

இருக்கிறது போலும். நைல் நதியில் வைரத் துடுப்புகள் அசைய தங்கப்படகில் வருகிறாள். கரையோரக் கிராமத்து மக்கள் எல்லாம் அவளைப் பார்க்கக் குடியிருப்பு இடங்களை விட்டு நதிக்கரைக்கு வருகிறார்கள். மக்கள் அனைவரும் வந்துவிட்டதால் ஏற்பட்ட வெற்றிடம்கூட கிளியோ பாத்ராவைப் பார்க்க வந்துவிட்டது என்கிறார் ஷேக்ஸ்பியர். படகுப் பயணத்தின் போது, படகின் கூர்மையான முன்பகுதி தண்ணீரைக் கிழித்துச் செல்லப் பின் பகுதியில் பார்த்தால், தண்ணீர் படகைப் பின் தொடர்ந்து வருவது போலத் தோன்றும். தண்ணீரும் கூட கிளியோபாத்ராவின் மீது கொண்ட காதல் காரணமாகப் பின் தொடர்கிறது என்கிறார். அவளைக் கண்டால் பாதிரியாரும் ஒரு மாதிரியாவார். ஏனென்றால்

> 'Where she satisfies
> She makes hunger'

அவள் பரிமாறப் பரிமாறப் பசியேறச் செய்வதாகக் குறிப்பிடுகிறார். எங்கே நிறைவு செய்கிறாளோ, அங்கேயே ஏக்கத்தைத் தூண்டுகிறாள். அருந்த அருந்தத் தாகம் தணிவதில்லை. தாகம் விசுவரூபம் எடுக்கிறது. கிளியோபாத்ரா இறுதியில் சிறுசிறு நச்சுப்பாம்புக் குட்டிகளை நெஞ்சோடு அணைத்துத் தற்கொலை செய்து கொள்கிறாள்.

> **'பிள்ளைகளே பால் அருந்துங்கள்**
> **உங்கள்**
> **தாயைத் தூங்கச் செய்யுங்கள்'**

என்று ஷேக்ஸ்பியர் முடிக்கிறார். பாலருந்திப் பிள்ளைகள் தூங்கும்; தாய் விழித்திருப்பாள். இங்கு எதிராக முடிந்து விடுகிறது. கிளியோபாத்ரா என்று வரும் கிளியோபாத்ராவின் மேற்குறித்த நாடக வரிகளில், கிளியோபாத்ரா இடத்தில் இலக்கியம் என்று வைத்துப் பாருங்கள். எவ்வளவு சுகமாக இருக்கிறது. ஆம், முற்றுப்புள்ளியின் கன்னத்தில் செல்லமாகக் கிள்ளுங்கள் அது 'கமா' ஆகிவிடும்.

நவம்பர் '03

மரியாத மரியாதை...



சாகாத சமாதிகள் உண்டு. தாஜ்மஹால் போல. அப்படி இரு கல்லறைகளைப் பார்த்தேன். அவை, உள்ளே அடக்கமாகிப் போன மனிதர்களால் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இரண்டுமே இரு மருத்துவர்களின் இடுகாட்டு நினைவுச் சின்னங்கள். அவற்றின் மேல் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்களால் மூச்சு விட்டுக் கொண்டிருக்கின்றன. மூலிகையே கையாகப் பெற்ற ஒரு டாக்டருக்கு இருந்தது ராசிக்கை. மற்றொருவருக்கு வேசிக்கை. முன்னவரின் ஸ்டெதாஸ்கோப் நோயாளியின் இதயத்தை ஆராயும். பின்னவருடையதோ இதயத்திற்கு மேலுள்ள சட்டைப் பாக்கெட்டைத் துழாவும். ஒருவர் எழுதும் மருந்துச் சீட்டு நோயற்ற வாழ்வுக்கு நுழைவுச் சீட்டு. மற்றவர் தந்தது மருந்துச் சீட்டா? மயான இலவச மனைப் பட்டா. நல்ல மருத்துவரின் கல்லறையில்

"Doctors is in
upstairs"

என்பது முதல் வரியாகவும்,

"May be He may not be well"

என்பது இரண்டாம் வரியாகவும் செதுக்கப்பட்டிருந்தது. அவர் இறந்து விட்டார் என்று குறிப்பிட முடியாது. மேல்மாடியில் இருக்கிறார். இந்தப் பூவுலகம் வீட்டின் தரைத்தளம். அதன் மாடி மேலுலகம். மருத்துவர் வீட்டு வாசல்களில் "IN" "OUT" என அவர் பெயர்ப் பலகைகளுக்குக் கீழ் அமைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம் அல்லவா? இந்த மருத்துவர் எப்போதும் "OUT" ஆவதில்லை. அவர் "INNINGS" முடிவதே இல்லை. அவர் யாருக்குள்ளாகவாவது இருந்து கொண்டே தான் இருக்கிறார். இறந்த காலமும், எதிர்காலமும் அற்ற அவர் நிகழ்காலமாகி விட்டார். அவர் மேலுலகம் சென்றது ஏன்? கேள்விக்கு இரண்டாவது வரி, அந்த கடவுளுக்கு உடல் நலமில்லை போலிருக்கிறது! அதனால் தான் இந்த நல்ல மருத்துவரை அழைத்து விட்டார். கல்லறையைக் கருவறையாக்கிக் கொண்டிருக்கிறது அவர் புகழ். மற்ற மருத்துவர் குணப்படுத்த வேண்டியதை ரணப்படுத்தி, அதனைப் பணப்படுத்தி வாழ்ந்தவர். அவர் கல்லறையில்

'இவர் இங்கே வந்து விட்டதால்
பலர் அங்கே உயிரோடிருக்கிறார்கள்
இவர் அங்கே இருந்திருந்தால்
பலர் இங்கே வந்திருப்பார்கள்'

என, தூரிகை எச்சில் துப்பியிருக்கிறது. ஒருவர் வாழும் போது அவரைப் பற்றிய மதிப்பீடு விருப்பு வெறுப்பு அச்சம் காரணமாக நடுநிலையாக அமைவதில்லை. இறப்பிற்குப் பின் சரியாக அமைகிறது.

கல்லறை வரிகளை ஆங்கில இலக்கியம் 'Epitaph' Literature என வகைப்படுத்தி வசப்படுத்தியுள்ளது. சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்ற இலக்கண உத்தி வாமன இலக்கியங்களை வார்த்தது. அர்த்தத்தில் விசுவரூப தரிசனத்திற்கு நம்மை இட்டுச் செல்கிறது.

புள்ளி ராஜாவிற்கு எயிட்ஸ் வருமா? இன்று தமிழகத்தின் எந்தத் திசை நாசியிலும் துருத்தும் நாற்றமாகக் கூச வைக்கும் விளம்பரம். புள்ளி ராஜா யார்? உடம்பெல்லாம் புள்ளி புள்ளியாய்க் கண்களைப் பெற்ற அகலிகையைக் கெடுத்த இந்திரனைச் சொல்கிறதோ? யார் அறிவார்? ஆனால், எப்படியிருப்பினும் ஆண் ராஜாவுக்கு வரும் எய்ட்ஸைப் பற்றித் தான் அரசும், சமூகமும் கவலைப்படுகிறதே தவிர, ஆட்கொல்லி நோய்க்கு ஆட்பட்ட பெண்ணைப் பற்றிக் கவலைப்படவில்லை. மாறாக, அவள்தான் காரணம் என்பதைப் போலக் குற்றம் சாட்டுகிறது அந்த விளம்பரம்.

உணவுக்காகத் தன்னையே உணவாக்கிக் கொண்ட, உடைகளுக்காகத் தன்னையே நிர்வாணப்படுத்திக் கொண்ட, வீட்டு வாடகைக்காகத் தன்னையே வாடகைப் பெண்ணாக ஆக்கிய 'அந்த' அபலைகளைச் சமுதாயம் எப்படிப் பார்க்கிறது? அப்படி ஒரு பெண் மரித்து விடுகிறாள். அவளுக்கு ஒரு கல்லறை வாசகத்தைக் கண்ணீர்த் துளிகளால் எழுதுகிறான் கவிஞன். அவன் பெயர் கூடத் தெரியவில்லை. மாந்த நேயத்தின் மகத்தான வெளிப்பாடாக, இந்தச் சரியற்ற சமூகத்தின் மீது நிஜமான விமர்சனமாக விளங்கு கிறது. அவன் எழுதிய ஆங்கிலக் கல்லறை வரிகள்.

'Atlast She sleeps - alone'

'இறுதியில் அவள் உறங்குகிறாள் – தனியாக'

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது'

என்ற குறளில் நெருப்பில் கூடத் தூங்கி விடலாம், ஆனால் நிரப்பு (வறுமை) தன்னில் தூங்குவது அரிது என்கிறார் திருவள்ளுவர்.

போகப் பொருளாக நுகர்ந்தவர்கள் இடையறாது அவளைத் தூங்க விடவில்லை. வாழ்க்கை அவளை நிர்வாணப்படுத்தியது. ஆனால், மரணம் தான் அவளுக்கு ஆடை தந்து கௌரவப்படுத்தியது. மரணத்தை விடக் கல்லறை வாசகம் எழுதியவன் எவ்வளவு கண்ணியப்படுத்தி விட்டான்! அவளைக் 'கட்டணக் கழிப்பிட'மாகப் பயன்படுத்திய சமூகத்தின் மீது கவிஞன் கோபம் 'தனியாக' என்ற அக்கினிச் சொல்லில் அமிலமாக வெளிப்பட்டுவிட்டது.

அவ்வரிகளில் உள்ள வார்த்தைகளில் மட்டுமல்ல (-) என்ற குறி கூட வெப்பம் தகிக்க விழுந்துள்ளது. ஆம் குறியீடுகளுக் கிடையே (+, x,-, %) கழித்தல் குறிதான் தனியே இருக்கிறது. அவளோடு கூடியதில் ஒரு கூட்டல் குறி வரவில்லை. அதுவே அவளுக்குச் சிலுவைக் குறி ஆகிவிட்டது. அவளோடு தவறு செய்தவர் பெருகி வந்தது பெருக்கல் குறி ஆனதில்லை. இவள் மீது தப்புக் குறி (x) யாகவே தங்கிவிட்டது. அவள் வாலிபத்தை வகுத்தெடுக்க வந்த ஈவு, இரக்கமற்ற வகுத்தல் குறிகள் எள்ளப் படுவதில்லை. முரணாக அவள் வாழ்க்கைப் பொட்டும், திருஷ்டிப் பொட்டுமாய் கரும்புள்ளி செம்புள்ளியென இரு புள்ளிகளைக் குத்திக் கொண்டு விட்டது. அவளையும் தன்னையொத்த சக பிறவியாய், சக மனுஷ ஜென்மமாய்க் கருதி இன்னொரு கோடு சமமாய்ச் சேர்த்திருந்தால் அவள் வாழ்க்கை சமக்குறி ஆகியிருக்கும். அவள் கழித்தல் குறியாகி விட்டாள். வாழ்வின் கணக்கே மாறி விட்டது. அவள் இப்போது தான் தனியாகத் தூங்குகிறாள். எந்தச் சில்லறைச் சப்தமும் அவளை எழுப்பி விட முடியாது. கரன்சிக் காற்று, மொட்டாகிவிட்ட கண்மலர்களின் துயிலைக் கலைக்க முடியாது. வாழும் போது அவமரியாதை தவிர அவள் மரியாதையைக் கண்டதில்லை. ஆனால், மரணம் மரியாதையைச்

சம்பாதித்துவிட்டது. கல்லறை வாசகம் எழுதிய கவிஞனின் எழுதுகோல் விழுது கோல் ஆகி, அவளைத் தாங்கி நிறுத்துகிறது. விழுவது தான் மரியாதை என்று கொச்சைப்பட்டுள்ள காலத்தில், எழுவது தான் மரியாதை என்றே வாழ்ந்தவளைப் பற்றிய கல்லறை வரிகள்.

இலண்டன் கல்லறைச் சதுக்கத்தில் என்னை ஒரு முறை கண் சிமிட்டி அழைத்தன, ஒருவனைப் பற்றி எழுதப்பட்ட கல்லறை வரிகள். சின்னவரோ, பெரியவரோ எவர் தன்னைத் தேடி வந்தாலும் எழுந்து நின்று வந்தவரை வரவேற்று, அவர் அமர்ந்த பின் அமர்வது அவன் பழக்கம். அவன் இறந்து விட்டான். அவன் கல்லறையில் இப்படி எழுதச் சொல்லி மாண்டு விட்டான்.

அவன் கல்லறையில் அவனே சொல்வதாக "Excuse me for not rising" எனப் பதிக்கப்பட்டுள்ளது.

'வாழ்ந்து' கொண்டிருக்கும் வரை, என் வீட்டிற்கு வந்தவர்களை மரியாதை செய்ய, இருக்கையிலிருந்து எழுந்து நின்று வரவேற்பது என் வழக்கம். சாவுக்குப் பிறகு என் வீடு இந்தக் கல்லறை தான். நீங்கள் என் சமாதி (வீடு) அருகே வந்து விட்டீர்கள். என்னால் எழ முடியவில்லை; என்னை மன்னித்து விடுங்கள் என்பது தான் அக்கல்லறை வரிகளின் சாராம்சம். செத்தும் கொடுத் தவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். மரித்த பிறகும் மரியாதை செய்ய முடியவில்லையே என்ற ஆதங்கம் சிலிர்ப் பூட்டுகிறது.

டிசம்பர் '03

“மண்மேல்” மந்திரம்



“என்னைப் படைக்க ஏன் இறைவா
மண்ணைத் தேர்ந்தெடுத்தாய்?
விண்ணை மூலம் ஆக்கியிருந்தால்
விரிசல் வருமா? பிரிவு வருமா? ”

இறைவனைக் கண்டவுடன் நான் கேட்க விரும்பும் கேள்வி இது. மண்ணை மூலப் பொருளாக்கி நம்மைப் படைத்ததால்தான் ஒரு மனிதன் சக மனிதனுக்கு இடையே வரப்புகளை ஏற்படுத்தினான். பிரிக்கும் சுவர்களைப் பெரிதாக எழுப்பி வருகிறான். எல்லைக் கோடுகளை யுத்தங்களால், இரத்தங்களால் மாற்றி மாற்றி வரைகிறான். வாழுந் தலத்தைச் சாகுந்தலமாக்கி விடுகிறான். சாதிக்கொரு இடுகாடு வைத்துச் சமரசம் உலாவும் இடத்தையும் சண்டைக் களமாக்கி விடுகிறான்.

27 ஆண்டுச் சிறை வாசம் முடித்த நெல்சன் மண்டேலா முதல் பத்திரிகையாளர் சந்திப்பின்போது, தாங்கள் முதலில் செல்ல விரும்பும் வெளிநாடு எது என்ற கேள்விக்கு மகாத்மா காந்தி தேசமான இந்தியாவிற்கு என விடையளித்தார்.

அண்மையில் மகாத்மா காந்தி பிறந்த மாநிலமான குஜராத்திலிருந்து ஓர் அரசு அழைப்பு மண்டேலாவுக்கு வந்தது. 'உங்களுக்கு விருது வழங்குகிறோம் வருக' என்ற அழைப்பை மண்டேலா மறுத்து விட்டார். கோத்ராவும், பெஸ்ட் பேக்கரியும், கைக்குட்டைக்கும் கண்ணீர் வரைவழைத்து விடும். 'கோடித்துணி' மட்டுமே நெய்யும் டெக்ஸ்டைல் நரகமாகி விட்ட மோடியின் பிரதேசத்திற்கு வர மண்டேலா மறுத்து விட்டது நியாயம் தான்.

இந்திய தேசத்தின் அசல் அடையாளம் இதுவா?
தாய்ப்பால் சுரக்கும் மார்பில் வழிவது மதுவா?

இல்லை! இல்லை என்கிறது நம் வரலாறு.

பாபா ஷேக் ஃபரீத் என்றொரு சூஃபி ஞானி. பஞ்சாபின் முதல் சூஃபிக் கவிஞரும் அவர்தான். முஸ்லிம் என்ற முத்திரை பெற்றிருந்தாலும் இவர் கவிதைகள் சீக்கியர்களின் புனித வழிபாட்டு நூலான 'குரு கிரந்த சாஹிப்' என்ற வேதத்தில் இடம் பெற்றுள்ளன.

கரும்பு வேண்டுமானால் வெவ்வேறு வண்ணங்களில் இருக்கலாம்; ஆனால் அது வழங்கும் சர்க்கரையின் நிறம் ஒன்று தான். அது வெள்ளை தான். எல்லா மார்க்கங்களின் சாரம் ஒன்று தான். இந்த உள்ளுணர்வு தான் பாரத நாட்டின் பண்பாட்டு அடையாளம்.

ஞானி ஷேக் ஃபரீதிற்கு ஒரு முறை கத்தரிக்கோல் வழங்கப்பட்டது. உடனே அவர் "எனக்கு ஊசி கொடுங்கள், நான் வெட்டிப் பிரிக்க விரும்பவில்லை தைத்து ஒன்றாக்கவே விரும்புகிறேன்' என்றார்.

கோவணத் துணியைக் கோலொன்றில் தொங்க விட்டுக் கொண்டு, இதனைத் தவிர எனக்கு எதுவும் சொந்தமில்லை' எனப் பிரகடனப்படுத்தி வாழ்ந்த உண்மைத் துறவிகளின் மடாலயத்திலிருந்து ஒரு சமரசக் குரல் அன்று ஒலித்தது. காஞ்சி சங்கர மடத்திற்கு அடுத்தக் கட்டடம் மசூதி. விடியற்காலையில் எழுப்பப்படும் தொழுகை அழைப்பு (பாங்கு ஒலி) ஓசையால் எங்கள் தூக்கம் கெடுகிறது எனச் சொல்லி, காஞ்சி சங்கர மடப் பெரியவர் சந்திரசேகரானந்த சரஸ்வதி சுவாமிகளிடம், அம் மசூதியை அகற்றச் சொல்லிக் கோரிக்கை எழுப்பியது ஒரு கும்பல். உடலில் சுருக்கம் இருந்தாலும் மனதில் சுருக்கம் இல்லாத அந்த மாமுனி சொன்னார், 'பிரம்ம முகூர்த்தமான விடியல் வேளையில்,

நான் நிகழ்த்தும் காமாட்சி அம்மன் பூஜைக்கு, நான் எழுவதே அந்தத் தொழுகை அழைப்பைக் கேட்டுத் தான். அந்த இறையில்லத்தையா அகற்றச் சொல்கிறீர்கள்? மசூதியின் மனித நா, கோவில் மணி நாவின் நாதத்தில் ஒலிப்பதைக் கேட்கவில்லையா?'

பாபா ஷேக்ஃபரீதின் ஒரு கவிதை அதே சமரச முலாமிட்டு வருகிறது.

"Farid! Revile not dust, there is nothing like it
When we are alive it is beneath our feet
When we are dead it is above us"

சூரியத் தேர்ச்சக்கரத் தூசி தான் மேகங்கள். அந்தத் தூசியே சூரியனை மறைத்து விடும். இறைவனின் படைப்பில் இதுவே உயர்வு; அது தாழ்வு. அவர்கள் தான் மேல்; இவர்கள் கீழ் என்று சொல்ல முடியாது. பிரம்மதேவனின் நெற்றியில் பிறந்ததால் பிராமணன் உயர்ந்தவன். காலிலிருந்து தோன்றியதால் சூத்திரன் தாழ்ந்தவன். மனுதர்மம் என்ற பெயரால் வழங்கப்படும் வருணாசிரம நெறியாகப் பிறழ உணர்ந்த வகைப்பாட்டினை எப்படி ஏற்க இயலும்? இதற்கு எதிர்ப்புக் குரல் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே தோன்றிவிட்டது.

"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்"

"வாழும் போது நம் காலுக்குக் கீழே இருக்கும் மண், இறந்த பிறகு நமக்கும் மேலே வந்து விடுகிறது"

என்கிறார் ஷேக்ஃபரீத். தனக்குக் கீழ்தான் எல்லாம் என ஆணவம் கொண்ட ஏகாதிபத்தியங்கள், எதேச்சதிகாரங்கள் எத்தகைய சாதாரணர்களால், அற்பப் பொருள்களால் வீழ்த்தப்பட்டுள்ளன என்பதை வரலாறுகள் சுட்டிக் காட்டுகின்றன. சாதாரணம், அற்பம் என்பதெல்லாம் மேலிறுமாப்புப் பெற்றவன் பார்வையில்தான். சமத்துவத்தின் கண்களில் எல்லாம் ஒன்று தான். புனிதமிக்க காபாவை அழிக்க வந்த 'அப்ரஹா' என்ற கொடுங்கோலனின் யானைப் படையை, சின்னச் சின்ன மண்ணுருண்டைகளைத் தங்கள் அலகுகளில் ஏந்தி வந்து 'அபாபீல்' என்ற எளிய பறவைகள் வீழ்த்தியதை இறைமறை குர்ஆன் எடுத்துக் காட்டுகிறது.

நபிகள் பெருமானாரும், அன்னாரின் நிழல் தோழர் அபுபக்கர் (ரலி) அவர்களும் மக்காவை விட்டு வெளியேறி மதீனா நோக்கிப் பயணப்படுகிறார்கள். ஏகத்துவத்தின் எதிரிகளாம் மக்கத்துக் குறைசிக் கொலைஞர்கள் அவ்விருவரையும் தீர்த்துக்


கட்டப் பின் தொடர்கிறார்கள். 'தௌர்' என்னும் மலைக்குகையில் பெருமானாரும், அபுபக்கரும் மறைந்து கொள்கிறார்கள். குகைக்கருகே வந்த குறைசிகள் பார்க்கிறார்கள். அதன் பொந்து போன்ற வாயிலில், சிலந்தி வலைப் பின்னியிருப்பதைக் கண்டு, இதற்குள் ஆள்கள் சென்றிருக்க வாய்ப்பில்லை எனக் கருதி வேறுவழியில் சென்று விடுகிறார்கள். உள்ளிருந்த இருவரும் உயிர் தப்புகிறார்கள்.

வல்லோன் இறைவன் பாறைகளைக் கதவுகளாக்கித் தன் திருத்தூதரைக் காப்பாற்றவில்லை. கதவைக் கட்ட இரும்புக் கயிறுகளைப் பயன்படுத்தவில்லை. மாறாக வேகக் காற்றில் அறுந்து விடும் சிலந்தியின் மெல்லிழையால் காப்பாற்றிவிட்டான். அற்பமென்று ஆண்டவன் பார்வையில் எதுவும் இல்லை.

தலைப்பாகைகளுக்காக மற்றவர்களின் கோவணத்தை அவிழ்த்துக் கோலில் கொடியாகப் பறக்கவிடும் போலித்துறவிகள் எல்லா வகையிலும் பேதப்படுத்தும் சூழலில், ஷேக்ஃபரீத் போன்ற சூஃபி ஞானிகளின் சொற்கள், சாவைப் போன்ற சமத்துவ சமரசவாதி இல்லை என்பதை விளக்கி, 'மண்மேல்' சொல்லும் மந்திரமாகவே ஒலிக்கின்றன. எதுவும் கீழ் இல்லை. எல்லாம் மேல் தான். உன்னை மண் புதைக்குமே தவிர, மண்ணை உன்னால் புதைக்க முடியாது. மேன்மெய்யும் அப்படித்தான்!

ஜனவரி '04

இல்லற ரசாயனம்



காதல் பொதுக் காற்றைப் போல எல்லோரையும் தோஷமின்றித் தொட்டுக் கொள்ளும். அது எல்லை தாண்டும் இனிய பயங்கரவாதம்.

அன்பு வெள்ளம் அதிசயமானது. அது கல்லணைக்குக் கட்டுப்படாது. பஞ்சணைக்கே கட்டுப்படும் பாச வெள்ளம். காதல் வயப்பட்ட இருவரும் பரிமாற்றங்களில் மென்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். முப்பாலைச் சுரந்த வள்ளுவ 'முப்பாட்டனும்' 'மலரினும் மெல்லிது காமம்' என்றான்.

இரவில் மலரும் மலர்கள் எல்லாம் வெள்ளையாகவே மலர்கின்றன. இரவோ கருப்பு. மலரின் காதலன் வண்டின் நிறமோ கருப்பு. மலரும் ஒரு அடர்ந்த நிறத்தில்

இருந்தால் சந்திக்க வரும் வண்டுக் காதலன் திண்டாடுவான் என்றே இரவுப் பூக்கள் வெண்மையாகவே மலர்கின்றன. மன்மதப் போரின் சமாதானக் கொடியும் வெள்ளைப் பூக்கள் தாம்.

இந்தப் போர் இரத்தம் சிந்தும் போரில்லை. முத்தம் சிந்தும் போர். இந்தப் போரின் விளைவு உயிரழிவு இல்லை; மாறாக உயிர் உற்பத்தி.

'அழகுப் பெண்ணின் தாயார் என்றால் அத்தை என்று அர்த்தம்' என இன்றைய திரைப்பாடல் பண்பாட்டு வரைமுறை தாண்டி வக்கிரமாக ஒலிக்கிறது. அவன் தங்கை அழகாயிருந்தால் தன் அன்னையை அத்தையாக்கிக் கொள்வானா? கவிஞன் அன்னியப் பெண்ணின் பெயரை இதழ்களால் படித்தால் எச்சில் படிந்து விடுமே என்று, இமைகளால் படிக்கும் இங்கிதம் தெரிந்தவன். மெல்லிய உணர்வுகளைப் புல்லிய வார்த்தைகளால் அழுக்காக்க மாட்டான். அனைத்துலகக் காதல் கவிஞர்களும் இந்த நாகரிக மரபைப் பின்பற்றியிருப்பது வியப்பூட்டும் அம்சமாக இருக்கிறது.

கி.மு. முதல் நூற்றாண்டில் ஆந்திர மன்னன் சாதவாகனன் காதல் வாகனன் ஆகித் தொகுத்த பாடல்கள் 700. பிராகிருத மொழியில் எழுதப் பெற்றவை. 'காதா' என்னும் யாப்பினால் அமையப் பெற்றதால் 'காதா சப்த சதி' எனப் பெயரிடப் பெற்றது. 'காதா' என்னும் யாப்பு சமஸ்கிருதத்திற்கு உரியது. முதலடி 12, இரண்டாமடி 18, மூன்றாமடி 12, நான்காமடி 15 மாத்திரைகள் பெற்று வரும். பிராகிருதம் தமிழோடு பல ஒப்புடையது. காதா சப்த சதியின் பல பாடல்கள் நம் சங்க அக இலக்கியங்களின் அச்சாக அப்படியே அமைந்துள்ளன. இமைகள் என்ற சிக்கி முக்கி உரசலில் பற்றிக் கொள்ளும் மினி அக்கினி உணர்வுகளைக் காதா சப்த சதிக் கவிஞர்கள் சுடராக ஏற்றியுள்ளார்கள்.

முதற் சூலுற்ற ஒரு பெண் மசக்கையில் தவிக்கிறாள். உள்ளுக்குள் ஒரு குட்டிக் கிரகம் சுழலத் தொடங்குகையில் அவளுக்குத் தலை சுற்றுகிறது. கருவிளங்காய் கனிய வேண்டும் என்பதால் தேமாங்காய், புளிமாங்காய் சாப்பிடுகிறாள். பேறு காலப் பெண்களுக்குப் பிடித்தவற்றைப் புகுந்த வீடாயினும், பிறந்த வீடாயினும் ஆர்வமாகத் தருவது சமூக வழக்கம். பிள்ளைக் கனி மரத்திற்கு உரமாகச் சாம்பலும் கூட அமைந்துவிடும். எனவே என்ன வேண்டும் என்பதை அறிய வீட்டகத்தோர் அனைவரும் விருப்பமாக இருப்பார்கள். இதனை மையப்படுத்தி காதா சப்த சதியின் 15 ஆம் பாடல் அரும்பியுள்ளது.

கன்னிக் கரு தாங்கிய பெண்ணைப் பார்த்து
"உனக்கு எந்தப் பொருளின் மீது

அதிக விருப்பம்?
ஆசைப்பட்டதைக் கூசாமல் சொல்,
வாங்கித் தருகிறேன்" என்றான் கணவன்.
தன் கணவன் மீது கடைக்கண்
பார்வையைச் செலுத்தினாள்.

கோடி கோடி நட்சத்திர ஆசைகளை உள்ளுக்குள் மறைத்துச் சிவப்புத் தீற்றலாக வெளிப்படும் வைகறை வானம், நாணம். அதனை வெளிப்படுத்துகிறாள் அந்தப் பெண். அவளுக்கு எதனையும் விட, யாரையும் விட இனியவன் அவன் தானே. அவனைவிட அவளுக்கு மகிழ்வும், நிறைவும் யாரால் வழங்கிட இயலும்? முழுக்கண் பார்வை செலுத்தினால், பாவைக்குள் அவனோடு சேர்ந்து பிற பொருள்களும் இடம் பெற்று விடக்கூடும். முற்ற முழுக்க அவனையே, அவனை மட்டுமே தாங்கி நிற்கும் தாகத்தைக் கடைக்கண் என்ற வார்த்தை வார்ப்பு தெரிவிக்கிறது. ஏக நாயகனையே வரிக்கும் இனிய கற்புக் காதல்நிலை சொற்சிற்பமாகி இருக்கிறது.

விக்கிரன் என்பார் எழுதிய காதா சப்த சதியின் 70ஆம் பாடல் இதே போன்ற நிகழ்வை வேறொரு வகையில் தீட்டுகிறது. அந்த வீட்டு அடுப்பில் அம்மாவாசை. புன்னகை விளக்கு மட்டுமே எரியும் வறிய இல்லம். எல்லாவற்றையும் வற்றச் செய்யும் வறுமை வெப்பத்தால் இதய ஈரத்தை என்ன செய்துவிட முடியும்? அகல்களை அணைக்கலாம் காற்று; காதல் சூரியன் காற்றில் அணையுமா? நீர் விழ, விழக் கான்கிரீட் பலப்படுவது போல, கண்ணீர் விழ, விழக் காதல் கட்டடம் உறுதியாகிவிடுகிறது.

" குடும்பத்தின் வறுமை நிலை
அந்தக்
குலமகள் உணர்ந்தவள்.
கருக் கொண்ட நாளிலிருந்து
உனக்கு விருப்பமான
உணவு வகைகளைச் சொல்
வாங்கித் தருகிறேன். என்றான் கணவன்.
மாமியும்
'நீ ஆசைப்படுவதைக் கேள்' என்கிறாள்.
ஆனால் அவள்
நெருங்கிய நண்பன் வீசிய
கடுஞ்சொல்லை
யாரிடத்தும் சொல்லாது மறைப்பது போல
தான் விரும்பும் தின்பண்டத்தின் பெயரை
வெளியில் சொல்லாமல்
காத்து வருகிறாள்."

மழைத்துளி விழுந்தவுடன் எழும் மண்வாசம் இந்தப் பெண்பாசம். அவள் மனவுணர்வு ஒரு உவமையால் அற்புதமாகச் சொல்லப்பட்டுவிட்டது. உவமையில்லா உவமையாகப் பொருந்தி நிற்கிறது.

'நண்பன் மரணத்தைப் பொறுத்துக் கொள்ளலாம். நட்பின் மரணத்தைப் பொறுக்கவியலாது' என்றொரு பழமொழி உண்டு. நட்பின் மரணம் ஒரே நேரத்தில் நட்புக் கொண்ட இருவரையும் சாகடித்துவிடுகிறது. மனங்கலந்து பழகிய நண்பன். ஆத்திர அவசரத்தில் வீசிய கடுஞ்சொல்லை, நட்பின் மரியாதை கருதி, தோழன் யாரிடத்தும் சொல்லமாட்டான். எந்தச் சூழலிலும் வெளிப்படுத்த மாட்டான். குடும்பத்தின் இயலாநிலை உணர்ந்த குலமகள் தான் விரும்பிய பண்டத்தையும் இறுதிவரை சொல்லவே இல்லை.

குழந்தையின் நிழல் மீது முள் விழுந்தால் நெஞ்சுக்குள் காயப்பட்டு விடுகிற தாய்மை உணர்வின் தொட்டில் நிலை, அந்தத் தலைவியின் நிலை. தங்கைக்குத் தின்பண்டம் வழங்கிய போது தனக்கு ஏன் தரவில்லை எனப் பிடிவாதம் பிடித்தவள் அவள். தம்பிக்கு அதிகம் தரும் போது தனக்கேன் குறைந்தது என்று தவித்து அழுதவள் அவள். தட்டிப் பறித்துண்டவள் அவள். நாசித் துவாரத்தில் பஞ்சடைத்துப் பாடைக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் தாத்தாவின் காலைப் பிடித்து உலுக்கித் தெருவில் விற்கும் பஞ்சு மிட்டாய் வாங்கித் தாவென அடம்பிடித்த அவள், இல்லற ரசாயனத்தில் தான் எவ்வளவு மாறிவிட்டாள்!

பிப்ரவரி '04

யானைக்கொரு காலம் வந்தால்...



குருகுலக் கல்வி இருந்த காலத்தில், ஆசிரியர் அமர்ந்து கொண்டே பாடம் சொல்வார். மாணவர்கள் செவி வாயாக நெஞ்சு களனாக நின்று கொண்டே பாடம் கேட்பார்கள். இன்று மாணவர்கள் அமர்ந்திருக்க, ஆசிரியர் நின்று கொண்டே பாடம் நடத்துகிறார். எல்லாம் தலை கீழ். ஆனால் கூர்மையாகப் பார்த்தால் அமர்ந்த நிலையிலிருக்கும் மாணவர்கள்தான் குரு. நிற்கும் ஆசிரியர் கற்கும் மாணாக்கர். மாணவர்கள் தோண்டத் தோண்டத்தான் இந்த மணற்கேணி ஊறுகிறது.

மாணவர் ஒருமுறை வகுப்பில் என்னிடம்

"யானைக்கொரு காலம் வந்தால்
பூனைக்கொரு காலம் வரும்"

என்பது எதனைக் குறிக்கிறது என்று கேள்வி எழுப்பினார். வடிவத்தில் பெரியது யானை. பூனை சிறியது. எல்லா நிலையிலும் பெரியவர்கட்கு ஒரு சிறப்பான வாய்ப்போ, புகழோ கிட்டலாம். ஆனால் சிறியோர்க்கு அது அமையுமா என்ற ஐயம் வேண்டியதில்லை. காலச் சுழற்சியில் சிறியோர்க்கும் அவையிரண்டும் கிடைக்கும். பெரிய மதிப்புள்ள கரன்சி நோட்டுக்களை வைத்து மனிதர்களை எடைபோடும் போது சலவை நோட்டுக்களுக்கு அரியாசனம் ஏறிய அகந்தை. ஆனால் எடைபார்க்கும் எந்திரங்களில் கரன்சிகள் செல்லுபடியாவதில்லை. ஒரு ரூபாய் நாயணயந்தான் உதவும். ஆகப் பெரிய நாணய நோட்டுக்கு ஒரு காலம் என்றால், சிறிய சில்லறை ஒரு ரூபாய் உலோக நாணயத்திற்கும் ஒரு காலம் வருகிறதில்லையா, அது போல என்று விளக்கமளித்தேன். மாணவரோ "அப்படியில்லை ஐயா; முன்பெல்லாம் இராஜாக்கள் வந்தால் ஆனைப்படை பாதுகாப்புக்கு வந்தது. தற்போது இராணி வந்தால் பூனைப்படை பாதுகாப்புக்கு வருகிறதல்லவா! அதனாலேயே யானைக்கொரு காலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும்" என்றார். யார் குரு? யார் சிடன்? வெளியே கவியரசு கண்ணதாசனின் பாடல்

"பானையிலே சோறிருந்தா
பூனைகளும் சொந்தமடா
சோதனையைப் பங்குவெச்சா
சொந்தமில்லே பந்தமில்லே"

உள்ளேயிருக்கும் பண்டத்திற்காகச் சுற்றிவரும் உறவுகள் பானை காலியாகி விட்டால் பறந்துவிடுகிறார்கள்.

"காலாடு போழ்தில் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர் – ஏலா
இடர்ஒருவர் வுற்றக்கால் ஈர்ங்குன்ற நாட
தொடர்புடையேம் என்பார் சிலர்"

என்றதொரு பழுத்த பழம் பாடல். காலாட்டிக் கொண்டு வாழ்ந்த வசதியான காலத்தில் உறவுகள் வானிலிருக்கும் நட்சத்திரங்களை விட எண்ணிக்கையில் மிகுதியாயிருக்கும். செல்வக்குளம் வற்றிப் போனால் உறவுப் பறவைகள் ஓடிவிடும். மிகச் சிலரே அந்தச் செல்வரோடு எனக்குக் கொஞ்சம் தொடர்பிருந்தது என்பார்கள் என்று அந்தப் பாடல் பேசுகிறது. 'Jumping out of the sinking boat' என்று குறிப்பிடுவதும் அதைத்தான். பானையிலே உள்ள சோறு பதவி என்று வைத்துக் கொண்டால், பூனைப்படை சுற்றி வருவது நிகழும். பதவி போய்விட்டால், பூனைகளும் விலகிவிடும்.

இந்தக் கருத்தை வலியுறுத்தும், அற்புதமான வசன வெளிப்பாடு வடமொழி நாடகமான 'முத்திரா ராட்சசத்தில்' காணக் கிடைக்கிறது. விசாகத் தத்தரின் முத்திரா ராட்சசம் தலைசிறந்த கவிதை நாடகம். நாடகத்தில் ராட்சசன்

"இந்தச் சூரியன்
உதயகிரியிலிருந்து கிளம்பியபோது
வெகுதூரம் இவனைப் பின்தொடர்ந்து
சென்ற விருட்சங்களின் நிழல்கள்
இப்போது பாஸ்கரன்
வேறொரு திசையில் சாயும் நேரத்தில்
அவனை விட்டுப் பிரிந்து
வேகமாய்த் திரும்பி விட்டனவே!
ஆம்
இதைப் போன்றுதான்
தலைவனுக்குத் தனம் குறைந்தால்
அண்டிப் பிழைத்தவர்கள்
அப்புறம் போய்விடுகின்றனர்"

என்கிறான்.

பொறுப்பிலிருப்பவனின் செருப்பும் சிறப்புக்குரியதாக இருக்கிறது. பொறுப்புப் போய்விட்டால் செருப்பு மாதிரி கழற்றி விட்டுவிட்டு வெளியேறி விடுகிறார்கள். இவர்கள் நிஜங்கள் இல்லை. நிழல்கள்; ஆட்சிச் சக்கரத்தின் ஆரக்கால்களை வருடும் அடி வருடிகள்.

சூரியனைத் தொடரும் நிழல்கள். தொடரும் போது மிகப்பவ்யமாக நிதானமாகத் தொடர்ந்து வருவார்கள்., விட்டு வெளியேறும்போது வேகமாக, நிர்த்தாட்சண்யமாக உடம்பை விட்டு உயிர் சொல்லாமல் கொள்ளாமல் சென்று விடுவதைப் போல விலகி விடுகிறார்கள். ஆனால் அப்படியே இருக்கிறார்களா என்றால் இல்லை. விசாகத்தத்தர் சொல்கிறார்.

"அண்டிப்பிழைத்தவர்
அப்புறம் போய்விடுகின்றனர்"

என்று. எதிர்ப்புறம் சென்று விடுகின்றனர். சூரிய நிழல்கள் சந்திர நிழல்களாக மாறிவிடுகிறார்கள். சூரியனையும், சந்திரனையும் நட்சத்திரங்களையும் வைத்து நடக்கும் தமிழக அரசியலில் இந்த நிழலாட்டத்தைப் பார்க்கமுடிகிறது. நிழல்களின் கோணத்திலிருந்து பார்த்தால், இத்தகைய நிலைப்பாடற்ற நிழல்களை உருவாக்குவதே சூரியன், சந்திரன், நட்சத்திரம் ஆகியவைதாம்.

நெருக்கடி நேர்கிறபோது வெளிநடப்புச் செய்வது கண்ணீர்த்துளிகளே தவிர, கண்மணி அல்ல. கண்மணிகளைப் போல தந்தை பெரியாரும் பெருந்தலைவர் காமராசரும், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத்தும் நங்கூரக் கொள்கை யாளர்களாக நின்றார்கள். அதனாலேயே அவர்கள் மரணத்தையும் வென்று வரலாறாகி விட்டார்கள்.

மார்ச் 2004

அத்வானி மகன் நிக்காஹிற்கு குத்பா ஓதும் முஷாரப்



அல்லாஹ் கேட்டான் அப்துல்லாவிடம் "அப்துல்லாஹ் நீ இருக்குமிடம் என்னவென்று உனக்குத் தெரிகிறதா?" கருவறையின் நிறைவும், கல்லறையின் அமைதியும் இருக்கும் இந்த இடத்தில், புன்னகை விளக்குகள் ஒளி வீசுகின்றன. காற்றிலேயே மகிழ்ச்சி கலந்திருக்கிறது. என்ன இடம் இந்த இடம்?" அப்துல்லாஹ் நகக் கண்ணிலும் ஆனந்தம் துளிக்கக் கேட்கிறான். 'இன்னுமா தெரியவில்லை, இது தான் சொர்க்கம்' இறைவன் குரல் ஆனந்த அசரீரியாய் ஒலிக்கிறது. 'ஆண்டவனின் அஞ்சல் தலை (தன் நெற்றித் தொழுகைக் காய்ப்பினைச் சுட்டியபடி) ஒட்டிய இந்தக் கடிதம் உரிய முகவரியை அடைந்து விட்டதா?'' இமை உதடுகளில் உப்பு வார்த்தைகளால் நன்றி என்று உச்சரித்தபடி அப்துல்லாஹ், 'உனக்குச் சொர்க்கம் கிட்டியதற்கான காரணம் தெரியுமா?

அப்துல்லாஹ்' பரம்பொருள் கேட்டான். அப்துல்லாஹ் 'ஆன்மீகக் கன்னி அனேக நாயகர்க்குப் படுக்கை விரித்துப் பரத்தை ஆகாமல், ஏக நாயகனாக உன்னையே வரித்த என் ஆன்மீகக் கற்புக்கா இந்தப் பரிசு' என்றான் அப்துல்லாஹ். கடவுள் மறுத்தான். 'மூளை விழித்துக் கொண்ட நாள் முதல், மூச்சடங்கும் நாள் வரை ஒரு வேளைத் தொழுகையும் தவறவிடாமல் உன்னைத் தொழுதேனே, அதற்காகவா இந்த அரிய வாய்ப்பு?' அப்துல்லாஹ் கேட்கிறான். வேண்டுதல் வேண்டாமையற்ற தனக்குவமை இல்லாதான் சொல்கிறான்,'இல்லை அப்துல்லாஹ், ஒரு வேளைத் தொழுகையைத் தவற விட்டதால் இந்த நிம்மதிச் சரணாலயம் - சொர்க்கம் உனக்குக் கிட்டியது'. 'தொழுகை ஒன்று தான் சொர்க்கக் கனி கொய்யும் துரட்டி என்று கருதினேன். தொழாமல் இருந்ததற்காகவா தூயவனே! நீ எனக்குச் சொர்க்கம் தந்துள்ளாய்' அப்துல்லாஹ் அதிர்ந்து கேட்டான். அகிலங்கள் அனைத்தையும் படைத்துப் பாதுகாத்துப் பரிபாலனம் செய்யும் மூலமும், நடுவும், ஈறும் இன்றிக் காலமும் கணக்கும் நீத்த காரணன் சொன்னான் : "ஆமாம் அப்துல்லாஹ்! நெருப்புக் கோளச் சூரியனும், மருட்டும் பனிக்கஞ்சி, இருட்டுப் போர்வையைப் போர்த்திக் கிடக்கும் குளிர்காலம். வைகறைத் தொழுகைக்காக நீ வருகிறாய். நடைபாதையில் நடுங்கும் குளிரில் ஒரு பூனைக் குட்டி. தொழுகை வேளை முடியப் போகிறதே! ஒரு வேளைத் தொழுகையைக் கூட இதுவரை தவறவிட்டதில்லையே என அவசர அவசரமாய்ச் சென்ற நீ நின்றாய். மியாவும் உறைந்து போய்விட்டதால், முனகும் வழியின்றி, மூச்சு வாசலில் பனிக் கதவடைக்க, தாங்க முடியாக் குளிரால், பூனையின் முதுகுத் தண்டு வெளியே ஓடித் தப்பிக்க முயல்வது போல், பூனையின் வால் மெல்ல அசைகிறது. உயிர்ப் பயணத்தின் இறுதிக் கையசைப்பைப் போல. புதிதாகப் பிறந்த குழந்தையைப் போலப் பூனையை நீ கையில் எடுக்கிறாய். நலிந்து கிழிந்த மேலாடை விலக்குகிறாய். பூனைக்குட்டியை மார்போடு அணைக்கிறாய். மார்புச் சூடு பூனையின் சுருங்கிவிட்ட சுவாசப்பைக்கு இஸ்திரி போடுகிறது. தாய்மையின் கதகதப்போடு பூனை மனித மழலை ஆகிவிட்டது. மற்றவர்கள் என்னைத் தேடி மசூதிக்கு வந்தார்கள். தொழுகையைத் தவற விட்ட உன்னைத் தேடி நான் அங்கு வந்து விட்டேன். பரிவுணர்வு உனக்குச் சொர்க் கத்தைப் பாத்தியமாக்கி விட்டது" வறண்ட அரபுப் பாலையின் ஈர நிகழ்வு இது.

"வெள்ளை நிறத்தொரு பூனை – எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றதப் பூனை – அவை
பேருக்கொரு நிறமாகும்"

என்ற பாரதியின் பாடல் பூனைக் குட்டிகள் ஈனாமல் பிள்ளைகள் பெற்றன என்று குறிப்பிடுகிறது. பாரதி, பாடலில் இலக்கணப் பிழையென்று பண்டிதர்கள் சொல்லலாம். மாறாகப் பூனையை மனித நிலைக்கு உயர்த்திய உயிர்நேயம், இறுக்கும் இலக்கணக்

கட்டவிழ்த்து இரக்கமாகச் சுரக்கிறது. கிறித்து பிறப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதாகக் கருதப்படும் தொல்காப்பியம் 'அணில் பிள்ளை' 'தென்னம்பிள்ளை' என்று தமிழர்கள் உறவு கொண்டாடியதை மரபியலில் பேசுகிறது.

வீட்டில் யாருமில்லாத நேரம். கொல்லைப் புறம் வழியாக வந்த உள்ளங் கவர் கள்வன்தன்னைக் கண்டு காதல் தலைவி வருகிறாள். தாவி வந்த தலைவன் தேவியின் கரம் பற்றுகிறான். வெடுக்கெனக் கை விலக்கி விலகி வேறிடம் செல்கிறாள். 'பிடிபட விழையும் பெண்மைப் புறாவே இன்று விடுபட நினைத்து விலகியது ஏன்?' என்றான். கைப்பற்றுவதற்காகவே உள்ள காதல் கோட்டை நான். வெறுத்து விலகவில்லை. அந்த இடம் - அந்தப் புன்னை மரத்தடி வேண்டாமென்று விலகி வந்தேன்' என்றாள். காரணம் கேட்டான் கணவனாகப் போகிறவன்.

'விளையாட்டு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முனை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினுஞ் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையதன் சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே'

என்றாள். சங்க இலக்கிய நற்றிணைப் பாடல் இது. "என் தோழிகளோடு புன்னைக் கொட்டைகளை வைத்து விளையாடிக் கொண்டிருந்தேன், இக்கொல்லைப் புறத்தில். தவறி ஒரு புன்னங்கொட்டை மணலுள் அழுந்தியது எனக்குத் தெரியவில்லை. பின்னர் ஒரு கால் பெய்த மழையில் புன்னைச் செடி பூமிக்குள் இருந்து சிறகு விரித்தது. எனக்குக் கிடைத்த பால், தேன் முதலான திரவங்களை ஊற்றி வளர்த்தேன். 'பெரிய மரமாக வளர்ந்திருக்கும் புன்னை உன்னை விடச் சிறந்தது. உன் தங்கை அது என என் அன்னை புன்னையின் சிறப்பைக் கூறினாள். எந்த அக்கா தன் தங்கைக்கு முன்பு காதலனோடு கைப்பிடித்துச் சிரித்துக் களிப்புறுவாள்?" என்பது நாணத்திறம் சொல்லும் நற்றிணைப் பாடற் கருத்து. தமிழர் தம் அகப்பண்பாடு மட்டுமல்லாது ஓரறி வுயிரையும் உடன்பிறப்பாகப் போற்றியப் புறப்பண்பாடும் வெளிப்படுகிறது. இந்தியத் துணைக் கண்ட வடகிழக்கு மாநிலங்களில், சகோதரிகள் சகோதரர்க்குக் கையில் அணிவிக்கும் 'காப்பு நாணை' பெண்கள் அவர்கள் ஊரில் மரக்கிளையில் கட்டி ரக்ஷா பந்தன் கொண்டாடுகிறார்கள். அரபுப் பாலையிலும், தமிழ்ச் சோலையிலும், வடகிழக்கு மாநிலத் திரு நாளையிலும் உயிர்நேயம் வெளிப்பட்டிருப்பது வியப்பிலாழ்த்துகிறது.

ஜான் டன் (John Donne) ஆங்கில மொழியில் மீ மெய்யியல் கவிஞர். அவரும் 'காக்கை குருவி எங்கள் சாதி' என்ற பாரதி சாதிதான். தனிமையின் தனிமை தீர்க்க வந்ததைப்போல் காதலர் இருவர் கருத்தொருமித்து அந்த இடத்திற்கு வருகிறார்கள். முத்த மொழியின் ஒலிவடிவத்தை மிஞ்சிக் கொசு ஒன்று ரீங்கரித்து

வருகிறது. ஏகாந்த தேசத்தின் மீது ஏவுகணை தாங்கிய விமானம் இறங்கியது போலத் துணுக்குறுகிறாள் காதலி. சுற்றிச் சுற்றி வரும் கொசுவை அடித்துக் கொல்ல முயல்கிறாள். காதலன் சொல்வதாக டன் எழுதுகிறார்.

'அன்பே!
அந்தக் கொசுவினைச்
சாகடித்து விடாதே!
அந்தக் கொசு
முதலில்
உன்னைக் கடித்தது!
பிறகு
என்னைக் கடித்தது!
நமக்குள்
முதன் முதலாக
இரத்தக் கலப்பு
ஏற்படுத்தியதே
அந்தக் கொசு தான்!
அதனைச் சாகடித்து விடாதே!

கடித்து ரத்தம் உறிஞ்சும் கொசுவிடமும் அன்பு பாராட்டும் ஜான் டன்னின் உள்ளம், அதன் மெல்லிய இறகினும் மென்மையாயிருக்கிறது. கவிஞர்களின் காருண்ய உள்ளம் வாய்த்தால் பின் லேடனும் புஷ்ஷின் வீட்டைக் கட்டும் பொறியாளர் ஆகலாம். புஷ்ஷின் விமானங்கள் ஈராக்கின் குழந்தைகளுக்குப் பொம்மை போடலாம். அத்வானி மகள் நிக்காவிற்கு*1 முஷாரப் குத்பா*2 ஓதலாம். ஈழநாட்டிலிருந்து வரும் சமாதானப் புறாக்களுக்கு, இரை வழங்கச் சந்திரிகா, இலங்கையை எழுதித் தரலாம்.

ஏப்ரல் '04

---

*1 திருமணம்

*2 இசுலாமியத் திருமணத்தில் ஓதப்படுவது.

கிளைவந்த விரல்களையே காம்பாக்கிக்கொண்ட மலர்



வாணியம்பாடி முத்தமிழ் மன்றத்தின் பத்தாவது ஆண்டுவிழா 2002இல் நடைபெற்றது. அதன் கவிராத்திரி நிகழ்ச்சியில், ஒரு சுற்றுக்கு ஒரு கேள்வி தலைப்பாகத் தரப்பட்டது. நெருப்பு மட்டும் தலைநிமிர்ந்து எரிவது ஏன்? என்பது கேள்வி.

'ஐம்பூதங்களில் மண் கழிவுகளின் குப்பைக் கூடையாகிவிட்டது. நீர் சாக்கடையாகி விட்டது. காற்று புழுதியின் கலப்படமாகி விட்டது. வானம் புகை மாசுக்களின் ஆக்கிர மிப்பில் கரி பூசிக் கிடக்கிறது. நெருப்பாகிய நான் மட்டும் கறைப்படுத்த முடியாததால் தலைநிமிர்ந்திருக்கிறேன்.' எனத் திரைக்கவிஞர் பழனிபாரதி கவிதைபாடியபோது, நெருப்பின் நிமிர்வு நாட்டியத்திற்கு, அரங்கம் சதங்கை கட்டிக்கொண்டது.

சமயங்களும் ஐம்பூதங்களைப்போல் மனித இனத்தைத் தாங்க வந்தவைதாம். மனிதப் புழக்கத்தால் நான்கு பூதங்களும் மாறிப்போயின. வேதங்களும் இடைச் செருகல்களால் நிறமாறிப் போயின. நெருப்பைப்போல் களங்கப்படாமல், கலப்படமில்லாமல், ஒரு புள்ளிகூட மாறாமல். அருளப்பட்ட அசல் வடிவத்திலேயே இறைமறை குரானும், ஏகத்துவ நெறி இசுலாமும், இறுதித் தூதர் பெருமானார் நபிகள் நாயகம் வாழ்வுப் பதிவும் விளங்கி வருகின்றன என்பது காய்தல், உவத்தல் இல்லாது ஆய்தல் செய்யும் அறிவாளர் கருத்து.

இலக்கியத்திற்கு நோபல் பரிசு பெற்ற ரவீந்திரநாத் தாகூர் கவிதை ஒன்று, மாறும் மனித இயல்பைப் படம்பிடித்துக் காட்டுகிறது. புலி பசித்தாலும் புல்லைத் தின்னுவதில்லை. கொசு ரத்ததான வரிசையில் இடம் பிடிப்பதில்லை. மனிதனைத் தவிர்த்து எல்லாப் படைப்புகளும், படைக்கப்பட்ட காலத்தில் எந்தக் குணாம்சம் உடையனவாய் இருந்தனவோ அதே குணாம்சத்தோடுதான் இன்றளவும் வாழ்கின்றன. விலங்கிற்கில்லாத ஆறாம் அறிவு பெற்ற மனிதன், மனிதப் படிநிலைக்கு அடுத்த நிலைக்கு உயர்வதற்குப் பதிலாகக் கீழிறங்கி விடுகிறான்.

‘வெளியிலிருந்து
வீட்டு ஜன்னலுக்குள்
கைநீட்டிய மரக்கிளை ஒன்று
இலை நாவசைத்து
வீட்டின்
ஒரு மூலையில்
சாத்தப்பட்டுக் கிடந்த
கோடரியைப் பார்த்துக் கேட்டது:
கோடரியே
உனக்குப் பிடிதந்த
என்னையே வெட்டுகிறாயே?
கோடரிக் காம்பு சொன்னது:
மூலையில் நான்
முடங்கித்தான் இருந்தேன்
ஒரு மனிதன் என்னைத் தொட்டான்
தன் இனத்தைத்
தானழிக்கத் தொடங்கி விட்டேன்’

மாறுவது, தன் இனத்தையே அழிவுக்குள்ளாக்குவது என்பது மனிதனின் மாறாத அடையாளமாகிவிட்டது. அவனைச் சரிப்படுத்தி, நெறிப்படுத்த வந்த பெருமானார், தான் வாழ்ந்த காலத்து அரபுச் சமூக அமைப்பின் சூழலுக்கு இரையாகி விடவில்லை.

உப்புக் கடலிலிருந்து பிடிக்கப்பட்ட மீனை நம் தாய்மார்கள் சமைப்பார்கள். உப்புப் போட்டே சமைப்பார்கள். உப்புக் கடலில் உருவாகி வாழ்ந்தாலும், மீனின் உடம்பில் உப்பு ஒட்டுவதில்லை. தப்புக் கடலில் பிறந்தாலும் இந்த மூமீன் (தூய நெறிப் பரிபூரணர்) உடம்பில், உயிரில் தப்புப் படிந்ததில்லை. உப்புக் கடல்மீன் தன்மீது உப்புப் படியாமல் வாழ்ந்ததே தவிர உப்புச் சூழலை மாற்றியதில்லை. ஆனால், நபிகள் நாயகம் (ஸல்) தவறான சமூகச் சூழலில் தானும் கரைந்து விடாதது மட்டுமின்றி, அந்தச் சூழலையே சலவை செய்தவர். எல்லாவற்றையும் வெளுக்கும் நெருப்பு அழுக்காவதில்லை அல்லவா?.

நரகத்தையும், சொர்க்கத்தையும் ஒரே சமயத்தில் மகிழச் செய்த மனிதப் புனிதர் அவர்தான். அவரின் பிறப்பிற்கு முன்பு, நரகம் 'நரகவாசிகளின் வெள்ளப் பெருக்கால் மூழ்கித் துடித்தது. "ஐயோ இந்தப் பாவிகளின் சுமையைக் குறைப்பாரில்லையா?" மூச்சுத் திணறி முனகத் தொடங்கியது. சொர்க்கமோ யாரும் வராததால் ஏற்பட்டிருக்கும் தன் தனிமைத் துயரைத் தவிர்ப் பாரில்லையா' எனத் தவித்தது. நபிகள் பெருமான் வருகையால் நரகத்தின் சுமை குறையலாயிற்று. சொர்க்கம் நோக்கி நல்லடியார் கூட்டம் பெருகத் தொடங்கித் தனிமைத் துயர் காணாமல் போய்விட்டது. முரண்பட்டவர்களும் அவர்களை நேசித்தார்கள்; வாசித்தார்கள்.

அரபிக் கவிதைப் பாமாலை அண்ணலாரைப் பற்றிப் பாடுகையில்

'அன்த ஷம்ஷூன் அன்த பத்ருன்
அன்த நூருன் பௌக்க நூரி'

என்று குறிப்பிடுகிறது.

'பகலவன்தான் நீங்கள்
பௌர்ணமி நிலா நீங்கள்
ஒளியெல்லாம் நீங்கள்
ஒளிக்கு ஒளி நீங்கள்'

இறுதித் தூதரிடம் இருவகை இயல்புகள். ஈருலகிற்கு மனித இனத்தைப் பதப்படுத்தும் இருவகை அணுகுமுறைகள். ஒளிக்கும் இருவகைக் குணமுண்டு. ஒன்று வெப்பம் மற்றது வெளிச்சம். இரண்டிற்கும் அடிப்படை நெருப்புத்தான். சூரியனிடம் சுள்ளென்ற வெப்பமும் உண்டு. வெளிச்சமும் உண்டு. நிலாவுக்கு வெளிச்சம் உண்டு. வெப்பம் இல்லை.

நாளொன்றுக்கு ஒரு தெய்வம் என்று 365 நாள்களுக்கு மக்காவிலுள்ள காபாவைச் சுற்றி 365 சிலைகளை வணங்கியதால்

விளைந்தது ஆன்மீக அத்துமீறல். பல தெய்வ வணக்கத்தால் ஏற்பட்டவை குல வேறுபாடுகள், கோத்திரச் சண்டைகள். ஒரு சின்ன நீரூற்றுக்காகக்கூட பல்லாண்டுகளாகப் போர். மது, சூது, சோதிடம் என்ற முடைநாற்றம். விலங்குகள்போல வரன்முறையற்ற உறவால் பெண்களைச் சிறுமைப்படுத்தல். பிறந்தவுடனேயே பெண் குழந்தைகளை மண்ணில் புதைத்துக் கொலை செய்யும் சிசுக்கொலை. இப்படிப் பாவம் கோலோச்சும் பாலைவெளி. இந்தப் பாவங்களைச் சுட்டெரிக்கும் வெயில் அவர் வாழ்வில் உண்டு. ஆன்மீக விடியல் என்ற வெளிச்சமும் உண்டு. இரண்டும் ஈன்ற சூரியனாகவே அவர்கள் கடந்தார்கள்.

‘அறத்திற்கே அன்பு சார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை’

என்று குறட்பாட்டன் கூறியதுபோலப் பாவக் களை எடுக்கும் களைக்கோல் ஒருமுகம். குருடருக்குக் கைக்கோல் ஒருமுகம். நாயகம் (ஸல்) இவ்வுலக வாழ்க்கைக்குக் கடைப்பிடித்த இருவகை அணுகுமுறைக்குச் சூரியன் ஒரு குறியீடு. நபிகள் நாயகத்தின் ரசவாதத்தால் என்ன நிகழ்ந்தது? பரத்தைப் பரத்தையாக்க நினைத்தவர்கள், ஏக நாயகனையே வரிக்கும் பக்திக் கற்பினால் பரிமளித்தார்கள். ஒட்டக மேய்ப்பர்கள் உலகாளும் கலிபாக்கள் ஆனார்கள். ஒரு நீரூற்றுக்காகப் பல தலைமுறை யுத்தம் செய்து ரத்தம் கொட்டியவர்கள் என்ன ஆனார்கள்? **கந்தக்**[1*] போரில் முஸ்லிம்கள் பக்கம் மரண வாசலில் வீழ்ந்து கிடக்கும் தன் சகோதரனுக்கு நீர்க் குடுவை கொண்டு சென்ற ஒரு முஸ்லிம் போர்வீரன், எதிரிகள் பக்கம் மரணத் தாகம் எடுத்துத் தண்ணீர்க் கேட்டவருக்கு நீர் வழங்கிய ஈரம், அனல் பாலையில் அதிசயமாய்ச் சுரந்தது. மலர்விட்டு மலர் தாவும் கள்ளக் காமுக வண்டுகள் செய்த மகரந்தச் சேர்க்கையை ‘**மஹர**[2*]ந்தச் சேர்க்கை’யாக மாற்றும் மாற்றம் அரும்பியது.

பிறந்தவுடனேயே பெண் சிசுக்களை மண்ணில் புதைத்துச் சொர்க்கத்திற்கு ஏற்றுமதி செய்த பூமியில், தாயின் பாதத்திற்குக் கீழே சொர்க்கத்தை இறக்குமதி செய்த புரட்சி நிகழ்ந்தது. மதக் கள் அருந்தியதால் மூலமாகிய ஒன்று பலவாகத் தெரிந்த பூமியில், ஏகத்துவம், மனித எழுத்துகளை ஒரே வரியில் அச்சுக் கோத்தது.

ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்து இவ்வுலக உயிர் வாழ்வு தொடங்கியது என்ற தெளிவு பிறந்தது. சாராயத்தைப் புட்டிகளே வாந்தி எடுத்தன. வட்டிக்காக இதயத்தையே அறுத்துக் கேட்ட ஷைலக்குகள், ஜக்காத்துக்காக (ஏழை வரி) சொத்து முழுவதையும் வழங்கிவிட்டு அடுத்த நொடியில் ஆண்டவனிடம் கையேந்தி நின்றார்கள். பக்கத்து மனிதனையே இரையாக்கிக்கொண்ட

அக்கினிக் குண்டங்கள், பக்கத்து வீட்டின் பசிக்குச் சமைக்கும் அடுப்பாகின.

உழைப்பாளிகளின் வியர்வைத் துளிகளை உல்லாச நீச்சல் குளங்களில் நிரப்பியவர்கள், அவர்கள் வியர்வை உலரும் முன்னே கூலி கொடுத்த இதய மாற்று அறுவை சிகிச்சை நிகழ்ந்துவிட்டது. தொடக்கத்தில் சொந்த மண்ணே வேர் இறக்க அனுமதிக்காததால் வெளியேறிய முகமது என்னும் எளிய மருந்துச் செடிக்கு அகில உலகமே ஆணி வேராகி விட்டது. ஆம், கிள்ளவந்த விரல்களையே காம்பாக்கிக் கொண்டது முகமது எனும் மலர்.

இறைவன் மாட்டு நிமிர்ந்த நேயம் கொண்டு முக்தி பெற்ற பக்தியாளர்கள் உண்டு. சொர்க்கத்தைக் காட்டி இது உமக்கு என்று இறைவன் சொன்னபொழுது, இங்கு எனக்கு வேலை இல்லை. ஏனெனில் இங்கு கண்ணீரில்லை, காயமில்லை, விம்மலில்லை.

எனவே இல்லாமையால் துடிக்கும் என் உம்மத்துக்கள் (வழியடியார்கள்) இருக்கும் அந்த ரண பூமிக்கே என்னை அனுப்பிவிடு இறைவா! நுழைவதானால் என் உம்மத்துக்களோடுதான் நுழைவேன் என்று சொர்க்கத்தை மறுதலித்தார் நபிகள் நாயகம் (ஸல்). இம்மை வாழ்வில் ஒற்றைத் தனிச் சூரியனாகச் சுடன்றவர். மறுமை உலகில் தான்மட்டும் ஒளியோடு இல்லாமல் கோடி கோடி நட்சத்திர உம்மத்துக்களையும் வெளிச்சப்படுத்தி உடனழைத்து இறை அணுக்கம் எய்தச் செய்யும் நிறைமதியாகவும் இருப்பார்.

இருவேறு உலகில் இருவேறு அணுகுமுறை என்பதைச் சூரியன், நிலாவென அந்த அரபுக் கவிதை ஈரடியில் பேசினாலும், இறுதியாக, ஒளிகளுக்கெல்லாம் மூல ஒளி அண்ணலாரே என்று பேசுகிறது. விந்தை! வெளிச்சம் இரண்டு விளக்காகிவிட்டதுதான். ஒளி ஒன்றுதான். அதுதான் **'நூரே முகம்மதியா'**[3*] என்ற அன்னை ஒளி. பிற சுடர்களை மங்க வைத்து ஒளிய வைத்த ஒளி இல்லை. ஏனைய தூதுத்துவச் சுடர்களுக்கும் ஒளி மகுடம் சூட்டிய மூலச் சுடர் என்பதுதான் முத்தாய்ப்பு.

மே 2004

---

*1 நபிநாயகம் (ஸல்) பங்கேற்ற போர்களில் ஒன்று

*2 மஹர் - திருமணத்தின் போது மணமகன் மணப்பெண்ணுக்கு வழங்கும் கொடை

*3 நூர் - ஒளி; நூரே முகமதியா - முகமது நபியெனும் மூல ஒளி.

அதிசய நெருப்பு



காதல் ஒரு விந்தை வினைத்தொகை. மெய்யெழுத்துகளைத் தடவி உயிரெழுத்துகளைப் படிக்கும் ஒப்பற்ற மொழி. ஊசி கீறக் கீற உன்னத இசை எழுப்பும் கிராமஃபோன் இசைத்தட்டு. இந்தக் கான்கிரீட், கண்ணீர் கொட்டக் கொட்ட இறுகும். பூவினால் புளக முற்றுப் பாறைகள் உருகும். காதலி நெற்றியின் திலகத்திற்காக, காயங்களைச் சிமிழாக்கி ரத்தக் குங்குமம் சேகரிக்கும். காதல் கண்மீன் போடும் தூண்டில்; குடைக்குள் பெய்யும் மழை; சுழலும் பூமியைப் பம்பரமாக்கிச் சுற்றும் பாசச் சாட்டைக் கயிறு; உதட்டுக்காகத் தவிக்கும் தண்ணீர். ஜோடியாகவே எப்போதும் வழியும் கண்ணீர். அன்னிய மொழி வாக்கியம் போல அவன் வராத தெரு. பிணத்தின் மேல் சிரித்துக் கொண் டிருக்கும் பூக்களைப் போல் அவள் இல்லாத ஊர்.

காதல் இனிப்புத் தான். ஆனால் சமூகம் சர்க்கரை வியாதிக் காரனாகவே எல்லாக் காலங்களிலும் இருந்து வந்திருக்கிறது.

காவியங்களின் பாடுபொருள், இதிகாசங்களின் ஊடு பொருள், கவிதைகளின் கச்சாப் பொருள் காதல் தான்.

எழுதுகோலில் தவமிருந்த காதல், பலப்பம் அளவிற்கு இறங்கினாலும் வியப்பில்லை. அந்த அளவிற்குப் பெரிய திரை யிலும், சின்னத் திரையிலும் காதல் நெடி. 'காம' ராவில் மின்னும் நட்சத்திரங்கள் ஆடும் ஆட்டங்கள் மெல்லிய காதலைப் புல்லியதாக்கி விடுகின்றன.

"Modern dance is the Vertical expression of horizontal idea"

எனத் தூரிகையால் துப்புகிறான் Joey Adams என்ற ஆங்கில அங்கதன். படுக்கை நிலை நிகழ்வை நின்ற நிலையில் கொச்சையாக வெளிப்படுத்தும் பச்சை ஆபாசம் தான் நவீன நடனம் என்கிறான். மகரந்த மாற்றமாக அரும்ப வேண்டிய மெல்லுணர்வை அசிங்கப்படுத்துகிறார்கள், நுண்ணறுவைச் சிகிச்சைக்குக் கசாப்புக் கடைக்காரன் கத்தியை ஏந்திப் புறப்பட்டாற் போல. தேகத்தின் அனைத்து வாசல்கள் வழியிலும் தென்றல் புகுவது மாதிரி நயத்தக்க நாகரிகத்தோடு காதலை வெளிப்படுத்தும் மரபு அறவே இல்லையா? இருக்கிறது; அன்றிலிருந்து இன்றும் இன்னும்.

உருது மொழி ஒரு மிருது மொழியாகப் புலப்படுவது அதன் கஜல் (Ghazal) கவிதைகளில் தான். கஜலின் உள்ளடக்கம் காதல் தான். இமைப் பீலிகளால் இதய நாளங்களில் நேரடியாகவே எழுதி விடுகிறார்கள் கஜல் கவிஞர்கள். வானவில்லை லட்சம் இழையாகக் கீறி வகிர்ந்து, அந்த ஒற்றை ஒற்றை இழையால் சுதியேற்றப்பட்ட வீணையின் தந்திகளை அனிச்ச மலரால் மீட்டினால் எழும் வாச இசை தான் கஜல். அதில் கண்ணீர் மணம் கமழ்கிறது. காதல் ரகசியம் அவிழ்கிறது.

உன் மதம், என் மதம், சம்மதம் ஆகும் மன்மதம் 'கஜல்' கவியின் உன்னதம். கஜலைக் காட்சிப்படுத்துவதிலும் கவித்துவம் மிளர்கிறது.

லைலா மஜ்னு பாரசீகக் காவியம். உருது மொழியில் படமாக வெளிவந்தது பல்லாண்டுகட்கு முன்னர். அணுக்கள் தோறும் அன்பே ஊறும் கணுக்கள் இல்லாக் கவிதைக் காதல்.

லைலாவின் மீது கயஸ் கொண்ட காதல், பித்தம் பிடித்துச் சித்தம் கலங்கி அவனை மஜ்னூன் (பைத்தியக்காரன்) ஆக்கி விடுகிறது. அவள் சுவாசம் கலந்திருப்பதாலேயே அவன் மூச்சுக் குழல் காற்று ஏந்த ஒத்துக் கொள்கிறது. கல்லால் ஊர்ச் சிறுவர்கள் மஜ்னூனை அடிக்கிறார்கள். அவன் உடம்பிலிருந்து கொட்டும் குருதியெல்லாம் 'லைலா, லைலா' என்ற பெயரையே அந்தப்

பாலையில் எழுதுகிறது. அவள் காலடித் தடம் அவன் இமைகளின் தொழுகை விரிப்பாகி விட்டது. ஒரு முறை லைலாவைத் தேடி ஊருக்கு வெளியே கயஸ் போய்க் கொண்டிருக்கிறான்.

சாலை ஓர மரத்தடியில் ஒரு பெரியவர் தொழுகை செய்து கொண்டிருக்கிறார். தொழுது கொண்டிருக்கும் பெரியவருக்குக் குறுக்கே கயஸ் செல்லுகின்றான். கடந்து சென்ற அவனைக் கை தட்டிப் பெரியவர் அழைக்கிறார். அவனிடம் "ஒருவர் தொழுகை நிகழ்த்திக் கொண்டிருக்கும் போது குறுக்கே செல்லக் கூடாது; அது குற்றம் என்பது உனக்குத் தெரியாதா?" எனக் கோபமாய்க் கேட்கிறார். "ஏக நாயகனையே எண்ணித் தாங்கள் தொழுது கொண்டிருக்கும், இபாதத் (வழிபாடு) உண்மையாக இருக்குமானால் நான் குறுக்கே சென்றது தங்கட்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்? என் நாயகியையே எண்ணிச் செல்லும் என் பயணமும் ஒரு இபாதத்துதான். அப்படி நிகழ்ந்து கொண்டிருக்கும் என் இபாதத் திற்குக் குறுக்கே நிகழும் உங்கள் தொழுகை முற்றிலுமாகத் தெரிய வில்லை" என்கிறான் கயஸ். வெறுங் காதல் நிலையை விஞ்சி, அவன் 'வழிபாடு' ஆத்மீக அந்தஸ்து பெற்றுவிடுகிறது. இந்தக் காட்சியே கஜல் ஒன்றின் ஒளியுரை தான்.

'காதல் அடைதல் உயிர் இயற்கை. அது கட்டில் அடைபடும் தன்மையதோ?' என்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். இயற் கையாக எழுவதே காதல். ஊட்டப்பட்டு உண்டாகும் செயற்கை யல்ல.

மின்னலால் மேகம் கிழிபடுவதில்லை. இடிகளால் வானம் பிளந்து விடுவதில்லை. தடைகளால் காதல் தளர்ந்து விடுவதில்லை.


பெருங்கவிஞர் காலிப் வழங்கும் கஜல் ஓங்கி ஒலிக்கிறது.

"காதல் நம் வசத்தில் இல்லை
அது ஒரு
அதிசய நெருப்பு
பற்ற வைத்தால் பற்றாது
அணைத்தால் அணையாது"

சுய ஈர்ப்பின் உரசலில் பற்றிக் கொள்ளுமே தவிர, வலிந்து பற்ற வைத்தால் பற்றாது காதல் நெருப்பு. காமம் என்பது அகல் விளக்கு. காற்று எளிதில் அதனை அணைத்து விடும். காதல் ஒரு காட்டுத் தீ. காற்றடிக்க, காற்றடிக்க அது மூண்டு எரியுமே தவிர, அணைந்து போகாது. காதல் தேவனாம் மன்மதனை எரித்துச் சாம்பலாக்கியது சிவனின் நெற்றிக் கண்; அதற்குப் பழிவாங்கு வதற்காகவோ என்னவோ கண்களாலேயே காதல் சுடரை ஏற்றி வைக்கிறார்கள் காதலர்கள்.

ஜூன் 2004

மனிதக் காட்சி சாலை...?



1992 இல் ஆரணியில் ஒரு பட்டிமன்றம். நடுவராக நான் இருந்தேன் இறுதிச் சுற்றில் பேசிக் கொண்டிருந் தார்கள். ஆயிரக்கணக்கில் குழுமியிருந்த கூட்டத்திலிருந்து ஒருவர் எழுந்தார். மேடைக்கருகில் வந்தார். "ஆரணி வெல்லும்?" என வினவினார். "பட்டி மன்றம் நடப்பது ஆரணியில். பேசுவோர் இரண்டு அணிகளில். எல்லோரும் பேசி முடித்த பின். தீர்ப்பில் இரு அணிகளில் ஆர் அணி வெல்லும் என்று சொல்வேன்" என்றேன். தள்ளாடியபடியே போதையில் நின்ற அவர், 'இங்கே ஆரணி வெல்லும் என்று நான் கேட்கவில்லை, அங்கே நாடாளுமன்றத்தில் ஆரணி வெல்லும்?' என்று சொல்லுங்கள்'' என்றார். அப்போது பிரதமர் நரசிம்மராவ் அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதம் கொண்டு வந்து, நாடாளுமன்றத்தில்

வாக்கெடுப்பு நிகழ்ந்த தருணம். விவாதம் நடப்பதோ டெல்லியில்; கேட்பவரோ மில்லியில். நாடாளுமன்றத்தில் அப்போது இருந்ததோ மூவணி. ஒன்று இராவணி (நரசிம்மராவ் அணி). மற்றொன்று தே. மூவணி (தேசிய முன்னணி). பிறிதொன்று தாமரைப் பூவணி (பா.ஜ.க அணி). இந்த மூவணியில் ஆரணி வெல்லும்?. ராவணியே வெல்லும். "வெற்றி ஒரு 'தாவணியின்' தயவில் இருக்கிறது" என்றேன். அதற்கு அந்தக் குடிமகன் "ஆமாம், தாவணியின் தயவுதான் தீர்மானிக்கும். தாவணி என்பது அதிமுக தானே" என்றார். "ஒரு பெண்ணின் தலைமையிலுள்ளது என்பதால் அதிமுகவை 'தாவணி' என்கிறார். ஆனால் நான் சொன்ன 'தாவணி' வேறு. கட்சி விட்டுக் கட்சி தாவும் அணி - தாவணி" என்று முடித்தேன். நாடாளுமன்ற முடிவும் அப்படித்தான் வந்தது.

அண்மையில் குரங்குகளின் மாநாடொன்று நடைபெற்றது. காலையில் நடைபெற்ற பொதுக்குழுவில் ஒரு விவாதம் வந்தது. டார்வின் என்ற அறிவியல் அறிஞன் பரிணாமத் தத்துவத்தை நிறுவி, குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்பதனை ஆய்வறிக்கை முடிவாக அறிவித்தாராம். குரங்குகளின் விஞ்ஞான அணியைச் சார்ந்த செயலாளர், "இது உண்மையாக இருக்கலாம். நம்மை மனிதர் வால்நரர் (வானரர்) - வாலை உடைய நரர் என்று தானே அழைக்கிறார்கள்" என்றார். முடிவில் முத்தாய்ப்பாகத் தீர்மானம் ஒன்று நிறைவேறியது.

"மரம் விட்டு மரம் தாவும் மந்திகள்
நம்மிடையே உண்டு;
கொடிமரம் விட்டுக் கொடிமரம் தாவும்
மந்தி(ரி)கள் அவர்களிடம் உண்டு.
பூர்விகம் கண்ட
டார்வின் கூற்று உண்மையே!"

"இந்தத் தீர்மானம் செயற்குழுவிற்கு அனுப்பப்படுகிறது" என்று முடித்தார்கள்.

இராமாயணத்தில் கிளைதாவு படலம் பெற்ற கிஷ்கிந்தா காண்டம் உண்டு. ஆனால் பாரதத்தில்.. ஆம். அதனைக் 'கிஷ்கிந்தா கண்டம்' என்றே சொல்லலாம் போலிருக்கிறது. அணி மாற்றம். கூட்டணி மாற்றம். கொள்கை மாற்றம். நேரெதிர் தாவல் இவையெல்லாம் தேசிய நடப்புகளாகி விட்டன அல்லவா!

குரங்குகள் செயற்குழுவில் பொதுக்குழுவின் தீர்மானம் அலசப்பட்டது. இறுதியில், "குரங்குகளாகிய நம்மின் சில செயல்களை வைத்தும், மனிதர்களின் செயற்பாடுகளை வைத்தும், ஒப்புமை கண்டு குரங்கிலிருந்து மனிதன் தோன்றியிருக்கலாம் என மனிதவுலகம் கருதுகிறது. டார்வினும் இதனைத் தத்துவமாக உறுதி செய்திருக்கிறார். இந்த முடிவு மேலோட்டமானது. மாறாக, அடிப்படையில் இந்தக் கொள்கையைச் செயற்குழு ஏற்கவில்லை. காரணம், நம்மிலிருந்து-குரங்கிலிருந்து மனிதர்கள் தோன்றினார்கள்

என்பது உண்மையானால், நம்மினத்தில் இல்லாத ஜாதியும், மதமும் மனிதர்களிடத்தில் எப்படி வந்தன? எனவே, மனிதர்கள் நம்மிடமிருந்து தோன்றியிருக்க வாய்ப்பில்லை. மனிதர்கள் நம்மை உவமானம் சொல்லும் அவமானம் கண்டிக்கத்தக்கது" என்று தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

படி நிலை வளர்ச்சி, படைப்பின் ஆரம்பத்தில் இருந்து தொடங்குகிறது. உயிரினங்கள் தண்ணீரில் இருந்து தோன்றியதாக வேதங்களில் குறிப்பிடப்படுகிறது. திருமாலின் பத்து அவதாரங்களும் உயிர்களின் பரிணாமத்தைச் சொல்லும். முதல் அவதாரமான மச்ச அவதாரம்கூட தண்ணீரில் தோற்றம் கண்டது தானே. அவருக்கு நாராயணன் என்ற பெயர் வந்ததுகூட அந்தக் கருத்தை வலியுறுத்துவதாகவே அமைந்துள்ளது. நாரம் என்றால் தண்ணீர். அணவுதல் என்றால் பொருந்துதல். முஸ்லிம்களின் வழிபாடான தொழுகை நிலைகளில் பரிணாமத்தின் கூறுகள், நிரலாக அமைந்திருப்பதைக் காணலாம். ஜீவராசிகளின் தோற்றம் நீரில் இருந்து தொடங்குகிறது; அதனைப் போலத் தொழுகை 'உளு'வில் இருந்து (நீரினால் கை, முகம், நாசி, காது, தலை, கால் சுத்தம் செய்தல்) தொடங்குகிறது. நீரிலிருந்து ஒரு செல் உயிரியான கிளாமிடோமோனாஸ் (Clamydomonas) தரைக்கு நகர்ந்து மரமானது. உளுவிற்குப் பிறகு தொழுகையின் தொடக்கமாக, மரம் நிற்பது போல் தொழுகையாளிகள் நிற்பார்கள். அதற்கு அடுத்த நிலை பறவை நிலை. பறவை சிறகு விரிப்பது போல. இரு கரங்களையும் காதுகளுக்கு அருகில் உயர்த்தி, சிறகுகளைப் போல இருபுறமும் விரல்களை விரித்து, பறவை நிலையைத் தொழுகையாளிகள் வெளிப்படுத்துகிறார்கள். பறவைக்கு அடுத்து விலங்கு நிலை. விலங்குகளைப் போன்ற குனிந்த நிலை. தொழுகையில் 'ருக்கூ' என்ற செயல். விலங்கு நிலைக்குப் பிறகு மனித நிலை. தொழுகையில் அது தான் 'ஸஜ்தா' என்ற நெற்றியைத் தரையில் வைத்து வணங்கும் நிலை. ஸஜ்தாவில் இருக்கும் நிலை. தாயின் கர்ப்பத்தில் மனிதக் குழந்தை இருக்கும் நிலை. தொழுகைக்கு முன், உயிரியாய், மரமாய், பறவையாய், விலங்காய் இருந்தவன் தாயின் கருவறையிலிருந்து வெளிப்படும் போது பாவக்கறை எதுவுமில்லாத தூய நிலையில் மனித மழலையாகத் திரும்புகிறான். ஆனால், நிலவரம் அப்படியா இருக்கிறது? தொழுகையில் நெற்றி காய்த்திருக்கிறது. நெஞ்சு வறண்ட பாலையாகத் தானே இருக்கிறது.

'கோவிலுக்குள் பூசைக்குச் சென்று திரும்பும் சாம்பல், திருநீறாக மாற்றம் பெறுகிறது. சாதாரண சாதம் பிரசாதமாக ஏற்றம் பெறுகிறது. மனிதன் மட்டும் எந்த மாற்றமுமில்லாமல் திரும்புகிறான்' என்று ஆனந்த விகடன் கவிதை ஒன்று சொல்கிறது.

தமிழறிஞர் மு.வ. "காட்டில் வாழ்வது எளிது. நாட்டில் வாழ்வது கடினம். காட்டிலிருக்கும் புலி, சிங்கம், கரடி, நரி ஆகிய விலங்குகள் இன்ன இன்ன குணம் உள்ளவை என்பதைப் பார்த்த மாத்திரத்திலேயே தெரிந்து கொள்ளலாம். ஆனால்,

நாட்டில் இருக்கும் மனிதர்களைப் பார்த்த மாத்திரத்திலேயே அறிந்து கொள்ள முடியாது. அது போல மனிதக் கூட்டத்தில் எது புலி, எது நரி என்று கண்டு கொள்ள முடியாது" என்கிறார்.

அரசியல் புரட்சியாளராக அறியப்பட்ட சீனத் தலைவர் மாசேதுங் (மாவோ) சிறந்த கவிஞரும் கூட. அவர்

**"காடுகள் ஊடே புகுந்து
விலங்குகளைக் கண்டு
சிறு கீறல் கூட இன்றி வந்தேன்.
வரும் வழியில் சமவெளியில்
மனிதர்களைக் கண்டேன். தற்போது
காயங்களோடு திரும்பிக் கொண்டிருக்கிறேன்"**

என்று எழுதுகோலை எக்ஸ்-ரே கருவியாக்குகிறார். 'சமவெளி' என்ற வார்த்தைப் பயன்பாடு கவிதையை மேலும் ஆழப்படுத்துகிறது. பிறப்பும், இறப்பும் சமப்பட்ட மனிதன் வாழும் இடம் சமவெளியில் தானே. வாழ்வின் சமத்துவமின்மையில், எத்தனை வகையில் சக மனிதனை வேறுபடுத்துகிறான்; அடிமைப்படுத்துகிறான். காயப்படுத்துகிறான். சாகடிக்கிறான். 'சமவெளி' என்ற வார்த்தையாடல் மனிதன் போலியாக, வெளியில் தான் சமத்துவமாக இருப்பதாக நாடகமாடுகிறான். ஆனால், உள்ளுக்குள் சமம் என ஒத்துக் கொள்வதில்லை என்பதையும் சுட்டி நிற்கிறது. அகத்தே கறுத்து, புறத்தே வெளுத்த இந்த மனிதர்கள், டார்ச் லைட்டைப் போன்றவர்கள். டார்ச்சில் வெளியே வெளிச்சம். உள்ளே இருட்டு.


**'எத்துணையும் பேதமுறாது
எவ்வுயிரும் தம்முயிர் போல் உள்ளே
ஒத்துரிமை செய்கின்றார்'.**

எவரோ அவரே சுத்த சமரச சன்மார்க்க சங்கத்தார் என வள்ளலார் தான் எத்துணைப் பொருத்தமாக உணர்த்தியிருக்கிறார்.

விலங்குகதி, மனித கதி, தேவ கதி, தெய்வ கதி என ஆன்மீகப் படிநிலை அமைகிறது. விலங்கு கதி விட்டு, மனித கதி தாண்டித் தேவ கதி, தெய்வ கதி அடைகிறோமோ இல்லையோ, விலங்கு கதிக்கே மனிதன் திரும்பினாலும் பரவாயில்லை என்ற ஆதங்கம் எழுகிறது. விலங்குக் காட்சி சாலை இருக்கிறது. இனி போகிற போக்கில் 'மனிதக் காட்சி சாலை' என ஒன்று ஏற்படுத்தி, விலங்குகள் பார்வையாளர்களாக வருமோ என்னவோ?

ஜூலை 2004

முகத்தில் முகம் பார்க்கலாம்



உறவுகளில் உயர்ந்தது எது? பெற்றோர் உறவா? காதல் உறவா? பரிமாறும் போதே பசியாறிக் கொள்ளும் உறவுகள் இவை. எதனையும் எதிர்பாராத உறவு எதுவோ அதுவே சிறந்தது.

கைம்மாறு கருதாதது நட்புறவு ஒன்றுதான். கடலில் சென்ற கலம் மூழ்கிவிடுகிறது. இரண்டு நண்பர்கள். ஒருவன் நீச்சல் தெரிந்தவன். மற்றவன் நீச்சல் தெரியாதவன். நீச்சல் அறிந்தவன் நொடியில் முடிவெடுக்கிறான். இருவரில் தான் மட்டும் ஒருவேளை பிழைக்க வாய்ப்புண்டு. தன் நண்பன் தன் கண் முன்னே சாவது கொடுமை. அவன் இல்லாத உலகில் தான் வாழ்வது அதனைவிடக் கொடுமை. எனவே, தன்னைச் சாகடித்தால், மிதக்கும் தன் பிணத்தைப்

புணையெனப் பற்றி நண்பன் பிழைக்கட்டுமே என முடிவெடுக்கிறான். மூழ்கி மூச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறான். நண்பன் பிணத்தைப் பற்றியே மற்றவன் கரையேறுகிறான். நண்பன் மூழ்கிவிட்டான். நட்பு எந்நாளும் மூழ்குவதில்லை. தண்ணீர்த் தாளில் எழுதப்பட்ட தங்க வரலாறு இது.

நாலடியார் என்னும் நீதி இலக்கியம் நட்பின் மாண்பை 2000 ஆண்டுக்கு முன்பே பேசுகிறது. உலக இலக்கியங்களில்கூட அப்பாடலில் இடம் பெற்றிருப்பதைப் போன்ற ஓர் உவமை இடம் பெற்றதில்லை.

நண்பர்கள், பாலும் நீரையும் போல் இணைந்திருக்க வேண்டும். பார்க்கச் சாதாரணமாய்த் தோன்றும் இந்த உவமை உவமையில்லாதது. பாலைத் தனியே சாப்பிடக் கூடாது; செரிக்காது; தண்ணீரோடு கலந்து தான் பருக வேண்டும். பால் சற்றே திட திரவம். தண்ணீர் இளகல் தன்மை உடையது. பாலின் நிறத்தை, சத்தினை நீர் ஏற்கும். நீரின் குளிர் மற்றும் செரிப்புத் திறனைப் பால் ஏற்கிறது. இரண்டும் சேரும் போது, ஒரு சரிவிகித உணவு சமூகத்திற்குக் கிட்டுகிறது.

பாலும் தண்ணீரும் கலந்த பிறகு, அதனைத் தாய்மார்கள் கொதிக்க வைக்கிறார்கள். தண்ணீர் பாலிலிருந்து ஆவியாகப் பிரிகிறது. 'ஐயோ நீரே, என் நண்பா, என்னை விட்டுப் பிரிகிறாயா,' எனப் பால் பாத்திரத்திற்குள் கொதிக்கிறது. பிரிவிற்கு வருந்திக் கொதித்து ஆவியைப் பிடிக்கப் பொங்குகிறது. நண்பனின் ஆவியைப் பின் பற்றிப் பாத்திரத்தின் விளிம்புக்கே வருகிறது. நீர் நண்பன் இல்லா உலகில் தான் இருத்தலாகாது எனப் பாத்திரத்திற்கு வெளியே தீக்குளிக்கிறது. 'என்னையும் என் நண்பனையும் பிரித்த 'தீயவனை அழிப்பேன்' எனப் பிரிவுக்குக் காரணமான நெருப்பைப் பாத்திரத்தை விட்டு வழிந்து அவிக்கிறது.

ஆவியாகிப் பிரிந்த நீர் நண்பனுக்காகக் கொதிக்கும் பாலில் கொஞ்சம் தண்ணீர் தெளித்தால், 'அன்புள்ள நண்பா வந்துவிட்டாயா' எனப் பால் கொதிப்படங்கித் தணிந்து விடுகிறது. வாமனன் ஆன திருமால் மாவலியின் தாரை வார்ப்பில் விசுவரூபம் எடுப்பதைப் போல், வாமன உவமை திருவிக்கிரம அவதாரம் எடுக்கிறது. நெருங்கிப் பழகித்தான் நட்பு வளர வேண்டிய அவசியம் இல்லை.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்"

என்பது உளவியல் உணர்ந்த குறள் பாட்டன் உரைத்தது; இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்தது; ஒருவரை ஒருவர் பாராமலே முதிர்ந்த கோப்பெருஞ் சோழன், பிசிராந்தையார் நட்பு உண்டானது. பிள்ளைகள் செயலால் வருந்திய அரசனான கோப்பெருஞ் சோழன், வடக்கு நோக்கி அமர்ந்து உண்ணாவிரதம் இருந்து உயிர் துறக்க முடிவெடுக்கிறான்.

உடனிருந்தவர்களை அழைத்து "நான் இறப்பது உறுதி; இரண்டு சவக்குழி தோண்டுங்கள். ஒன்று எனக்கு, மற்றொன்று என்னைப் பார்க்காமலேயே என்னிடம் நட்புப் பூண்ட என் நண்பர் புலவர் பிசிராந்தையார்க்கு. என்னைக் காண நண்பர் வருவார். நான் இறந்த தகவல் கேட்டு அவரும் இறந்து விடுவார். வாழ்வில் பிரிந்திருந்த எங்களைச் சாவாவது அருகருகு ஆக்கட்டும்" என்றான்; சொன்னபடி மறைந்தான்.

பார்க்காமலேயே நட்புரிமை கொண்ட பிசிராந்தையாரும் வந்து, நண்பரின் மறைவு கேட்டு, அடுத்த நொடியே மரணமுற்றார். இப்படிக் காணாமலேயே பெருகி வளர்ந்த நட்பினை உலகில் வேறெங்கும் கேட்டதில்லை. இதயமும் துடிக்கிறது. இமைகளும் துடிக்கின்றன. இவை ஒன்றையொன்று பார்த்ததில்லை. இதயத்தின் துடிப்படங்கிய உடனே, இமைகளும் துடிப்பை நிறுத்திக் கொள்கின்றன. கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார் நட்பினை இதயமும், இமைகளும் உணர்த்துவது உன்னதமல்லவா!

நட்பில் நண்பர்களுக்கிடையே உயர்வு தாழ்வில்லை. 'உன் நண்பன் யார் என்று சொல், உன்னைப் பற்றி நான் சொல்கிறேன்' என்ற வாசகமும் அதனை உறுதி செய்கிறது. சூஃபி ஞானப் பெருங்கவிஞர் உமர்கய்யாம் எழுதிய 'ருபாயியாத்' பாரசீக நாலடியார். அதன் ஒரு கண்ணியில்

"நண்பர்கள் எல்லாம் ஒருவர்க்கொருவர்
நிலைக்கண்ணாடிகள் தாம்!
அதன் முன்நின்றால் மற்றவர் தெரிவார்!
ஒவ்வொருவரின் நிலைத்த
வாழ்க்கையிலும்
ஒவ்வொருவரும் சுதந்தரமானவர்களே!
உன் துருப்பிடித்த எண்ணங்களை வீசி எறி
நீயே மற்றவர்க்குக் கண்ணாடியாய்க் காட்சி தருவாய்!
நீ வேறெங்கும் தேடித் துருவிப்
பார்க்காதே!
எல்லோரும் உன்னையே தன்னில்
காண்பார்"

என்கிறார்.நிறைகளையும், குறைகளையும் உன்னைப் பார்த்து அல்ல; உன் நண்பனைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம். குறைகளை நீயே உணரும்படி, திருத்திக் கொள்ளும்படி உன்னைத் தூண்டுகிறது கண்ணாடி. குறைகளைச் சுட்டிக் காட்டினால், அடுத்தவர் உள்ளம் புண்படுகிறது. அதை அவரே உணரும்படிச் செய்தால் உள்ளம் பண்படுகிறது. நட்பென்னும் கண்ணாடியும் அப்படிப்பட்டதே. அது பாதரசம் பூசிய கண்ணாடியில்லை; அன்பெனும் வேதரசம் பூசிய கண்ணாடி.

'இன்ன பைத்தன் அந்த ஸாக்கினுஹு
லைஸ முஹ்தாஜுன் இலஸ் சுருஜி'

என்று சுப்ஹான மௌலிது (நபிகள் புகழ்மாலை) நபிகள் நாயகத்தின் முகப் பொலிவைச் சொல்கிறது.

"ஊசி கீழே விழுந்து விட்டால், நாயகத்தின் வீட்டகத் தாருக்குத் தேடிக் கண்டெடுக்கச் சிரமமில்லை. அண்ணலாரின் முக வெளிச்சத்திலேயே அது அகப்பட்டு விடுமே" என்கிறார் அந்த அரபிக் கவிஞர். முத்துப் பல் சிரித்தால் முகமெல்லாம் சிரிக்கும் அத்துமீறிய அழகு அவர் முக விலாசம்.


அன்னாரைப் பார்த்து, அவர் கொள்கையை வெறுத்த ஒருவன் நாயகத்தின் முகம் குரங்கு முகம் என்றான். கொட்டும் தேள் வார்த்தை கேட்டுக் கோபப்படவில்லை அவர். வேம்பு ரசத்தை வெந்நீராய்ப் பாய்ச்சினாலும் கரும்புக்குக் கசக்கும் குணம் வருமா என்ன? சிரிப்பு கொண்டு செய்த உதட்டில் நகை அரும்ப, நாயகம் சொன்னார்கள்.

'ஒரு சகோதரன் முகம்
மற்றவனுக்குக் கண்ணாடி'

நாயகக் கண்ணாடியில் பழித்துப் பேசியவன் தன் முகத்தைத் தான் பார்த்திருக்க வேண்டும். நாயக வாழ்வின் நலமிக்க ஊற்றில் இருந்து புறப்பட்ட ஜீவநதி உமர்கய்யாம் என்பது கண்ணாடி என்ற பதப் பயன்பாட்டில் புலப்படுகிறது. நீயே அதுவாக இருக்கிறாய் என்பது தானே சூஃபி ஞானம்.

ஆகஸ்ட் 2004

நிழலும் தழலாகும்



ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் ஒவ்வொரு தனித்தன்மை உண்டு. அது மக்கள் வாழ்வில், கலையில், இலக்கியத்தில், விளையாட்டில் வெளிப்படும். ஆங்கிலேய இனம் உலகில் பல நாடுகளில் ஆக்கிரமித்து ஆண்ட இனம். அந்த இனம் அறிமுகப்படுத்தியது தான் கிரிக்கெட் விளையாட்டு. சூரிய வெளிச்சம் மனிதர்கள் உடம்பில் படாவிட்டால் தோல் புற்று நோய் உண்டாகும். சூரிய வெளிச்சம் குறைவாகப்படும் இங்கிலாந்தில், தன்னின மக்கள் நோய்வாய்ப்படக் கூடாது என்பதற்காகவே, அதிக நேரம் சூரிய ஒளியில் நின்று விளையாடும்படியான கிரிக்கெட்டைக் கண்டு பிடித்தார்கள் ஆங்கிலேயர்கள். விறகாய் எரிபடும் வெயில் தேசமாம் இந்தியாவில், பட்டையை உரிக்கும் வெயிலில் சட்டையைக் கழற்றி, மட்டையைச் சுழற்றி, நீரற்ற குளம் குட்டைகளில் நம் சிறுவர்கள் கிரிக்கெட் விளையாடுவது வேடிக்கைக்கு உரியது. அந்தக் கிரிக்கெட்டில் ஆங்கில இன அடையாளம் தென்படுகிறது. கூர்மையாகப்

பார்த்தால் ஒன்றை அடிப்பது எப்படி? வீழ்த்துவது எப்படி?, என்ற தாக்குதல் அம்சமே கிரிக்கெட்டில் தூக்கலாக இருக்கிறது.

மாறாக, நம் மண்ணின் 'சடுகுடு' விளையாட்டு அமைந்துள்ளது. தமிழ் இனத்தின் குணம் அவ்விளையாட்டில் வெளிப்படுகிறது. கபடி விளையாட்டு தமிழகத்தில் தொடங்கி, இந்தியத் தேசிய விளையாட்டாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஒலிம்பிக்கில் 'கபடி' சேர்க்கப்பட்டால் தங்கப்பதக்கம் நிச்சயம் நம்மவர்கட்கு மட்டும் தான். ஆமாம் ஒருவரை ஒருவர் காலை வாரிவிடும் விளையாட்டில் நம்மை யார் வெல்ல முடியும்? காலை வாரி விடுவதற்கா கபடி?

நுணுகிப் பார்த்தால் அவ்விளையாட்டைக் கண்டுணர்ந்த நம் முன்னோர்கள் நம் இனத்தின் குணத்தை வெளிப்படுத்தும் பயிற்சியை அவ்விளையாட்டின் உள்ளடக்கமாக வைத்துள்ளார்கள். கபடியில் மண்ணில் கோடு கிழித்து, எல்லை வகுத்து, இது உனக்குச் சொந்தமான பூமி, இது அவர்களுக்கு உரிய நிலம் எனத் தந்து விடுகிறார்கள். உனக்குரிய பூமிக்குள் அன்னியன் எவனாவது எல்லை தாண்டி வந்தால், அவனைத் தடுத்துத் தாய் மண்ணைக் காக்கும் பயிற்சியை முந்தையர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள். அன்னியன் எவனும் மண்ணைத் தீண்டக் கூடாது என்பதற்காகவே எல்லைக்குக் கூட 'குமரி' என்று பெயரிட்டவர்கள் தமிழர்கள்.

உலக உருண்டையின் தென் பாகம் முழுக்கக் கருப்பின மக்கள் வாழ்கிறார்கள். ஆனால் ஆள்கிறார்களா என்பது கேள்விக்குரியது. மண்ணை ஆக்கிரமித்து, மக்கள் இனத்தை அடிமைப்படுத்திய வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, இனக்குணம் மணக்கும் விடுதலைக் கவிதைகள் தொடர்ந்து எழும்பி வருகின்றன. அப்பிரதேசங்களில் புனையப்படும் காதல், பக்தி முதலான கவிதைகளில் கூட அடிமைப்பட்ட இனத்தில் விசும்பல் கேட்கிறது.

காதலியின் கன்னத்தில் இருக்கும் மச்சத்தைப் பார்த்தால் கவிஞர்களுக்கு எப்படியெல்லாம் கற்பனை தோன்றுகிறது.

'வெள்ளைப் பனிப்பிரதேசத்தில் தங்கிவிட்ட கறுப்பு ஆடு' என்ற கற்பனை நம் உள்ளத்தை மேய்கிறது. 'அது மச்சமில்லை அழகின் காம்பு' என்னும் போது 'ஒரு பூவே காம்பைத் தாங்கியுள்ளதே' எனப் பூரிக்கிறது உள்ளம். 'இது என்ன அதிசயம்? வெளிச்சப் பல்பின் மேலேயே சுவிட்ச்?' நவமாய்க் கற்பனை விரிகிறது. ஆனால் அடிமைப்பட்ட மூர் நாட்டுக் கவிஞன்

'பெண்ணே!
உன் முகம்
ரோஜாத் தோட்டம் தான்
இருந்தாலும்
அந்தக் கருப்பு மச்சம்
நீக்ரோ
தோட்டக்காரனைப் போல'

என எழுதும் போது சொந்த நாட்டிலேயே அடிமைப்பட்டுக் கிடக்கும் கருப்பின அடிமையைத் தான் காதலியின் கன்னத்தில் தரிசிக்கிறான்.

நிற பேதத்திற்குக் கோவில் கூட விலக்கில்லை.

“ஏசுவே!
மீண்டும் நீ
பிறந்து வருவாய் எனச்
சுருதி வேதங்கள்
உறுதி கூறுகின்றன.
மீண்டும் பிறந்தால்
கர்த்தரே!
கருப்புநிற ஏசுவாகப் பிறக்க வேண்டாம்!
ஏனெனில் உன்னையும் அவர்கள்
உள்ளே அனுமதிக்கப் போவதில்லை!”

என நிழல்நிற நீக்ரோக் கவிஞன் தழல் கவிதையாகத் தன்னுணர்வைப் பதிவு செய்கிறான்.

டென்னிஸ் புருட்டஸ் (Denis Brutus) என்றொரு கருப்பினக் கவிஞர் 1924 -இல் ரொடீஸியாவில் பிறந்தவர். குழந்தைப் பருவத்திலேயே தென் ஆப்பிரிக்காவிற்குப் புலம் பெயர்ந்தவர். பட்டம் பெற்றபின் ஆங்கில ஆசிரியராகப் பணி புரிந்தார். நிறப் பாகு பாட்டிற்கான எதிர்ப்பியக்கத்தில் ஈடுபட்டதால் பணி இழந்தார். கைதானார். தென்னாப்பிரிக்காவை விட்டுப் புறப்பட்டு, ஜெர்மனி போக முயன்று சிறைப்பட்டார். தப்பி ஓட முயல்கையில் சுடப்பட்டார். ரோபன் தீவில் சிறை வைக்கப்பட்டார். சிறைவாசம் முடிந்து, இங்கிலாந்தில் சிலகாலம் கழித்த பின் அமெரிக்காவில் குடியேறினார். வடமேற்குப் பல்கலைத்தில் ஆங்கிலப் பேராசிரியர் ஆனார். மரபு வழி ஆங்கிலக் கவிதையைப் பின்பற்றி எளிமையாகப் பைபிள் வாசத்தோடு எழுதினார். எங்கிருந்தாலும் தன் கருப்பு தேசத்தையும், அதன் அடிமைச் சூழலையும் மறவாமல் விடுதலைப் போராட்ட வீறுணர்வைத் தம் கவிதைகளில் புலப்படுத்துகிறார். அவரின் ‘இராப்பாட்டு’ நகரம் என்ற கவிதை இமைகளில் ஈரத்தையும், இதயத்தில் வீரத்தையும் துளிர்க்கச் செய்கிறது.

‘கண்ணுறங்கு, அன்பே கண்ணுறங்கு!
ஓய்வறியா இறங்குதுறைக்கு
முலாம்பூசும் துறைமுக விளக்குகள்!
தெருச் சுரங்கங்கள் ஊடாக
போலீஸ் வாகனக் கரப்பான்கள்!
சேரிகளிலிருந்து
கூரைத்தகரம் கிறீச்சிடும் ஒலி
மூட்டைப்பூச்சி பிடித்த கந்தை போல
வீசப்படும் வன்முறை!
காற்றில் அசையும் மணியில்

பிறக்கத் துடிக்கும் ஓசைபோல
அச்சம்!
மணலிலிருந்து
பாறைகளிலிருந்து
நீண்ட பகற்பொழுதின் சீற்றம்
மூச்சு வாங்குகிறது ஆனால்
மூச்சுவிட வாய்த்த இவ்விரவுப்
பொழுதிலாவது
என் நாடே என் அன்பே
கண்ணுறங்கு'

(மொழியாக்கம் : ஈழக்கவிஞர் சோ. பத்மநாதன்)

எல்லா வகை இசைப்பாட்டு வடிவங்களையும் கையாண்ட பாரதி தாலாட்டு மட்டும் பாடவில்லை. தூங்கிக் கிடக்கும் தேசத்திற்குத் தாலாட்டுத் தேவையில்லை என்று கருதியிருக்கக் கூடும். ஆனால் பாரதி 'பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி' பாடினான். அறிதுயில் கொண்டதாக எண்ணி, எழாத தெய்வங்களுக்கு எவ்வளவு காலம் திருப்பள்ளி எழுச்சி (சுப்ரபாதம்) பாடுவது என விடுத்துத் தேசத்தைத் தெய்வமெனக் கொண்டு திருப்பள்ளி எழுச்சி பாடி விடுதலையுணர்வைப் பாரதி எழுப்புகிறான். ஆப்பிரிக்க டெனிஸ் புருட்டஸ் தேசத்திற்குத் தாலாட்டுப் பாடுகிறான். அழகிய முரண் இது. துறைமுகத்தில் விளக்குகளோடு போட்டியிட்டுக் கொண்டு இரவிலும் உழைத்துக் கொண்டிருக்கும் நீக்ரோ தொழிலாளர்கள். இருண்ட இரவின் நட்சத்திர வானம் கூட வேர்வை துளிர்த்துக் கொண்டிருக்கும் நீக்ரோ தேகம் தான், துறைமுகத்தில் முலாம் பூசும் விளக்குகள். இருண்டு போன ஏழை வயிற்றை நிரப்பாமல் ஈயம் பூசும் விளக்குகள்.

கருப்பினம் வாழும் தெருக்கள், 'ஆறு கிடந்தன்ன அகல்நெடுந் தெருக்கள்' இல்லை. சுரங்கங்களாய்த் தெரியும் பாதாளப் பள்ளங்கள் தான். அவற்றின் ஊடாகப் போலீஸ் வாகனக் கரப்பான்கள். புரு புருவென உடம்பின் அங்குமிங்குமாக கரப் பான்கள் ஊர்ந்து கொண்டிருந்தால் எப்படி மக்கள் துயில முடியும்?

சேரிக் கூரைத் தகரங்கள்தான் குறட்டை ஒலி எழுப்புகின்றன. உள்ளிருக்கும் மக்களுக்கு உறக்கம் என்பது ஏது? மேலும் மூட்டைப் பூச்சி பிடித்த கந்தை போல அவ்வப்போது வீசப்படும் வன்முறை. வெள்ளை அட்டைகள் உறிஞ்சியது போக வறுமையால் வற்றிக் கொண்டிருக்கும் மிச்ச சொச்ச இரத்தத்தையும், திணிக்கப்படும் வன்முறைகள் கடிப்பதால் மூட்டைப் பூச்சி பிடித்த கந்தை போல வன்முறை என்கிறார் கவிஞர். உயிருக்கு உத்தரவாதம் இல்லாதபோது உறக்கத்துக்கு எங்கே இடம் இருக்கப் போகிறது?

ஒரு மோதல் நிகழ்ந்து விட்டால், அதனால் ஏற்படும் விளைவுகள் சோகமாக, துன்பமாக இருக்கும். 'மோதல் நின்று


விட்டதே' என்ற ஆசுவாசம் இருக்கும். மாறாக மோதல் வெடிக்குமோ? என்ன விதமான மோதலாக இருக்கும்? அதன் வீச்சும் விளைவும் எப்படி இருக்கும்? என்ற பயம் இருக்கிறதே அது கொடுமை. வன்முறையை விடக் கொடியது. இத்தகைய மனவுணர்வுகளைக் 'காற்றில் அசையும் மணி ஓசை' எழுப்புகிறது. யாரோ முயன்று அடித்து எழும் மணி ஓசை எப்போதாவது நிகழக் கூடும். அந்த 'யாரோ'வுக்குப் பதிலாகச் 'சூழ்ந்திருக்கும் காற்று' என்று வைத்தால், அச்சூழலின் அடர்த்தி, மோதலின் கணக்கற்ற சாத்தியக் கூறுகள் எல்லாம் 'காற்றில் அசையும் மணி ஓசை' என்ற குறியீட்டு உவமையால் வெளிப்படுகின்றன.

உணர்வற்ற மண்ணும், பாறையும்கூட சீற்றத்தால் மூச்சு வாங்குகின்றன. நீக்ரோ மக்களின் மனதில் மையங்கொண்டுள்ள அக்கினிப் புயலின் பிரசவ நேரம் அரும்புவதை 'மூச்சு வாங்குகின்றன' என்ற சொற்செதுக்கல் புலப்படுத்துகிறது.

'மூச்சுவிட வாய்த்த இந்த இரவுப் பொழுதிலாவது என் நாடே கண்ணுறங்கு' ஒடுக்குமுறைக்கு இடைவிடாது ஆட்பட்ட தன்னினத்தின் மீது எவ்வளவு பாசம் டென்னிஸ் புருட்டசுக்கு. நாட்டை விட்டுக் கவிஞன் வெளியேறியிருக்கலாம். நாடு அவனை விட்டு என்றும் வெளியேறாது.

செப்டம்பர் 2004

மறைமுகக் கொலையாளிகள்



தேசப்படத்தில் ஆறுகளைக் குறிக்கும் கோடுகளைப் போல ஈரமற்ற பிரதேசம் விட்டு இடப்பெயர்வு செய்கின்றன, இரண்டு அன்னங்கள். ஒன்று கணவன் மற்றது மனைவி. மாலை நெருங்கும் வேளை. ஓய்வு கொள்ள இந்த அசைவ விமானங்கள் தரையிறங்குகின்றன. அருகிலிருக்கும் மரத்தின் உச்சிப் பொந்தில் உட்கார்ந்துள்ள ஆந்தை ஜோடி அன்னங்களைக் கூவி அழைக்கிறது. 'இந்த மரத்தின் அடியில் ஒரு பொந்துள்ளது. நீங்கள் இருவரும் அதில் தங்கிக் கொள்ளலாம். இரவு விடிந்தவுடன் பயணம் தொடரலாம் வாருங்கள்' என்றது ஆந்தை. இணை அன்னங்கள் அடிமரப் பொந்தில் அடைக்கலம் ஆயின. சுற்றுமுற்றும் பார்த்து விட்டுப் பெண் அன்னம் தனது கணவனிடம், 'இந்த

இடத்தில் இதுவரை நாம் கண்டிராத வறட்சி குடிகொண்டுள்ளது. மரங்கள் எல்லாம் சூரியன் சூடிழுத்ததால் கரிந்து போயுள்ளன. குளம், குட்டைகள் தண்ணீர் முழி தோண்டப்பட்டுக் கிடக்கின்றன. மரங்களின் நிழல் விழுந்தாலும் தெரியாத அளவுக்குப் பூமி கரிந்து போயுள்ளது' என்றது. அதற்கு ஆண் அன்னம் 'அதிசயமாகத்தான் இருக்கிறது. பசையற்ற நிலம், பறவைகளின் இசையற்ற பாலை இது. வெட்டியானும் மரித்துவிட்ட சுடுகாடு' என உரையாடலைத் தொடர்ந்தது.

பறந்த களைப்பில், பசியில் அன்னங்கள் தூங்கிவிட்டன. காலை எழுந்ததும் பயணம் தொடங்கியவுடன், ஆந்தை அன்னங்களை அழைத்தது. ஆண் அன்னத்தைப் பார்த்து 'இந்தப் பெண் அன்னம் என் மனைவி. எனவே, அதனை விட்டு விட்டு நீ செல்லலாம் என்று சொல்லி ஆந்தை விரட்டியது. 'நீ குந்தியிருந்த மரத்தடிப் பொந்தில், ஓர் இரவு தங்கியது. குற்றமா? அதற்காக எனக்குரிமைப்பட்ட என் மனைவியை, உன் மனைவி என்று உரிமை கொண்டாடுகிறாயே, இது நியாயமா? அடுக்குமா? இந்த இடத்தில் இந்தக் கொடுமையைத் தட்டிக் கேட்டு நீதி வழங்கப் பஞ்சாயத்தார் யாருமில்லையா?' என ஆந்தையிடம் கணவன் அன்னம் கதறியது. அதற்கு ஆந்தை 'ஏன் இல்லை பஞ்சாயத்து? இந்தக் காட்டுக்கும் ஆட்சி உண்டு. தலைவன் உண்டு. பஞ்சாயத்தார் உண்டு. அவர்களிடம் சொல். அவர்கள் உனக்குச் சார்பாகத் தீர்ப்புச் சொன்னால் இந்தப் பெண் அன்னத்தை அழைத்துச் செல்; இல்லையேல் விட்டுச் செல்' என்றது.

காட்டுப் பஞ்சாயத்து கூடியது. சிங்கம் தலைமையில் புலி, கரடி, நரி, முயல், மான் என ஐம்பெருங்குழு கூடியது. ஆண் அன்னம் நடந்ததைச் சொல்லித் தன் மனைவியைத் தன்னிடம் ஒப்படைக்க மன்றாடியது. ஆந்தை, பெண் அன்னம் தன் மனைவி தான் எனத் தன் வழக்கை வைத்தது. பஞ்சாயத்தார் 'இருந்தாலும் இந்த ஆண் அன்னம் வெளியூர்க்காரன். ஆந்தை நம்மவன்; அவனைச் சேர்ந்தோர் ஆதரவு இருந்தால்தான் நாம் ஆள முடியும். எனவே ஆந்தைக்குரியதே பெண் அன்னம் என்ற தீர்ப்புச் சொல்லுவோம்' என ஒரே குரலில் பேசினர். சார்பு நீதிபதிகளாய் மாறி, 'ஆண் அன்னமே சீக்கிரமே நீ இவ்விடத்தை விட்டு அகன்று போ. பெண் அன்னம் ஆந்தையின் மனைவி தான்' என்று பஞ்சாயத்தார் தீர்ப்பு வழங்கிவிட்டுக் கலைந்து சென்றார்கள். வகையற்றுக் கலங்கிப் போய் ஆண் அன்னம் வயிற்றில் சிறகினால் அடித்துக் கொண்டு மயங்கி நின்றது. வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த ஆந்தை 'ஆண் அன்னமே! நீ உன் மனைவியை அழைத்துச் செல்' என்றது. அதற்கு ஆண் அன்னம்,'என் மனைவியை உன் மனைவியெனச் சொல்லி வழக்காடினாய். உன்னூர்ப் பஞ்சாயத்தும் உனக்கே உரியது பெண் அன்னம் என்று தீர்ப்புச் சொல்லிவிட்டது. இப்போது என் மனைவியை அழைத்துச் செல்லலாம் எனச் சொல்லும் ஆந்தையே, இதைக் காலையிலேயே சொல்லியிருந்தால், இந்த வேதனை, துன்பம் எங்கள் இதயத்தைக்

பீறியிருக்காதே! ஏன் இப்போது சொல்கிறாய்?' என ஆந்தையிடம் கேட்டது.

அதற்கு ஆந்தை, 'வேறொன்றுமில்லை. இரவில் நீங்கள் இருவரும் இந்த நிலப்பகுதி வறண்டு, கரிந்து போய் இருப்பதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தீர்கள். நான் கேட்டுக் கொண்டிருந்தேன். உன் மனைவி தான் பெண் அன்னம் எனத் தெரிந்ததும், அநீதியாக, அதனை என் மனைவிதான் எனத் தீர்ப்புச் சொன்ன இப்படிப்பட்ட பஞ்சாயத்தார்கள் ஆட்சியில் இருந்தால் ஏன் இந்தப் பகுதி வறண்டு போகாது? அதனை உணர்த்தவே இந்த நாடகம் ஆடினேன். என்னை மன்னித்து விடுங்கள்' என்றது.

மணிமேகலை காப்பியம் ஆட்சியும், ஆட்சியாளர்களும் இழைக்கும் தவறுகள் இயற்கையைப் பாதிக்கும்; முடிவாக மழை இன்றிப் போகும் என்கிறது. ஆட்சிக்கும் இயற்கைச் சீரழிவுக்கும் உள்ள தொடர்பு 2000 ஆண்டுகட்கு முன்பே எடுத்துக் காட்டப்பட்டது. ஈப் புகுந்தால் இறகொடியும் இண்டம் பெருங்காடுகள், இன்று இடுகாடுகள் ஆகிவிட்டன. காரணம் வீரப்பன் மட்டுமா? காடுகளை அழித்து, மரங்களைக் கடத்திய 'மழைக் கொலைகாரர்கள்' ஆட்சியாளர்கள் அல்லவா! மலைகளில் மரவெட்டியான்கள் சமவெளிகளில் மரம் நடு விழாக்களை நடத்தி வருகிறார்கள். மனித வாழ்வின் சுவாசப் பைகளைத் திருடி விட்டு, மக்கள் கைகளில் சலுகை விசிறிகளை வழங்குகிறார்கள்.

இந்த உணர்வைப் பனிக்குடம் உடைத்துப் பிரசவிக்கிறது ஒரு தெலுங்குக் கவிதை. ஆந்திர அங்கதக் கவிஞர் குந்தூர்த்தியின் 'நகரத்தில் மழை' கவிதையின் இறுதிப் பகுதி.

'மரத்தடியில் இருளில் விழுந்து
ஒன்றும் அறியாமல் தவித்தது ஒரு துளி!
கொட்டாவி விடும் நவ நாகரிக யுவனின் உதட்டில் விழுந்து
மதுவாசனைக்கு மெய்மறந்து ஆடியது ஒரு துளி!
ஜன்னலில் இருந்த மருந்துப் புட்டியில் விழுந்து

உடலெல்லாம் கசப்பாகி நாட்டுப்புற ஏரியில் விழாமல்
நகரத்திற்கு ஏன் வந்தோம் எனப் புலம்பியது ஒருதுளி!

பல்கலைக் கழகப் பகுதிக்குள் ஒளியுள் ஒளிந்து போனது
கலைமகளின் பால்போன்ற ஒரு துளி!

சார்மினார் கோபுரத்தின் மேல் விழுந்து
அரியாசனத்தில் அமர்ந்த வீறுடன்
கால்மேல் கால் போட்டு மீசை முறுக்கி
நகரத்தைப் பெருமையுடன் பார்க்கும் ஒருதுளி!

அடிக்கடி கோர்ட்டுக்குப் போன அலுப்புடன்
ஹைகோர்ட் கட்டிடத்தின் மேல் விழுந்து
மூஸி ஏரியில் மூழ்கியது ஒரு துளி!

சட்டசபையின் உச்சியில் விழுந்தது ஒரு துளி!
மழையோ நின்று விட்டது!'

என முடிகிறது.

நகரம் நரகமாகிப் போயிருப்பது ஒவ்வொரு துளியிலும் தெரிகிறது. நிலையான இருப்பிடமின்றி மழைக்காலத்தில் ஒண்டக் கிடைத்த இடத்தில் ஒடுங்கி வாழும் மக்கள் மரங்களின் அடியில் மறுகி நிற்கிறார்கள். இருளில் மரத்தடியில் விழுந்து தவிக்கிறது ஒரு துளி. தெய்வம் உடைத்த சிதறு தேங்காய்ச் சில்லுகளைப் போலச் சிதறிய, வறுமைக் கோட்டை அரைஞாண் கயிறாக அணிந்த மக்கள் மரத்தடியில், இத்தனை கைகள் நீண்டிருந்தும் இவர்களின் கண்ணீரைத் துடைக்க முடியவில்லை எனக் கசிந்தழும் மரத்தின் கண்ணீர்த் துளிகளாய் மழை வழிகிறது. பெருமழை பிரம்மாண்டத்தின் சிறுதுளி வியப்புடன் பார்க்கிறது. மரத்திற்குக் கீழே மனித மரங்கள் வடிக்கும் கண்ணீர்மழை கண்டு 'ஒன்றும் அறியாமல்' கலங்குகிறது. 'அவர்கள் தாகம் தணிக்க முடிய வில்லையே' என்று தண்ணீர் தவிக்கிறது.

சர்வதேச பயங்கரவாதச் செயல்களுக்கு உரமூட்டுவது போதைப் பொருள் வணிகம். உள்நாட்டு ரௌடிகள் 'அன்றாடங் காய்ச்சிகள்'. சாராயப் பண ஊட்டச்சத்தில் நச்சு அரசியல் ஆக்டோபஸ் விரல் விரிக்கிறது. இதற்கு இளைஞர்கள் இரையாகிப் போகிறார்கள். மது வாசனைக்கு மயங்கி ஆடும் ஒரு துளி மயக்கம் தெளிக்கப் பயன்படும் நீர்த்துளியே மயங்கி ஆடுகிறது. குடியைக் கெடுக்கும் குடியைத் தடுக்க வேண்டிய அரசே குடியைத் தயாரித்துக் கொடுப்பது போல, தூய்மைத் துளியாக இருக்கும் இளைஞர் களையும் 'தண்ணி' அழுக்காக்கி விடுகிறது.

தமிழகத்தில் ஒரு புகழ் பெற்ற பல்கலைக் கழக வளாகப் பாவங்களைப் பற்றிப் பல்லாண்டுகட்கு முன்பு எழுதப்பட்ட என் இசைப்பாடலில் ஒரு கண்ணி.

பூவளையம் சுமப்பதுவோ
அண்ணா சமாதி – எதிரில்
பூஜ்யங்கள் சுமக்கின்ற
தம்பி சமாதி தங்கை சமாதி
அதன் பேர் பல்கலைக் கழகம்
முன்பு கலைவாணியின் கழகம்
இன்று களவாணிகள் கழகம்
இது
பருவமுறையில் கருக்கலைக்கும்
பட்டணம் ஆகும்
இங்குப்
பட்டம் பெறக் கற்புகூடக்
கட்டணம் ஆகும்.'

இதே வயிற்றெரிச்சலைத் தான் தெலுங்குக் கவிதை கலைமகளின் பால்போன்ற ஒரு துளி பல்கலைக் கழகத்தில் ஒளிந்து போய் விட்டது எனக் கண்டிக்கிறது.

சார்மினார்க் கோபுரத்துளியோ அதிகார வர்க்கத்தின் ஆணவத்துடன் மீசை முறுக்குகிறது. கோப்புகளில் பெறப்படும் தாள், தாள் அல்ல; உயிருள்ள ஆள் எனக் கருதி நடவடிக்கை எடுக்க வேண்டிய அதிகாரிகள் ஆளையே தாளாக்கிக் காகிதக் குப்பை போலக் கசக்கி வீசுவதை நகரங்களில் காணலாம். ஆணவத் துளியின் கனத்தில் சார்மினார் 'பைசா நகரத்தின் சாய்ந்த கோபுரமாகிவிடுகிறது'.

நீதி தேவதையின் வாகனம் நத்தையாக இருக்க வேண்டும். அப்பன் போட்ட வழக்கு கொள்ளுப் பேரன், எள்ளுப் பேரன் காலத்தில் கூட முடியாது. இழுத்துக் கொண்டிருக்கும் நீதி ஐஸ்ஸில் வைத்த பிணம் போல அசைவின்றி இருப்பதால் தானோ என்னவோ 'Just + Ice = Justice' ஆகி விட்டது போலும். அலுப்புடன் கோர்ட்டுக்குப் போன துளி, ஐதராபாத் மூஸி ஏரியில் மூழ்கி விட்டது.

கவிதையின் முத்தாய்ப்புத் தான் அற்புதமானது. நாட்டுப்புற ஏரியில் விழுந்திருந்தாலாவது நலம் கிட்டியிருக்கும் என்று ஏங்கிய துளி, நடுவர் மன்றத்தில் விழுந்து, பிறகு காவிரிக்கரை விவசாயி போல, நகர மண்ணுக்குள் மூழ்கிப் போகிறது. இறுதியில் சட்டசபையின் மீது விழுகிறது ஒரு துளி. மற்ற இடங்களில் மழைத்துளி விழ, விழ மழையும் பொழிந்து கொண்டேயிருக்கிறது. ஆனால், ஆட்சி மன்றத்தில் விழுந்தவுடன் மழையே நின்று விட்டது என்று முடித்திருப்பது இயற்கைக்கும் ஆட்சிக்கும் உள்ள தொடர்பைத் துலக்கிக் காட்டுகிறது.


முன்னர் மாதம் மும்மாரி பெய்தது ; பின்னர் மாதமும் மாறிப் பெய்தது. ஊழி மழை பெய்தாலும் ஆட்சிக் களங்கத்தை, மாசினைக் கழுவ முடியாது என்றே மழை அஞ்சி நின்று விட்டது அல்லது ஆட்சியின் அலங்கோலம் மண்ணை மட்டுமல்ல விண்ணையும் பாதித்துவிட்டது. கவிச்சக்கரவர்த்தி 'கோசல நாட்டில் மழை, பெண்களின் கற்புப் போலப் பொய்யாது பெய்தது' என்கிறார்.

'........அன்னார்
கற்பின் நின்றன கால மாரியே'

தனிமனித ஒழுக்கத்திற்கும் மழைக்கும் தொடர்பு உண்டு போலும், தனிமனிதக் கூட்டமைப்பின் சார்பாளர்களான ஆட்சியாளர்களுக்கும் இயற்கைக்கும் உள்ள சம்பந்தத்தை ஆந்திரக் கவிதையின் முடிவு வரிகள் நமக்குள் நங்கூரம் பாய்ச்சி இறக்குகின்றன.

அக்டோபர் 2004

கல் குமிழ்



தாஜ்மஹால். தன் காதல் மனைவி மும்தாஜின் மரணத்திற்குப் பிறகு, மொகலாயச் சக்கரவர்த்தி ஷாஜகானால் எழுப்பப்பட்ட நினைவுச் சின்னம். காலத்தின் கன்னத்தில் இன்னும் உலராத ஈரச் சொட்டு. காதலியைக் காட்டாத தன் கருவிழியைத் தோண்டி எறிந்து விட்டு, தன் வெள்ளை விழிப்படலங்களால் கட்டியது போன்ற தோற்றமளிக்கும் பளிங்குக் கனவு. சமாதி கட்டப்பட்ட காதல்தான் சரித்திரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. காதலுக்குச் சமாதி கட்ட முடியாது என்பதற்குச் சான்றாகக் கம்பீரமாய் நின்று கொண்டிருக்கிறது தாஜ்மஹால். 'புனிதப் பயணத்தில்' கருப்புக் காபாவை ஹாஜிகள் வலம் வருவது போல, காதலர்கள் இந்த

வெள்ளை மொட்டினை வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். ஷாஜஹானின் கண்ணீரைப் போல் தாஜிலிருந்து கூட்டம் வழிந்து கொண்டே இருக்கிறது. அவனின் நனைந்த கைக் குட்டையாக யமுனை அருகில் கிடக்கிறது. எத்தனை இமைகள் விழுங்கினாலும் இந்தக் காதல் மாத்திரை கரைவதில்லை. தாஜ்மஹாலின் 350 ஆம் ஆண்டு விழாக் கொண்டாட்டங்கள் நடக்கின்றன. ஆண்டுகள் விழலாம், தாஜின் பதிவு எத்தனை ஆண்டுகள் ஆனாலும் இதயத்தை விட்டு விழாது.

தாஜ்மஹாலைக் கட்ட விலையுயர்ந்த வண்ணக் கற்களை ஷாஜஹான் பயன்படுத்தியிருக்கலாம். வெள்ளைப் பளிங்கினைத் தேர்வு செய்ததற்குச் சுவையான காரணம் ஒன்று சொல்லப்படுகிறது. மனைவியின் மரணச் செய்தி மூச்சில் செருகப்பட்ட வாளாக ஷாஜஹான் மேல் விழுகிறது. பக்கத்திலிருந்த அறைக்குள் சென்று ஷாஜஹான் கதவைச் சாத்திக் கொள்கிறார். சிறிது நேரம் பொறுத்து வெளியில் வருகிறார் அரசர். பாதுகாவலர்கள் விழிகள் வியப்பில் விரிகின்றன. அறைக்குள் செல்லும்போது கருத்த முடியோடு சென்ற மொகலாய மன்னர், வெளியில் வந்த போது வெளுத்த முடியோடு வருகிறார். கவலையில் நரைக்கும் என்பது பொதுவான நம்பிக்கை. சில மணித்துளிகளுக்குள் தலை முழுவதும் நரைத்த நிலையில் வந்தவரைக் கண்டபோது, கண்ணீர் வெளியே வராமல், உள்ளே மடைமாறி முடி முழுவதையும் சலவை செய்து விட்டதோ என்னும்படி அமைந்து விட்டது. தாஜ்மஹாலுக்காகச் சலவைக்கல் யோசனை அவருக்கு அப்போது தோன்றியிருக்கலாம் என்கிறார்கள்.

கட்டட அதிசயமாகக் காலம் கட்டியம் கூறினாலும், தாஜ்மஹால் விந்தை விளைச்சல்தான். வியப்புக் குறி (!) கூட நுனியில் ஒரு துளி பதக்கத்தோடு இருக்கும் கண்ணீர்ச் சரமாகத் தான் காட்சி அளிக்கிறது.

காலங்காலமாகக் கவிதையின் கருப்பொருளாய்க் காதலர் தினங்களின் உரிப்பொருளாய் இலங்கி வருவது தாஜ்மஹால். ஆனால், உரைநடையில் தாஜ்மஹால் தந்த அனுபவத்தை அற்புதமாக இந்தியாவின் முதல் கல்வி அமைச்சர், சுதந்திரப் போராட்ட வீரர் அபுல்கலாம் ஆசாத் ஒரு கடிதத்தில் வெளிப்படுத்தியுள்ளார். கிபி. 1888இல் பக்ரீத் நாளில் மக்காவில் பிறந்த அவர் அரபு மொழியைத் தாய்மொழியாகப் பெற்றவர். உருதுமொழியில் இனிய இலக்கியங்கள் படைத்தவர். சிறையிலிருந்து அவர் எழுதிய கடிதங்கள் கவிதைச் சிற்பங்கள். அவரின் தாஜ்மஹால் தரிசனம் இன்றைய கலவரப் புழுதியின் பின்னணியில்...

நிலவின் கிரணங்கள் பூமியில் விழுகின்றன. மேலே நிலவு எனும் ஒரு சிறு குடத்திற்கும் கீழே பூமியெனும் ஒரு பெரிய

குடத்திற்கும் இடையே நிலாவின் கிரணங்கள் தந்திகளாகி ஒரு சிதார் மீட்டப்படுகிறது.

"இரவின் அமைதி
நட்சத்திரங்களின் நிழல்
தேயும் நிலவொளி
ஏப்ரல் மாதத்து
ஈர இரவு
தாஜ்மஹாலின்
நான்கு பக்கங்களிலும் மினராக்கள்
நிமிர்ந்து நிற்கின்றன.

சின்னக் குமிழிகள்
உயிரைக்
கையில் பிடித்துக் கொண்டு
உட்கார்ந்திருந்தன.

மத்தியில் பெரிய குமிழை
நிலவு கழுவிக் கொண்டிருந்தது.
பெரிய குமிழ்
சரியாமல் தன் சிம்மாசனத்தில்
வீற்றிருந்தது.

கீழே யமுனையின் மின்னும் அலைகள்
மேலே விண்மீன்கள் எண்ணற்ற
கண்கள் அதிசயமாய்ப்
பார்த்துக் கொண்டிருந்தன.

ஒளியும் இருளும் கலந்த சூழலில் திடீரென
சிதாரின் பர்தாக்களிலிருந்து
வார்த்தைகளற்ற
கைக்கிளைச் சோகப் பாடல்கள்
காற்றின் அலைகளில் நீந்தத் தொடங்கின.
கொஞ்ச நேரம் வரை சூழல்
நிசப்தமாகியது.
மெல்ல மெல்ல ரசிகர்கள் இயக்கம் தொடங்கியது.

நிலவு முன்னேறி
என் தலைக்கு மேலாகியது.
விண்மீன்கள் இமைக்காமல் வெறித்தன
மரக்கிளைகள் போதையில்
ஆடத் தொடங்கின.

இரவின் கருப்புக்
கோஷாவின் உள்ளிருந்து
அண்டப் பொருள்களின்

முணுமுணுப்புக் கேட்கத் தொடங்கியது
பலமுறை தாஜின் குமிழ்கள்
அசைந்தாடத் தொடங்கின
இந்த மினராக்களின் தோள்கள்

ஆடுவதைத் தவிர்க்க முடியவில்லை
நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும்
இது உண்மை.

இப்படிச் சூழலில்
எத்தனையோ முறை
அந்தக் குமிழ்களோடு பேசியுள்ளேன்

எப்போதெல்லாம்
அந்தக் குமிழைப் பார்த்தேனோ
அப்போதெல்லாம்
அதன் உதடுகள் அசைந்தன"

சிந்தனை மின்னல் மூளையில் மின்னி, இதயத் துடிப்பு இடி முழக்கமிட, 5 விரல் சாரலாய் மையங் கொண்ட மழை ஆறாவது விரல் தூரிகையில் வண்ண மழை பொழிந்தாற் போன்ற உணர்வோவியமாக வெளிப்பட்ட இந்த வரிகள் பிரமாதப் பிரம்மாண்டம். ஆமையும், முயலுமாய்க் கவிதையும், உரைநடையும் ஓடி, நுரைதள்ளிய உரைநடையை ஆமை சுமந்து வந்து பந்தய வெற்றியை இரண்டும் பகிர்ந்து கொண்டுள்ளன.

வெள்ளி நட்சத்திரங்கள் தாஜ்மஹாலின் முன்பு கருத்த நிழல்களாகி விட்டன. பாரின் மீது கிடக்கும் பௌர்ணமி மகுடமாம் தாஜின் முன்பு நிலவொளி தேய்கிறது. 4 பக்க மினராக்கள் நிமிர்ந்து நின்றாலும் சின்னக் குமிழிகள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தன. ஏன்? அப்துல் கலாம்கள் நிமிர்த்திப் பிடிக்கப்பட்டாலும், சிறுபான்மைச் சமூகத்தின் சிறுமைப்பட்ட, சீர்குலைக்கப்பட்ட முஸ்லிம், கிறிஸ்தவ, சீக்கிய, ஆண், பெண்களின் குறியீடாகக் குமிழாக நிற்கிறார்கள்; மரண பயத்தோடு நிற்கிறார்கள். மோடி வேலைகளால், போலிக் காவிகளின் காட்டு மிராண்டித்தனங்களால், முஸ்லிம், கிறிஸ்தவ சமாதிகளுக்குக் கூட பாதுகாப்பில்லாத சூழல். தாஜ்மஹாலும் ஓர் இசுலாமியச் சமாதி என்று கடப்பாரை முதுகுத் தண்டர்கள் முனைந்து விட்டால்.

மத்தியில் பெரிய குமிழை நிலவு கழுவிக் கொண்டிருக்கிறது. களங்க நிலவு கழுவுகிறது. பெரும்பான்மைச் சமூகத்தை அழுக்கு அமைப்புகள் மூளைச் சலவை செய்கின்றன. அவை என்ன முயன்றாலும் பெரும்போக்கான பெரிய (குமிழ்) சமூகம் தன்னிலையில் சரிவதில்லை. இந்தியச் சமூக அமைப்பின் நிலைகுலையா நிலைப்பாட்டை மேலை நாட்டு விண்மீன்கள்

வியப்புடன் கண்விழித்துப் பார்க்கின்றன. ஆனந்தக் கண்ணீர் மின்னுவதில் என்ன வியப்பு இருக்க முடியும்?

துன்ப இன்பக் கலப்படச் சூழலில் இந்தியா. பாலியல் வன்முறை வேட்டைக்குட்பட்ட பர்தாப் பெண்கள் சிதாரின் நரம்புகளாய்த் தெறிக்க, மௌன மீறல்களால் சோக இசை. புலம்பவும், ஒப்பாரி வைக்கவும், முனகவும் முடியாது ஒரு பக்கத் துக்கமாய்க் காற்றில். நிசப்த நெரிசல். கைதட்டிக் கலைக்கும் வெறிபிடித்த இரவு ரசிகக் கும்பல். மூளைமதி தலைக்கு மேலாகியது. இமைப்பும் அற்று நட்சத்திரங்கள் மௌன சாட்சிகள். மதம் பிடித்தாடும் பரிவாரக் கிளைகள். இருட்டடிக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட சமுதாயங்கள் உள்ளிருந்து அண்ட அண்ட அவல முணுமுணுப்புகள் அரும்புகின்றன. விளைவு மினராக்கள் தோள் குலுக்கி ஆட்டம் காணத் தொடங்குகின்றன. குமிழ்களும் குலுங்க ஆரம்பிக்கின்றன. அந்தக் குமிழ்களோடு தொடர்ந்த என் பேச்சு ஜடமுடனான குமிழ்களின் உதடுகளை உசுப்பி அசைக்கின்றன."

இரம்மியமான அபுல்கலாம் ஆசாத்தின் தாஜ் தரிசனம், இன்றைய இந்திய சமூகச் சூழலில் சீழ் கட்டிச் சிதைவாகத் தென் படுகிறது. தாஜ்மஹாலையும் இந்தியாவையும் காக்க இனி என்ன செய்யப் போகிறோம்? இது ஒரு சர்ரியலிசப் பார்வை.

நவம்பர் 2004

அம்மாவைச் சூலுற்ற அம்மார்



சூரியன் அடைகாப்பில், பூமி முட்டை பொரித்துள்ள குஞ்சுகள் நாம்; மனித வேடந்தாங்கலில், மண்தான் பெற்றோரின் கட்டில். பிள்ளைகளின் தொட்டில், இறுதியில் கால்கழி கட்டிலில் ஏறி மீண்டும் புறப்பட்ட இடத்திற்கே உயிர்கள் வந்து சேருமிடமும் அதுதான். பூமியின் சுழற்சியில் புலப்படும் செய்தி ஒன்றுதான். உதயமும், அஸ்தமனமும் ஒன்றுதான். ஆனால் மரணத்தின் விழிகளிலும் கண்ணீர் கசியச் செய்யும் மரணம் எது? மண்ணின் விடு தலைக்காக ஒருவன் படும் ரணம். ரணமல்ல ஆபரணம். சதா ரணம் போராளிக்குச் சாதாரணம். அவன் மரணம், விடுதலை விதைகளை விழிப்புறுத்தும் கிரணம்.

அன்னியன் எவனும் தீண்டல் ஆகாது என்பதால்தான் எல்லைக்கும் தமிழர் 'குமரி' என்று பெயர் வைத்தனர். அரசே! உன் மண் எப்படிப்பட்டது தெரியுமா? உன் நாட்டுப் பெண்கள் கருவுற்ற போது மசக்கையில்

தொட்டதே அன்றி, பகைவரின் மூச்சும் தீண்டமுடியாத முத்தமிழ் மண் இது.

'நின்னாட்டு வயவுறு மகளிர் வேட்டுணின் அல்லது, பகைவரும் உண்ணார் நின் அரு மண்ணினை' என்று அன்று பேசியது தமிழினம். கருவில் தொடங்கிய மண்ணின் தொடர்பு அத்தோடு நின்று விடுகிறதா? இல்லை. இன்னும் சிற்றூர்களில் இறுதி மூச்சு இழுத்துக் கொண்டிருப்பவன் வாயில், அவன் பிறந்தகத்து மண்ணைக் கரைத்து ஊற்றும் பழக்கம் இருக்கிறது. ஆக மண்ணின் பாசம் மரணத்திலும் தொடர்கிறது.

மரணத்தின் இரைப்பை ஆகும் இடுகாட்டு மண், விடுதலையின் கருப்பை ஆகும். பாலஸ்தீன விடுதலை இயக்கத்து இளைய வீரன் ஒருவன், களத்தில் தன் இரத்தம் தொட்டு தன் நாட்டு விடுதலை இயக்கத் தலைவர் யாசர் அராபத்துக்கு எழுதிய கடிதம் ஒன்று 'அல் அரப்' பத்திரிகையில் நெடுநாட்களுக்கு முன்பு வெளிவந்தது.

"எல்லோரையும்
தலைகுனியச் செய்யும் – எம்
தாய்நாட்டு மண்ணைத்
தலைநிமிரச் செய்யும்
எங்கள் தலைவா!
யாசர் அராபத்!
போர்க்களத்தில்
நீ
ஆயுதம் இழந்து
நிராயுதபாணியாய் நிற்கும் போது
கவலைப்படாதே!
என்கல்லறையைத் தோண்டு!
என்
கை எலும்புகளை
ஆயுதமாகப் பயன்படுத்திக் கொள்.
என்
கபாலத்தைக்
கேடயமாக்கிக் கொள்.

ஆம்
என்
எலும்புகளுக்குத்
தாய்நாட்டு விடுதலைக்காக
இன்னொரு முறையும்
போராட வாய்ப்புத் தா"

இன்னும் புலராத இரத்தக் கடிதம் யாசர் அராபத்தின் 'அல் பத்தாஹ்' (வெற்றி) விடுதலை இயக்கத் தலைமையகத்தில் பிரேமுக்குள் சிறைப்பட்டு விசும்பிக் கொண்டிருக்கிறது. 1969இல் அரும்பியது பாலஸ்தீன விடுதலை இயக்கம். இஸ்ரேல் யூத

ஆக்கிரமிப்பிலிருந்து தாயகத்தை விடுவிக்க 2000கில் சாதித்தது என்ன என்பது பற்றி, யாசர் அராபத் 'டைம்ஸ்' பத்திரிக்கைக்கான பேட்டியில்

'காஸா' என்ற
மேற்குக் கடற்கரைப்
பகுதியை மட்டும்தான்
அன்னிய ஆக்கிரமிப்பிலிருந்து
விடுவித்திருக்கிறோம்.

'காஸா'
கட்டைவிரல் அளவுள்ள பிரதேசந்தான்
இது கூட
நாங்கள் வாழ்வதற்காக அல்ல
செத்தால்
எங்கள் உடலைக்
கௌரவமாகப் புதைப்பதற்குத்தான்'' என்றார்

நரவேட்டைக் காரரான இஸ்ரேல் பிரதமர் ஏரியன் ஷெரோன் யாசர் அராபத்தின் சடலத்தைப் புதைப்பதற்குப் பாலஸ்தீனத்தில் இடம்தர மறுக்கிறார். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அல்சேஷன் தாயகத்தில் மண்ணின் மைந்தனுக்குப் புதைக்க ஓர் இடம் தர மறுத்த போது இந்திய விடுதலை வரலாற்று ஏடு ஒன்று இதயத்தில் விரிந்தது.

ஆங்கில ஏகாதிபத்தியத்தை 1857இல் எதிர்த்த மொகலாயப் பேரரசின் கடைசிக் கொழுந்து பஹதூர்ஷா தான் ஆண்ட செங்கோட்டையில் சிறை வைக்கப்படுகிறார். காலை உணவு, தட்டில் துணியொன்று போர்த்தப் பெற்று அவருக்குப் பரிமாறப் படுகிறது. துணியை விலக்குகிறார் சக்கரவர்த்தி. தான் பெற்றெடுத்த இரண்டு மழலைகளின் தலைகள் துண்டிக்கப்பட்டு வைக்கப் பட்டுள்ளன. அடிமைப்பட்ட தந்தையைப் பார்க்க விரும்பாததைப் போல் கண் மூடிக்கிடக்கின்றன மொகலாய மொட்டுக்கள். கொய்யப்பட்ட குழந்தைச் சிரங்களைக் கண்டு விம்மும் தன் மனையாளைப் பார்த்து "பேகம் மஹல்! கண்ணீரைக் கொட்டி விடாதே! ஆதிக்க அதிகாரத்துக்கு வணங்காத நம் கண்களில் கண்ணீரை வரவழைத்து, உள்ளத்தை நொறுக்குவதுதான் பிரிட்டிஷார் நோக்கம். அவர்கள் நோக்கம் நிறைவேறக் கூடாது" என நடுக்கமின்றி முழங்குகிறார் பஹதூர்ஷா. இறுதியில் ஆங்கிலேய அரசு அவரைப் பர்மாவுக்கு நாடு கடத்துகிறது.

பர்மாவில் தன் சமாதியின் மீது பஹதூர்ஷா ஸஃபர்

"தன் உடலைப் புதைக்க
தன்
தாயகத்து மண்ணில்
இரண்டு கஜ
இடம்கூடக்
கிடைக்கவில்லையே
இந்த
இந்திய மகனுக்கு"

என்று எழுதச் சொன்னார். பாதகத்தால் பலியிடப்பெற்ற தன் பச்சை மண்ணைப் பார்த்துப் பரிதவிக்காத பஹதூர்ஷா பறிபோன தாய்மண்ணுக்காகக் கல்லறைக்குள்ளும் புலம்புகிறார். பர்மாவில் அவர் சமாதிக்குச் சென்ற அப்போதைய பிரதமர் இராஜிவ் காந்தி

"இரண்டு கஜ நிலம்கூட
இந்தியாவில் கிடைக்கவில்லையே
என்பது உண்மை
ஆனால்
உன்னுடைய தியாகத்தில்
உதித்தெழுந்தது சுதந்திர கீதம்!

ஸஃபர்! துரதிர்ஷ்டம் ஒன்றுமில்லை
பாரதநாடு
இதோ உன் நினைவுச் சின்னமாக
அதன் பெயரிலும் புகழிலும்
உன் பெயர் கலந்துவிட்டது."


என உருக உருக உருதுக் கவிதை பாடினார்.

அந்த வரிகள் இந்திய விடுதலை வீரனுக்கு மட்டுமல்ல; பாலஸ்தீன விடுதலை வேங்கை அராபத்திற்கும் பொருந்தும். தன்னைத் தன் தாயகத்தின் புனித மசூதியான பைத்துல் முகத்தஸில் அடக்கம் செய்ய வேண்டும் என்று யாசர் கேட்டார். ஆனால் இரமலானில் மறைந்த அவர் உடல் இரமல்லாவில், காஸாப் பகுதியில்தான் அடக்கம் செய்யப்பட்டது. அன்னை பூமியின் அடிமைப் பிரதேசத்தில் அவன் அடக்கமாகவில்லை. தன்னால் விடுதலை செய்யப்பட்ட தாயக மண்ணில்தான் அடக்கமாகி உள்ளான். அடிமைத்தனத்துக்கு அடக்கமாகாது; எப்போதும் அடக்கமாகாது சுதந்திர உணர்வு. அபு அம்மார் (யாசருக்கு அவரின் மக்கள் சூட்டிய செல்லப் பெயர்) இறந்து விட்டார். ஆனால் விடுதலை உள்ளத்திற்கு மரணமில்லை.

"அபு அம்மார்!
கர்ப்ப காலத்தில்
மண்ணை உண்ணும்
அன்னை மார்களை நாம்
அறிவோம்
சுதந்திரப்
பிடிமண்ணை ஈன்றெடுக்கும்
சேயைத்
தாயகப் பூமி உண்ணும் –
உன் சமாதி
கர்ப்ப வயிறாக
விடுதலையைச் சூலுற்று".

டிசம்பர் 2004

லேபிளில் காந்தி உள்ளே பிராந்தி



காதுகளை நம்ப முடியாமல் கடவுள் பார்த்தான். அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்கும் குரல்களையே கேட்டு அலுத்துப் போன செவிகளில் முதல் முறையாக வேண்டாம்; வேண்டாம்; வேண்டாம் என்ற வித்தியாச பிரார்த்தனை.

'பொன் வேண்டாம்'

வியப்படைந்தான் வேண்டுதல் வேண்டாமையற்றவன்.

'பொருள் வேண்டாம்'

விழிகளையும் விரித்துக் கேட்டான் ஆண்டவன்.

'மண் வேண்டாம்'

விந்தைக் குரல் எழுப்பினான் இறைவன்.

'மாதர் வேண்டாம்'

அடுத்து என்ன என ஆவலானான்.

'பண் வேண்டாம் பாடல் வேண்டாம்'

வேண்டாமென்று சொல்வதற்கு என்னிடம் ஏன் வர வேண்டும்? வெகுளியோடு இறைவன் வெறித்தான். இறுதியில் மனிதன் முடித்தான்.

'பசி கூட வேண்டாமே'

ஆஹா! அடிப்படையிலேயே கை வைத்து விட்டானே என்று அசந்து போனான் அறவாழியான்.

பசி என்ற ஒன்று இருப்பதால்தான் பொன், பொருள், மண், பெண், பண், பாடல் எல்லாம் தேவைப்படுகிறது. அதற்காகவே அகிலத்தில் அவற்றைத் தேடியே எத்தனை பாடு? ஆம் பசி, நாவையே தின்றுவிடும் பசி. பொதுவாக நினைப்பது போல வயிற்றுப் பசி மட்டுமல்ல; ஆசையும் தேவையும் ஏற்படுத்தும் அனைத்துமே பசி தான். 'ஆசை அறுமின்; ஆசை அறுமின்; ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்' என்பது உயர்ந்த கோட்பாடு 'பற்றுக பற்றற்றான் பற்றினை, பற்றுக பற்றுவிடற்கு' என்ற வள்ளுவன் வார்த்தையும் தூக்கிப் போட்டு அடிக்கிறது. மற்ற ஆசைகளை விட்டு விலக, இறைவன் மீது பற்றுவை ; அவனே பற்றுக் கோடு என்ற வள்ளுவத்தைப் புறந்தள்ளி உண்மையான துறவு என்றால் 'ஆண்டவன் பற்றிலிருந்தும் அப்புறமாக'. அசல் துறவின் உச்சம் இந்நிலை. அள்ள அள்ளக் குறையாது அன்னம் சுரந்த அமுதசுரபி ஆபுத்திரனுக்குக் கிடைக்கிறது. அதனைத் துறந்து உண்ணாவிரதம் இருந்து ஆபுத்திரன் உயிர்விடுவதாகப் பௌத்தக் காப்பியம் மணிமேகலை குறிப்பிடுகின்றது.

தொட்டில், கட்டில், பாடையென மரத்தின் மேல் இருக்கையில் ஞானம் மனிதனுக்கு வரவில்லை. ஆனால் 'ஆசை அறுத்தல்' என்ற ஞானம் மரத்தின் கீழ்தான் புத்தனுக்கு வந்தது. அற்புதம் இல்லை. வெயிலிலும், மழையிலும் தூசியிலும், காற்றிலும் துலக்கமின்றி மரம் நிற்கிறது. நீரூற்றுகிறவனுக்கும் மட்டுமில்லை; தன்னை வெட்டுகிறவனுக்கும் நிழல் தருகிறது. ஒற்றைக்கால் தவம் செய்யும் உண்மைத் துறவியாக இருக்கும் மரமெல்லாம் போதிமரம் தான்.

பௌத்த ஞானமார்க்கத்தை இயக்கமாக்க ஊர் ஊராகக் கௌதம புத்தர் ஊர்வலம் வருகிறார். அந்தக் கொள்கையின் பெறுமதி உணர்ந்து மக்கள் இருபுறமும் கூடி வெகுமதிகளை அள்ளிச் சொரிகிறார்கள். பொன்னும், மணியும் மலையெனக் குவிந்து கொண்டிருக்கிறது. மக்கள் தந்த அன்பளிப்புகளைப் பிரதம சீடன் ஆனந்தன், புத்தர் முன் வந்து கொட்டுகிறான். பொருள்களுக்கிடையே சுருண்ட துணி ஒன்றிருப்பதைக் காண் கிறார் கௌதமர். அது ஒரு கோவணத் துணி. புத்தர்,

'இருப்பதிலிருந்து மக்கள் கொடுத்த கொடையை விட இருந்த ஒன்றையும் (இருந்ததே ஒன்று தான் - கோவணந்தான்)

இழந்து ஈந்திருக்கின்றவரே உயர்ந்த துறவி என்னைவிட' என்றார்.

இன்று கோவணத்துணியைக் கோலில் கட்டி ஏந்தி வரும் போலித் துறவிகளைப் பார்க்கிறோம். தலைக்கு மட்டுமே துணி அணிந்து, உடம்பு முழுக்க மானமின்றி நிர்வாணமாக நிற்கும் 'தண்டம்' போலிச் சாமியார்களின் குறியீடாக நிற்கிறது. தலைப்பாகைகளுக்காகக் கோவணத்தை அவிழ்க்கும் அவலம். தண்டத்தின் உச்சியில் அசையும் துணி இருந்த இடத்திலிருந்து 'வெறும் நாவை மட்டுமே அசைக்கும்' அரசியல் கட்சிக் கொடிகளைப் போலத்தான் தோன்றுகிறது. உபதேசம் மட்டும் தான்; அதுவும் ஊருக்கு மட்டும் தான். மானம் மறைக்கும் புடவைகளுக்குப் பேர் போன நகரத்தில் புடவை அவிழ்க்கும் துச்சாதனர் முன்பு பாரதமே பாஞ்சாலியாக நிற்பதைப் போல, தடிமகன் அமர, முந்தைய முதல் குடிமகன் நிற்கும் புகைப்படம் ஒன்று அண்மையில் வெளிவந்தது.

காலடியில் பிறந்த ஆச்சார்யன் (ஆச்சாரியம் என்றால் ஒழுக்கம்) எதிர் வந்த 'தலித் மக்களை' விலகிப் போகச் சொல்கிறார். எதிர் வந்தவன் சொன்னான் : 'உடம்பை விலகிப் போகச் சொல்கிறாயா? ஆன்மாவையா?'

காலடியில் பிறந்த சங்கரன், அவன் காலடியில் வீழ்ந்தார் என்பது வரலாறு. மடம் நடத்தும் நிறுவன விடுதிகளில் உயர்சாதி மாணவர்களோடு, கீழ்ச்சாதி மாணவர்கள் சேர்ந்து உணவுண்ணத் தடை;. தனித்தனி மெஸ். 21 ஆம் நூற்றாண்டிலும் தீண்டா மையைக் கடைப்பிடிப்பவர்கள் நிறுவனங்களுக்கு ஆதிசங்கரர் பெயரை வைத்திருப்பது

'லேபிளில் காந்தி உள்ளே பிராந்தி'

என்ற தொடரைத்தான் நினைவுபடுத்துகிறது.

அமெரிக்க மண்ணில், தன்னை மணக்க விரும்பிய பெண்ணிடம் ஞானத் துறவி விவேகாநந்தர் கேட்டார் : 'ஏன் என்னை மணக்க விரும்புகிறாய்' 'உங்களைப் போன்ற ஞானமுள்ள ஒரு குழந்தைக்கு நான் தாயாக வேண்டும்' என்றாள். அடுத்த விநாடியே விவேகாநந்தர் 'தாயே இன்று முதல் நான் உங்கள் பிள்ளை' என அவள் காலடிகளில் விழுந்து வணங்கினார்'. ஆனால், தற்போது நிலை என்ன? மக்களை மயக்கத் தனக்குள்ளிருந்து விதவிதமான பொருள்களை வெளியில் எடுக்கும் சாதுக்கள், உள்ளே போய்க் கொண்டிருக்கும் காரணம் என்ன?

வள்ளற் பெருமான் இராமலிங்க அடிகள் 'காவி நிறம் யுத்தத்தின் அறிகுறி; அதனால் வெள்ளையுடை பூண்டோம்' எனத் துறவியரிடையே தன்னை வேறுபடுத்தி ஜீவகாருண்ய சன்மார்க்க ஒளி நெறியைப் பரப்பினார். 'கைகளை வீசி நடந்தால் ஆரவாரம் என்பதால், கைகளைக் கட்டிக் கொண்டோம்' என்றார். கைவீசி

நடந்தால் காற்றுக்கு வலிக்குமே எனக் கைகளைக் கட்டிக் கொண்ட அருளாளர் வள்ளலார்.

'எத்துணையும் பேதமுறாது
எவ்வுயிரும் தம்முயிர்போல் உள்ளே
ஒத்துரிமை செய்கின்ற'

உத்தமர்களால் சத்திய தருமச் சாலை கண்டவர். உயிர் அனைத்தையும் இரக்கமுடன் பாதுகாக்க 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடியவர்'. அவர் வைத்திருந்தது, ஆன்மீகப் பறவைகள் சரணாலயம். இன்று ஆன்மீகத்தின் பெயரால் மரணாலயம் அல்லவா 'மடம்' என்ற பெயரில் இருக்கிறது (?)


வங்கம் தந்த இராமகிருஷ்ண பரமஹம்சர்,

'சாது முறத்தின் தன்மை கொண்டவனாக இருத்தல் வேண்டும். சாரமானவற்றைப் பிடித்துக் கொண்டு உமியைப் பறக்க விடவேண்டும். நான் இருந்தேன்; அப்போது குரு இல்லை. இப்போது குரு இருக்கிறார். நான் இல்லை. அன்பின் தெரு மிகக் குறுகியது. அதில் இருவர் சேர்ந்து இருக்க முடியாது. எந்த உடம்பில் அன்பு இல்லையோ அதை மயானம் என்று அறி. கொல்லன் துருத்திப் போல அது மூச்சுவிடும்; உயிர் இருக்காது' எனக் கூறினார்.

வாழ்ந்து நெறி வகுத்த துறவிகள் நிலை இன்று என்னவாயிற்று? 'மைபொதி விளக்கே அன்ன மனத்தினுள் கருப்பு வைத்துப் பொய்த்தவ வேடங்கொண்டு புகுந்த முத்தநாதர்கள்' சேக்கிழார் பெரிய புராணத்தில் இடம் பெற்றதைப் போல, இனிப் புதிதாகப் 'பெரியவாள்' புராணத்திலும் பாடப் பெறலாம்.

ஜனவரி 2005

தொகுத்தல் விகாரம்



பிச்சைக்காரனின் குழந்தைகூட கை ஏந்திக் கொண்டு பிறப்பதில்லை. எல்லாக் குழந்தைகளும் கை மூடிக் கொண்டு தான் பிறக்கின்றன. இறக்கும் போது மனிதன் கையை விரித்துக் கொண்டே முடிந்து போகிறான். வழங்கத்தான் இவ்வுலகிற்கு வந்தோம். வழங்கி முடித்து விட்டுத்தான் விடைபெறுகிறோம். மரங்கள் கூட ஆக்ஸிசன் வழங்கி, நம்மிலிருந்து வெளியேறும் கரிவாயுவைச் சுவாசத்திற்கு எடுத்துக் கொள்கின்றன. ஆனால் மனிதன்..? வழங்குவது மதிப்புப் பெறுகிறது. 'நீ வைத்திருக்கும் பொருளை விட, வழங்கும் பொருளுக்குத் தான் மதிப்பு அதிகம்' என்றார் நபிகள் நாயகம் (ஸல்)

உங்கள் சட்டைப் பையில் ஒரு இரண்டு ரூபாய்த் தாள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். காலையிலிருந்து இரவு

படுக்கைக்குச் செல்லும் வரை அதனை நீங்கள் வெளியிலே எடுக்கவில்லை. அந்நிலையில் அந்த இரண்டு ரூபாய்க்குக் காகித மதிப்புக் கூட இல்லை. மாறாக அந்த இரண்டு ரூபாயைக் கொடுத்துக் காலையில் ஒரு தேனீர் அருந்துகிறீர்கள் என்று கொள்வோம். உங்களுக்கு இரண்டு ரூபாய் பெறுமதியுள்ள தேனீர் கிடைத்து விட்டது. தேனீர்க்கடைக் காரருக்கு இரண்டு ரூபாய் கிடைத்து விட்டது. தேனீர்க்கடைக்காரர் அந்த இரண்டு ரூபாயைக் கொடுத்து பூ வாங்குகிறார். பூக்காரிக்கு இரண்டு ரூபாய் கிடைத்து விட்டது. தேனீர் கடைக்காரருக்கு இரண்டு ரூபாய்க்குரிய பூ கிடைத்து விட்டது. இப்படியே அந்த இரண்டு ரூபாய் இரவுக்குள் 100 கை மாறுகிறது. மொத்தமாக அந்த இரண்டு ரூபாய் அன்று 200 ரூபாய் மதிப்புள்ள பொருளை வாங்கி யுள்ளது. எத்தனை கை மாறிச் செல்கிறதோ, அவ்வளவு மதிப்பை 2 ரூபாய் ஈட்டிவிடுகிறது. செல்லச் செல்லத்தான் பொருளுக்கு மதிப்பு. அதனாலேயே அதற்குச் 'செல்வம்' என்று முன்னோர்கள் பெயர் சூட்டினார்கள் போலும்.

செல்வம் தண்ணீரைப் போல் ஓரிடத்திலேயே தேங்கினால் என்ன ஆகும்? நாறும். பாசி படரும். இரத்தம் குடிக்கும் கொசுக்களை உற்பத்தி செய்யும். ஊருணி, உள்ளூர் பழுத்த பழமரம், எல்லாப் பாகங்களும் பயன்படும் மருந்துமரம் எனச் செல்வம் பொதுவாக. பயன்படுவதாக, எல்லோரும் பயன்பட ஏற்றதாக, பொருளின் எல்லா வகைகளும் வேர்மட்டம் முதல் மேல்மட்டம் வரை வீணின்றி உபயோகப்படுவதாக அமைதல் வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து.

'ஊருணி நீர் நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு'

'பயன்மரம் உள்ளூர் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கட் படின்'

'மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்'

செல்வம் பொதுவானதாக அமைவது சமூக ஆரோக் கியத்திற்கு நல்லது என்பதே திருக்குறளின் உட்கிடை. 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல், நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' என்பது வள்ளுவர் காட்டிய பொருள் நெறி.

உரத்தை எடுத்து ஒரே செடிக்குக் கீழே வைத்தால் வைத்த உரம், செடியை வளர்க்காது. சாகடித்து விடும். பொருளும் ஒரே இடத்தில் சேர்வது வாழ்வுப் பயிரை அழித்துவிடும். உரம் தோட்டம் முழுக்கப் பரவினால் எல்லாச் செடிகளும் வாழும். வளரும். கால்பந்து, கூடைப்பந்து விளையாட்டு எப்போது சுவாரசியம் பெறுகிறது? ஒருவரை விட்டு மற்றொருவருக்கு மாறி மாறிச் செல்லுகையில் தான்.

செல்வம் வெறும் பணத்தை மட்டும் குறிக்கும் சொல் அல்ல. அனைத்து இயற்கை வளங்களையும் சேர்த்துத்தான் குறிக்கிறது. இரத்தம் இதயத்துள் அடங்கிவிட்டால் என்ன ஆகும்?

"Appolexy in the Heart
Anaemia in the Part"

என்கிறது மருத்துவ விஞ்ஞானம். செல்வம் மூச்சுப் போல. எவனிடம் வந்து சேர்ந்ததோ அவனே வைத்திருக்க முடியாது. அது இயற்கை. இந்த இயற்கைக்கு முரணாக எவ்வளவு சேர்க்கிறார்கள்? 'தொகுத்தல் விகாரம்' இலக்கணத்திற்கு மட்டுமல்ல, பொருளாதாரத்திற்கும் சேர்த்துத்தான். இவர்களைப் பார்த்து நிலம் சிரிக்கிறது.

ஆள் அல்ல நாம். மரணம் கிழிக்கிற தேதித் தாள் தான் நாம். ஆனால் சிலர் அவசரப்பட்டு மரணத்திற்கு முந்தித் தங்களையே கிழித்துக் கொள்கிறார்கள். சாவு என்னும் சாந்தி முகூர்த்த அழைப்பிதழ் கவர் தான் ஒவ்வொரு நாளும். முனைகளில் விடியல், அந்தி என மஞ்சள் தடவிக் கவர் வந்து கொண்டே இருக்கிறது. அதீதமாகப் பலர் எடுக்கும் நல நடவடிக்கைகளைக் கண்டு சாவும் சிரிக்கிறது. பாதுகாப்புக் குறைபாட்டால் இராஜீவ் காந்தி மரணம், பாதுகாவலர்களால் இந்திரா காந்தி மரணம், வாய்க்கரிசி பொய்ப்பல் காட்டி மரணம் சிரிக்கிறது.

மேற்குறித்த இருமுக அம்சங்களை, சமஸ்கிருத கவிஞர் யசோவர்மன்


"Earth mocks the man
who buries wealth
Death laughs at him
who guards his health.
The secret mocking of
a faithless wife
who laughs to see her
husband loving her son"

சோரம் போன மனைவி ஒருத்தி. அவள் கள்ளக் காதலனுக்குப் பிறந்த பிள்ளையைக் கணவன் தன் பிள்ளையெனக் கருதிக் கொஞ்சுகிறான். அவனைப் பார்த்து இரகசியமாகக் கேலியாகச் சிரிக்கிறாள் அவள். அது போலவே செல்வத்தைத் தனக்கே உரியது எனப் பதுக்கி வைப்பவனைப் பார்த்து உலகம் கேலியாகப் பார்க்கிறதாம். அதே போலப் பொத்தி பொத்தி ஆரோக்கியத்தைப் பேண அதி தீவிர முயற்சிகள் மேற்கொள்ளு பவனைப் பார்த்து மரணம் சிரிக்கிறதாம்.

எத்துணை சத்தியமானவை சோவர்மன் வார்த்தைகள்! தனக்குரியது அல்லாததைத் தனக்குரியதாக எண்ணிப் புதைக்கும் பதுக்கும் மனிதனைக் கண்டு நிலம் கேலியாகச் சிரித்த சிரிப்பு எத்தகையது? நொடிக்கு நொடி வற்றிக் கொண்டிருக்கும் மனிதன், மரணத்தை வெல்ல, மாத்திரைப் படையெடுப்பு நிகழ்த்தும் போது, மரணம் சிரித்த சிரிப்பு எத்தகையது? இரண்டும் ஒருசேர ஒரே உவமையில் சொல்லக் கவிஞனை விட்டால் வேறு கதி ஏது?

பிப்ரவரி 2005

கூண்டும் கூடும்



இதற்குத் தான் என வயிற்றைக் காட்டி ஆடும் காபரே நடனக்காரி; அயல் மகரந்த சேர்க்கை ஆனாலும், டயல் மகரந்த சேர்க்கைக்கு ஆட்படும் "Call Girls" என்ற தொலைவேசிகள்; அங்கம் பகிரங்கம் (பகிர் அங்கம்) ஆக்கும் திரையில் தான் துணியிருக்கிறதே என முக்கால் நிர்வாணமாக வரும் 'முக்கா புலால்' நடிகைகள். இப்படிச் சதைச் சந்தைச் சரக்காக்கி மலினப்படுத்தப் படுகிறார்கள் பெண்கள். பம்பரத்திற்குச் சாட்டை சுற்றப்படுவது போல உடையோடு வந்து, அடுத்த நொடியே அத்தனையும் உரியப் பெற்று ஆடுகிற பெண்கள் துணி விளம் பரங்களில். ஆம் சாதனங்கள் துச்சாதனங்கள் ஆகி விட்டன. கசாப்புக்கடைக் கோழிகள் போல, கடைகளில் பத்திரிகைகள் தொங்கு கின்றன. மங்கல இதழ்கள் கூட மஞ்சளாகி

விட்டன. ஆபாச சுவரொட்டிகளை மேயும் நகரத்து மாடுகள் அதிகம் பால் தருகின்றன. போஸ்டர்கள் பாலுணர்ச்சியைத் தூண்டும் காரணத்தால். உள்ளுக்குள் மட்டுமே ஆடை கட்டிக் கொண்டிருக்கும் மெழுகுத் திரிகளைப் போல, அழகிப் போட்டிகளில் கவர்ச்சி வீசும் மெழுகுப் பொம்மைகள். இப்படி நொடிக்கு நொடி நாகரிகம் பிறந்த மேனியாக 'ஹேப்பி பர்த்டே' கொண்டாடிப் பண்பாட்டுக் கேக்கை வெட்டித் தள்ளிக் கொண்டிருக்கிறது. இப்படி நுகர்வுக் கலாச்சாரம் கட்டவிழ்க்கும் சுதந்தரம் ஒரு பக்கம்.

கூடாக இருக்க வேண்டிய குடும்பம் கூண்டாக மாறப் பெண்ணடிமைத்தனம் மறுபக்கம். புழுதிக் காற்றால் சில வேளை தும்மல் வருகிறதே என்று மூச்சையே நிறுத்தும் முயற்சிகளாகச் சம்பிரதாயங்கள், சடங்குகள். இவை சதங்கைளின் வடிவத் திலிருக்கும் விலங்குகள். அம்மிக் கொத்துக்களாக்கப்பட்டுள்ள அருந்ததி நட்சத்திரங்கள். சமூகக் கால்களால் மிதிபட்டும், அரைபட்டும், கற்பு, ஒழுக்கம், மானம் என்பவை பெண்பால் சொற்களாக்கப்பட்ட ஆணாதிக்க அகராதிகள் மறுபுறம்.

அடிமை இந்தியாவில் விடுதலைக் கனவுகளை விதைத்தவர் இரவீந்திரநாத் தாகூர். நார்களால் கழுத்திறுக்கப்பட்ட நிலை யிலும் பொய்யாகச் சிரிக்கும் பூக்களாகப் பெண்களைப் பார்க்கிறார். சுதந்தர உரிமை உணர்வைப் பெண்ணாகக் கண்டு பாடும் மரபுக்கு முன்னோர் பூட்டியவர் அவர். சலுகைகளால் உரிமைகளை இழப்பது தெரியாமலேயே வாடும் நாடும் பெண்ணும் ஒன்று தான். சீட்டை எவனுக்கோ எடுத்துக் கொடுத்து விட்டு, சில்லறையை வேறு எவனுக்கோ சேர்த்து விட்டு, சின்னச் சின்ன நெல்மணிகளைப் பெற்றுக் கொண்டு, மீண்டும் கூண்டுக்குள் செல்லும் சோதிடக் கிளிகளாக நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். கூண்டை விட்டு வெளிவரக் கிடைத்த வாய்ப்பினைப் பெற்ற கிளிக்குச் சுதந்தரமாய்ப் பறக்கக் கிடைத்த வானமும் தெரியவில்லை. சிறகுகள் இருப்பதே மறந்து மரத்து விட்டது. இரண்டு கிளிகள் பேசுவதாகத் தாகூர் பாடுகிறார்:

பழக்கப்படுத்தப்பட்ட கிளிக் கூண்டில்;
சுதந்தரக் கிளியோ காட்டில்;
சந்திப்பு வேளை வந்தது; விதிவசத்தால்
காட்டுக்கிளி அழுது கூண்டுக் கிளியை
அழைக்கிறது:
'என் அன்பே வா காட்டுக்குப் பறந்து
செல்லலாம்,
கூண்டுக்கிளி மெல்ல முணுமுணுக்கிறது:

‘நீ கூண்டுக்கு வா. இருவரும் ஒன்றாக
வசிக்கலாம்’
சுதந்தரக் கிளி சொல்கிறது:
‘கூண்டுக் கம்பிகளுக்குள் சிறகு விரிக்க
இடம் ஏது?’
கூண்டுக்கிளி அலறுகிறது :

‘ஐயோ சிறகு விரித்து வானில் எங்கு அமர்வது
என எனக்குத் தெரியாதே?’
சுதந்தரக் கிளி சொல்கிறது :
‘அன்பே! கானகப் பிரதேசக் கானங்களைப்
பாடலாம் வா’
கூண்டுக்கிளி கூறுகிறது :
‘என்னருகே உட்கார், கற்றவர்களின் பேச்சை
உனக்குக் கற்றுத் தருகிறேன்’
காட்டுக்கிளி கதறுகிறது:
‘இல்லை !இல்லை ! பாடல்களைக் கற்றுத் தர முடியாது’

கூண்டுக்கிளி குழறியது :

‘கானகப் பாடல்கள் எனக்குத் தெரியாது’.

அந்தக் கிளிகளின் காதல் அடர்ந்து ஆழப்படலாயிற்று. ஆனால் அவற்றால் ஒன்றிணைந்து சிறகடித்துப் பறக்க முடியவில்லை. கூண்டுக் கம்பிகளுக்கிடையே அவை பார்த்த போதிலும், ஒன்றை ஒன்று அறியும் ஆசை வீணாயிற்று; ஏக்கத்தில் இரண்டும் சிறகடித்துப் பாடின:

‘நெருங்கி வா என் அன்பே!’

சுதந்தரக் கிளி அழுதது: ‘என்னால் இயலாது. பூட்டப்பட்ட கூண்டுக் கதவுகள் எனக்கு அச்சமூட்டுகின்றன’ கூண்டுக்கிளி முணுமுணுக்கிறது :


‘அந்தோ! என் சிறகுகள் வலுவிழந்து, இறந்து விட்டன’

முன்னோர்கள் வாழ்க்கை பழுத்த மரம். பறவைகள் கிளைகளில் கூடு கட்டி வாழ்ந்தன. இயற்கையான வாழ்வு சாத்தியமாயிருந்தது. கால ஓட்டத்தில் மனிதர்கள் கூடுகளுக்காகக் கிளை தந்த மரத்திலிருந்தே கூண்டுகளைத் தயாரிக்கலாயினர். வாழ்வு வசிப்பாயிற்று. வெறும் இருப்பாய்த் தேயலாயிற்று. சொந்தப் பாடல்களை மறந்து, திணிக்கப்பட்ட, முறைப்படுத்தப் பட்ட சப்தங்களைச் சங்கீதமாக வாந்தியெடுக்கத் தலைப்பட்டனர். அடிமைக் கிளிகளுக்குத் தங்கக் கூண்டுகள் பாதுகாப்பாக இருக்கலாம். வேளைக்குப் பழமும் கிடைக்கலாம். அதர அரிதார

மொழிகள் கற்றுத் தரப்படலாம். காலஞ் செல்லச் செல்ல சொந்த வார்த்தைகள் நெஞ்சுக்குள் சிறைப்பட, கட்டப் பெற்ற பல்வரிசையால் போலிப் புன்னகை பூக்கலாம். சுதந்தரக் கிளிகட்கு விரும்பிய கிளையில் கூடு அமையலாம். பாதுகாப்பு அம்சம் குறைவு தான். ஆனாலும் மரபுப் பாடல்களாயில்லாமல் தாய் இசையை இசைக்கலாம். காற்றோடு கலந்து பாடலாம். கிடைத்ததை உண்ணலாம். சில வேளை கிடைக்காமல் போகலாம். ஆனால் சுதந்தரமும் கால வெள்ளத்தில் மாறிக் கட்டுப்பாடற்ற சுதந்தரமாகி விடுவதும் யதார்த்தமாகி விட்டது. சுதந்தரத்தின் அடையாளமான தேசியக் கொடி கூட ஒரு கயிற்றில் கட்டப் பட்டுத் தான் பறக்கிறது என்பது சுதந்தரக் கிளிகட்குத் தெரிய வேண்டும். அடிமைக் கிளிகள் மறந்து போன, கொத்தும் அலகுகளைக் கூர்மையாக்கிக் கூண்டுகளை உடைக்க வேண்டும்.

மார்ச் 2005

வெள்ளைக் குயில்



அம்ரிதா ப்ரீதம், அஞ்சு நதி பாயும் பஞ்சாபின் ஆறாம் நதி. கவிதை நதி. வாழ்க்கையைக் கவிதையாகக் கூடுவிட்டுக் கூடு பாய்ந்தவர். அவர் தன் வரலாற்றை Revenue Stamp என்ற தலைப்பில் வெளியிட்டார். புகழ்பெற்ற எழுத்தாளர் குஷ்வந்த் சிங் அந்நூலுக்குப் பெயர் சூட்டி விட்டு "உன் வாழ்க்கையைப் பேரேடுகளில் எழுத வேண்டியதில்லை. ஒரு ரெவின்யூ ஸ்டாம்பில் எழுதிவிடும் அளவில்தான் ஓரிரண்டு நிகழ்ச்சிகளில் அடங்கிவிடும் உன் சரிதம்" என்று அங்கதமாகக் குறிப்பிட்டார். அதற்கு அம்ரிதா "ரெவின்யூ ஸ்டாம்ப்" என்ற பெயர் பொருத்தம் தான். மற்ற அஞ்சல் தலைகள் வெவ்வேறு வடிவங்களில் இருக்கும். ஆனால் வருவாய் அஞ்சல் தலை ஒரே வடிவில் தான் இருக்கும். என் வாழ்வும் அப்படித்தான். மேலும் மற்ற தலைகட்கு வேறு வேறு விலை. ரெவின்யூ

ஸ்டாம்ப் ஒரே விலையில் தான். முத்திரைக் குத்துகளை வாங்கிக் கொண்டு மற்றவர்கட்கு வருவாய் வாங்கித் தரும் ரெவின்யூ ஸ்டாம்பும் நானும் ஒன்று தான்" என்று நூலின் வாசல் வரிகளில் குறிப்பிடுகின்றார்.

உலகப் புரட்சிகளின் கருவறையான சோவியத் பூமிக்குச் சென்ற தன் கவிதைப் பயணத்தில் இரு நிகழ்வுகளைப் பதிவு செய்கிறார் அவர்.

'கார்க்கி தெருவின் உணவு விடுதிக்கு நேர் எதிரில் மாயாகோவ்ஸ்கி சிலை நின்று கொண்டிருந்தது. அங்குதான் நான் தங்கியிருந்தேன். ஒரு நாள் இரவு 10 மணி இருக்கும். அறையின் ஜன்னலைத் திறந்தேன். அந்தக் கவிஞன் சிலையைச் சுற்றிக் கூட்டம் கூட்டமாய்ச் சிலர் நின்று கொண்டிருந்தார்கள். அது பற்றிச் சிலரிடம் கேட்டேன். இளைய ருஷ்யக் கவிஞர்கள் அடிக்கடி அந்தச் சிலையைச் சுற்றிக் கூடுவார்கள். மாயாகோவ்ஸ்கியின் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளைப் படிப்பதற்கோ தங்கள் கவிதைகளை அரங்கேற்றுவதற்கோ என்று எனக்குச் சொல்லப் பட்டது. சிலையைக் கடந்து செல்லும் வழிப்போக்கர் அங்கே நிற்பார்கள். அரங்கேறும் கவிதைகளையும் கேட்பார்கள். இந்தக் கவியிரவு அதிகாலை வரை கூட நீடிக்கும். சூழும் காற்றில் குளிர் ஏற ஏறத் தங்கள் கோட்டின் காலர்களைக் காதுகளை மறைக்கும்படி உயர்த்திக் கொண்டே கவிதை கேட்பார்கள். ஆவலை அடக்க முடியாத நானும் என் கோட்டுக்குள் புகுந்தேன் பாட்டுக்குள் புகுவதற்காக. அந்தக் கூட்டத்தில் நின்றேன். கவிதையின் அர்த்தம் எனக்குப் புரியாவிட்டாலும் நான் நின்றேன். ருஷ்யக் கவிதை மொழியின் கதகதப்பு என் ரத்த நாளங்களுக்குள் ஊடுவட்டும் என்பதற்காக' என்று எழுதுகிறார்.

''உலகின் வெவ்வேறு பகுதிகளில் இருந்து வந்த எழுத்தாளர்களின் கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்று மாலையில் நடந்தது. மனித மேம்பாட்டிற்கு எழுத்தாளர்கள் செய்யத்தக்கன பற்றிப் பேச வேண்டும். வியட்நாமியக் கவிஞர் சே-லின்-வின்ஹ் அனைவர் இதயத்தையும் தொட்டுவிட்டார். அவர் சொன்னார், போரால் கிழிக்கப்பட்ட தன் நாட்டுப் பாடல்களைப் பற்றி :

"ரத்த ஆறுகளில் எங்கள் கவிதை
மிதந்து கொண்டிருக்கிறது.
யுத்த ஆயுதங்களைப் பற்றிச்
சத்தமாகப் பேசிக் கொண்டிருக்கிறது.
ஒருநாள் வரும் உறுதியாக
நாங்களும் ஆறுகளில்
பூக்களைச் சொரியும் அந்த நாள் வரும்"

நாங்கள் எழுதும் கவிதைகள் களத்தில் நிற்கும் போர்முனை வீரர்களின் சட்டைப் பைக்குள் திணிக்கப்படுகின்றன;

அங்கு தான் அந்தக் கவிதைகள் பாதுகாப்பாக இருக்கும் என்ற தீவிர நம்பிக்கையில்.

கவிதைகள் பாதுகாக்கப்பட்டால் மொத்த மனித இனமே பாதுகாக்கப்படும் என்ற நிலையில் நாங்கள் வெற்றி பெற்று விட்டோம் என்று நினைக்கின்றோம்" என்றார். மாஸ்கோவில் பூமிக்குக் கீழே அணுக்குண்டாலும் அழிக்க முடியாத அறை ஒன்றை ருஷ்யர்கள் கட்டியுள்ளார்கள். அதற்குள் அவர்கள் பொன்னையோ, பொருளையோ பாதுகாத்து வைக்கவில்லை. அந்த அறையில் உலகின் தலைசிறந்த நூல்களை வைத்துள்ளார்கள். உலகம் முழுவதும் அழிந்தாலும் இலக்கியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அவர்கள் ஈடுபாடும், அழிவிற்குப் பிறகு தோன்றும் உலகிற்கு வழிகாட்ட நூல்களே உதவும் என்ற நம்பிக்கையும், மெய்சிலிர்க்க வைக்கிறது. அந்த நூலகத்தின் முதல் நூல் திருக்குறள் என்று அறியும் போது மனதுக்குள் மழை விழுகிறது!

"ஒரு
வண்ணத்துப் பூச்சி
சுற்றிச் சுற்றி
அலைந்தது
இறுதியில்
சலித்து
ஒரு
மண்டை ஓட்டின் மீது
அமர்ந்தது"

என்ற வியட்நாமியக் கவிஞனின் 'எக்ஸ்ரே' படப்பிடிப்பு போரின் விளைவைப் புலப்படுத்துகிறது. போரில் அழிந்த பூமியில் பூமியின் அனைத்துப் புன்னகைகளும் வீழ்ந்து விட்டதைப் போல் பூக்கள் எல்லாம் பொசுங்கி விழுந்து விட்டன. பசித்த வண்ணத்துப் பூச்சி தேன் உணவு தேடி அலுத்து விட்டது.

மண்டை ஓட்டுப் பற்கள் ஏதோ ஒரு பூவின் பிரமையை வண்ணத்துப் பூச்சிகளுக்கு ஏற்படுத்தியிருக்க வேண்டும். வண்ணத்துப் பூச்சிகளின் சிறகுகள் ஒன்றோடொன்று மோதுகின்றனவா? இல்லை. சமாதானப் புறாக்களின் சிறகுகளால் வேயப்பட்ட வெள்ளை மாளிகையின் விஞ்ஞான விபரீதத்தைக் கைகொட்டிச் சிரிப்பதாகப்படுகிறது. மரணத்திற்கு மலர்வளையம் இல்லாவிட்டாலும் மலர்களை வளைத்து வலம் வந்த வண்ணத்துப் பூச்சி நஷ்ட ஈடாக ஆகிவிட்டது.

"ரெவின்யூ ஸ்டாம்ப்" முடிவடைகிற போது, அம்ரிதா பிரீதம், கெட்ட போரிலிருந்து,

'Can wounds be healed
I know not,
I only know lips are sealed'

என்ற ஃபைஸ் அகமது ஃபைஸின் கவிதையை மேற்கோள் காட்டுகிறார். இரத்தச் சொட்டுச் சொற்கள் காயங்களையும் வாய்களாகக் காட்டுகின்றன. 'காயங்கள் ஆறுமா என்று எனக்குத் தெரியாது, ஆனால் உதடுகள் பூட்டப் பெற்று முத்திரையிடப் பட்டுள்ளன என்பது மட்டும் எனக்குத் தெரியும்' என்பதில் ஃபைஸின் சோகம் காயம்பட்டதை விட, காயங்களுக்கான காரணம் சொல்லவும் முடியாத வேதனையே பெரிதெனக் காட்டுகிறது. ஆனால் அம்ரிதா நம்பிக்கையோடு தன் கவிதையைத் தருகிறார். போர் அச்சங்களிலிருந்து விடுதலையாகும் கனவு தரிசனத்தோடு விடைபெறுகிறார்.

**"வருங்காலத்தின் தாலாட்டுக்களை
எழுதுபவர் யார்?
அந்த
வசந்தத் தூதுவர்கள் யாரென்றறிய
பூமி செய்தியாளர்களை அனுப்பி வைத்தது.**

**அவர்கள் சொன்னார்கள் :
ஒளிக்கதிரின் கருப்பையில்
நம்பிக்கை
உறங்கிக் கிடக்கிறது.**

**கிழக்கு
தொட்டில் கட்டத் தயாராகிவிட்டது
அதன் தொட்டில் அந்தமற்றது**

**இரவு
சூரியனைச் சூலுற்றுள்ளது
பிரசவம் பார்க்கவிருக்கும்
பூமியெனும் செவிலி**

**"இரவு ஒரு போதும்
மலடாகக் கூடாது
ஈன்றெடுக்க இயலா வேதனை
எப்போதும் நிலவக் கூடாது"**

முடிவு விடிவாக இருக்க வேண்டும். உயிர்களின் மரண உறக்கம் கலைக்கும் உதயம் வர வேண்டும். சூரியனைப் பெற்றெடுக்க இதோ கிழக்கில் நிலவுப் பனிக்குடம் உடைய, நட்சத்திர வேர்வை துளிக்கத் துளிக்கச் சமாதான வெளிச்சம் பிரசவமாகிக் கொண்டிருக்கிறது.

ஏப்ரல் 2005

மூழகாமல் எடுத்த முத்துக்கள்



மனிதனுக்கும் அவன் புகைப்படத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன? புகைப்படம் வெளிச்சத்தில் கருவாகி, இருட்டில் பிரசவமாகிறது. மனிதன் இருட்டில் கருவாகி, வெளிச்சத்தில் பிரசவமாகிறான். இருட்டு என்பது துன்பம் தான். தண்ணீர்ப் பரப்பு அதிகமான பூமி போல, மனித வாழ்க்கையில் கண்ணீர்ப் பரப்புத் தான் மிகுந்திருக்கும். அவன் ஆனந்தம்கூடக் கண்ணீராகத் தான் வெளிப்படுகிறது. காற்றின் ரத்த நாளங்களாக விரிந்து கிடக்கிறது மரக்கிளை. அதனைத் தீண்டுகிறது தென்றல். காதலனின் கன்னித் தொடுகையில் சிலிர்க்கும் காதலி போலக் கிளைகளின் புல்லரிப்பாகப் பூக்கள் சிரிக்கின்றன. காற்றின் தழுவலில் மகிழ்ந்தன கிளைகள், ஆனால் வேர்கள் புழுக்கத்தில்.

வெளியே
பழத்தின் அழகைப்
புகழ்கிறார்கள்
உள்ளே வண்டின் குடைச்சலை
யார் அறிவார்?

என்பது கவிஞர் அபியின் பழைய கவிதை. எந்தப் படைப்பின் விதை மூலத்திலும் ஒரு வேதனை இருக்கும். கழுத்தில் நாரின் சுருக்கு இறுக்கினாலும், சிரிக்கும் வாய்ப்பு, தாவரம் பெற்ற பூவரம். படைப்பவனும் அப்படித்தான். வாழ்வு ஒரு பக்கம் கிழிக்கிறது. வறுமை ஒரு பக்கம் குதறுகிறது. குடும்பம் ஒரு பக்கம் கீறுகிறது. ஊசி கிழித்துக் கொண்டிருந்தாலும் இன்னிசை வழங்கும் இசைத்தட்டாகவே கலைஞன் இருக்கின்றான். நகராட்சி தண்ணீர் லாரிக்கு முன் ஒரு குடத்தோடு காத்திருக்கும் வானம் கவிஞன் என வாழ்க்கை அவனை மாற்றிப் போட்டு விடுகிறது.

ஒரு கண்ணில் தூசி விழுந்து உறுத்தும் போது, தூசி விழுந்த கண்ணில் கண்ணீர் துளிர்க்கிறது. ஆனால் அருகிருக்கும் இன்னொரு கண்ணோ கண்ணீர் வடிப்பதில்லை. மாறாக உடம்பில் எந்தப் பகுதியில் அடிப்பட்டாலும், அடிபட்ட இடத் திலிருந்து இரத்தம் வருவதற்கு முன் கண்ணீர் முந்திக் கொண்டு சுரக்கிறது. கண்ணும் கண்ணும் ஒரு சாதி என்றாலும் கண்ணுக்கு அந்தக் கண்ணோட்டம் இல்லை. சார்பு இல்லை. ஆனால், சமூக தேகத்தின் எந்த இடம் பாதிப்படைந்தாலும் கவிஞனின் எழுது கோலில் ஈரம் சுரந்து விடுகிறது. மோப்பக் குழையும் அனிச்சம். முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து. அனிச்ச மலருக்கும், விருந்துக்கும் சொந்தப் பாதிப்பினால் குழைவு. எழுத்தாளனுக்கோ எந்தப் பாதிப்புக்கும் உருகும் இமய இதயம்.

படைப்பாளன் பேனாவோ, வேறு குழந்தையின் விசும்பலுக்கும் தாய்ப்பால் சொரிகிறது.

Sweetest songs are those that tell us saddest thoughts.

என்ற கீட்ஸின் வார்த்தையை, கவிஞன் ஊடாக நுழைந்து எந்தச் சோகமும் ராகமாகிவிடுகிறது, என்று மாற்றினாலும் பொருத்தம் தான். கரும்பின் இனிப்பை, உழவனின் வேர்வை உப்பும், கண்ணீர் உப்பும்தான் தீர்மானிக்கிறது.

இந்திய விடுதலை விளக்குக்குச் சிறையில் செக்கிழுத்து எண்ணெய் வார்த்த செம்மல் வ.உ.சி. அடிமைப்படுத்திய வெள்ளை யர்களை எதிர்த்து மண்ணில் மட்டுமல்லாது தண்ணீரிலும் போரிட்ட புலி. உப்புப் போட்டிருப்பதால் இடைவிடாது போராடும் கடலைப் போர்க்களமாக்கிச் சுதேசிக் கப்பலை ஓட்ட,

பங்குதாரர்களோடு இந்தியன் நேவிகேஷன் கம்பெனி (Indian Navigation Company) தொடங்கினார். மூவண்ணக் கொடி விண்ணில் தென்பட்ட வெள்ளை மேகத் தூசியைத் துடைத்தெறியத் துடித்த வண்ணம் பறக்கப் பறக்க சுதேசிக் கப்பல் ஓடத் தொடங்கியது. பொறாத வெள்ளையர்கள் வ.உ.சி.யைச் சிறைப்படுத்தினர். இரட்டை ஆயுள் தண்டனை விதித்து ஆங்கில ஏகாதிபத்திய நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது. அரசின் அச்சுறுத்தலை எதிர்க்கும் திண்ணிய நெஞ்சுரம் இந்தியன் நேவிகேஷன் கம்பெனிப் பங்குதாரர்களுக்கு இல்லை. யாருக்கு எதிராகக் கப்பல் ஓட்டப் பட்டதோ அந்த ஆங்கில ஆட்சியாளர்களிடமே சுதேசிக் கப்பலை விற்றுவிட்டார்கள். பாவம் பங்கு தாரர்கள், ஆதிக்க புரியை அடியோடு சாய்க்க எழுந்த சுதந்தரப் புயற் காற்றைச் சுருக்கி, பரங்கியரின் கால்பந்துக்குக் காற்றாக்கிக் காவு கொடுத்து விட்டார்கள். சோமாறிகள் செயல் தீமாரியாகிச் சிறையிருந்த செம்மலின் நெஞ்சைச் சுட்டது. தேசிய விடுதலை வீரரான வஉசி யின் இலட்சிய முகம் அறிவோம். இலக்கிய முகம் அதிகம் அறியோம். துயர் அடரும் கப்பல் விற்பனை அவரைத் தீயாக்கியது. காயத்தை வரியாக்கியது. நண்பர்க்கு எழுதிய கடிதம் ஒன்றில் வஉசி. சுதேசிக் கப்பலை, ஆங்கிலேயர்க்கே விற்றது பற்றி–

'கற்பழித்தவனுக்கே பெண்ணைக் கட்டிக் கொடுத்து விட்டார்களே!' என்று குறிப்பிட்டுக் கலங்குகிறார். மானம் கப்பலேறி விட்டது என்பதற்கு இப்போதுதான் விளக்கம் கிடைத் திருக்கிறது. வெள்ளை ஆதிக்க விதவை உடை மாற்றி, சுதந்தரச் சுமங்கலிச் சேலையாக, மூவண்ண முகூர்த்தப்பட்டுடுத்தினான் பாரதி. காயங்களை ரத்தத் தமிழாக்கி, விதவை நெற்றிக்குக் குங்குமச் சிமிழாக்கி வழங்கிவிட்டார் வஉசி.

சமூகம் கலைஞனை ரணமாக்குகிறது. அதையே அவன் ஆபரணமாக்கிவிடுகிறான். கவிஞர் ஹென்ரிச் ஹெய்னே (Heinrich Heine) இதே கருத்தை அற்புதச் சிற்பமாக்கி,

'The Artist is the Child in the Popular fable

every one of whose tears was a pearl.

Ah! the world that cruel step-mother beats the poor child

the harder to make him shed more pearls'

எனக் குறிப்பிடுகின்றார்.


பிரபலமான நீக்ரோ கதைகளில் வரும் குழந்தையைப் போன்றவன் கலைஞன். அந்தக் குழந்தையின் ஒவ்வொரு கண்ணீர்த் துளியும் முத்தாகவே இருந்தது. ஐயோ இந்த உலகம்

என்னும் சிற்றன்னை, ஓங்கிப் பலமாக அடிக்கிறாள் அந்தக் குழந்தை தன் இமைச் சிப்பியிலிருந்து இன்னும் இன்னும் முத்துக்களை உதிர்க்கட்டும் என்று'

மண் துணுக்கு சிப்பிக்குள் விழும்; அதைச் சுற்றி ஒரு கூழ் திரவம் திரளும். பின்னர் அதுவே முத்தாக மாறும் என விலங்கியல் சொல்கிறது. மண்ணில் துணுக்குறச் செய்யும் நிகழ்வு கலைஞனுக்குள் ஒரு மாயம் செய்கிறது. உறுத்தலும், நெருடலும், அவனுக்குள் திரளும் மனித நேயக் கூழில் தோய்கிறது. சமூகத்திற்கு ஒரு முத்து கிடைத்து விடுகிறது. சமூகக் கொடுமைகள் சிற்றன்னை என்ற செறிவான குறியீட்டில் செதுக்கப்பட்டுள்ளன. அழுத்தங்கள் நிலத்தடிக் கரியை வைரமாக்கி விடுவதைப் போன்றுதான், ஒடுக்குமுறைகள் கரிந்த நொடிகளைக் கந்தக வெடிகளாக்கி விடுவதும் உண்டு. காலமாகாத வைரங்கள் ஆக்கி விடுவதுமுண்டு. கொந்தளிப்பு அலைகள் அடிக்க அடிக்கக் கவிஞனே சிப்பியாகி விடுகிறான். முழுகாமல் சமூகம் முத்தெடுத்துக் கொள்கிறது.

மே 2005

தடைக்கற்கள் அல்ல எடைக்கற்கள்



மண்ணெல்லாம் உடல்கள்; கண்ணெல்லாம் கடல்கள். இது சுனாமி கிழித்துப் போட்ட மனித சரித்திரம். தன்னிடம் பால்குடித்த பிள்ளைகளையே குடித்து விட்ட பூதகி மார்பாய் விம்மியது ஆழிப் பேரலை. வலை வீசிய மனிதரை அலைவீசி மரணம் ஏன் வாய்க்கரிசியாகப் போட்டுக் கொண்டுவிட்டது? காற்று வாங்கிய கடனுக்காக மூச்சையே வாங்கி ஜல ஜப்தி நிகழ்ந்து விட்டது. கரைக்கு வந்த கடல் கண்ணுக்குள் முத்துக் குளித்தது. சிறுபிள்ளைகள் வைத்து விளையாடும் செப்புச் சட்டிப் பானைகளாக மீனவர் கிராமங்கள், மனிதர்கள் மரப் பாச்சிகளாக, பனைமரங் களைக் கிலுகிலுப்பை ஆக்கியது தண்ணீர்ப் புயல். அடுக்கு மாடிக் கட்டடங்கள் நொடியில் மண்மேடாகி விட்டன. கம்பீரக் கப்பல்கள் உடைந்து ‘தூள்தூள்’ ஆகிவிட்டன. கடல்

யானை புகுந்து நாசமாகிச் சாய்ந்து விட்ட கரும்புக் காடுகள் போல் வீடுகள், குடிசைகள் - இதயத்தில் ஆணியடித்து என்றும் தொங்கும் சோகச் சித்திரங்களாக அசைகின்றன.

800 கிமீ வேகத்தில் காற்றும் அலையும் கலந்தடித்த துக்க நொடிகளை உயிர்த் ததும்பப் படம் பிடித்தன கேமராக்கள். அப்படங்களில் அகிலத்தின் அனைத்து வலைத் தளங்களிலும், இணைய தளங்களிலும், பத்திரிகைகளின் அட்டைப் படங்களிலும் இடம்பெற்ற ஒரு படம் குமரிமுனை விவேகாநந்தர் பாறையில் 133 அடி உயரத்தில் நிற்கும் திருவள்ளுவர் சிலையாகும். சிலைமீது மோதும் காட்சி, 21 ஆம் நூற்றாண்டின் இணையற்ற அதிசயமாகப் பேசப்படுகிறது.

விண்முட்டும் கட்டடங்களை வீழ்த்திய ஆழிப்பேரலை வள்ளுவரின் காலடிகளைக் கழுவ முடிந்ததே தவிர, வீழ்த்த முடியவில்லை. கடற்கோளால் வள்ளுவரைக் கவிழ்க்க முடிய வில்லை. தமிழகத்தின் தலைசிறந்த சிற்பியாம் கணபதி அவர்களைத் தேடி வெளிநாட்டுக் கட்டுமானப் பொறியாளர்கள் படை யெடுக்கிறார்கள். தமிழ்ச் சிற்பியின் உளிச் சத்தத்திற்கு முன் கடல் இரைச்சல் துளிச் சப்தமாகிக் கை கட்டி நிற்கிறது. கடலே ஒரு அலையாகி, புயலைக் குதிரையாக்கி மோதினாலும் வள்ளுவர் நிற்கிறார். ஆமாம் 'நிற்க அதற்கு தக' என்று எழுதியவர் அல்லவா!

இரண்டு சரிவுகளின் உச்சியில் தான் சிகரம் நிற்கிறது. ஆனால் நுரைமன இளைஞர் நொடியில் நொறுங்கிப் போகிறார்கள். சரிவுகளுக்கு அப்புறம் போகலாம். சறுக்கல்களுக்கே சமாதிதான் விடிவு எனச் சாவைத் தேர்ந்தெடுக்கிறார்கள். கொளுத்தப்படும் கொசுவர்த்தியைக் கொறித்தபடி கொசுக் கூட சங்கீதம் பாடிக் கொண்டிருக்கிறது. இளைஞர்கள் வாழ்வின் அமுதக் கோப்பை களை உடைத்து விட்டு, விரக்தி விஷத்தை அருந்துகிறார்கள்.

"தன்னம்பிக்கை உள்ளவன் காலங்கள் செல்வமா கின்றன. தன்னம்பிக்கையில்லாதவன் செல்வங்கள் காலமாகின்றன"

என்ற பால பாடம் மறந்து பரிதாபமாக அலைகிறார்கள். விரும்பியது கிடைக்காவிட்டால், கிடைத்ததை விரும்பு என்று வாழ்வை நடத்தாமல், மனச்சுருக்கம் அடைந்து, நெடுங்கதையாக நீள வேண்டியதைச் சுருக்கெழுத்தாக நறுக்கி விடுகிறார்கள். வாழ்வின் சவால்களை, அறைகூவல்களை, மோதல்களை எப்படி எதிர்கொண்டு, வீழ்ச்சியடையாமல் இருக்க வேண்டும் என்பதை வள்ளுவர் சிலை நின்று காட்ட வில்லையா?

எந்த நேர்வையும் எதிர்கொள்ளும் மனப்பக்குவம் இளைஞர்களிடம் குறைந்து வருகிறதோ என ஐயுற வேண்டி யுள்ளது. தடைகள் அவர்களுக்குத் தளைகளாகி வருகின்றன. சிக்கல் வரும்போது சிலருக்குத் தோள்களில் சிறகு முளைக்கிறது. விழிகளே விளக்காகிவிட்டால் எந்த இருட்டுக்கும் அஞ்ச

வேண்டியதில்லை. துளைபடும் மூங்கிலே புல்லாங்குழல் ஆகிறது. அதிரும் தந்தியே சுரங்களைத் துயிலெழுப்புகின்றது.

இளைஞர்களுக்காக இராபர்ட் ஃபிராஸ்ட் (Robert Frost) 1916இல் எழுதிய கவிதை.

THE ROAD NOT TAKEN

'Two roads diverged in a yellow wood
And sorry I could not travel both,
And be one traveller, long I stood
And looked down one as far as I could
To where it bent in the underneath

Then took the other as just as far
And having perhaps the better claim
Because it was grassy and wanted wear
Though as for that the passing there
Had worn them really about the same.

இளைஞர்களுக்கு மட்டுமா எல்லோருக்கும் தான். 'இரண்டு பாதைகளில் எதனைத் தேர்வது? மஞ்சள் நிறக் கோட்டில் மயங்கி நிற்கிறேன். இரண்டிலும் பயணம் என்னால் இயலாது. ஒரு பயணியாக வழியில் நின்று பார்க்கிறேன். கண் எட்டும் தூரம் வரை காட்சியில் பாதை. எங்கு வளைகிறது? கீழிறக்கத்தில் எங்கெல்லாம் வளைவு, நெளிவுகள் என்பது தெரிகிறது. இன்னொன்றையும் பார்க்கிறேன்; நன்றாயிருக்கலாம் என்ற கருத்தில். அப்பாதை புல்லடர்ந்து கிடக்கிறது. பாதை தெரியாது மண்டிக் கிடக்கிறது.; அகற்றுதல் நாடி, பாதம் படப்படப் பாதை; புல் அகல அகல.

ஒரு வழி. போட்டு வைத்த பாதைப் பயணம் பாதுகாப்பாய் இருக்கலாம். எளிதாகவும் இருக்கலாம். சமூகம் கட்டமைத்தது இங்கு வளைய வேண்டும். இங்குத் திரும்ப வேண்டும் என வழிகாட்டும் பலகைகள் இருக்கலாம். புதுமைக்கோ, சுய முயற்சிக்கோ, சுய சிந்தனைக்கோ அந்தப் பாதையில் வாய்ப்புகள் இல்லை. வெட்டப்பட்டுக் கட்டப்பட்ட கால்வாய் நீராகத்தான் பயணம். விரைவில் அலுப்பு ஒரு காலாகவும், சலிப்பு ஒரு காலாகவும் ஆகி விடலாம்.

மற்றொரு பாதை வெயிலும், வெளிச்சமும் நுழையாதது. ஈப்புகுந்தால் இறகொடியும். இருள் நம் கண்பொத்திக் கண்ணாமூச்சி விளையாடும். இங்குப் பயணியே பாதை போடுபவன். சுதந்தரச் சுயேச்சையான முடிவுகள் தாம் கைவசம். வனாந்திர விலங்குகள் வழி மறிக்கலாம். முகத்திரை நீக்கிப் பார்க்கும் ஆவல் நகக் கண்களில் ததும்பும்.

சரித்திரம் ஞாபக முடிச்சில் வைத்துக் கொள்வது சாதனையாளர்களைத் தான். தடைக் கற்கள் தாம் நாளைய சமூகம்

உன்னை நிறுக்கும் எடைக் கற்கள். அடுத்தவன் போட்டு வைத்த நாற்காலிக்கு எந்த உத்தரவாதமும் இல்லை. சொந்தச் சிம்மாசனத்திலிருந்து எவனும் நம்மை இறக்கிவிட முடியாது. இளைஞனே சவால்களின் சங்கீதம் மூதாதைகளின் தாலாட்டை விட உன்னை வளர்க்கும். திறமையால் உன்னை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்து. வித்தியாசமாகச் சிந்தி. தடைகள் உனக்குள் தாண்டும் திறனின் ஊற்றுக்கண் திறக்கும்.


இறுதியில் ஃபிராஸ்ட் இரண்டில் எது என்பதை

"I shall be telling this with a sigh
somewhere ages and ages hence
Two roads diverged in a wood and I
I took the one less travelled by
And that has made the difference"

எனச் சொல்லிக் கவிதையை நிறைவு செய்கிறார். புதிய சாதனையால் உன் முகம் உன்னை அறிமுகம் செய்யும் பாதையே எப்போதும் சிறந்தது. மரணம் நோக்கி நகர்வதல்ல வாழ்க்கை. கணங்கள் தோறும் புதுப்புது அவதாரம். அவமானம், படுதோல்வி கூட்டும் வெப்பம் உன்னை அடைக்காக்கட்டும். முட்டை வெளியிலிருந்து உடைக்கப்பட்டால் மரணம். உள்ளுக்குள்ளிருந்து உடைந்தால் புதிய ஜனனம். ஓடு திற. உனக்கான கூட்டினை நீயே கட்டு.

ஜூன் 2005

துலா நிலா



நிலவுக்கும் காதலுக்கும் உள்ள நெருக்கம், கவிதைக்கும் கவிஞனுக்கும் உள்ள நெருக்கமாகும். காதல் ஓவியம் தீட்டும் தூரிகைகளுக்கு வட்டத் தளிகையே நிலாதான். எந்தக் காதல் கவிதைக்கும் முற்றுப்புள்ளி நிலாதான். காதல் வரிகளுக்கான மேற்கோள் குறிகளாக நிலவு இளம்பிறைகளை உற்பத்தி செய்து கொண்டேயிருக்கிறது. எல்லாக் காதல் கடிதங்களுக்கும் அஞ்சல் தலை நிலாதான். எல்லாக் காலங்களிலும், நிலவு பூமிக்குக் காதல் கடிதம் எழுதத் தொடங்கி எதுவும் நிறைவு தராததால் சலித்துக் கசக்கி எறிந்த காகிதத் துணுக்குகள் தான் நட்சத்திரங்கள். விளக்குகள் அனைத்தையும் அணைத்துவிடும் மன்மத சாம்ராஜ்யத்தில் அணைக்க விரும்பாத காதல் தேசத் தேசிய விளக்கும் நிலவு தான். தொடுவானம் இருக்குமிடம் என்றாலும் பூமி மேல் காதல் கொண்ட நிலா தொட்டதில்லை.

சூரியன் வானுக்கு வைத்த காதல் தேர்வில் வானம் வாங்கிய மதிப்பெண் பூஜ்யம். அந்தப் பூஜ்யம் நிலா. மேகப் பஞ்சு பொதிந்து விரித்த, நட்சத்திர மல்லிகைகளைத் தூவப்பட்ட மெத்தைக்கு அருகில் வைக்கப்பட்ட உலகின் முதல் இரவுப் பால் நிலா; விண்மீன் தேனீக்கள் வைத்த தேனடை. ஏக்கம் பிடித்துத் தூக்கம் பிடிக்காத அனைத்து இணைச் சிறகுகளும் சேரும் தோழமைச் சரணாலய ஒளிக் குளம் நிலா. சூரியன் அவன் ஆரியன். வெப்பம், வெளிச்சம் எனச் சடங்குகள் சொல்லி இணைகளைப் பிரிக்கிறான். ஆனால் நிலவு இரயில் வண்டிக் கார்டு கைவிளக்காக இறங்கி வந்தால், இணையாத இருப்புப் பாதைகளும் இணைந்து விடும். அதனால்தான், காதல் வாழ்வின் கடிமணத் தொடக்கத்தைத் தேனிலவென்று தெரிந்து வைத்தார்களோ? இறுதித் துளிவரை சுவைக்கும் என்பதால் தேனின் துளியும், வெண்ணிலா ஒளியும் அர்த்தநாரி ஆக்கி 'தேனிலவு' என்றார்கள் போலும்.

ஆண்பாலும், பெண்பாலும் அன்பால் கலக்கும் பால் காமத்துப் பால். அதை நூலின் கடைப்பாலாக வைத்தார் வள்ளுவர். 'கடைப்பால் எல்லாம் கலப்புப் பால் தானே' என்கிறார் கவிக்கோ. கறந்து தந்த கவிஞர்களிடையே, சுரந்து தந்தவர் வள்ளுவர். அவர் நிலவைத் தொட்ட அளவுக்கு எந்த ஆம்ஸ்ட்ராங்கும் இங்கே இல்லை.

> **“மலரன்ன கண்ணாள் முகமொத் தியாயின்**
> **பலர்காணத் தோன்றல் மதி”**

என்கிறான் வாசுகிக் காதலன். “மலர் போன்ற கண்ணை உடையவளாம் என்னை உடையவள் முகம் போல் நீ ஆக வேண்டுமானால் நிலவே, இப்படிப் பலர் காணும் படித் தோன்றாதே". அங்கம் 'பகிர் அங்கம்' ஆகாமல் ஒரு பர்தாவுக்குள் இரு; பர்த்தாவின் பார்வைக்கு மட்டும் தென்படு. அவன் காட்சிக்காக மட்டுமே இரு பாவையே. இமைகள் என்ற திரைக்குள் இருப்பது தான் 'பாவை'க்குப் பாதுகாப்பு' என்ற தீநெறி மாய்க்கும் தீன்* நெறியாம் இசுலாத்தின் கருத்தையே முன் மொழிந்திருக்கிறார் நம் முப்பாட்டன்.

களத்தில் வீழ்ந்து விட்டான் என அறிந்து, இராவணன் மனைவி மண்டோதரி ஓடி வருகிறாள். காட்சியைக் கவிதையாய் விரிக்கிறார் வடமொழிக் காவியர் வான்மீகி. போர்க்களத்தில் கண் மூடி விட்ட கணவன் இராவணனைப் பார்த்துக் கதறி மண்டோதரி

---

* மார்க்கம்

"என் பிரிய நாயகரே
ஏன்
ஏறெடுத்து
என்னைப் பார்க்கவில்லை?
சூரிய சந்திரர் பார்த்தறியாத
சுமங்கலி
உயர்குல
அரசகுலப்
பெண்ணான நான்
இப்படிப்
பலர்காண வந்து விட்டேனே என்று
வெகுண்டு தங்கள்
விழிகளை மூடிக்கொண்டு
விட்டீர்களா?"

என அரற்றுகிறாள். ஈதலறம் மட்டுமன்றிச் காதலறம் பாடிய வள்ளுவனின் வண்ணச் சித்திரத்திற்கும், வான்மீகியாரின் எண்ணச் சித்திரத்திற்கும் வான் நிலா விதானமானது விந்தைக்குரிய ஒற்றுமை.

வளர்வதும், தேய்வதும் வானிலாவுக்கு ஏன் வாய்த்தது? விடையை நயமாக விளம்புகிறது காஞ்சிப் புராணம்

"மறைந்தி டாமறுப் பயில்மதி
முகத்தெழில் பெறாது
குறைந்து பார்க்குமங் கரிவையார்
கோணுதல் கடுப்ப
நிறைந்து பார்க்குமீண் டவர்முகம்
நிகர்ப்பமற் றிவ்வா
றறைந்த திங்களே யலமரும்
அக்கரைப் பசுப்போல்"

பெண்களின் முகம் போலான முயன்று முடியாது, அவரின் நெற்றிப் போல் ஆகத் தேய்ந்து குறைந்து பார்க்கும் நிலவு. மீண்டும் அவர் முகம் போல் தோன்றி வளர்ந்து, நிறைந்து பார்க்கும். இப்படித் தேய்வதும், வளர்வதுமாகத் துன்புறும். காஞ்சிப் புராணப் புலவர் இப்படி முயலும் நிலவை, 'பயில்மதி' (கற்கும் நிலா) என்று குறிப்பதும், பெண்கள் முகமாக முடியாமல், நெற்றியாக முடியாமல் 'மறையாத மறு(மாசு)' பெற்று விளங்குவதாகக் குறிப்பதும் அசைபோட்டு மகிழத்தக்க சொல்லாட்சிகள் ஆகும். 'முராரி' என்ற வடமொழிக் கவிஞர், வள்ளுவர், காஞ்சிப் புராணப் புலவர் ஆகியோர் சிந்தனையை இன்னும் மெருகுபடுத்திக் கற்பனையை விரித்துச் சொல்கிறார்.

8

"The moon knows by
how much her beauty fails
weighed against yours
to bring the balance even
look, in a vain attempt
to turn the scales
she adds as make - weights
all stars of heaven"

"என்னவள் அழகைத் தன்னோடு
எடைபோட்டுத் துலாக்கோலைச்
சமப்படுத்த முயன்று
தோற்று விட்டது நிலா.
எப்படியேனும் சரிநிகராக வேண்டும்என
எண்ணிச்
சொர்க்கத்து நட்சத்திரங்களையும் எடைக் கற்களாகத்
தன்னோடு சேர்த்தடுக்கிய
வெண்ணிலவின் முயற்சி
வீணாகி விட்டது"

என்ற முராரியின் சிந்தனை, துலாக்கோலும் நிலாக்கோலாகச் சாய்ந்து விட்டதாகக் காட்டுகிறது. நட்சத்திரங்களை 'எடைக் கற்கள்' என்று குறிப்பிட்டிருப்பது எண்ணி மகிழத்தக்கதாகும்.

ஒரு 'பெண்ணைத்' தோற்கடிக்க, சந்திரன் கட்சி, பாலிவுட், கோலிவுட் நட்சத்திரங்களையும் சேர்த்துக் களமிறக்கிய போதும் வெல்ல முடியவில்லை. 'தாமரை'யிலைத் தண்ணீர்த் துளிகளைச் சூரிய விரல்களோடு கூடிய 'கை' ஒன்று சுத்தமாகத் துடைத்தெறிந்து விட்டதையும் மேற்குறித்த கற்காலக் கவிதை, தற்காலக் கவிதையாகிச் சுட்டுவதையும் 'கண்டு' களிக்கலாம்.

ஜூலை 2005

மைசூரில் தோற்ற மரணம்



ஆடி மழைச்சாரல், அமிழ்ந்துள்ளன விதைகள். மண்ணை விட்டு முளையாகக் கிளம்பும்போது விதை கைகுவித்துத் தாய் மண்ணைத் தலைவணங்கியே வளர்கிறது. நிமிர்கிறது. தெய்வங்கள் அனைத்தையும் பட்டியலிட்டுப் பாடிய பாரதியார் இராமன் பாட்டுப் பாடினாரில்லை. மாறாகக் கண்ணன் பாட்டுத்தான் பாடினார். காரணம் என்ன?

வெள்ளை ஏகாதிபத்தியத்திலிருந்து விலகி நாட்டு விடுதலையை நரம்புகளில் பாய்ச்சிய பாரதியார், உரிமையாய்ப் பெற்ற நாட்டை விட்டுக் கொடுத்து விட்டு வெளியேறிய இராமனைப் பாடாதது வியப்பில்லை. நாட்டைப் பறிகொடுத்து அடிமைப்பட்டிருக்கும் இந்திய மக்கள் போராட வேண்டியவர்கள். அவர்களுக்குத் தற்போது வேண்டப்படுவது விடுதலைப் போராட்ட உணர்வுதான். இந்திய தேசத்தின் முப்பெருங் காவியங்கள் இராமாயணம், மகாபாரதம், கந்த புராணம்.

இம்மூன்று பேரிலக்கியங்களிலும் ஓர் ஒற்றுமை யுண்டு. 'தூது போதல்' என்ற அம்சம் தான். இராமாயணத்தில் அனுமன், மகாபாரதத்தில் கண்ணன், கந்த புராணத்தில் வீரபாகு முறையே தூது போகிறார்கள். பாரதி அனுமனையோ, வீரபாகுவையோ பாடவில்லை; மாறாகக் கண்ணன் பாட்டே பாடுகிறார்.

அனுமன் 'சீதை' என்ற பெண்ணை விடுதலை செய்யத் தூது போனான். வீரபாகு (தேவர்கள்) விண்ணை விடுதலை செய்யத் தூது போனான். ஆனால் கண்ணன் மட்டும் கௌரவர்களிட மிருந்து மண்ணை விடுதலை செய்யத் தூது போனான். அதனாலேயே, கண்ணன் பாட்டுப் பாடினார் பாரதியார். அவரின் முப்பெரும் பாடல்கள் 'குயில் பாட்டு,' 'கண்ணன் பாட்டு,' 'பாஞ்சாலி சபதம்'. கருமை வண்ணக் கண்ணன், கண்ணன் பாட்டிலும் பாஞ்சாலி சபதத்திலும் இடம் பெறுகிறான். குயிலின் வண்ணமும் கருப்புத்தான். வெள்ளை ஆட்சிக் கெதிராகக் கருப்பு வண்ணத்தைத் தூக்கிப் பிடித்த பாரதியார் 39 வயதிலேயே மூச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார். 40 வயதானால் தன் தலைக்கு மேலே, நரைகள் வடிவில் ஒரு வெள்ளை ஏகாதிபத்தியம் வந்துவிடும் என்று.

இன்று சுதந்தர இந்தியாவின் நிலை என்ன? சுதந்தரத்திற்கு முன்பு இங்கிலாந்து என்ற ஒரே ஒரு நாட்டிற்குத் தான் இந்தியா அடிமைப்பட்டிருந்தது; இன்று எல்லா நாடுகளுக்கும் அடிமைப்பட்டுக் கிடக்கிறது. மாதவி, கோவலனின் பணத்தையெல்லாம் பறித்ததைப் பற்றி, மதுரை விஸ்வநாததாஸ் கண்ணகி நாடகத்தில்,

> **"காசைப் பறிக்கும் ஐரோப்பா**
> **கவர்மெண்டைப் போலக்**
> **கைப்பொருள்தனைப் பறித்தாள்"**

என்று பாடியது நினைவுக்கு வருகிறது. ஐரோப்பா அரசு என்று ஆங்கில அரசைக் குறித்தார். இன்றிருந்தால் அகில உலக அரசுகள் என்று பாடியிருப்பார். இந்தியக் காமதேனுவின் ஈர மடியில், அன்னிய அட்டைகளை ஒட்டி வைக்கும் முயற்சிகளில் நம் அரசுகளே இறங்கி வருவது பரிதாபம். கன்றுகள் உண்ண வேண்டிய பால்மடியில் அன்னிய அட்டைகள். எல்லாத் துறை களிலும் பங்குகள் அன்னிய தேசங்கட்கு விற்கப்படுகின்றன. ஆனால், ஒன்று மட்டும் உறுதி அட்டைகள் பாலருந்தா; இரத்தம் தான் உறிஞ்சும். வெளியிலிருந்து மட்டுமா விடுதலைக்குத் தளைகள்?

> **எனது மூவடிப் பாடல்களில் ஒன்று**
> **"ஓட்டு மந்தைகள்**
> **தொழுவம்**
> **சட்டமன்றம்"**

நுகத்தடிகளைக் காவடிச் சுகத்தடிகளாகத் தாங்குகிறார்கள். 'அரோகரா' ஆண்டவனுக்கு அல்ல; மக்களுக்குத் தான்.

அடிமைத்தன மேற்படி அழுக்கு முகங்களுக்கு மத்தியில் இழுக்கு முகம் ஒன்று. யார் யாரையெல்லாம் மணத்தல் ஆகாது எனத் தெளிவாகக் குறிப்பிடும் இறைமறை குர்ஆன் **"நீங்கள் உங்கள் புதல்வர்களின் மனைவிகளை மணம் புரியாதீர்கள்"** *(4:23)* என்று கட்டளையிட்ட பிறகும், உத்திரப்பிரதேச இம்ரானாவின் நிலை என்ன.? மருமகளைக் கற்பழித்த மாமனாருக்கே, மருமகள் மணமுடிக்கப்பட வேண்டும்; மணவாளனோடு வாழக் கூடாது; மார்க்கத் தீர்ப்பு என்ற பெயரில் பத்வா. 'அல்லா மார்க்கம்' தெளிவாக இருக்கிறது. 'முல்லா மார்க்கம்' மூச்சுத் திணற வைக்கிறது. Father-in-law, Brother-in-law, Sister-in-law, என்ற ஆங்கிலச் சொற்களும் அந்தந்த உறவுகள் சட்டப்படி இருக்க வேண்டும் என்பதையே உணர்த்தும். உயர்குலப் பெண்ணொருத்தி திருடினாள். அவளுக்குத் தண்டனையிலிருந்து சலுகை வழங்கக் கோரிய தன் வளர்ப்பு மகன் கைதைக் கண்டித்த பெருமானார் நபிகள் நாயகம் "எனது மகள் திருடினாலும், இஸ்லாமியச் சட்டப்படி, அவள் கையை வெட்ட நான் ஆணையிடுவேன்" என முழங்கினார். ஆனால் நிகழ்ந்திருப்பது என்ன? திருடிய கையை வெட்டவில்லை. மாறாகத் திருட்டுக் கொடுத்த பெண்ணின் வாழ்க்'கை'யையே திருடனுக்குத் தாரை வார்த்துக் கொடுப்பது எந்த நியாயம்? பெண்ணடிமைத் தனத்தை உறுதி செய்யும் ஆணாதிக்கமே இழுக்கு முகம்.


சாதி, மத அடிமைத்தனங்களை வளர்க்கவா கண்ணீரும், செந்நீரும் சொரிந்தனர் விடுதலைப் போராளிகள்? வீரத்தையும், தியாகத்தையும் இரத்த அணுக்களாகப் பெற்ற மைசூர் மாமன்னர் திப்பு

"முழந்தாளிட்டு
உயிர்வாழ்வதை விட
நின்று கொண்டு
இறப்பதே மேல்"

என்று பிரகடனப்படுத்தினார். அன்னிய நாட்டு உப்பினைப் போட்ட எந்த உணவையும் தீண்டாத திப்பு வெள்ளையர் காலில் இறுதிவரை விழவில்லை. போர்க்களத்தில் உயிர் நீத்து மானம் நீங்கா அவர் உடலைத் தேடினார்கள் வெள்ளையர்கள். வெட்டுப்பட்ட நிலையிலும் அந்த வீரனின் கை தன் வாளைப் பிடித்தபடியே கிடந்தது. அது வாளில்லை. அந்தப் போராளியின் சுதந்தர லட்சியம். மண்ணுக்காக விழுந்த மன்னர், வாளை மண்ணில் நழுவ விடவில்லை. நழுவும் வாள் தன் தாய் மண்ணைக் காயப்படுத்திவிடக் கூடாது என்பதற்காக; அன்னியன் காலில் ஆயுதமும் விழுந்து விடக் கூடாது என்பதற்காக. எல்லாப் பூக்களையும் உதிர்க்கும் மரணப் புயல் விடுதலைப் பூக்களின் மகரந்தத்தை விதையாக்கும் வாகனமாக மாறிவிடுகிறது!

ஆகஸ்ட் 2005

நாவின் நடை வண்ணம்



மொழியைத் தாய் மொழி என்றது எதற்காக? பெற்றுத் தரும் தாய், கற்றுத் தருவதாலா? அப்படி என்றால் ஊமைக் குழந்தையின் தாய்மொழி என்ன? மற்றவர்கள் மொழியைத் தாயெனக் கொண்டாடியதற்கும் தமிழர்கள் தாய்மொழி எனக் குறித்ததற்கும் வேறுபாடு உண்டு. மொழியின் தோற்றம் பற்றி நன்னூல்,

“உந்தி முதலா முந்துவளித் தோன்றி”

என்று பேசுகிறது. ஒரு குழந்தை தாயின் வயிற்றில் உருவாவதைப் போல, காற்று மொழியாகக் கருவாகிறது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து மேல்நோக்கிச் சென்று பிரசவமாகிறது. ஆங்கிலேயர்கள் கூட ‘Delivery’ (பிரசவம்) எனப் பேச்சினை அழைக்கிறார்கள். மொழியின் பிரசவம் பார்ப்பதற்குத் தான் இறைவன் 32

வெள்ளையுடை நர்சுகளைப் படைத்திருக்கின்றான். தாயாகும் பேறு பெண்ணுக்கு மட்டுமே; ஆணுக்கில்லை. ஆனால் மொழி வயிற்றில் உருவாகும், மிகச் சிக்கலான மகப்பேறு ஆதலால், அதனைச் சுகப் பேறாக்க முப்பத்திரண்டு செவிலிகள் முயல, பெண்ணை மட்டுமல்ல ஆணையும், ஆம் அனைவரையும் தாயாக்கி விடுவதால் 'தாய்மொழி' ஆகிவிட்டது. இதனை இலக்கணமாகக் கண்டுணர்ந்த நம் முன்னோர்கள் சிந்தனை ஆழம் வியப்பூட்டுகிறது.

பேச்சினை மேடைக் கலையாக்கி மிரட்டியவர் பேரறிஞர் அண்ணா. அவர் நாவிலும், பேனாவிலும் கலைமகளை வைத்திருந்த பிரம்மா, உரைநடையைத் திரைநடையாக்கிக் கருத்து முதிர்ந்த நரைநடையாக்கி வழங்கியவர். விரிந்த படிப்பும், பகுத்தறிவுக் கொள்கைப் பிடிப்பும், பிணத்தையும் எழுப்பவல்ல துடிப்பும் அவர் பேச்சுக்கு உண்டு. சூரியன் தோன்றத் தாமரை மலரும். அவர் தன் நாவெனும் ஒற்றை இதழ்த் தாமரையால் உதய சூரியனையே மலர வைத்தவர். 'தம்பிக்கு' அவர் எழுதிய கடிதங்கள் தாம் அன்னைத் தமிழகத்தில் முதன் முதல் ஆரம்பிக்கப்பட்ட அஞ்சல் வழிக் கல்வியாகும். மேடைகளைத் 'திறந்த வெளிப் பல்கலைக் கழகமாக்கி லட்சோப லட்சம் வெகுமக்களுக்கு அறிவூட்டிய ஆசான் அவர். ஒரு மேடைப் பேச்சே புத்தக வடிவில் வெளிவந்த வரலாறு அவர் தொடங்கி வைத்ததாகும். மூச்சு இழைகளையே பேச்சு நூலாக நெய்து தந்த தறிஞர் இந்த அறிஞர். வல்லினமாய் வாழ்ந்த தமிழினம், மெல்லினமாய்ச் சிறுமைப்படக் காரணம் இடையினம் தான். ஆடு, மாடுகளை ஓட்டி வந்த ஆரிய 'இடையினம்' தான். வில்லால் வீரனாக வாழ்ந்தவன், புல்லால் வீழ்ந்தவன் ஆனான். காலப்போக்கில் ஆட்டுமந்தை, மாட்டு மந்தைகளுக்குப் பதிலாக, நாட்டு மந்தைகளாக மக்களை மேய்த்து, ஏய்த்து, தருப்பைப் புல் மேயவைத்த வரலாறு நம் வரலாறு. ஒட்டடைக் கோல்களையே நூலாம்படைகள் வீழ்த்தியது இங்கே. பூணூல் அணிந்தவன் உயர்ந்த சாதி என்றால், பூணூலுக்குப் பஞ்சு உற்பத்தி செய்து தருபவன் தாழ்ந்த சாதியா? இப்படி ஆதிக்க இருட்டின் மீது மின்னல் சவுக்கெடுத்தவர் அண்ணா; பெரியார் என்ற பீரங்கி பெற்றெடுத்த எந்திரத் துப்பாக்கி.

வடமொழியில் இராமாயணம் எழுதியவர் வான்மீகி. வன்மீகம் என்றால் புற்று என்று பொருள். அந்தப் பெயர் வந்ததற்குக் காரணம் உண்டு. மக்களை விட்டுப் பிரிந்து காடு சென்று, அட்டமா சித்திகளைத் தான் பெறுவதற்காக உடம்புக்கு வெளியே புற்று வளர வளரத் தவம் இயற்றியதால் அவரை வன்மீகன் என்று மக்கள் அழைத்தார்கள். மக்களுக்காக அன்றித் தான் மட்டும் நினைத்த வடிவெடுக்க, கூடுவிட்டுக் கூடு பாய, தண்ணீரில் நடக்க, விண்ணில் பறக்க, திடச்சுவர்களைச் சூக்குமமாகக் கடக்க

எனச் சித்திகள் பெற, வாழ்வில் தான் மட்டுமே உயரத் தவம் செய்து, உடம்பின் வெளியே புற்று வளர்த்துக் கொண்டது பெரிய தவம் என்றால், மக்களை விட்டுப் பிரியாமல் மக்களுக்குள் வாழ்ந்து, மக்களை உயர்த்த தனக்குள்ளேயே 'புற்று' வளர்த்துக் கொண்ட அண்ணா செய்தது சிறிய தவமா? தன் வாழ்வின் உள்ளட்க்கமாக, இன இழிவு நீக்கி, தன் சமூகத்தை உயர்த்துவதையே இலட்சியமாகக் கொண்ட அண்ணா வாக்கில் உண்மை ஒளி மிளிர்ந்ததில் வியப்பில்லை.

தமிழ் மழையெனக் கொட்டிய தன்மான மேகம், ஆங்கிலத்தையும் அருவியெனக் கொட்டியது. வழக்கமாக நாடாளுமன்ற மக்களவைப் பணிகள் முற்பகலோடு முடிந்து போகும். ஆதலால் பிற்பகலில் சிறிது நேரம் ஓய்வெடுக்கும் வழக்கம் கொண்டவர் முதல் பிரதமர் பண்டிதர் நேரு. பிற்பகலில் கூடும் நாடாளுமன்ற மேலவையில் அண்ணா பேசுகிறார் என்றால், பார்வையாளர் மாடத்தில் பண்டிதர் இருப்பார். வடவர்களால் மிதிக்கப்பட்ட புழுக் கூட்டத்திலிருந்துதான் இந்தப் பகுத்தறிவுப் பட்டாம்பூச்சி சிறகடிக்கத் தொடங்கியது. நிமிர்ந்திருக்கும் நேரு மேரு பொதிகை நோக்கிக் குனிந்து வணங்கியது அப்போது தான். பைஜாமா ஜிப்பாப் நாடாளுமன்றத்தில் வேட்டி கட்டிய தமிழுக்கு முதல் மரியாதை.

நேர்மைத் திறமும், நெஞ்சுரமும் இலக்கியத் தரமும் கொண்டு வாதங்கள் வயதுக்கு வரத் தொடங்கிய வசன வசந்த காலம் அது. அண்ணா பொடி போட்டார். பாராளுமன்றம் முழுக்கத் தும்மியது. சுந்தல் இந்திக்கு நடுவே, காஞ்சிப் பட்டுக்குக் கௌரவம் கிடைத்தது. அப்போது லட்சுமணன் கோட்டையே, அரைஞாண் கயிறாக அணிந்த, காந்தீயக் கதர் நகல் மொரார்ஜி தேசாய் நிதியமைச்சர்.

அண்ணா : What is your economic policy Hon'ble finance minister?

(மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களே தங்கள் அரசின் பொருளாதாரக் கொள்கை என்ன?)

மொரார்ஜி : We are taking best components from capitalism and best ingredients from communism and we mix it; it is mixed economy.

(முதலாளித்துவத்திலிருந்து சிறந்த கூறுகளையும், பொதுவுடைமைத் தத்துவத்திலிருந்து சிறந்த பகுதிகளையும் எடுத்துக் கலக்குகிறோம்; அது தான் கலப்புப் பொருளாதாரம்)

அண்ணா : I want to remind the Hon'ble Finance Minister that adultertion is prohibited as antinational activity in our country.

(நிதியமைச்சர் அவர்களுக்கு நினைவு படுத்துகிறேன். நம் நாட்டில் 'கலப்படம்' தடை செய்யப்பட்ட தேச விரோதச் செயல் என்பதை)

நாடாளுமன்றத்தில் கை தட்ட முடியாமல் பெருமூச்சு விட்டவை நாடாளுமன்ற இருகை வைத்த இருக்கைகள் தாம். வாதங்களில் அவ்வப்போது சூடு இருக்கலாம். ஆனால் எப்போதும் வெளிச்சம் இருக்க வேண்டும். நாற்காலிகள் மீதமர்ந்து போடும் இரைச்சலில் நாற்காலிகளும், கூச்சலிடும் குற்றவாளிகளும் ஜனநாயகத்தின் குரல்வளையைக் கடித்துக் குதறும் நாடாளுமன்றக் காட்சிகளைக் காணும்போது நெஞ்சு வேகும். அந்த வேளை நயத்தகு வாதங்களால் வியத்தகு வெற்றிகளைக் குவித்த அண்ணாவின் நினைவு மண்வாசமாய் மனதில் எழும். பேச்சாளர் நாவுகளுக்கு நடைவண்டி அவர் தான். காதுகளில் இலைபோட்டுக் காத்திருந்த அவைகளுக்கு நாவுகளே சமைத்த நற்றமிழ் விருந்து அவர் பரிமாறியது தான். பரிமாறப் பரிமாறப் பசியேறியது தான் மிச்சம்.

செப்டம்பர் 2005

கோட்சேவின் ஹே! இராம்



'கேரம்' என்றொரு உள்ளரங்கு விளையாட்டு. அதனை உலகிற்கு வழங்கியவர்கள் வெள்ளையர்கள். அதில் வெள்ளை, கருப்புக் காய்கள். சிவப்பாய் ஒரு காய். அதன் பெயர் இராணி. வெள்ளைக் காயின் மதிப்பு இரண்டு புள்ளிகள். கருப்புக் காய்க்கு ஒன்று. ஒரே மரத்தின் துண்டுகள்தான். ஒன்றுக்கு வெள்ளைப் பூச்சு. மற்றதற்குக் கருப்புப் பூச்சு. அவ்வளவு தான். ஆனால் அதற்கு இரண்டு புள்ளி மதிப்பு என்று வைத்தான். ஆம், வெள்ளையன் விளை யாட்டுக்காகக் கூடத் தன்னினம் தாழ்ந்தது என்று கருதுவதில்லை. அந்த இனக் ஆட்சித் தலைவி இராணி என்பதால், சிவப்புக் காய்க்கு இராணி என்று பெயர் வைத்து, அதன் மதிப்பாக ஐந்து புள்ளி வைத்தான். அந்த விளையாட்டின் வெற்றியைத் தீர்மானிப்பது இராணிதான். உலகில் எந்தத் துறை வெற்றியென்றாலும் தன்னினத் தலைமை தான் தீர்மானிக்க வேண்டும் என்ற குறிப்பை

அவ்விளையாட்டு வாயிலாக ஆங்கிலேயன் கமுக்கமாக வைத்துள்ளான். உலக நடப்பெல்லாம் கருப்பு வெள்ளைப் போராட்டம் தான். இராணிக்கு ஐந்து புள்ளி மதிப்பு. இராணிக் காயைக் கேரம் போர்டின் நான்கு முனைகளில் இருக்கும் ஏதாவதொரு பையில் போட்டால் மட்டும் கிடைக்காது. மாறாக இராணிக்காயைப் பின்தொடர்ந்து ஏதாவதொரு காயைப் போட்டால் தான் ஐந்து புள்ளி மதிப்புக் கிடைக்கும். பாப்லோ நெரூடா

'The Queen is valuable only when it is followed'

என்றான். ஆமாம் எந்தக் கருத்துக்கும் மதிப்பு அது பின் பற்றப்படுவதில் தான். கருப்பு வெள்ளைப் போராட்டத்தைக் கூர்மைப்படுத்தி, தென்னாப்பிரிக்க கருப்பின மக்கள் வெள்ளை ஆதிக்க ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றிட 28 ஆண்டுகள் சிறைவாசம் இருந்தவர் நெல்சன் மண்டேலா. சிறையறையைச் சுதந்தரத்தின் கருவறையாக்கியவர்.

தென்னாப்பிரிக்கா விடுதலை அடைகிறது. நெல்சன் மண்டேலாவைத் தலைமையாகக் கொண்டு, முதல் கருப்பின அமைச்சரவை பதவியேற்கிறது. இலட்சக்கணக்கான கருப்பின மக்கள் கூடி நிற்கிறார்கள். முதல் அமைச்சரவையில் பொறுப்பேற்கவிருக்கும் சக போராளிகள் நெல்சன் மண்டேலாவை நோக்கி முகம் காட்டி நிற்கிறார்கள். பதவிப்பிரமாணத்திற்கு அமைச்சர்களைத் தனக்கு முதுகுகாட்டிப் பின்புறமாகத் திரும்பச் சொல்கிறார் மண்டேலா. அமைச்சர்களுக்கும், கூடியிருக்கும் மக்களுக்கும் ஒன்றும் புரியவில்லை. மண்டேலா ஐயம் போக்கும் வகையில்,

''அமைச்சர்களே! என்னின மக்களே! சுதந்தரத் தென்னாப்பிரிக்காவின் முதல் அமைச்சரவை என்னைப் பார்த்துப் பதவியேற்பு உறுதிமொழி எடுப்பதை விட, நான் பார்த்துக் கொண்டிருக்கும் திசையை நோக்கி, பொறுப்பேற்க வேண்டும். அந்தத் திசை தான் இந்தியா இருக்கும் திசை. மகாத்மா காந்தி பிறந்த புனித பூமியாம் இந்தியாவை நோக்குங்கள். மகாத்மா தான் தென்னாப்பிரிக்காவில் 21 ஆண்டுகள் வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி, நம் விடுதலை இயக்கத்திற்குத் தொட்டில் கட்டியவர்" என முழங்கினார். தந்தை பெரியார் கூட இந்த நாட்டிற்குக் 'காந்தி தேசம்' எனப் பெயர் சூட்டும்படி வலியுறுத்தினார்.

நவீன பாரத குருஷேத்திரத்தில் தான் மட்டும் ஆயுதம் தொடுவதில்லை என்பதோடு அர்ச்சுனாதியர்களையும் ஆயுதங்களை ஏன் கேடயங்களையும் கீழே போடச் சொன்ன அகிம்சைக் கீதாச்சாரியன். அகிம்சை என்பது உரிக்கிறவனையே அழச்செய்து விடும் வெங்காயம். அடிக்கின்றவன் உடலிலிருந்து நீரை, கண்ணீரை வரவழைக்கும், தன்னிடமிருந்து சொட்டுக்

கண்ணீரையும் கொட்டாத வறண்ட நிலத்து அடிகுழாய். வெட்டுண்டு தன் மேனியில் பிளவு ஏற்பட்டாலும், ஒட்டும் பிசினை உற்பத்தி செய்து தரும் கோந்துமரம். அதில் சுரந்த கோந்து தான் சமய, சாதி பிரதேசங்களாகக் கிழிபட்ட இந்திய வரைபடத்தை ஒட்டித் தந்த உயிர்ப் பசை. வெள்ளை ஏகாதிபத்தியம் மகாத்மா காந்தியின் பட்டினிப் போரைக் கண்டு அரை நிர்வாணப் பக்கிரிக் கிழவன் உண்ணாதிருப்பதால் நமக்கென்ன என அலட்சியப் படுத்தியது. அசிரத்தை கொண்டது. ஆனால் அண்ணல் காந்தியடிகளின் அடிவயிற்று அக்கினி அவரை எரிக்கவில்லை. சுதந்தரப் பற்றாக்குறை இருந்த இடத்தில் எல்லாம் பற்றத் தொடங்கியது. விடுதலைத் தீப்பிடித்த தேசத்தை அணைப்பதற்கு வெள்ளை மேகங்களால் முடியவில்லை. மேல் ஒரு துண்டும், இடையில் ஒரு துண்டும் என இருந்த காந்தி மகாத்மாவின் ஈரங்கிக்கு முன்பு பிரிட்டிஷ் பீரங்கி வணங்கியது.

மகாத்மாவின் மறைவுக்குப் பிறகு, அவரைப் பெருமைப்படுத்த நினைத்த இந்திய அரசு காந்தியடிகளுக்கு ஓர் அஞ்சல்தலை வெளியிட முயன்ற போது தந்தை பெரியார்

**"தேசத்தந்தையை அவர்
உயிர்பித்த நாடே
கொன்று
விட்டது. அவரை
மறுவுயிர்க்கச் செய்ய அவர்
நடந்து காட்டிய தடத்தில்
நடக்க வேண்டும். மாறாக
அஞ்சல் தலை
முயற்சியெல்லாம்
வெறுஞ்சடங்கே.
ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு
அஞ்சாத தலையை
ஓர் அஞ்சல் தலைக்குள்
அடக்கி அவமானப்படுத்த
வேண்டுமா?"**

எனக் கேட்டார். இன்று காந்தீயத்தின் சவத்துணியைக் கிழித்துக் கதர்க் குல்லாய்கள் தைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் கொள்கைகள் சத்தியம், அகிம்சை, எளிமை ஆகியவை அனாதைகள் ஆகிவிட்டன.

ஜார்ஜ் வாஷிங்டன், ஹோசிமின், நெல்சன் மண்டேலா, ஷேக் முஜிபுர் ரஹ்மான் போன்ற எண்ணற்ற நாட்டுத் தலைவர்கள் அந்தந்த நாட்டு விடுதலைக்காகப் போராடினார்கள். விடுதலைக்குப் பிறகு அமைந்த அரசில் தலைமைப் பதவி ஏற்றார்கள். ஆனால் உலக வரலாற்றில் ஒரு நாட்டின் விடுதலைக்காக மக்களை அணி திரட்டி, போராடி, ஆட்சிப்பதவி

ஏற்குமாறு சக போராளிகள் வற்புறுத்திய போதும், பதவி ஏற்றிடாத ஒரே ஒப்பற்ற தலைவர் மகாத்மா தான். அவர் சொன்னார் :

"வழிபடும் தெய்வம்
இராமன் தான்.
வாயிதழில்
இராமநாமம் தான். ஆனால்
தனக்களிக்கப்பட்ட
இராஜ்ஜியத்தையும்
துறந்து, பதவியை
விரும்பாது கானகம்
சென்றானே அந்த
வழிதான் என் தர்மம்"

ஆன்மீகம் அரசியலில் எத்தகைய நிலையெடுப்பது என்பதற்குக் காந்திய உதாரணம் கண் முன்னே நிற்கிறது. பதவி வேண்டாம் என்று அரியணை துறந்து தன் ஜென்ம பூமியை விட்டுச் சென்றான் இராமன். இன்று அவன் ஜென்ம பூமியெனச் சொல்லி ஆட்சி அரியணையைப் பிடிக்க நினைக்கும் ஒரு கூட்டம். கோட்சேக்களின் வாய்களில் இன்று இராமநாமம்.

1948 ஜனவரி 30 மலர் வளையத்திற்காகப் பாரதத்தாயின் கூந்தல் மலர் பறிக்கப்பட்டது. மகாத்மா கொல்லப்பட்டார். 1948 ஜனவரி 29 அன்று இரவில் அண்ணல் காந்தி கூறினார்:

"என் பொறிகள் எல்லாம்
மெல்ல மெல்ல
ஒடுங்க, தோற்றுப் போன
மனிதனாக இறப்பதற்கு
நான் விரும்பவில்லை. ஒரு
கொலைகாரனின்
தோட்டா என் உயிரை
குடிக்கக் கூடும் . . .
முனகலின்றி அந்தத்
தோட்டாவை நான் ஏற்று
ஆண்டவனின் நாமத்தைச்
சொல்லிக்கொண்டு
இறக்க வேண்டும்"

இந்தப் பேச்சிற்குப் பிறகு, 20 மணி நேரத்திற்குள் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் ஆவி பிரியும் வேளை உதிர்த்த சொல் "ஹே! ராம்!"

கொன்றன்ன இன்னா செய்த இராவணனையும் மன்னித்தான் இராமன். கோட்சே தன்னையும் மன்னித்து, விட்டுவிடச் சொன்னார் மகாத்மா. காந்தியடிகளின் கடைசிச் சொல் ஹே! ராம் என்பது அதனை மட்டுமா குறிக்கிறது. "எனக்குள்ளே ராமன் ததும்பி, தத்துவமாய்ச் சொன்னதைப் போல நானே அதுவாகி

விட்டேன். இராமனாகி விட்டேன். இராமனைப் போல் பகைவனுக்கும் மன்னிப்பு வழங்குகிறேன். சுடப்பட்டவன் இராமன் என்பது மட்டுமல்ல சுட்டவனும் இராமனே!" என்பது குறிப்பு. கொன்ற கோட்சேயும் நாதுராம் தானே. அதனால் மறைந்திருந்து கொன்றுவிட்டான் போலிருக்கிறது. என்ன 'தீர்க்க' தரிசனம்?


வாகாவிலிருந்து பாகிஸ்தானுக்கு முதல் பேருந்துப் பயணத்தைத் தொடக்கி வைத்த அன்றைய பிரதமர் வாஜ்பேயி, சஜ்ஜாத் அல் ஜாஃபரியின் உருதுக் கவிதையான

"தாய் நாடே
உனக்காக
இன்னும்
இரத்தம் சிந்தத்
தயாராயிருக்கிறேன்.
மதக்கலவரங்களில்
சிந்தியது போக
மிச்சமிருந்தால்"

என்று மேற்கோள் காட்டினார். இது வேறென்ன? கோட்சேயின் ஹேர! ராம்!

அக்டோபர் 2005.

நெஞ்சில் முளைத்த நெற்றிக்கண்



மணநாள். காளையோ கயிறுகட்டும். கண்ணிமை மேளங்கொட்டும். பாளையோ, பந்தலில் அட்சதை அள்ளிச் சொட்டும். நாளையோ நேற்றிடுப்பில்; எழுப்பும் நல்லோரைக் குரவை விண்ணை முட்டும். ஆனந்தக் கண்ணீர்ச் சொட்டாய் நகக் கண்ணில் மிஞ்சிச் சதங்கை ததும்பி நிற்கும். அவன் மணவரசன். அவள் மணவரசி. கொஞ்ச காலம் மன்னராட்சி. கொஞ்ச காலம் அரசியாட்சி. கொஞ்ச கொஞ்ச காலம் தொடர்ந்து மக்களாட்சி மலரும்.

குழந்தை இல்லா வீட்டு வாழ்க்கை சதங்கை கட்டாத நாட்டியம். கவிநயமாக வேண்டிய அபிநயம் ஊமைச் சைகையாய் உலர்ந்து போகும். வாமனமாய் வாழ்க்கைப் படும் தாலிக்கயிறு., தூளிக்கயிறாய் விசுவரூபம் எடுக்க வேண்டும். இல்லையேல் தூக்குக்

கயிற்றில் கனவுகள் நான்று கொண்டதைப் போல கன்னங்களில் கண்ணீர்க் கயிறுகள் இறங்கிவரும். 'மம்மி'கள் புதைந்து பிரமிடுகளாய் மார்புகள் இறுகும். பெறுவதற்கு அரியது என்பதால் தான் பிள்ளைப் பேறு என்றார்கள். வீடு பேறு என்பதே பிஞ்சுப் பிறை விரல்களால் கிறுக்கப்படும் பேறு, பெற்ற வீட்டைத் தான் குறிக்கும்.

மாடுகள் கட்டுமிடத்தைத் தமிழர்கள் 'தொழுவம்' (தொழுவத்திற்குரிய இடம்) என்றழைத்ததற்கான காரணத்தை, நாலாயிரத் திவ்யப் பிரபந்தப் படிஉரை வழங்கிய பெரிய வாச்சான் 'பிள்ளை' பொருத்தமாகக் குறிப்பிடுகின்றார். கன்று ஈனும் பசு, ஈனும் பொழுது மூசுமூசுவென்று பெருமூச்சு விடும். அதனை உலகம் பேறுகால வேதனையின் வெளிப்பாடு என்று பார்க்கிறது. ஆனால் ஈனும் பசு, முதன் முதலாகத் தன் பிள்ளை காலடி வைக்கும் இடம் தூசியும், தும்பும் கூளமுமாக இருத்தலாகாது என்று உள்ளுணர்வு உந்த, பெருமூச்சு விட்டுக் கொட்டிலைக் கூட்டிப் பெருக்கித் துலக்குகிறது. அதனாலேயே, கும்பிடுவதற்குரிய கோமாதா ஆகிவிட்டது மாடு. கட்டும் இடம் தொழுவம் ஆகிவிட்டது என்கிறார் பிள்ளை. தாய்மை உலக உயிர்கட்கெல்லாம் பொது. மனிதர்க்கு மட்டுமே உள்ள தனியுடைமை யன்று.

செட்டி நாட்டிலிருந்து பொருள் ஈட்ட மலாக்கா சென்ற செட்டியார் குடும்பத்தையும், குழந்தைகளையும் செட்டி நாட்டிலேயே விட்டு விட்டுச் செல்கிறார். மலாக்காவிலிருந்து செட்டி நாட்டிலிருக்கும் ஆச்சிக்கு 'அஞ்சல் அட்டை' ஒன்று எழுதும்படித் தன் கணக்குப் பிள்ளையிடம் சொல்கிறார். செட்டி நாட்டு வீட்டின் கொல்லைப்புறம் உள்ள கிணறு மூடி போடாதது. கிணற்றின் கைப்பிடிச்சுவரும் உயரம் குறைவாகி இடிந்துள்ளது. சின்னஞ்சிறு பிள்ளைகளைக் கொல்லைப்புறம் கிணற்றருகில் போய்விடாதவாறு எச்சரிக்கையாகப் பார்த்துக் கொள் எனத் தன் ஆச்சிக்கு எழுதச் சொல்கிறார். கடிதம் எழுதிய பிறகு செட்டியார் கணக்குப் பிள்ளையைப் படிக்கச் சொல்கிறார். எழுதிய கடிதத்தைக் கணக்குப் பிள்ளை படிக்கிறார்.

"குழந்தைகளைக் கிணற்றுப் பக்கம் போகாமல் பார்த்துக் கொள்" என்ற வரி படிக்கப்பட்டவுடன் 'அடப்பாவி குழந்தைகளைக் கிணற்றுப் பக்கம் வைத்து விட்டாயே' என அலறுகிறார். கணக்குப் பிள்ளைக்குப் புரியவில்லை. வேறொரு அஞ்சல் அட்டையை எடுத்து எழுதச் சொல்கிறார். "கிணற்றின் கைப்பிடிச் சுவர் குட்டையாயுள்ளது. இடிந்துள்ளது. எனவே குழந்தைகளைக் கவனமாகக் கொல்லைப் புறத்திற்குச் செல்லாமல் பார்த்துக் கொள்" என்று எழுதப்பட்ட மறுகடிதத்தைப் படிக்கக் கேட்டவுடன்,

செட்டியார் "அப்பாடி! இப்போது பரவாயில்லை. குழந்தைகள் தூரமாக இருக்கிறார்கள்" எனப் பெருமூச்சு விட்டாராம். கிணறு, குழந்தைகள் என அருகருகே எழுத்தால் எழுதுவது கூட அந்த ஈர இதயத்திற்குப் பொறுக்கவில்லை.

தெலுங்கில் பாகவதம் எழுதத் தொடங்கிய கவிஞர், சில பாடல்களைத் தன் குருவிடம் காட்டினார். 'கஜேந்திர மோட்சம்' காட்சி எழுதப் பெற்றிருந்தது. யானை குளத்தின் நடுவில் பூத்திருக்கும் தாமரையைப் பறிக்க நீருக்குள் இறங்குகிறது. துதிக்கையில் தாமரையைக் கொய்து கரையேறும்போது, முதலை யானையின் காலைப் பற்றி இழுக்கிறது. யானை அலறுகிறது.

"பரந்தாமா பறந்து வா, முதலையால் செத்துப் போவேன் என்பதற்காக அவசரமாக அலறவில்லை நான். கிருஷ்ணா, இதோ என் துதிக்கையில் இருக்கும் மலர் வாடுவதற்குள் உன் பாதத்தில் அர்ச்சிக்கப்பட வேண்டும் என்பதற்காக அலறுகிறேன்." அந்த நேரம் பரந்தாமன் ஆதிசேடன் படுக்கையில் பாற்கடலில், மகாலட்சுமியோடு நெருங்கிக் கலந்திருக்கிறான். பக்தனின் அவலக்குரல் கேட்டு அவரசமாக உடை யள்ளிச் சுற்றிக் கொண்டு கஜேந்திரனை நோக்கி வந்து காப்பாற்றுகிறான். பின்னர் தான் தன்னைக் கவனிக்கிறான் கிருஷ்ணன். அபயங்கொடுக்க வந்த அவசரத்தில் கிருஷ்ணன் மகாலட்சுமியின் சேலையைச் சுற்றிக் கொண்டதைப் பார்த்து நாணுகின்றான். இப்படிச் சீடன் எழுதியதைப் பார்த்துக் குரு கோபித்துப் பொங்குகிறார். சீடனைப் பார்த்து, "நாசமாய்ப் போச்சு, பக்தனுக்குப் பகவான் அருள் வழங்கும் காட்சியில் பாலுணர்வு நெடி தான் தூக்கலாய் இருக்கிறது. ஆன்மீக மணம் கமழ வேண்டிய இந்த இடத்தில் இப்படிப்பட்ட அபசுரம் வரலாமா? மாற்றி எழுதி வா' என்றார்.

மறுவாரம் சனிக்கிழமை. குரு எண்ணெய் தேய்த்து நீராடும் நாள். கோவணத்தோடு கொல்லைப் புறம், உச்சி முதல் உள்ளங்கால் வரை எண்ணெய் தேய்த்து ஊறட்டுமே என்று முக்காலியில் குரு அமர்ந்திருக்கிறார். சீடன் குருவின் கோலத்தை எட்டிப் பார்க்கிறான். பின்னர் நுழைவாசல் கதவருகில் நின்று கொண்டு "ஐயோ குருவே உங்கள் பிள்ளை சாலை நடுவில் வண்டி மோதி" என்று அலறுகிறான். கொல்லைப் புறமிருந்து வீட்டுக்குள் ஓடி, வாசலுக்கு வந்து, சாலையில் பதற்றமாக நின்று பார்க்கிறார். வழிபடற்குரிய மதிப்புமிக்க குரு கோவணத்தோடு நிற்பதைச் சாலையில் சென்ற மக்கள் வியப்போடு பார்க்கிறார்கள். சாலையில் அவர் குழந்தை இல்லை. வீட்டின் தலைவாசலில் குருவின் குழந்தை சிரித்தபடி நின்றான். பக்கத்தில் சீடன். ஓடி வந்த குரு சீடனைப் பார்க்கிறார். சீடன், "மகாலட்சுமியின் புடவையைச் சுற்றிக் கொண்டு திருமால் வந்தான் என்று நான் எழுதியது உங்களுக்குச்

சினமூட்டியது. மரியாதைக்குரிய குரு, கோவணத்துடன் தெருச்சாலையில் நின்றது ஏன்? குழந்தையைக் காக்கும் அவசர ஓட்டத்தில் கோவணக் கோலம் மறந்து விட்டது. தாயும் தந்தையுமான ஆண்டவன் பக்தனைக் காப்பாற்ற வேண்டிய அவசரத்தில் இருக்கிறான். உடைந்து அழும் குரல்தான் மூளையையும், இதயத்தையும் நிறைத்துள்ளதே தவிர, கோலம் பற்றிய நினைவு எழ வாய்ப்பில்லை. குழந்தைக்காக மாராப்பு ஒதுக்கும் தாயின் சித்திரத்தில் ஆபாசம் இருக்காது; பாசம் தான் இருக்கும்" என்றான்.

குழந்தையின் நிழல் முள்ளில் விழுந்தால் நெஞ்சுக்குள் காயம்பட்டுப் போகும் தாய்மையை அறிவோம். ஆனால் வைக்கோல் திணிக்கப்பட்டுக் கன்றுத் தோல் போர்த்திய பொய்கன்றின் தோலைக் கடித்து உள்ளிருக்கும் வைக்கோலை உண்ணும் பசுக்களைப் போல, இன்று குழந்தைகளும் உண்ணப்படுகிறார்கள். குழந்தைத் தொழிலாளர்களாக குழந்தைப் பருவமும் உண்ணப்படுகிறது. ஒரு விநோதமான பிள்ளையார் சதுர்த்தி நிகழ்ந்து கொண்டிருக்கிறது. முதுகில் தொந்தி முளைத்த கான்வென்ட் பிள்ளையார்கள், வணிகக் கல்விச் சமூகத்தால் நிர்ப்பந்தமாகக் கரைக்கப்படுகிறார்கள். தொலைக்காட்சிச் செவ்வகச் சிலுவையில் அறையப்பட்டு வருகிறார்கள். குழந்தை ஏசுக்கள். இந்நிலையில் ஜப்பானியக் கவிதை ஒன்று ஏக்கத்தை விளைவிக்கிறது.

“ குழந்தையைத்
தூக்கினால்
கைவலிக்கிறது
கீழே
வைத்தால்
மனது வலிக்கிறது”

குழந்தைகளையே சுமைதூக்க வைத்துள்ள அவலப் பின்னணியில் ஜப்பானியக் கவிஞனின் ஈரம் நம் இதயத்தை நனைக்கிறது. பட்டாம் பூச்சிகளின் மேல் ‘பேப்பர் வெய்ட்’ பரிதாபம் இனி வேண்டாம்.

சங்கினால் பால் கொடுத்தால் சந்தனவாய் நோகுமின்னு நுங்கினால் பால்கொடுத்த பாரம்பரியம் எங்கே போனது?

மற்றொரு ஜப்பானியக் கவிதை மனதைப் பிழிகிறது. இறந்த தன் கைக்குழந்தையைப் பார்த்துக் கவிஞன்

"சாவுத் தேவதையே!
தயவு கூர்ந்து
என் குழந்தையைத்
தோளில் சுமந்து செல்
என்
குழந்தைக்கு
நடக்கத் தெரியாது"

என்று வேண்டுகிறான். மரணத்திற்குப் பிறகும் மரிக்காத மனிதநேயம் அது.

நேருவின் ஷெர்வானியில், அவர் நெஞ்சுக்கு அருகிருந்த வெள்ளை ரோஜா ஏன் சிவந்துள்ளது? சீருடை மெய்யிறுக்க, பூங்கழுத்தை டையிறுக்க, தளிர் வயிற்றைப் பெல்டிறுக்க, சிறகுப்பாதங்களைக் கருஞ்சாத்தான் ஷூ இறுக்க, மூச்சுத் திணறும் முல்லைகளைப் பார்த்து நாணத்தால் சிவந்ததா? பழங் கொய்யப்பட்ட வாழைச்சீப்பினைப் போல் வற்றும் விரல்களோடு பட்டாசுத் தொழிற்சாலையில் பாடுபடும் சிறுவர், சிறுமியர்களின் இரத்தக் கசிவை உள்வாங்கியா? அல்லது அந்தச் சிவப்பு ரோஜா, நேருவின் நெஞ்சில் முளைத்த நெற்றிக் கண்ணா?

நவம்பர் 2005

உரித்த கோழிகளில் உதிரம் இல்லை



உலகின் எல்லா நாடுகளிலும், மொழிகளிலும் வாழ்வு என்பதற்கு எதிர்ப்பதம் சாவு தான். ஆனால் தமிழ்நாட்டில் தான் வாழ்வுக்கு எதிர்ச்சொல் தாழ்வு. நிலையில் தாழ்வு என்பதே சாவு தான். தனியே இனி இறப்பு வேண்டிய தில்லை. வீட்டில் நுழைவாசல் அனைத்துக்கும் நிலை வைத்தவர்கள் தமிழர்கள். வாழ்வின் கண் தாழாமையும், தாழ்வு வந்துழி வாழாமையும் மானம் என்பார் திருக்குறள் உரையாசிரியர் பரிமேலழகர். நாணமும், மானமும் உயிருக்கு ஆடை. மூச்சுத் தறிநெசவு நெறி நெசவும் கூட.

வேர்மட்ட ஆசைகள் விளிம்பு நிலை நீர்மட்டம் தாண்டி, நெடுமென நிமிர்வு கொண்டது போலக் குளம் முழுக்கக் குவளைப் பூக்கள். கண் விழித்துப் பார்க்கும் குவளை கண்டவன்

அவளை நினைக்கிறான். சொந்தப் புறம் விட்டு, இந்தப் புறம் அவள் வந்தால் என்ன நிகழும்?

"காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண்ஒவ்வேம் என்று"

(திருக்குறள் - 114)

மாணிழை (மாண்புமிகு நகை போன்றாள்) கண்டு குவளை நாணிழை நெய்கிறது. தலை கவிழ்கிறது. அருகில் கடந்து செல்லும், அந்தப் பெண்ணின் கண்ணைப் போல, தான் அழகாக இல்லையே என்று குவளை நாணித் தலைகுனிகிறது. இப்படி நடக்குமா? நடக்கும். எப்போது? இப்படிச் சில சந்தேகிகள் இருப்பார்கள் என்றே வள்ளுவர் 'காணின்' என்று குறளைத் தொடங்குகிறார். குவளையோ குளத்துப் பூ. நீரில் நிற்கும் பூ. அது நாணித் தலைகுனிந்தால் நீர் தான் தெரியும். பிறகு எப்படி 'நிலன் நோக்கும்' என்றார்? கள்ளுண்ணாமையை எழுதியவர் போதை வயப்பட்டிருக்க மாட்டார். பிறகு? நீர் நோக்கும் என்றது எதற்காக? நிலமகளான அவள் நீர்மகளான என்னைப் போட்டியில் வென்று விட்டாள். நாண வுணர்வு மான வுணர்வை எழுப்புகிறது. நிலத்து வாழ்வோர் மானம் போய் விட்டால், நீரில் விழுந்து மாய்த்துக் கொள்வார். நீரில் வாழும் குவளையும், நிலத்தில் வீழ்ந்து உயிர்போக்க எண்ணுவதால் 'நிலன்' நோக்குகிறதாம். வெறும் கண்ணுக்குத் தோற்றுப் போனதாலா குவளைக்கு இந்தக் கதி?

"இருமனம் கூடுதல் இல் இயல்பன்றே"
(கலித்தொகை - முல்லைக்கவி)

என்ற பண்பில், 'வினையே ஆடவர்க் குயிரே, அவ்வில் மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்' என்ற நெறிப்படி வாழும் நிலமகளைக் காணுகிறது. வாசம் வீசி வருகின்ற வண்டுகள் உண்டு, மகரந்தச் சேர்க்கைகளுக்கு உட்படும் நீர்மகள், தன் ஒழுக்கமில்லா வாழ்வு எண்ணிக் குவளை நாணுகிறது. கண்ணைப் பற்றித்தானே போட்டி என்கிறீர்களா? இலங்கை சென்று மீண்ட அனுமன், இராமனிடம் வந்து,

கண்டனன் கற்பினுக்கு அணியைக் "கண்களால்"

என்று கூறியதாகக் கம்பர் அறிவிக்கிறார். கண் எல்லாவற்றையும் காட்டிக் கொடுத்து விடும். கண்ணுக்குக் கண் நேர்பார்த்துப் பேசாதவர்களை நம்பலாகாது என்பது உளவியல் உண்மை.

"சுருதி நாயகன் வரும் வரும் என்று
கருதி மாதிரம் அனைத்தும் அளக்கின்ற கண்ணாள்"

(மாதிரம் - வான்)

என்பதாகவே அனுமன் அசோகவனத்துள் சீதையைக் காண்கின்றான். சீதையின் கண் விண்ணைத் தொட்டுத் தொட்டு எந்தத் திசையில் இராமன் வருவான் என அளக்கிறது. சுற்றியிருக்கும் இராவணனுக்குச் சொந்தமான மண்ணைத் தன் கண்களால் தீண்டுதலும் ஒழுக்கக் கேடென நினைத்து, பொதுவான வானத்தைக் கண்களால் தீண்டினாள். அதுவும் அவள் கணவன் இராமனின் நீலமேகச் சியாமள வண்ணத்தைப் பெற்றிருப்பதால் பிறன் 'மனை' நோக்காப் பேராண்மை அறிவோம். இது பிறன் 'மனை' (நிலம்) நோக்காப் பெரும்பெண்மை. எனவே, கண்ணினால் குவளை அவளிடம் தோற்றுப் போனதும், நாணியதும், மானம் போனதே எனத் தலை கவிழ்ந்ததும் ஏற்புடையதாம்.

வரையறைகட்கு உட்பட்டதாக மானுடப் பாலுணர்வு வாழ்வு இருத்தல் வேண்டும் என்பதாலேயே சங்க கால மக்கள் திருமணத்தை 'வரைவு' என்றார்கள். களவில் மீறல் நிகழ்ந்து விடும் என்பதால், திருமணத்தை வற்புறுத்துவதை 'வரைவு கடாயது' என்று துறை வகுத்து, முறை வகுத்த அறிவு வியப்பூட்டுகிறது. உரியவர்க்குக் காதல் உறவை எடுத்துச் சொல்லி, தந்தை, தாய், சகோதர உறவுகளுக்குக் காதல் வயப்பட்ட இருவர்க்கும் திருமணம் செய்விக்க வேண்டும் என்ற தோழி, செவிலித்தாய் முயற்சிகளுக்கும் தமிழர்கள் அன்று 'அறத்தொடு நிற்றல்' என்ற பெயரையே வைத்தார்கள் என்பதும் நினைத்தற்குரியது.

விலங்குகளைப் போன்ற வரையறையற்ற பாலுறவினைப் பரிந்துரைக்கும் செய்தித் தாசிகள் ஒரு புறம். அதனை வழிமொழியும் அரிதார அவதாரங்கள் ஒரு புறம். அச்சுப் பொய்களின் நச்சுப் பொய்கையான பத்திரிகைப் பக்கம் கோபம் திருப்பாமல், ஒப்பனைப் பொய்களின் பக்கம் மட்டுமே உக்கிரம் காட்டும் ஒரு 'பக்கவாத' அரசியல் இயக்கங்களைக் கண்டு அருவெறுப்பே மிஞ்சுகிறது.

ரிச்சர்டு கிராஷ்ஷா (Richard Crasaw) வின் ஒரு கவிதை இந்த நடிகைகளையும், எதிர்க்கின்ற அரசியல் இயக்கங்களையும் சேர்த்து, ஒரே சமயத்தில் விமர்ச்சிக்கிறது.

"Scarce has she blood enough to make
A guilty sword blush for her sake"

குற்றமுள்ள வாள்கள்
அவளுக்காக
நாணிச் சிவக்கும்
அளவுக்குக் கூட
அரிதாகவே இருக்கிறது
அவளுக்குப்
போதுமான இரத்தம்"


மானக் கரைசலாம் நாண இரத்தம் அவர்களிடம் மருந்துக்குக் கூட இல்லை. அதனாலேயே அவர்களை வெட்டும் வாள்களிலும் வெட்க ரேகையைக் கிஞ்சிற்றும் பார்க்க முடியவில்லை. மாறாக நடிகைகளிடம் இருக்கும் பவளமும், முத்துக்களும் எப்படிக் காட்சியளிக்கும் என்பதைத் தொடர்ந்து கிராஷ்ஷா

"Each Ruby there
or pearl that hath dare appear
Be its own blush, be its own tear"

'அங்கிருக்கும் ஒவ்வொரு பவளமும் அதனதன் நாணமாகவும், அதனதன் கண்ணீராகவும் ஆகிவிட்டன'. உரிக்கப்பட்ட கறிக் கோழிகளில் உதிரம் எப்படி இருக்கும்? கண்ணெடுத்து அர்ச்சித்த பக்தர்களைக் குஷ்பாம்பிகை நாத்திராக்கி விட்டார். சுகாசினியின் சுப்ரபாதம், அந்த அம்பிகைக் கோவிலின் முற்றத்தில் படுத்துக் கிடந்த கல்நந்திக் காளைகளின் தலைக்கு மேல் கொம்புகளை விழிக்கச் செய்துள்ளது. கூர் மழுங்கிய கொம்புகளில் நாண ரச ரத்தம் இல்லை. வெறும் உதட்டுச் சாயம்.

டிசம்பர் 2005

தன் மார்பில் பால்குடிக்கும் தாயுண்டா?



பழுத்திருக்கும் மரத்தில் பழங்களைத் தேடாமல், அதில் புழுத்திருக்கும் மரப்பட்டை இடுக்கில் புழுக்களைத் தேடும் மரங்கொத்தி மனிதர்கள் உண்டு. ஒட்டகங்களுக்குப் பூக்கள் பார்வையில் படுவதில்லை. முள்ளைத் தான் பார்க்கின்றன. இழிவுகளிலும், கழிவுகளிலும் வாழ்வை அமைத்துச் சுய பலியிட்டுக் கொள்வோர் பலர்.

மீன், கருவாடு விற்கும் கடையில் பணி செய்யும் ஏழைப் பெண் ஒருத்தி, வீடு திரும்பும் வழியில் கடும் மழை பிடித்துக் கொள்ள, இரவு நேரம் ஒரு பூக்கடையில் ஒதுங்குகிறாள். இரவு முழுக்க இருவிழியும் மூடாமல், தூங்காமல் அவதிப்படுகிறாள். பூக்கடையின் மணம் அவளுக்கு ஒவ்வவில்லை. பாரசீகக் கவிஞர் சாஅதியின் குலிஸ்தானில் (பூந்தோட்டம்) இப்படி ஒரு காட்சி. பழக்கம் வழக்கம் ஆகி மோசச் சூழலே புழக்கமாகி விடுகிறது.

எதனிலும் குறை, யாரிடத்தும் குற்றம் காணும், மரங்கொத்தி மனிதர்களைப் பற்றி ஜார்ஜ் பெர்னாட்ஷா அற்புதமாகக் குறிப்பிடுகிறார். அதி தீவிர தூய்மைவாதிகள் தாங்களே என்னும் சில பாதிரியார்களிடம் அத்தகைய குணம் இருப்பதைச் சாடுகிறார்.

வெளி நாடுகளில் நடைபெறும் காளைச் சண்டை (Bull Baiting or Bull fighting) அத்தகைய பாதிரியார்கட்குப் பிடிப்ப தில்லையாம். அந்தச் சண்டை பெரிய மைதானத்தில் நிகழும். சுற்றிலும் அடுக்கிருப்புக்களாம் காலரிகளில் அமர்ந்து ஆயிரக் கணக்கான மக்கள் ரசித்து மகிழ்வார்கள். மைதானத்தில் எம தருமனின் இடைவாள் போலக் கூர் சீவப் பெற்ற கொம்புகளுடன், திமிலெடுத்துத் திமிறிக் காளை வரும். ஒரு கையில் கூர் ஈட்டியும், மறு கையில் சிவப்புத் துணியும் பிடித்தொரு மனிதன் எதிர்கொள்வான். சிவப்பு கண்டு மிரண்டு சீறும் முதலாளிகளைப் போலக் காளையும் கொம்பினால் குத்த அவன் மீது பாயும். சரேலென விலகி, ஈட்டியால் காளையை அவன் குத்துவான். காயம்பட்ட காளை மீண்டும், மீண்டும் சீறித் தாக்க முயலும். மனிதன் தப்பும் தருணங்களில் எல்லாம் காளை காயம்படத் தப்புவதில்லை. கையில் பிடித்துள்ள சிவப்புத் துணி போலவே, காளையின் உடம்பெல்லாம் மாற, மாற, மக்கள் களிப்பின் உச்சத்தை எட்டுவார்கள். இறுதியில் காயம் பட்ட காளை மடிந்து விழ, ஆட்டம் முடிந்து விடும். ஒவ்வொரு காயத்திலிருந்தும் இரத்தம் வெளியேறுகிறது. நிராயுதபாணியாக இருக்கும் தன்னை ஈட்டியால் தாக்குவதோடு, பார்வைக் கணைகளால் துளைத்தெடுக்கும் மக்கள் கூட்டத்தைப் பார்த்துக் காளை, காய வாயால் காரி உமிழ்கிறது. இரத்தம் தெறிக்கிறது. இந்தக் கொடிய ஆட்டம் பாதிரிகளுக்குப் பிடிப்பதில்லை. ஏன்? காரணம் சொல்கிறார் ஷா.

"The priests hate bull - baiting
not because it
gives pain to the animal but
because it gives
pleasure to the audience"

(அந்தப் பாதிரிகளுக்குக் காளைச் சண்டை பிடிக்காமல் போனதற்குக் காரணம், ஈவிரக்கமற்ற வகையில் காளை காயப்படுகிறதே என்ற கசிவினால் அல்ல; பார்வையாளர் கட்கு அது மகிழ்ச்சியூட்டுகிறதே என்ற எரிச்சலால்)

விலங்கியல் கற்பிக்கப்படும் சோதனைக் கூடத்தில் பாடத்திற்காக வேண்டிப் பாடஞ் செய்யப்பட்ட மீன் வகைகளை ஃபாமலின் திரவத்தினுள் பார்க்கும் மாமிச பட்சிணிகளுக்கு நாவில்

நீர் ஊறும். மாறாக மாகாத்மா, வள்ளலார் போன்றோர் பார்த்தால் கண்ணில் நீர் ஊறும். கண் இருக்குமிடம் எல்லாருக்கும் ஒன்று; என்றாலும் 'கண்ணோட்டம்' வேறுவேறு தான்.

"உள்ளூர்" என்ற பெயர் மலையாள மக்களின் உதடுகளில் தொட்டில் கட்டிக் கொண்ட ஒன்று. மகத்துவமிக்க கவிதைகளால் அல்ல, மருத்துவமிக்க கவிதைகளால் ரணப்படும் மனித இனத்திற்குக் குணப்படும் மார்க்கம் கண்டவர், மலையாள இலக்கிய வரலாற்றை மா காவியமாகப் பாடியவர் உள்ளூர் பரமேசுவர அய்யர். அவரின் "பிரேம சங்கீதம்' என்னும் பிரபலமான கவிதையின் வரிகள் இத்தகைய கண்ணோட்டத்தின் வெள்ளோட்டமாக வெளிப்பட்டுள்ளன.

“விளக்குக் கைவசம் உள்ளவனுக்கு
உலகம் வெளிச்ச மயம்
வெள்ளை மனது கொண்டவனுக்கு
எல்லாம் அமுத மயம்

காண்பவன் இல்லை என்றால்
உலகில் காணப்பொருளே இல்லை
ஆண்டவன் படைப்பில் ஒன்றுக்கொன்று
அணையா உயிரும் இல்லை

இயற்கைப் பொருள்கள் எல்லாவற்றிலும்
ஈர்ப்பே குணமாகும்
எல்லா உயிர்க்கும் அடிப்படையானது
அன்பின் மணமாகும்

குனிபவன் உயர்வான், நட்டவன் தின்பான்
கொடுப்பவன் பெற்றிடுவான்
இனிய சொர்க்கம் புனைவதும் நாமே
நரகமும் அவ்வாறே”

நகச்சுடர் ஒளிர, அஞ்சுவிரல் திரியாக, கையே விளக்காகி விட்டவனுக்கு வாழ்வில் இருள் என்பதே இல்லை. அப்படிப்பட்டவன் விடிய விழிப்பவன் இல்லை. விழித்தே விடிய வைப்பவன். இரவல் நெருப்பின்றிச் சுயாக்கினியால் சுடர்வதால் அவனுக்குத் தினமெல்லாம் தீபாவளிதான்.

உள்ளாவி தன்னில், தனக்குத் தான் வெள்ளாவி வைத்து மனதைச் சலவை செய்து கொண்டவனுக்கு மகிழ்ச்சி வாழ்க்கைப் பட்டு விடும். மரணங் கூட அவனிடம் சரணம் அடைந்து விடும். வாழ்க்கை வாக்கியத்திற்கு முற்றுப்புள்ளி விழலாமே தவிர, அர்த்தத்திற்கு அந்தமில்லை. 'நஞ்சை' அமுதாக்கும் தஞ்சை விவசாயி போல, எத்தகைய நஞ்சினையும் அமுதாக மாற்றும் இரசவாதியாக

அவன் மாறி விடுகிறான். பிறகென்ன அவனுக்கு எல்லாம் அமுதமயம் தான்.

வண்டுகள் இல்லா ஊரில் பூஞ்சோலைகள் பூப்படைந்து என்ன பயன்? காண்பவன் கண் அவன், அவன் இல்லையென்றால் காணப்பட வேண்டிய பொருள் எல்லாம் கைம்மையில் இருக்க வேண்டியது தான். பொருள் பொருளற்றதாகி விடுகிறது. கண்களும், வாயும் உள்ள புல்லாங்குழலில் காதுகள் முளைக்கச் செய்யும் அபூர்வமாக இசை அமைய வேண்டும். ஆனால் செவிட்டுப் பூமியில் சிந்து பைரவி பாடி என்ன பயன்? பார்ப் பவனும் சரியாகப் பார்க்க வேண்டும். அதனால் தான் இருட்டை அடையாளப்படுத்தும் கரிய விழிப்பாவையையும், வெளிச்சத்தை அடையாளப்படுத்தும் வெள்ளை விழிப்படலத்தையும் கண்ணில் ஒன்றாக வைத்துக் கடவுள் படைத்திருக்கிறான். அப்படிப்பட்ட பார்வையில்லாதவர்கள் உலகத்தில் பார்க்கப்படும் பொருளே இல்லை. பார்க்கப்படுவதிலும் பொருள் இல்லை.

புவி ஈர்ப்பு இல்லாத இடத்தில் மனித இயக்கம் சாத்தியமில்லை. ஈர்ப்பின்றி இவ்வுலகில் எதுவுமில்லை. காந்தத்தில் ஒத்த முனைகள் நெருங்கினால் ஈர்ப்பின்றி விலகிப் போகும்; எதிர்முனைகள் ஈர்ப்பினால் நெருங்கிச் சேரும். தனக்குத் தான் ஈர்ப்பென்ற தன்னல வாழ்வு சாத்தியமில்லை. தனக்கு எதிரே இருப்பவரை நோக்கியே ஈர்ப்பு நிகழும். வாழ்வின் இயக்கம் சாத்தியப்படும். தன் மார்பில் பால் குடித்த தாய் உண்டா உலகில்? இந்த உயிர் ஈர்ப்பு விசை தான் அன்பு.

கேட்டது எல்லாம் கிடைக்கும் இடம் சொர்க்கம் என்பார்கள். காபூல் திராட்சை வேண்டுமா கணத்தில் கிட்டும். திருப்பதி லட்டு வேண்டுமா, நொடியில் பெறலாம். கேட்டது கிடைக்கும் சொர்க்கத்தில் உனக்குப் பசியிருக்காது. கிளியோபாத்ரா கிட்டத்தில் வேண்டும் என்றால், கண்ணிமைக்கும் நேரத்தில் என் கையருகே இருப்பாள். ஆனால் உனக்கு ஆசையிருக்காது. அது சொர்க்கமா என்றால் இல்லை அது தான் நரகம்.

நரகத்தில் கேட்டது கிடைக்காது. உனக்குப் பசிக்கும். நரகில் நீ விரும்பும் பெண் கிடைக்க மாட்டாள். ஆனால் உனக்கு ஆசையிருக்கும். மனிதன் சொல்கிறான் பரவாயில்லை அந்த நினைப்பே போதும். தேடலை அது தூண்டும். முயற்சியை உருவாக்கும். எனவே, நரகமே நன்று என்கிறான். ஆக சொர்க்கம் நரகம் வேறெங்கோ வெளியில் இல்லை. அது நம்மிடம் தான். நம் மனத்தில் தான். அன்பினால் ஆன சொர்க்கத்தில் என்ன நிகழும்?

குனிபவன் உயர்வான். பள்ளத்தில் இருக்கும் மனிதன் எதிரே இருக்கும் உயர்ந்த மலையை நிமிர்ந்து பார்க்கிறான். மலை

உச்சிக்குச் சென்றவுடனே தலைகுனிந்து கீழே பார்க்கிறான். ஆமாம் தாழ்வில் நிமிர்வும், உயர்வில் பணிவும் தேவை என்பதைத்தானே உணர்த்துகிறது. சரியான கண்ணோட்டம் உள்ளவன் பின்வருமாறுதான் எண்ணுவான்: சொர்க்கத்தில் குனிபவன் உயர வேண்டும். நட்டவன் தின்ன வேண்டும். கொடுப்பவன் பெற்றிட வேண்டும், ஒரு முத்தத்தைப் போல. கொடுக்கிற போதே வசூலாகிற ஒரே கடன் முத்தம் தானே. சொர்க்கமும் நரகமும் உன் கண்ணோட்டத்தில் தான் தீர்மானம் ஆகிறது. மரத்தை விறகாகப் பார்க்கும் வெட்டியான் மனப்பான்மை விலகட்டும். அன்பினால் ஆகட்டும் அவரவர் சொர்க்கம்.

"உள்ளூர்" மீட்டும் பிரேம சங்கீதம் நம் ஆன்மாவுக்குள் அலைகளை எழுப்பிய வண்ணம் இருக்கிறது; இசைப்பவன், ரசிப்பவன் என்ற இரட்டை நிலை மாற்றி அத்துவித்தமாக்கி விடுகிறது. ஆமாம் கலைமகளின் வீணை நரம்பெல்லாம் கவிதை வரிகள் தானே.

ஜனவரி 2006

ஒளியும் ஒளியும்



2004 ஆம் ஆண்டில் பாகிஸ்தானிலிருந்து ஒரு முஸ்லிம் தாய் கைக்குழந்தையுடன் சென்னைக்கு வந்தார். பிறவியிலேயே அந்தக் குழந்தைக்குப் பார்வையில்லை. கருப்பு விழிப் பொட்டிழந்து விதவை ஆடையுடுத்தி வெள்ளை விழிப்படலம் அக்குழந்தைக்கு.

இரண்டு தமிழர்கள் விழிதானம் செய்யும் கண்ணப்பர்கள் ஆனார்கள். அறுவை சிகிச்சை முடிந்தது. குழந்தைக்குப் பார்வை வரம் கிட்டி விட்டது. வெளிச்ச சாட்சியாக விதவை மறுமணம் நிகழ்ந்து விட்டது. என் நாட் குறிப்பில் எழுதி வைத்தேன்:

“பாகிஸ்தானியர்களே !
இதுவரை
இந்தியர்களாகிய எங்களுக்குக்
கண்ணீரையே தந்தீர்கள்

நாங்கள்
கண்களையே தந்தோம்!
எல்லை தாண்டிய
பயங்கரவாதம் உங்களது.
எல்லை தாண்டிய
மனித நேயம் எங்களது!

பார்வை விழிபெற்ற
பாகிஸ்தான் குழந்தையின்
தாயே!
உனக்கொரு வேண்டுகோள்!
இதுவரை
இந்திய விழிகளில் இருந்து
கண்ணீரையே வரவழைத்தீர்கள்!
அந்தப் பழக்கத்தில்
உன் குழந்தையின்
கண்களிலிருந்தும்
கண்ணீர் வராமல் பார்த்துக் கொள்!
அதிலிருப்பவை
இந்திய விழிகள் அல்லவா!"

2004 என்ற எண்ணுள்ள ஆண்டு சொன்ன செய்தி இதுதான். 2 என்பது இரண்டு மனிதர்கள்; இரண்டு பூச்சியங்கள் இரண்டு விழிகள்; இரண்டு மனிதர்கள் இரண்டு விழிகளைத் தானம் செய்தால் 4 பேர் விழிகளில் வெளிச்சம் பதியனாகும்.

பாகிஸ்தான் திரும்பிய அந்தத் தாய் அங்குள்ள தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி உலுக்கி விட்டது. அவர் சொன்னார்:

"கண்ணறுவை முடிந்தது
விழிநடவு நிகழ்ந்தது.
நடவிற்குப் பிறகு அறுவடை இல்லை
வித்தியாசமாக
அறுவைக்குப் பிறகு
அழகிய நடவு.

என் குழந்தைக்குக்
கிடைத்தவை
வேற்றுக் கண்கள் அல்ல
நாற்றுக் கண்கள்
மாந்தநேய
ஊற்றுக் கண்கள்.

கண்கட்டு அவிழ்க்கிறார்கள்!
என் குழந்தையின்
கன்னிப்பார்வை
எதன் மீது விழும்?

தன்னைத் தந்த
அன்னை மீதா?

அன்னைக்குக் குழந்தையாகிய
தன்னைத் தந்த தந்தை மீதா?

இரண்டின் மீதும் அல்ல
கண்ணைத் தந்த
சென்னை
மண்ணைத்தான்
மழலை பார்த்தது!

இதோ
வெளிச்ச தீபம்
ஏற்றிய
விழிகளோடு என் குழந்தை!
இந்த
முஸ்லிம் குழந்தையின்
விழி வீட்டில்
இனி
தினந்தோறும்
தீபாவளிதான்"

இந்த நிகழ்வுக்குப் பின் இருட்டு, ஒளி பற்றி என் எண்ணங்கள் சிறகடிக்கத் தொடங்கின. காலத்தின் கால்களில் ஒன்று இருட்டு, மற்றொன்று பகல். காணும் விழியிலும் இறைவன் இந்தக் கருப்பு வெள்ளையை இணைத்தே வைத்துள்ளான். அதிலும் ஒரு சிறப்பு. வெள்ளை ஒளிப்பார்வையைக் கருப்பு விழிதான் வழங்குகிறது, வாழ்வின் இருண்ட நேரங்களில் தான் உண்மையான உறவுகளைக் காண முடியும் என்பது போல.

எது சரியான பார்வை? ஒரு பொருளின் ஒளி மிகுந்த பக்கத்தையும், இருண்ட பக்கத்தையும் பார்த்து முடிவெடுப்பதுதான் முழுமையான சரியான பார்வை. ஒளியின் பெறுமதி இருட்டினாலேயே தீர்மானிக்கப்படுகிறது. இது ஓர் அழகிய முரண்.

புகழ்மிக்க கவிஞர் பாப்லோ நெருடா, ஒரு முறை

"What is darkness
I can explain
but
I can not explain
what is light
Light is the shadow of God"

"இருட்டு எதுவென
என்னால் விளக்க இயலும்
வெளிச்சம் எதுவென
விளக்க முடியாது

ஒளி என்பது
இறைவனின் நிழல்"

சிவந்த பெண்ணுக்கும் நிழல் கருப்புத்தான். எதனின் நிழலும் கருப்புதான். இறைவனின் நிழலே ஒளிதான் என்றால், இறைவன் எப்படி இருப்பான்? தூர்சினாய் மலையில் இறைவனைத் தரிசிக்க அனுமதி கேட்ட மூஸா (அலை) நபிக்கு இறைவன் தன் ஒளியின் ஒரு பகுதியை வெளிப்படுத்த அதனைத் தாங்க இயலாது மயங்கிக் கீழே விழுந்தார். ஒளிவண்ணத்தை எளிமையாக்கி அளி செய்வான் ஆண்டவன் என்னும் வைணவம் அதனை 'சௌலப்யம்' எனக் குறிக்கிறது. மணிவாசகமும் இதன் உட்கிடையை

"அவனருளாலே அவன்தாள் வணங்கி"

என்று திருவாசகத்தில் பாடுவதும் எண்ணத்தக்கது.

மௌலான ரூமி, தனது மஸ்னவி ஷரீஃப் காவியத்தில் 1344-ஆம் கண்ணி முதல் 1348 ஆம் கண்ணிவரை மற்றொரு அழகிய கருத்தையும் புலப்படுத்துகிறார்.

"...... ஒளியின் எதிரான இருளைக் கொண்டு நீ ஒளியின் இயல்பைத் தெரிந்து கொண்டாய். ஏனெனில் யதார்த்தத்தில் ஒரு எதிரி உண்டாயிருத்தலை அதன் எதிரியே எடுத்துக் காட்டுகிறது...

முடிவாக மறைந்திருப்பவை தத்தம் எதிர்மறையால் வெளிப்படுகின்றன. இறைவனுக்கு எதிர் இல்லாமையால் அவன் மறைவே மறைவாக இருக்கின்றான்.

இறைவன் ஒளியை எடுத்துக்காட்ட, அந்த ஜோதியின் எதிர் எதுவும் பிரபஞ்ச இயற்கையில் கிடையாது".

இறைமை என்பது ஸ்பரிசிப்பதற்கும், தரிசிப்பதற்கும் உரியதன்று. உணர்தற்குரியது. ஒளி என்ற சொல் வெளிச்சத்தை மட்டுமின்றி ஒளிந்து கொள் என்ற பொருளையும் தருகிறது. ஒளியாய் இறைவன் ஒளிந்திருக்கின்றான். அவனை ஜெபமாலை, உருத்திராட்சம், நெஞ்சில் வேர் விழா நெற்றிக் காய்ப்பு போன்ற இருட்டுப் பின்னணியில் உலகம் அடைய முயல்கிறது. ஊசிக்கண்ணால் ஒன்றும் பார்க்க முடியாது.

"விட்டிலே
விளக்கினைச் சுற்றிச் சுற்றி
இறகுகளைக் கரித்துக் கொள்ளாதே
தீபச் சுடராய் எரித்துக்கொள்
செத்து விதமாவதை விட
அத்து விதமாகி விடு!"

பிப்ரவரி 2006

பூ வரம்



பூது பூவுலகம், 'நாளடைவில் பிள்ளையின் பெயரை வைத்தே இன்னார் அப்பா, இன்னார் அம்மா' என அழைக்கப்படுவதைப் போலவே, நிலத்தையும், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என பூக்களாலேயே நம் முன்னோர்கள் 'ஞானஸ்நானம்' செய்தார்கள். வாழ்விலும், சாவிலும் பூவே முதலிடம் பெற்றது. வழிபாட்டுக்கும் மலர்தான். மன்மத நாட்டின் ஏவுகணையே மலர்தான்.

"அன்பே!
இந்தப் பூக்கள்
கொடியில் வாழ்வதைக் காட்டிலும்
உன்
கூந்தலில்
சாவதையே விரும்புகின்றன"

என்கிறான் வடமொழிக் கவிஞன் பத்துருஹரியின் கவிதைக் காதலன். இரவில்

மலரும் பூக்கள் எல்லாம் பால்சொட்டுப் போல வெள்ளை நிறத்தில் இருப்பது ஏன்? இரவின் நிறமோ கருப்பு. இருளின் நிறமும் கருப்பு. மலரின் காதலன் வண்டின் நிறமும் கருப்பு. இரவில், இருளில், வருகிற காதலன் தன் இருப்பிடம் தெரியாமல் தவிக்கக் கூடாது என்றே இரவுப் பூக்கள் வெள்ளையாகவே மலர்கின்றன.

காலங்காலமாகச் சூரியனும், தாமரையும், நிலவும், அல்லியும் முறையே காதலன், காதலியாகப் பாடப் பெற்று வருகின்றன. இதனை ஏற்றுக் கொள்ள இயலுமா? சூரியனின் காதலி அல்லிதான். நிலவின் காதலி தாமரைதான்! சூரியன் வருகையில் தாமரையும், நிலவு வருகையில் அல்லியும் நாணமின்றி இதழ் அவிழ்த்து, காதலனை நேருக்கு நேர் பார்த்து விரிகின்றன.

எந்தக் காதலி, காதலனைக் கண்டவுடன் இப்படி நடந்து கொள்வாள்? மாறாகச் சூரியன் வந்தவுடன் அல்லி நாணிக் கூம்பி விடுகிறது. நிலவு வரும்போது தாமரையும் வெட்கத்தோடு இதழ் குவித்துத் தலை கவிழ்கிறது. எனவே சூரியன்-அல்லி, நிலவு-தாமரை என்பவையே நிஜமான ஜோடியாக இருக்க முடியும்.

காதல் தேசத்துச் செலவாணி நாணயங்களே பூக்கள் தாம். மலர் காதல் நட்பின் குறியீடு. பழைய தமிழ்ப்பாடல் ஒன்று காதல் நட்புக் குறித்துப் பின்வருமாறு பேசுகிறது.

"கோட்டுப்பூப் போல மலர்ந்து பின் கூம்பாது
வேட்டதே வேட்டதாம் நட்பாட்சி – நாட்டில்
கயப்பூப்போல் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரும் நட்பாரும் இல்"

இருவகையான பூக்கள். ஒன்று கிளையில் மலரும் கோட்டுப் பூ. மற்றொன்று குளத்தில் மலரும் கயப்பூ. கிளைப் பூக்கள் மலர்ந்து விட்டால் பின்னர் கூம்புவதில்லை. நல்ல நட்பும், காதலும் அப்படித்தான். ஆனால் இதற்கு எதிரான போலிக் காதலும், நட்பும், குளத்துப் பூப்போல, முதலில் விரியும், பின்னே கூம்பும். இதனை உள்வாங்கியே கவியரசு கண்ணதாசன் 'நெஞ்சில் ஒரு ஆலயம்' திரைப்படத்திற்காக எழுதிய பாடலில், உண்மைக் காதல்

"ஒரு கொடியில்
ஒரு முறைதான்
மலரும் மலரல்லவா!
ஒரு மனதில்
ஒரு முறைதான்
மலரும் உறவல்லவா!" என்கின்றார்.

அந்த வரிகட்கு உலக இலக்கியங்களில் இணையில்லை. அடுத்த பெண்ணின் பெயரை, நாவினால் படித்தால் எச்சில் படுத்தியதாகி விடுமே என்று, இமையுதடுகளால் மட்டுமே படிக்கும் இங்கிதக் கற்பு உண்மைக் காதலுக்கு மட்டுமே சாத்தியம். பேரின்பக் காதலும் "காமமிகு காதலன் தன் கலவிதனைக் கருதுகின்ற, ஏமமிகு அன்புடையாள் இன்பினும் இன்பாய் அது" என்பார் வள்ளலார்.

ஞானப் பெண்மணி இராபியா பஸ்ரியிடம், ஒருவன் நீங்கள் ஏன் என்னைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது எனக் கேட்க, அவர்

1. "இவ்வுலகை விரும்புபவன் அலி.
அலியை எப்படி மணக்க முடியும்?

2. சுவர்க்கத்தை விரும்புவது பெண்
நான் ஒரு பெண்!

3. இறைவனை விரும்புகிறவர் ஆண்
நீங்கள் ஒரு ஆண்.

அந்த ஞானப் பூ இறைமணத்துடன் இரண்டறக் கலக்க விரும்பியது. இதனைப் பேரின்பக் காதலின், கற்புநிலையாக அறியலாம். 'மானுடர்க்கென்று பேச்சுப் படின், வாழகில்லேன்' என்ற ஆண்டாளின் அகமியமும் படியெடுக்க முடியாத பக்திக் கற்பாகும். ஒரு கொடியில் ஒரு முறை தான் மலரும் உறவாகும். அது புனிதமிக்க ஏகத்துவத்தின் பூப்பு நிலையாகும்.

இலக்கியத்திற்கான நோபல் பரிசு இந்தியாவிற்குக் கிடைத்தது குருதேவர் இரவீந்திரநாத் தாகூரின் கீதாஞ்சலியால் தான். கீதாஞ்சலியின் சாரமே இறைக்காதல் தான்.

**"இந்தப் பூவைப்
பறித்துக் கொள் தலைவா!
பூஜாவேளை தவறிவிட்டாலும் இந்தப் பூவைப்
பறித்துக் கொள் தலைவா
மலர்
பூஜைக்குப் பயன்படாவிட்டாலும்
உன் ஸ்பரிசமாவது
அதற்குக் கிட்டுமல்லவா!"**

மொட்டு நிலையில் கும்பிடும் கரமாக இருக்கும் பூ, பக்குவ அவிழ்வில் மௌன மண மந்திர உச்சாடனத்தில் நிற்கிறது. முதிர்வின் உதிர்வில் பூசை வழியாக இறைமட்டம் அடையத் துடிக்கிறது. இந்தச் சடங்குகளில் இறை தரிசிக்கக் கிடைக்கலாம். ஸ்பரிசிக்கக் கிடைக்குமா? பூசை வேளை தவறிவிட்டாலும் பூ தலைவனை எண்ணியே ஒற்றைக் காலில் தவம் இருக்கிறது. எதற்காக? அள்ளி வழங்குபவன், கிள்ளி வழங்க மாட்டானா? அப்படிக் கிள்ளும் போது கிடைக்கும் அவன் ஸ்பரிசமே எனக்கு முக்தி எனப் பூ எண்ணுவதாகத் தாகூர் குறிக்கிறார். நார் கழுத்திறுக்கும் போதும் சிரிக்கும் பூ. இப்படிப் பல படிநிலைகளில் பூ ஆன்மாவின் உருவகமாக நிற்கிறது. அவன் தீண்டலுக்காகவே; மரணம் கூட அவன் சரணத்திற்காகவே என்ற பூ வாழ்வு நமக்குள் கமழ்கிறது. பூவரம் தா என இறைவனிடம் கரமலர்கள் துஆவில் (பிரார்த்தனையில்) விரிகின்றன.

மார்ச் 2006

அதிரும் தந்திகள் அடிபடும் பறவைகள்



உயிர் இரக்கம் கவிஞனின் சுவாசம். அவன் எழுதுகோல் சொட்டு மருந்தும் போடும். குத்திக் கிழித்து அநீதியை இரத்தம் சொட்டவும் வைக்கும். அவன் பேனாவில் இருக்கும் அந்த ஒற்றைக் கண் நெற்றிக் கண்ணாகவும் திறக்கும். சமூகத்தின் எந்தப் பகுதி அடிப்பட்டாலும் அந்தக் கண்ணில் கண்ணீரும் சுரக்கும். வீரமும், ஈரமும் கவிஞனின் இதயத்தில் தமனியாகவும் சிரையாகவும் இருக்கும். எதிரெதிரான இரண்டு நிலைகளுக்கும் காரணம் நேயவுணர்வுதான். ஜூலியஸ் சீசரின் நெருக்கமான நண்பனான புரூட்டஸ், சீசரைக் கொன்றதற்கான காரணத்தைச் சொல்லும் போது

'I love not caesar the less but Rome more'

(நான் சீசர் மீது வைத்த அன்பு குறைந்ததல்ல. அதனை விட என் தாய்நாடான ரோமானிய நாட்டின் மீது நான் வைத்துள்ள அன்பு அதிகம்) அதனைப் போலவே கவிஞர்கள் மற்றவற்றின் மீது கொண்ட பற்று குறைந்தது அல்ல. சமூகத்தின் மீது கொண்டுள்ள பற்று அதிகம் என்பதே இரண்டு நிலைப்பாடுகட்கும் அடிநாதம்.

ஒரு கொடிக்குக் கீழே காதலியின் காலடித் தடத்தைப் பார்க்கிறான் காதலன்.

"அந்தக் காலடித் தடங்கள்
ஆடும் கொடிக்கு
அணிசிலம்பாயிற்று.
சில்லென்ற காற்று
சிலம்பைக் கலைக்கையில்
என் கண்கள் அல்லவா
பரல்களை உதிர்க்கின்றன"

என்கிறான்.

காலடித் தடம் காற்றால் சிதைகையில் கலங்கும் பஞ்சுநெஞ்சு. இந்த மெல்லுணர்வு படைப்பாளிகளின் சாமர்த்திய சமயோசித சதுரப் பாட்டையும் கூர்மைப்படுத்துகிறது. அவன் தன் துயரங்களையும் ரசனைக்குரியதாக மாற்ற அது உதவுகிறது.

கானல் நீரையும் ஆவியாக்கி விடும் வேனல் பூமி இராமநாதபுரச் சீமை. வறண்டு வெடித்த பூமியின் விரிசல் உதடுகளால் உச்சரிக்கப்பட்ட நாடோடிப் பாடல்களாக அந்தச் சீமை மக்கள் வெளியேறும் வறண்ட சூழல். ஓர் தட்டிலே பொன்னும், ஓர் தட்டிலே நெல்லும் ஒக்க விற்கும், கார் தட்டிய பஞ்ச காலம். எப்பக்கம் பார்த்தாலும் எரியாத அடுப்பும், எரிகின்ற வயிறும். புலவன் வறுமையோ இன்னும் மோசம். விழி தோண்டப்பட்ட பிறகே புல்லாங்குழல் துளை எச்சில் காற்றை இராகமாக்கி மகிழ்விப்பதைப் போலப் புலவன் தன் துன்பத்தையே கவிதை மகிழ்வாக்கி விடுகிறான். சேதுபதி வள்ளலிடம் பொருள் கேட்க செல்கிறான். இல்லை என்ற சொல்லை அவன் இதழ்கள் அவிழ்க்குமுன்னே சேதுபதி வள்ளல் பொற்கிழியை அவிழ்க்கிறான். வள்ளல் வழங்கிய செல்வத்தை வைத்துப் பட்ட கடன் அனைத்தையும் புலவன் அடைக்கிறான். வெறுங்கையனாய் அரசர் முன் மறுநாளே வந்து நிற்கிறான். அரசன் என்ன என்பதைப் போலப் புலவனைப் பார்க்கிறான். புலவன்,

"அரசே
உன்
கொடையோ
குறைவு பட்டதன்று

நீ
வான் மழையாகத்தான்
வழங்கினாய்

என் வறுமை
குடையாக அல்லவா இருக்கிறது
ஒரு சொட்டும் உள்ளிறங்காமல் தடுக்கின்றது"

துயர, நிகழ்வை, நெகிழ்வாக்கி, மகிழ்வாக்கி விட்டான் புலவன். வான் மழை கொடை; வறுமை குடை என்ற உவமையில் மயங்கிப் பரிசல்களைக் குவித்து வழங்கினான் வள்ளல். முன்னே விழுந்த நிழலைத் துரத்திப் பிடிக்க முயல்பவனைப் போல, வளமையைப் பிடிக்க, வறுமைப் புலவன் ஓடினான். முடியவில்லை. அடுத்த நாளும் அரசனிடம் செல்வது அவமானம் என அஞ்சினான். நினைப்பின் அலுப்பில், சலிப்பில் அரசனை முகச் சுளிப்பில் கற்பனையாகக் கண்டு உள்ளம் சுண்டிப் போனான். பாலுக்கழும் பச்சிளம் குழந்தை, கூழுக்கழும் வளரும் பிள்ளை, அவலம் கழுத்தைப் பிடித்துத் தள்ள அரசன் முன் விழுந்தான். அரசன் வாய் திறக்கும் முன்னே புலவன்,

"அரசே!
பொருள் வேண்டி
வந்துள்ளேன்
என
எண்ணி விடாதே!

அரச விசுவாசத்தில்
அடியேன் வந்துள்ளேன்!
உன்
உளவுத் துறை கூட
கண்டுபிடிக்க முடியா
ஒரு குற்றவாளியைப்
பிடித்துக் கொடுக்க வந்துள்ளேன்

உன்னால்
நாடு கடத்தப்பட்ட
குற்றவாளி அவன்.
யாருக்கும் தெரியாமல்
இரகசியமாக
என் வீட்டுக்குள் புகுந்திருக்கிறான்"

என்றான். அரசனோ வியந்து,

"என்னால் நாடு கடத்தப்பட்ட
அந்த
இராஜ துரோகக் குற்றவாளி
யார்?"

என்றான். புலவனோ

"அவன்
வேறு யாருமல்ல
வறுமை"

என்றான். அக மகிழ்வுற்ற அரசனோ மீண்டும் அள்ளி, அள்ளி வழங்கினான். வெட்டுப்பட்டுப் பிளவு பட்ட வேப்ப மரப் பிளவில் இருந்து, ஒட்டும் கோந்துப் பிசின் சுரப்பது போல, வறுமைக் காயமும் அவன் கவிதை வண்மையைக் கூட்டிவிட்டது.

> "Ah, poverty, I mourn for your sad fate
> so long ago, you claimed me as your friend
> And ever since you have been my constant guest
> where will you find a home when I am dead"


என்கிறான் வடமொழிக் கவிஞன் சுடரேகா (SUDRAKA)

> **'ஓ, வறுமையே**
> **உன் வருத்தத்திற்குரிய**
> **விதியை எண்ணி**
> **ஆழ்ந்த இரங்கல்!**
> **நெடுங்காலத்திற்கு முன்பே**
>
> **நீ**
> **என்னை**
> **நேசத்திற்குரிய நண்பனாக்கிக் கொண்டாய்**
> **அதிலிருந்து**
>
> **நீ**
> **என்**
> **நிரந்தர விருந்தினன் ஆகி விட்டாய்!**
> **நான்**
> **இறந்து விட்டால்**
>
> **நீ**
> **என் இல்லம் போன்றதொரு வீட்டை**
> **எங்கே காண்பாய்?**

என்பது அந்தக் கவிஞனின் அவலத் திவலை. புசிப்பதற்கு ஒன்றுமில்லையே என்று வறுமை கேட்டால் தன்னையே தரும் கவிஞன், வறுமை வசிப்பதற்கு ஓரிடமாகத் தன் இல்லத்தையே வழங்கும் வறுமை வள்ளல் ஆகி விட்டான். அவன் இறப்பதற்கு அஞ்சுகிறான். எதற்காக? வசிப்பதற்கு வேறிடமின்றி வறுமை துன்பப்படுமே என்ற கவலையே காரணம். இப்படிப் பட்ட கவிஞர்களின் வலி, பிரசவ வலிதான். விளைவு மகிழ்ச்சி மழலைதான். அதிரும் தந்திகள், அடிபடும் முழவுகள் தாமே அமுத இசையை எழுப்புகின்றன!

ஏப்ரல் 2005

கரிசலாங்கண்ணிக்குக் காமாலை



தன் நிழலும் தரையில் விழாத தஞ்சைப் பெருவுடையார் கோயில் கோபுரம் கம்பீரமாய் நிற்கும். கட்டடக் கலை அதிசயம் மட்டுமா அது? தன் நிழலும் பிறன் காலில் மிதிபடல் ஆகாது என்று சொல்கிறதா? இல்லை, இல்லை. மனிதா உன் நிழல் கூட உன் காலில் விழ வேண்டாம். உன் நிழலாக இருக்கலாம்; அதனை உன் காலில் விழக்கூட அனுமதிக்காதே. கோபுரத்தின் பெருமிதம் உனக்கும் வர வேண்டும். அதன் பெருமிதம் வளையாமையிலும், உறுதியாக நிற்பதிலும், தன் நிழலும்கூட தன் காலில் விழல் ஆகாது என்ற சுயமரியாதையிலும்தான் இருப்பதை உணர்கிறாயா?

அந்தக் கோபுரத்திற்குள் குடமுழுக்கின் போது பொன்னும், பொருளுமா இட்டு நிரப்பி வைத்துள்ளார்கள்? நவதானிய விதைகள். அண்டம் புரண்டு, அகிலம் அழிந்தாலும்,

அடுத்து வரும் புதிய தலைமுறைக்கான விதைகள்தாம் முந்திய தலைமுறை விட்டுச் செல்ல வேண்டியவை; முன்னோர்களின் கலசக் கருத்து இதுதான். எனவே, விதைகள் காப்பாற்றப்பட வேண்டும். பாத்திரம் கூட பசித்திருக்க வேண்டாம். கோபுரக் கலசமாயினும், ஏழைகளின் கலமாயினும், அவற்றின் வயிறும் நிரம்பியிருக்குமாறு பார்த்துக் கொள், அதற்கான விதைகளைக் காத்துக் கொள் என்பதே மனிதரை நோக்கி விடுக்கப்பட்ட செய்தி.

தெய்வங்கட்கு முன்னால் வகைவகையான உணவு வகைகளை மனிதர்கள் படைக்கிறார்கள். எந்தத் தெய்வமும் எடுத்துப் புசிப்பதில்லை. புசித்ததில்லை. வெளியே சாதமாய் இருப்பது, படையலுக்குப் பிறகு 'பிரசாதம்' ஆகி விடுகிறது. தெய்வ சம்பந்தம் இருப்பதாலா சாதத்திற்குப் பிரசாதம் என்ற ஞானக் குளியல்? பசித்த வயிற்றோடு இருக்கும் மனித விரல்கள் தீண்டும் பேறு பெறுவதால்தான் சாதத்திற்குப் பிரசாதம் என்று பெயர். எரியும் ஏழை வயிற்றுக்குள் சின்னச் சின்னக் கற்பூரத் துணுக்கு களாக சோறு இறங்கும்போது, உண்மையான கற்பூர தீபாராதனை நிகழ்ந்து விடுகிறது. அதுவும் ஜீவாலயத்தின் முன்பு. என்ன தானம் என்றாலும் அன்னதானம் 'அன்ன'தானம் எதுவுமில்லை.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

என்ற குறளும், 'திருவுடைய மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே' என்ற ஆழ்வார் வாக்கும், ஆள்பவனை ஆண்டவனாகக் கருதியமையைப் புலப்படுத்தும். வேண்டுதல் வேண்டாமை யற்றவனான ஆண்டவனுக்குப் படையலிடப்பட்ட உணவு படைப்பினங்களுக்கு உரியதே தவிரத் தனக்கன்று என்று, இறைவன் அதனைத் தீண்டுவதில்லை. மக்களுக்குரியதைப் பொருளா யினும், அன்றிப் பொதுப்பணம் ஆயினும் ஆள்வோர் தீண்டுதல் ஆகாது.

பொதுப் பணம் என்பது நீ பெற்றெடுத்த பெண்ணைப் போன்றது' என்றார் நபிகள் நாயகம் (ஸல்). பொதுப்பணம் என்பதின் பாதுகாவலனாக நீ இருக்கலாமே தவிர, அதனை நீ தீண்டல் கூடாது. ஆகாது. அப்படி ஒருவன் அதனைத் துய்க்க முற்படுவது எத்தகைய அருவெறுப்பான செயல்?

இன்று அரசியல்வாதிகளை இந்த இலக்கணப்படி சலித்தால், சல்லடைக் கண்களிலும் நீர் கசியும். கொள்கையை விட்டு விட்டு எதனோடும் சமரசம் செய்யாமை, சுயமரியாதை, எதற்கும் வளையாமை, அடுத்த தலைமுறைக்கான விதைக் கருத்துகள் பேணுதல், பொதுப்பணத்தைச் சுரண்டாமை போன்றவை தேர்தல் தராசில் எடைக்கற்களாக இருக்க வேண்டும். "18வகைக் குற்றங்கள் இல்லாதவர்களே ஊராட்சி வேட்பாளர்களாக இருக்க வேண்டும்; அவர்களில் யாராவது ஒருவர் பெயரை ஓலை நறுக்கில் எழுதி குடத்தில் இட வேண்டும். அப்படி இடப்பட்ட நறுக்குளில்

ஒன்றை வெளியில் எடுத்து, அன்னாரையே வெற்றி பெற்றவராக அறிவிப்பார்கள்" என்ற செய்தியைத் தஞ்சைப் பெருவுடையார் கோவிலில் உள்ள கல்வெட்டு தெரிவிக்கிறது. முடியாட்சிக் காலத்திலிருந்த குடியாட்சி உரிமை வியக்கத் தக்கதாக இருக்கிறது. மாறாக, இன்று மக்களாட்சி யுகத்தில், ஜனநாயகத்திற்குப் பதிலாகக் கட்சி நாயகமே கோலோச்சுகிறது. இருக்கிற நல்லவர்களில் ஒருவரைத் தெரிவு செய்யும் குடவோலை முறை எங்கே? கட்சி நிறுத்துகிற அயோக்கியர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் அவல நிலை எங்கே?

பழைய ஆங்கிலக் கதை ஒன்று. சொர்க்க வாசலில் செயின்ட் பீட்டர் உள்ளே தகுதி பெற்றவர்களை அனுப்பிக் கொண்டிருந்தார். கதவு மூடப் போகும் சமயம் ஓர் அறுவை சிகிச்சை மருத்துவர், ஒரு பொறியாளர், ஒரு அரசியல்வாதி மூவர் வந்தனர். செயின்ட் பீட்டர் அவர்களிடம் "உள்ளே அனுப்ப வேண்டியவர் பட்டியலில் ஏதோ தவறு நிகழ்ந்து விட்டது; தற்போது ஒருவர் மட்டுந் தான் உள்ளே நுழைய முடியும். உங்கள் மூவரில் யார் பழமையான தொழிலுக்கு உரியவரோ அவர் தான் உள்ளே அனுப்பப்படுவார்" என்றார். அறுவை மருத்துவர் 'ஆதத்தத்தின் விலா எலும்பிலே இருந்து ஏவாள் படைக்கப்பட்டார். அது அறுவையால்தான் நிகழ்ந்திருக்க முடியும். எனவே பழமையான தொழில் என் தொழில் தான்'' என்றார். பொறியாளரோ,"அப்படியில்லை, ஆதாம், ஏவாளைப் படைக்கும் முன்பு மூலம் ஒரே குழப்பமாய் இருந்தது. குழம்பிய நிலையிலிருந்து முறையாகத் திட்டமிட்டு ஒரு ஒழுங்கு முறையில் அனைத்தும் படைக்கப்பட்டன. திட்டமிட்டு அமைப்பு வேலை நிகழ்ந்துள்ளதால் பொறியியலே பழமை ஆனது" என்று மறுத்தார். உடனே துள்ளிக் குதித்த அரசியல்வாதி

> **"நீங்கள் இருவரும் எனக்குப் பிந்தித்தான் நிற்க வேண்டும்**
> **மூலப் பொருள்**
> **குழம்பிய நிலையில் இருந்ததல்லவா? யார் குழப்பியது**
> **என்று**
> **நினைக்கிறீர்கள்?"**

எனக் குழப்புதலே பழமையானது; எனவே தனக்கேதான் அந்தத் தகுதி என்று முடித்தார்.

தெளிவான மக்களைக் குழப்பி, 'தன்னிறைவுத் திட்டம்' ஒன்றே எல்லாத் திட்டங்களுக்குமான உள்நோக்கம் ஆகக் கொண்ட அரசியல்வாதிகள் அணிவகுத்து ஜனநாயக சுயம்வரத்திற்காக நிற்கிறார்கள். சாதி, மத, கட்சி சார்பின்றி வல்லமை மிக்க நல்லவர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

> "Stand with any body that stands for
> right; stand with him while he is
> right; part with him when he goes wrong"

என்கிறார் ஆபிரஹாம் லிங்கன்.

“யார் சரியானவற்றிற்காக நிற்கிறார்களோ அவர்களுடன் நில்லுங்கள்; அவர்கள் சரியாக இருக்கும் போது, அவர்களுடன்
நில்லுங்கள்; தவறிழைக்கும் போது அவர்களை விட்டுப் பிரிந்து விடுங்கள்”


பாதிரியாரிடம் யாரோ ஒருவர் கேட்டார், “ஓர் அரசியல்வாதியைப் பார்த்தால், அவருக்காகப் பிரார்த்தனை செய்வீர்களா?” பாதிரியார், “இல்லை, ஓர் அரசியல்வாதியைப் பார்த்தால் நாட்டுக்காகப் பிரார்த்தனை செய்வேன்” என்றார்.

சிணுங்கும் செல்பேசிச் செய்தியைப் பார்த்தேன். “ஒரு படகில் கருணாநிதி, ஜெயலலிதா, லல்லு பிரசாத் யாதவ், அத்வானி, உமாபாரதி, நட்வர்சிங் போன்றோர் செல்லும் போது, படகு கவிழ்ந்தால் யார் தப்புவார்கள்?” என்பது ஒரு SMS கேள்வி. பரிசுக்குரிய விடை : “நாடு, நாடு”.

சர்வாதிகார நோய்க்குச் சரியான மருந்தென்று ஜனநாயகமே கண்டோம். மருந்துக்கே நோயா? கரிசலாங் கண்ணிக்கே காமாலையா? காப்பாற்றுவார் யார்? கரையேற்றுவார் யார்?

மே 2006

அஞ்சாத தலை



கைக்கு முந்திக் கொண்டு காற்றுக்கும் சலாம் சொல்லி அசையும் குஞ்சம்; அதனைத் தாங்கியுள்ள பச்சைக் கோபுரத் தொப்பி, தாடையில் தென்னகம் போலத் தாடி. மகத்தான தன் மகனை மண் முத்தமிட்டதால் நெற்றியில் துலங்கும் தொழுகைக் காய்ப்பு. அந்தக் கண்ணாடி நெற்றியில் ஹஜ்ருல் அஸ்வத்* முகம் பார்த்திருக்க வேண்டும். இதழ்களுக்கு மேலும் பொங்கித் ததும்பும் புன்னகை போல நரைத்த மீசை. கண்களில் ஊறும் கருணை வெள்ளத்தைத் தேக்கும் கண்ணாடி அணைக்கட்டு. சமுதாயக் கவலையிலேயே இளைத்த என்பு தோல் போர்த்த உடம்பு. இல்லை அன்பு தோல் போர்த்த உடல். எடுத்து வழங்க விரல்கள் இல்லையே என்று ஏங்கும் முழுக்கை வைத்த முரட்டு ஷெர்வானி. முகம் பார்க்க விரும்பி முந்தி வெளியேறும் காஜா கண்களின் கருவிழிபோல ஷேர்வானிப் பொத்தான்கள். மரமாயினும் மனிதனுக்கு 'ருக்கூ'* செய்தலாகாது என்ற கணக்கில், வளைபகுதி

---

*ருக்கூ - தொழுகையில் வளைந்து குனிந்து நிற்கும் நிலை

முன்னிருக்கப் பிடித்துச் செல்லும் நடைக்குச்சி (Walking stick) வேர் மண்ணும் காயப்படாப் பூவாளிச் சாரலாகப் பேச்சு. பிஞ்சுப் பருவ என் நெஞ்சில் பதிந்த பேட்டைப் பிறைநிலா காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப். 'அகராதியில் கண்ணியம் என்ற சொல் தேவையில்லை, காயிதே மில்லத் என்ற சொல் போதும்' என்ற பேரறிஞர் அண்ணாவின் வசந்த வார்த்தையே அவர் வாழ்க்கைக்குச் சான்று.

அன்னை தேசமோ அடிமைப் பிணக் குளிர்ச்சியில் உறைந்த நேரம். அந்தக் குளிர்ச்சியைத் தக்க வைத்திட, வெள்ளைப் பனி ஏகாதிபத்திய மழை. விடுதலை வேள்வி நெருப்புக் கங்குகளை உயிர்ப்பிக்க விசிறிகளே வாருங்கள் என அண்ணல் காந்தியார் மாணவர்களுக்கு அழைப்பு விடுத்தார். அதற்கு இதோ என் பட்டம் காணிக்கை எனத் தாம்பரம் கிறித்தவக் கல்லூரிப் படிப்பைத் துறந்த தேச பக்தர் அவர். ஆங்கிலப் படைக்கெதிராகக் காங்கிரஸ் பேரியக்கத்துடன் முஸ்லிம் லீக்கை இணைத்து இரட்டைக் குழல் துப்பாக்கியாக்கிய சுதந்தரப் போராளி.

ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் எதிரெதிராக நெருங்குவது, ஒரு கத்தரிப்பின் இருவாள்கள் நெருங்குவது போல; அவை ஒன்றையொன்று வெட்டிக் கொள்ளாது, இடையில் வரும் மக்கள் நலப்பணிக்கு வரும் தடைகளை மட்டுமே இணைந்து வெட்டி வீழ்த்தும். இந்த இலக்கணத்திற்கு இலக்கியமாகச் சென்னை ராஜதானி சட்டப்பேரவையில், 29 சிறுபான்மை முஸ்லிம் எம்.எல்.ஏக்களுடன் எதிர்க்கட்சித் தலைவராகச் சாதித்தவர் காயிதே மில்லத்.

"இந்திய மொழிகளில், தேசிய மொழியாக, ஆட்சி மொழியாக அரியணை ஏறும் தகுதி, தொன்மையும், பண்பாட்டு மேன்மையும், இலக்கியச் செழிப்பும் மிக்க என் அன்னை மொழியாம் தமிழுக்கே உண்டு" என்று பைஜாமா, ஜிப்பாப் பாராளுமன்றத்தில் வேட்டி கட்டிய தமிழுக்கு முதல் மரியாதை பெற்றுத் தந்த பெருந்தகை.

"என்னங்க இஸ்மாயில் சாகிப் பாய்? சொல்லவே இல்லையே! விண்ணப்பத்தில் பையனின் பெயருக்குக் கீழே தந்தையின் பெயர் என்ற இடத்தில் தங்கள் பெயரைப் பார்த்துத் தான் தெரிந்து கொண்டேன். உடனே பரிந்துரை செய்தேன். இடம் கிடைத்த தங்கள் பிள்ளை மியாகான் B.E. பொறியியல் வகுப்பில் நன்றாகப் படிக்கிறாரா?" என்று, மேடையில் தன்னருகே அமர்ந்திருந்த காயிதே மில்லத் அவர்களிடம் காதருகில் கிசுகிசுத்தார் நேரு கால மந்திரிசபை மத்திய அமைச்சர் அவினாசிலிங்கம் செட்டியார். "அப்படியா நன்றி" என்று புன்னகையைப் பதிலாக்கி விட்ட காயிதே மில்லத் வீட்டிற்கு வருகிறார். பிள்ளையை அழைக்கிறார். "இனி நீ B.E. பயிலச் செல்ல வேண்டாம்" என்கிறார். தந்தை சொல் தட்டாத தனயன் படிப்பை நிறுத்துகிறார். ரெக்கமன்டேஷன் (Recomendation) என்பது சில சமயம் இரக்கமென்டேஷனாகவும், பல சமயம் ரொக்கமன் டேஷனாகவும் இழிவுறும் நிலையில், அரிதான படிப்பு வாய்ப்பு, முறையற்ற வகையில் கிடைப்பதை

ஏற்காத நெறியாளர் அவர் என்பது அரசியல் அதிசயமாக இருக்கிறது.

'மண்ணின் மைந்தன்' என்ற கொள்கை 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற நெறியை உலகுக்கு உணர்த்திய தமிழர்கள் பரம்பரை தேர்தல் நேரத் தகுதியாகக் கருதுவதாக இருக்கிறது. இதற்கு மாற்றாகக் காயிதே மில்லத் அவர்களைத் தொடர்ந்து பலமுறை 'மஞ்சேரி'த் தொகுதிக் கேரள மக்கள் நாடாளு மன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்தார்கள். தொகுதிக்குப் போகாமலேயே வெற்றி பெற்றவர் என்று தோற்கடிக்க முடியாச் சரித்திரம் படைத்தவரும் அவர் தான். கேரள மக்கள் அவரைத் தமிழர் என்ற குறுகிய நோக்கில் பார்க்கவில்லை. அவரைப் பார்க்காமலே நாடாளுமன்றத்திற்கு மலையாள மக்கள் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் என்ன? வீட்டு மக்கள் நலம் கருதாமல் நாட்டு மக்கள் நலம் கருதும் தலைவர் என்பதுதான் அந்த மக்களின் கருத்திற்கு இசைவாகப் பட்டிருக்க வேண்டும்.

ஓணம் பண்டிகையின்போது நிகழ்ந்த நிகழ்வைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் 'தம்பிக்கு' எழுதிய மடலில் குறிப்பிடுகிறார். நிகழ்வல்ல அது; நெகிழ்வு. கனத்த கொடி மரத்தைக் கோவில் யானை தூக்கி, தோண்டப்பட்ட குழியில் நட்டு வைக்கும். பிறகு குழியில் மண்ணைத் தள்ளி, செம்மி, இறுக்கி கொடிமரத்தை நிறுத்துவார்கள். பிறகு திருவிழாவிற்கான கொடி ஏற்றுவார்கள். முன்னாளே குழி தோண்டப்பட்டது. மறுநாள் திருநாளின் தொடக்கம். குருவாயூர் கோவில் யானை தடிமரமாம் கொடிமரத்தைத் தூக்கி நடச் சென்றது. நடாமல் கொடிமரத்தைக் கீழே வைத்துவிட்டது. மீண்டும் அச்சுறுத்தி நடச் சொன்னார்கள். குழிக்கு அருகில் சென்று நடாது மீண்டும் யானை கொடி மரத்துடன் திரும்பிவிட்டது. இப்படி மூன்று முறை யானை அடம்பிடிக்க, பாகர்கள் சென்று குழியைப் பார்த்தார்கள். அதற்குள் ஈன்றணிமையுடைய கண் திறக்காத மூன்று பூனைக் குட்டிகள் 'மியாவ்' 'மியாவ்' என்று மென்மையாகக் குரல் எழுப்பிக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். பின்னர், பூனைக் குட்டிகளை வெளியில் எடுத்த பிறகுதான் கொடிமரத்தை நட்டதாம் யானை. இதனைக் குறிப்பிட்டுவிட்டு அண்ணா "யானை தான் பெரும்பான்மை சமுதாயம், பூனைதான் சிறுபான்மைச் சமுதாயம். யானையே பூனையைக் காத்தது போலப் பெரும்பான்மைச் சமூகம், சிறுபான்மைச் சமூகத்தை அரவணைக்க வேண்டும்" என்று எழுதுகிறார். எல்லா வகையிலும் சவலையாய்க் கவலைக்குரியதாய் இருக்கும் சிறுபான்மை மக்களின் மேம்பாடு ஒன்றே காயிதேமில்லத் அவர்களின் வாழ்நாள் இலட்சியமாய் இருந்தது. அவரைப் பொருத்த அளவில் தற்சார்பு, சமயச்சார்பு என்பது அறவே இல்லை. சிறுபான்மையோர் என்று அவர் கருதியது முஸ்லிம் மக்களை மட்டுமல்ல.

வெள்ளை மெழுகுவர்த்திகளை ஊதிக் கொண்டாடப்பட்ட, இந்தியச் சுதந்தரத்தின் முதல் பிறந்த நாளில் இந்தியா கேக்

இரண்டாக வெட்டப்பட்டது. பாகிஸ்தான் சுதந்திர தினக் கொண் டாட்டங்களில் பங்கு பெறுமாறு காயிதே மில்லத் அவர்களை அழைத்த காயிதே ஆஜம் முகமது அலி ஜின்னா, "சகோதரரே! ஒன்றுபட்ட இந்தியாவின் சுதந்தரத்திற்காகப் போராடியது நம் இயக்கமான இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக். இன்று நாடு இரண்டானதைப் போல முஸ்லிம் லீக்கும் இரண்டாகி விட்டது. ஒன்றாக இருந்த முஸ்லிம் லீக் கட்சிக்குள்ள சொத்துகளைப் பாகம் பிரித்ததில், 17 இலட்சம் ரூபாய் இந்தியாவில் இருக்கும் முஸ்லிம் லீக்கிற்குச் சேர வேண்டும். அந்தத் தொகையையும் தாங்கள் கராச்சிக்கு வரும்போது பெற்றுக் கொள்ள வேண்டும். புதிய நாடாம் பாகிஸ்தானத்து அரசு விருந்தினராகச் சுதந்தர தின விழாவில் பங்கேற்க அவசியம் வருகை தர வேண்டும்" எனக் கோரிக்கை விடுத்தார். பாகிஸ்தானின் தந்தைக்குப் பாரதத்தின் பிள்ளை இஸ்மாயில் சாகிப், 'தங்கள் அழைப்பிற்கு நன்றி. இந்திய முஸ்லிம் லீக்கின் பங்கிற்குரிய 17 இலட்சம் ரூபாய் எங்கட்கு வேண்டாம். நீங்கள் பாகிஸ்தானியர்கள்; நாங்கள் இந்தியர்கள்; ஒரு பாகிஸ்தானியரின் கைக்குக் கீழே ஓர் இந்தியரின் கை தாழ்வதை நாங்கள் விரும்புவதில்லை. அந்த 17 இலட்சம் ரூபாய்க்குப் பதிலாக, பாகிஸ்தான், ஆட்சித் தலைவராக இருக்கும் தாங்கள் ஓர் உத்திர வாதம் வழங்கினால், பெரிதும் மகிழ்வேன். பாகிஸ்தானிலிருக்கும் சிறுபான்மையினரான இந்து சகோதர, சகோதரிகளுக்குத் தங்கள் அரசாங்கம் பாரபட்சமின்றி என்றும் பாதுகாப்பு அரணாக இருக்கும் என்ற உறுதிமொழியைத் தாங்கள் சுதந்தர தினப் பரிசு அறிவிப்பாக வழங்க வேண்டுமென அன்புடன் கோருகின்றேன்" எனப் பதில் மடல் விடுத்தார். பிரசவத்தில் தாய் இரத்தம் சிந்துவது இயல்பு. ஆனால் இரட்டைக் குழந்தைகள் பிரசவிக்கப்பட்ட போது, பிள்ளைகளும் இரத்தம் சிந்திய பிரிவினை ரணங்களுக்குக் காயிதே மில்லத் வழங்கியவை களிம்பு வரிகள்.

பௌத்தம் தந்த பாரதத்துக்குப் பகரமாக யுத்தம் தந்தது செஞ்சீனா 1961இல். ஆக்கிரமிப்பில் சிக்கிய அன்னை தேசத்து எல்லைக் கோட்டை நம் வீரர்கள் மீட்டு, இரத்தத்தால் வரையத் தொடங்கிய வேளை. போர்நிதியை அனைவரும் திரட்டி நேரு பெருமானார்க்கு அனுப்பிய நேரம். முதல் பிரதமர் பண்டிதருக்குக் காயிதே மில்லத் கடிதமொன்று வரைந்தார்.

"மாண்புமிகு பிரதமர் அவர்களே! வெள்ளிமலை இந்திய எல்லைகளை மீட்க, வெள்ளிப் பணத்தை அள்ளி வழங்கு கிறனர் நாட்டு மக்கள். தாய்ப்பூமிக்குத் தனயனாம் நானும் யுத்த நிதி வழங்குகிறேன். நான் பெற்றெடுத்த என் ஒரே பிள்ளை மியாகானை யுத்த நிதியாக வழங்குகிறேன். ஏற்றருள்க! எல்லைக்கு அவனை அனுப்புக. இந்தியத் தாய் மண்ணைக் காக்கும் பணிக்கு அவன் தன்னை அர்ப்பணிக்கத் தயாராகவுள்ளான்".

ஆமாம்! இறைவனுக்குப் பிள்ளையை அர்பணிக்க இப்ராஹிம் நபி எண்ணிய போது, பாலகர் இஸ்மாயில் (அலை) வெட்ட வாள் ஏந்திய தந்தையை நோக்கி,

"தந்தையே, வான் பார்க்கும் வகையில், உம் முகத்தை நான் பார்க்கும் வகையில் என்னைக் கிடத்தி அறுக்க முயல வேண்டாம். இறைவனுக்கான குர்பானி (அர்ப்பணம்)ப் பலி நிகழ வேண்டியபோது, பிள்ளை முகம் பார்த்து, பாசத்தால் தாங்கள் தயங்கக் கூடும். ஒருவேளை பலியிடுவதை நிறுத்தி விடக் கூடும். இறைக் கட்டளையை மீறினார் என் தந்தை என்ற அவப்பெயர் வர வேண்டாம். என் முகம் தரை பார்க்கும் வண்ணம் என்னைக் குப்புறப் படுக்க வைத்துத் தாங்கள் அறுக்க வேண்டும்" என்று கூறியவை புல்லரிக்க வைக்கும் புனித வரலாறு. அந்த மரபின் தொடர்ச்சியைத் தந்தை காயிதே மில்லத்திடம், தனயன் மியாகானிடமும் தரணி பார்த்தது அன்று.

"consider the postage stamp; its usefulness consists in the ability to stick to one thing till gets there"

என்கிறார் அறிஞர் பில்லிங்ஸ் (Billings). என்ன நோக்கத்திற்காகத் தன் பயணம் நிகழ்கிறதோ, அந்த இலக்கை அடையும் வரை, இலட்சியத்தை விட்டுப் பிரிந்து விடாமல் இருப்பதற்கான எளிமையான எடுத்துக் காட்டாக அஞ்சல் தலையைக் குறிப்பிடு கின்றார். அஞ்சல் தலையைப் போன்றவர்கள் தான் அர்ப்பணிப்பு உணர்வுள்ள தலைவர்கள். அஞ்சல் தலை கடித உறையின் நடுநாயகமாகத் திகழ்கிறது என்ற தன்முனைப்பு இல்லை. மாறாகக் கடிதத்தின் ஒரு மூலையில் அடக்கமாக இருக்கிறது. போராட் டத்தில் வெயிலில், மழையில், தடியடியில், கைதில் தொண்டர்களை முன்னே தள்ளிவிட்டுக் குளிர்பான அறைகளில் பின்தங்கிவிடும் அஞ்சும் தலைவர்கள் உண்டு. ஆனால் 'அஞ்சல் தலைவர்' கவரின் முனை முகப்பில் முன்னே நிற்கிறார். அஞ்சல் நிலையத்தில் குத்தும் முத்திரையாய்த் தானே காயமும் படுகிறார். இருப்பினும் இலட்சியத்தை விட்டு விலகல் இல்லை. சமூகத்தின் கைகளில் கொண்டு சேர்க்கும் வரை வேறு பணிகளுக்காகப் பிறழ்வுகள் இல்லை. ஆனால், சமூகம் கடிதம் கிடைத்தவுடன் கிழிக்கும் உறையோடு அஞ்சல் தலையையும் தூக்கி எறிந்து விடுகிறது. முத்திரையிட்டவுடனேயே அஞ்சல் தலை மரணம் அடைந்து விடுகிறது. மரணத்திற்குப் பிறகும் இலக்கினுக்குக் கடிதத்தைக் கொண்டு சேர்க்கிறது. வாழ்ந்த காலச் செயல்பாட்டால், வாழும் காலத்திற்கும் அதன் பணி தொடர்கிறது. வெறும் பயன் பாட்டுப் பார்வையுடைய சமூகத்தில் முத்திரையிடப் பட்ட அஞ்சல் தலைகட்கு மதிப்பில்லை. அதன் பணியை இறுதிவரை அஞ்சல் தலை ஆற்றியதே என்ற நன்றியுணர்வும் இல்லை. கருமமே கண்ணான அஞ்சல் தலைகள் இதைப் பற்றியெல்லாம் கவலைப் படுவதுமில்லை.

ஜூன் 2006



கல்வாரியன்

வாரன் ஹேஸ்டிங்ஸ் நம் அன்னை நாட்டைச் சுரண்டிய ஆங்கிலக் கொடுங்கோலன். துலாக்கோலோடு வணிகத்துக்காக நுழைந்தவர்கள் தாயகத்தின் செங்கோலைக் கைப்பற்றியதன் அதிகார அசிங்க அடையாளம் அவன். பக்கிங்ஹாம் அரண்மனையின் ஆட்சிப் பிரதிநிதியாக இங்கு ஆடிய ஆட்டம் கொஞ்ச நஞ்சமல்ல. ஆளும் பணி முடித்துத் தன் தாயகம் மீண்டான். சிறிது காலம் சென்றது. பாராளுமன்றங்களின் அன்னையெனப் போற்றப்படும் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தின் வாரன் ஹேஸ்டிங்ஸ் மீது விசாரணை விவாதம் தொடங்கியது. பின்னர் அது வாரன் ஹேஸ்டிங்ஸ் மீதான குற்றக் கண்டன நடவடிக்கையாக (Impeachment of Warren Hastings) முடிவுற்றது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வாரன் ஹேஸ்டிங்ஸ் இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பில் இருந்த

போது செய்த ஊழல் நடவடிக்கைகளைக் கண்டித்துப் பேசினார்கள்.

இங்கிலாந்து நாடாளுமன்றததில் இருந்த வாரன் ஹேஸ்டிங்ஸின் ஆதரவாளர்கள் சிலர். "இந்தியாவில் வாரன் ஹேஸ்டிங்ஸ் ஊழல் செய்ததாக மக்களைத் துன்புறுத்திச் சுரண்டிக் கொள்ளையடித்ததாகச் சொல்லுகிறீர்களே, வாரன் ஹேஸ்டிங்ஸைப் பற்றி இந்திய மக்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? வாரன் ஹேஸ்டிங்ஸைத் தெய்வம் என்று போற்று கிறார்கள்" என்று எதிர் மறுத்தார்கள். உடனே அங்கிருந்த ஆங்கில நாவலன், எட்மண்ட் பர்க் (Edmund Burke) எழுந்து,

"இந்திய மக்கள் வாரன் ஹேஸ்டிங்ஸைத் தெய்வம் என்று சொல்லியிருக்கலாம். இந்தியர்கள் அம்மை போன்ற உயிர்க்செ ்லி நோய்களைக் கூட தெய்வம் என்றுதான் கூறுகிறார்கள்" என்று அடித்த அடியில் நாடாளுமன்றமே நாவடங்கிப் போயிற்று. அந்தச் சப்தச் சவுக்கில் எடுப்பாய் இருந்தது எள்ளல் என்றாலும், அடிப்படையில் ஓர் உண்மை இரத்தப் பிசிறலாய்த் தெறித்துள்ளது.

மற்ற நாட்டவர்கள் நோய் என்றதைத் தமிழர்கள் மட்டும் தாய் என்றது ஏன்? Small pox, Big pox, Chicken pox என்று ஆங்கிலேயர்கள் அழைக்க, நம்மவர்கள் அம்மை, பெரியம்மை, சின்னம்மை என்றழைப்பதும், அம்மை விளையாடியுள்ளது, அம்மா வந்துள்ளார் என்று மக்கள் பேச்சு வழக்கில் குறிப்பதும் சிந்திக்கத் தக்கது. அந்த நோயை 'அம்மை' என்றது அம்மைக் கொப்புளத்திற்குள்ளே கோர்த்துக் கொண்டிருக்கும் திரவமே அந்த நோய்க்கு மருந்தாவதை உள்ளடக்கியே, ஆம் அந்த திரவத்தை 'அம்மைப்பால்' என்றே அழைப்பது வழக்கம். 'அம்மைப் 'பாலூ'ட்டி நோய் தீர்ப்பதால், நோயைத் தாய் என்றார்கள் தமிழர்கள். அம்மா என்று சுட்டினார்கள்.

அம்மாவின் கோபம் (நோய்) தணிக்க வேப்பிலையை வீட்டு வாசலில் காப்பாகக் கட்டுவார்கள். அம்மை நோயாளியின் படுக்கையில் வேப்பிலையைப் பரத்துவார்கள். வேப்பங் கொழுந்தினை அரைத்து உட்கொள்ளக் கொடுப்பார்கள். இதன் பின்னணியில் ஒரு காப்பிய வரலாறு இருக்கிறது. மாரியம்மன் வழிபாடு என்பது கண்ணகியின் வரலாற்றோடு தொடர்புடையது.

கூடல் மாநகரில் கோவலனைக் கள்வன் எனப் பொற்கொல்லன் குற்றம் சாட்ட, பாண்டியன் நெடுஞ்செழியன், 'கள்வனைக் கொன்று சிலம்பினைக் கொணர்க! என ஆணையிட்ட போது, இளங்கோவடிகள்

"வினை விளை காலம் ஆதலின்
சினைஅலர் வேம்பன் தேரானாகி"

என்கிறார். பாண்டியனுக்கு வேம்பம் பூமாலை உரியது என்பதால் பாண்டியனை வேம்பன் என்றே அடிகள் குறிப்பிடுகின்றார்.

கண்ணகி மதுரையை எரியூட்டிச் சென்ற பிறகு, பாண்டியநாடு பன்னிரண்டு ஆண்டுகள் மழைவளம் அற்றுப் பஞ்சத்தில் வாடியது. அப்போது வெப்பு நோயான அம்மை கொத்துக் கொத்தாக மக்கள் உயிரைப் பறித்தது. இந்தக் கொடுமைகள் நீங்கக் கண்ணகியாம் பத்தினித் தெய்வத்திற்குப் பூசைகள் நிகழ்த்தினான் பாண்டியன் நெடுஞ்செழியனின் வழித்தோன்றலான வெற்றிவேற் செழியன். அதன் பின்னர் வான்மழை பெய்ய வளங்கொழித்தது. மாரி பெய்து, அம்மை நோய் நீங்கக் காரணமானான் வேம்பன். கண்ணகியே மாரியம்மன் ஆனாள். அம்மை நோய் தீர அம்மையே காரணம் ஆனாள். துணையாக வேம்பு வேந்து நின்றது. இது மட்டுமல்ல. அம்மை நோய் வந்து, குணம் அடையும் நிகழ்வில், மதுரையில் பாண்டியன் முன் கண்ணகி உரைத்த வழக்குரைத்த காதையே இன்றும் காணலாகும் இலக்கிய மெய்ம்மை.

வழக்குரையின் சாரம் என்ன? காவலன் தேவியின் காற் சிலம்பின் உள்ளீட்டுப் பரல் முத்தாகும். கோவலன் தேவியின் சிலம்பின் உள்ளே இருந்தது மாணிக்கப்பரல். கோப்பெருந்தேவியின் சிலம்பில் உள்ளே முத்துப் பரல் இருப்பதாகச் சொன்ன பாண்டி யனிடம், தன் காற்சிலம்பில் இருப்பவை மாணிக்கப் பரல்கள் எனச் சொல்லி கண்ணகி சிலம்பினை உடைக்க, மாணிக்கப் பரல், வாயால் தவறிய, வாய்மை தவறிய, பாண்டியனின் வாய்முதல் தெறித்தது. அம்மை நோய் கொப்புளம் கொப்புளமாய் ஆரம்பத்தில் உடம்பெல்லாம் முத்துக்கள் போடும். அம்மை இறங்கும் நேரம் முத்துக்களாகத் தோற்றம் தந்தவை வாடி, நீல நிறம் கொண்டு மாணிக்கம் போல் தோன்றி, நாளடைவில் மறையும். முத்தல்ல, மாணிக்கமே என்று வழக்குரைத்துச் சிலம்பின் வென்ற சேயிழையாம், கண்ணகி 'அம்மை' வரலாறு நோயில் தென்படுகிறது. அது தமிழர்கள் வாழ்வில் இன்றும் இடம் பெறுகிறது. அம்மை விளையாட்டின் அழகிய அதிசயம் இது!

சேரநாடு அடைந்து கண்ணகி மேற்கு மலையின் உச்சியிலிருந்து தெய்வமாக விண்ணுக்குச் சென்ற வியத்தகு காட்சியைக் குன்றக் குரவர்கள் காண்கிறார்கள். அப்போது வேட்டைக்கு வந்திருந்த சேரன் செங்குட்டுவனுக்கு இந்தச் செய்தியை அறிவிக்கிறார்கள். அருகிருந்த புலவர் சீத்தலைச் சாத்தனார் வழியாகக் கண்ணகி, கோப்பெருந்தேவி வரலாற்றை அறிந்த சேரன் செங்குட்டுவன் பத்தினியரில் இருவரில் ஒருவருக்குச் சிலையெடுத்துக் கோட்டம் அமைக்க விரும்புகிறான். தன் மனைவி வேண்மாளை அழைத்து,

> **"உயிருடன் சென்ற ஒருமகள் தன்னிலும்**
> **செயிருடன் வந்தஇச் சேயிழை தன்னிலும்**
> **நன்னுதல் நீவியக்கும் நலத்தோர் யார்?"**

எனக் கேட்கிறான். கணவன் மறைய தன்னுயிர் கொண்டு அவனுயிர் தேடினள் போல், ஒருங்குடன் மாய்ந்த கோப்பெருந்தேவி

மேலுலகில் சிறப்பினை உறுதியாக அடைவாள், என்ற வேண்மாள், "நம் அகல்நாடு அடைந்த, பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்" என்கிறாள். கண்ணகிக்குச் சிலையெடுக்கக் கல்லுக்காகவும், தமிழைப் பழித்த கனக விசய வடவாரியர் சொல்லுக்காகவும் இமயம் நோக்கிப் படையெடுத்தான் சேரன் செங்குட்டுவன். மலைநாட்டுத் தலைவன் சேரன். காணுமிடமெல்லாம் கல்லிருக்க இமயத்திற்கு ஏன் செல்ல வேண்டும். அருகே இருக்கும் பாண்டி நாட்டில் ஆனைமலை, குதிரை மலை, பழனிமலை; அடுத்துத் திருவண்ணாமலை இருக்க, மேற்குத் தொடர்ச்சி மலை, கிழக்குத் தொடர்ச்சி மலைகளுக்குச் சொந்தக்காரன் கல்தேடி இமயத்திற்கு ஏன் செல்ல வேண்டும்?


தமிழுணர்வாளன் சேரன்; தமிழைப் பழித்தவர்களைப் போரில் வென்று, பழி துடைக்கப் படையெடுத்தான். கண்ணகி சிலைக் கல்லையும் இமயத்தில் எடுத்ததற்கான காரணமும் தமிழுணர்வுதான். அவன் தம்பி இளங்கோவோ, விண்ணிலிருந்து தெய்வம், மனிதனாக மண்ணில் இறக்கம் கண்ட காவியங்கட்கு மாற்றாக, தமிழ் மண்ணைச் சார்ந்த பெண் ஒருத்தி விண்ணை நோக்கித் தெய்வமாக ஏற்றம் கண்டதைக் கண்ணகி வரலாற்றின் வாயிலாகச் சொற்கோட்டமாக எழுப்பினான். அண்ணன் சேரன் செங்குட்டுவன் கற்கோட்டம் எழுப்பி, இளையவனுக்கு இளைத்தவனில்லை தான் என்பதைப் புலப்படுத்தியுள்ளான்.

கங்கை உற்பத்தியாகும் இமயத்தின் கல், காலந்தோறும் கங்கை நதியால் கழுவப் பெற்றிருக்கும், புனித கங்கை பாய்ந்த இமயக்கல்தான் கண்ணகி சிலைக்கு ஏற்றது. இருந்தாலும் சேரன் சிந்தித்தது வேறு மாதிரி. பாவங்கள் தீர்க்க மனிதர்கள் புனித கங்கையில் மூழ்குவார்கள். அப்படி மூழ்கியோர் பாவங்களால் களங்கப்பட்ட கங்கை விழுந்த கல், தமிழ் மங்கையின் உருவந்தாங்கி தன்னைத் தான் கழுவி புனிதப்படட்டுமே என்று கருதியிருக்க வேண்டும்.

முன்னாள் மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன் ராம் திறந்தார் என்பதால் தீட்டுப் பட்டதெனச் சம்பூரணானந்தா சிலையைக் கங்கை நீர் ஊற்றிக் கழுவியதை அறிவோம். ஆனால் கங்கையைக் கழுவிய தமிழ் மங்கையை உலகறியச் செய்திருக்கிறோமா? புனித மலை இமயமலை. அதன் கல் புண்ணியமானது. அது கண்ணகி சிலையானதால் கண்ணியமானது. கண்ணகி சிலையைக் கரடி பொம்மையெனக் கற்பனை செய்வோர், கனக விசயர்கள் வால் வழியோ? யாமறியோம் பராபரமே!

ஜூலை 2006

புனிதமா? மனிதமா?



ஆண்டாண்டு காலமாக ஊசிக் காதுக்குள் நூல்கள் நுழைந்து கொண்டே இருக்கின்றன. வண்ண வண்ணமான நூல்களை உள்வாங்கி இருந்தாலும், ஊசியின் கிழிசல் தைக்கப்படாமல் தான் இருக்கிறது. நெறிப்படுத்தும் வேதங்களாம் ஆதிநூல்கள், சரிப்படுத்தும் நீதி நூல்கள், முறைப்படுத்தும் போதி நூல்கள் என எத்த னையோ நூல்களைக் காலகாலமாகப் பெற் றாலும், சமூகம் தன் கிழிசலைத் தைத்துக் கொள்ளத் தயாராக இல்லை, ஓர் ஊசியைப் போல.

பெண்ணியத்தின் கண்ணியமும், தாய்மையின் தூய்மையும் மீண்டும் கேள்விக் குள்ளாக்கப்பட்டுள்ளன. கருவறையைச் சுமப்ப வளுக்கே கருவறைக்குள் நுழைய அனுமதி யில்லை. தமிழும் தாயாக இருப்பதனால் அதற்கும் அதே கதிதான்.

பெண்,

"ஆணே!
உன் கண்ணுக்கு ஊட்டியாய் இருப்பாள்
உனக்கான அன்பில் போட்டியாய் இருப்பாள்
உன் இடுப்புக்கு வேட்டியாய் இருப்பாள்
உன் குழந்தைக்கு என்றும் தோட்டியாய் இருப்பாள்"

என்று நெடுநாளைக்கு முன்பு நெஞ்சில் படர்ந்த என் பாடல் வரிகள் நினைவில் எழுகின்றன. துப்புரவுப் பணியாளராம் தாழ்த்தப்பட்டவர்கள் நுழைந்தால் கோவில் தீட்டுப்பட்டுவிடும் எனத் தீண்டத்தகாதோராய் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளதற்கும், பெண்களைக் கர்ப்பக் கிரகத்திற்குள் நுழையக் கூடாது என்று தள்ளி வைத்ததற்கும் ஒரே காரணம்தான் இருக்க முடியும்.

"The relationship between the untouchables
and the society is that of chappal and the foot"

(தீண்டப்படாதோர்க்கும், சமூகத்திற்கும் உள்ள உறவு
காலுக்கும் செருப்புக்கும் உள்ள உறவினை ஒத்ததாகும்)

என்றார் சட்டமேதை பாபாசாகிப் அம்பேத்கர்.

அடிகளில் சேறும், சகதியும், சாணியும் தூசியும் பட்டு, காலடிகள் அழுக்காகி விடாமல், தான் அந்த அழுக்கு களையெல்லாம் தாங்கிக் கொண்டு, தேயத் தேய உழைப்பவை காலணிகள்தாம். உழைக்கும் சமூகத்தை இழிவாகக் காணும் பிறழ்ந்த பார்வை தொன்மைக் காலம் முதல் தொடர் நிகழ்வாகி விட்டது.

பெண்ணே சமைக்கிறாள், துவைக்கிறாள், வெளுக்கிறாள், துப்புரவு செய்கிறாள், கூட்டிப் பெருக்குகிறாள், தைக்கிறாள், சமைக்கிறவளைப் "பெண்டிர்கழகு உண்டி சுருக்குதல்" எனப் பட்டினி போடுகிறோம். துவைத்து, வெளுத்துத் துப்புரவு செய்பவளை அழுக்காக்குகிறோம். தைப்பவளைக் கிழி, கிழி எனக் கிழிக்கிறோம். நம் முதல் நிர்வாணத்தை மறைக்க கருப்பையையே ஆடையாகத் தந்தவளைத்தான் துச்சாதனம் செய்கிறோம். இரத்தத்தையே பாலாக்கித் தந்தவளின் இரத்தப் போக்கைத் தீட்டெனச் சிறுமைப்படுத்துகிறோம். வயிற்றையே வீடாகத் தந்தவளைத் தான் முதியோர் இல்லங்களில் தள்ளாத வயதில் தள்ளி வைக்கின்றோம். கருமுட்டைகளை அடைகாத்த வயிற்றின் மேல் ஆம்லெட் போடுகின்றோம். உள்ளுக்குள் தொப்புள் கொடி யென்னும் தொட்டில் கயிறு கட்டுகிறவள் தொப்புளில் தான் பம்பரக் கயிறவிழ்க்கிறோம்.

நடிகையர் ஜெயமாலாவும், மீராஜாஸ்மினும், முறையே தெய்வத் திருமேனியைத் தீண்டுகைக்கும், கோயில் நுழைகைக்கும் தோஷபரிகாரம் செய்து கொண்டுள்ளார்கள். அரி, மோகினியாகப் பெண் வடிவம் எடுத்து, அரனோடு கலந்ததால் அரிஹர புத்திரன் அவதரித்தான் என்பது நம்பிக்கை. அவதாரம் அவதரிக்கவே அன்னை தேவை. அவன் ஆலயத்திற்குள் அவள் தேவையில்லை. பெண்ணொருத்தி நுழைந்தால் ஆலயம் அழுக்காகிவிட்டதெனப் பணிக்கர் சொல்கிறார். விரதக் கட்டுப்பாடு கருதி மனிதர்கள் வகுத்திருக்கும் விதியே அன்றி, எந்த மூல நூலிலும் இப்படித் தடைகள் சொல்லப்பட்டதில்லை.

ஆதி, இறையாலயமான மக்காவிலிருக்கும் கஃபத்துல்லாவைப் பார்த்து நாயகத் தோழர் ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி)

"கஃபத்துல்லாவே!
நீ எத்துணை அருளும்,
கண்ணியமும் பொருந்திய
இல்லமாக உள்ளாய்!

எனினும்
இறைவனிடம்
ஏகத்துவ
நம்பிக்கையுள்ள
ஒரு
மனிதனின்
கௌரவம்

உன்னைவிட மேலானது"

என்றார். ஆண்களும், பெண்களும் இட வலமாக இருபத்து நான்கு மணி நேரமும் சுற்றி வழிபடும் இறையில்லம் கஃபத்துல்லாஹ். ஆயுளில் ஒரு தடவையாவது தரிசிக்க வேண்டும் என உலகில் ஐவரில் இருவரான இசுலாமியர், ஐந்தாங்கடமையைச் செலுத்துவதற்கு இறைவனே தெரிவு செய்த அந்த ஆலயத்தை விட மனிதம் உயர்ந்தது என்ற வார்த்தைகள் அசைபோடத் தக்கவை.

வைகறைத் தொழுகைக்காக இறைவனின் இறுதித் தூதர் நபிகள் நாயகம் (ஸல்) தொழுகை நடத்தி வைக்க இமாமாக முன்னிற்கிறார்கள். இறைமறை குர் ஆனின் இனிய வரிகள் போல நாயகத் தோழர்கள் வரிசை, வரிசையாகப் பின்நிற்கிறார்கள். பின் வரிசையில், பெண்கள் தொழுகைக்காக நிற்கின்றார்கள். 60 ஆயத் துக்கள் அடங்கிய 'சூரத்துல் ரூம்' என்ற குர்ஆனின் வசனத் தொகுப் பிலிருந்து பெருமானார் ஓதத் தொடங்கினார்கள். 3 ஆயத்துக்களை

மட்டும் ஓதி, சூரத்துல் ஃபலக், சூரத்துன்னாஸ் திருவசனங்களைத் தொடர்ந்து ஓதி, தொழுகையை விரைவில் முடித்துக் கொண்டார்கள். தொழுகையை முடித்தவுடனே, தோழர் நாயகம் (ஸல்) அவர்களிடம்

"நாயகமே! இளங்காலைத் தொழுகையில், 'சூரத்துல் ரூம்' அத்தியாயத்தைத் தொடக்கமாக ஓதினீர்கள். 60 ஆயத்துக்கள் அடங்கிய திருமுறை வசனங்களைத் தேனினும் இனிய தங்கள் குரலில் இன்று செவிகளாரக் கேட்கும் வாய்ப்புக் கிட்டியதே, என மகிழ்ந்து, இறைவனுக்கு நன்றி செலுத்தித் தொழுகையில் நின்றோம். ஆனால் திடீரென 3 ஆயத்துக்கள் மட்டும் ஓதித் தொழுகையை முடித்து விட்ட காரணத்தால், அமுதக் குவளையிலிருந்து சில திவலைகள் அருந்திய போது, வெடுக்கெனக் குவளை விலகியது போல உணர்ந்தோம். வருந்தினோம். தொழுகையை விரைந்து முடித்ததன் காரணம் என்ன?" என்று வினாவினார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்)

"3 ஆயத்துக்கள் ஓதும் வேளையில், அருகிலிருக்கும் வீட்டில் கைக்குழந்தை ஒன்றின் அழுகுரல் கேட்டேன். பின் வரிசையில் நின்று தொழும் பெண்களில் அக்குழந்தையின் தாய் இருக்கலாம். குழந்தையின் துன்பம் உடனே நீங்க வேண்டும். குழந்தையின் அழுகுரல் கேட்ட தாயின் உள்ளம் புண்பட லாகாது. எனவே ஒரே வழி, தொழுகையை விரைவாக நிறைவேற்றுவதுதான் எனக் கருதித் துரிதமாகத் தொழுகையை முடித்தேன்"

என்றார்கள். மசூதியில் தொழுகைக்கு மகளிரும் வந்திருந்தார்கள் என்பதும், வழிபாட்டில் ஒரு பெண்ணின் - தாயின் உள்ளம் எவ்வகையாலும் காயப்படல் ஆகாது என்ற கவனத்தோடும், அக்கறையோடும், தொழுகை நிறைவேற்றப்பட்டது என்பதும் நினைவில் கொள்ள வேண்டியவை.

புனிதம் பார்க்கப்படுவதை விட மனிதம் பார்க்கப்பட வேண்டும் என்பதே கடைப்பிடிக்க வேண்டிய கட்டாய நெறிமுறை. வழிபடும் இடத்தில் பால் அடிப்படையில் பேதங்காட்டல் ஆகாது என்பதும் மேற்படி நிகழ்ச்சி விளக்கும் உண்மை ஆகும்.

'அங்கொரு கண்ணும் இங்கொரு கண்ணும்
ஆலய வழிபாடில்லை'

என்றார் கவியரசு கண்ணதாசன். ஆள்லயம் பார்க்குமிடமாக ஆலயம் மாறி விடலாகாது என்ற அடிப்படையில் தான் நாயகம்


(ஸல்) 'பெண்களுக்கு அவரவர் வீடுகளே வழிபடுவதற்குச் சிறந்த இடம்' என்று அறிவித்தார்கள். பெண்கள் வழிபடும் பள்ளிகளுக்கு வரக்கூடாது என்ற தடையோ, மசூதியின் இந்தப் பகுதிக்குள் வரலாம், இந்தப் பகுதிக்கு வரலாகாது என்ற தகைப்போ, வழிபாட்டிடம் பெண் வந்தாலே, தீண்டினாலே தீட்டுப்பட்டு விடும் என்ற நம்பிக்கையோ நபிகளாரின் நடைமுறையில் இல்லை.

ஒரு மசூதியின் வளாகத்திற்குள்ளே வந்த முஸ்லிம் அல்லாத சகோதரர் ஒருவர், அங்கேயே சிறுநீர் கழிக்கத் தொடங்குகிறார். அதனைக் கண்ட நபித் தோழர்கள் அவரைத் தாக்கத் துடிக்கிறார்கள். நபிகளார் அந்த நபர் சிறுநீர் கழித்து முடிக்கும் வரை காத்திருக்கிறார். தாக்கத் துணிந்தவர்களைத் தடுக்கிறார். வழிபாட்டிடத்தின் தூய்மை பேணப்பட வேண்டும் எனச் சிறுநீர் கழித்த மனிதர்க்கு இதமாக எடுத்துரைக்கின்றார். பின்னர் தன் கரங்களாலேயே, தண்ணீர் ஊற்றி அந்த இடத்தைத் தூய்மை செய்கின்றார். வழிபாட்டிடத்தையே யாரும் சிறுமை செய்துவிட முடியாதென்றால், ஆண்டவனை அழுக்குப் படுத்த முடியுமா? மத்திய அமைச்சர் ஜெகஜீவன் ராம் திறந்து வைத்தார் என்பதற்காகவே சம்பூரணானந்தா சிலையையும், அது அமைக்கப்பட்ட வளாகத்தையும் தீட்டுப்பட்டதெனக் கருதி கங்கை தீர்த்தத்தால் கழுவிய நிகழ்ச்சிக் கண்ணில் நீரை வரவழைத்தது. அவர் தலித் இனத்தவர் என்ற ஒன்றுதான் அதற்குக் காரணம்.

இன இழிவுக்கு முன் பெண்ணும், தலித்தும் ஒன்று தான்!

ஆகஸ்ட் 2006

விஞ்ஞான விந்தை



அகிலமெல்லாம் அமெரிக்காவைப் பார்த்து அஞ்சுகிறது. அமெரிக்கா ஒரு மனிதரைப் பார்த்து அஞ்சுகிறது. 'அவர்தான் அப்துல் கலாம்.' புகழ்மிக்க அமெரிக்கப் பத்திரிகையாளர் நியூமென் ஜோ புளகித்துக் கூறும் பொறி பறக்கும் வரிகள் இவை.

Dollerகளால் வெல்ல எண்ணும் அமெரிக்காவை Scholarகளால் வெல்ல வல்லது என்ற பெருமையை இந்தியாவிற்குச் சேர்த்த அறிவியல் அடையாளம் அவர். I.T. என்றால் INFORMATION TECHNOLOGY என்றழைத்த உலகை INDIAN TECHNOLOGY உறுதிபட உரைக்க வந்த உயர்திணை அறிவாளர். 'தாயின் காலடியில் சொர்க்கம் இருக்கிறது' என்றார்கள் நபிகள் நாயகம் (ஸல்). 'பாரதத் தாயின் பாதத்திற்குக் கீழிருக்கும் இராமேசுவரத்தில் பிறந்தேன். ஆம் சொர்க்கத்தில் பிறந்தேன்' என்ற தன்

பிறப்பிடத்தின் பெருமையை அவர் பேசுகிறார். காலடியில் பிறந்த கடற்கரைச் சிப்பி ஒன்று, இந்தியத் தாயின் மகுட முத்தாக ஆனது கீழிருந்து மேல் நோக்கி நிகழ்ந்த அவதார அதிசயம். தீபகற்ப தேசத்தைக் கரையேற்றியது கட்டுமரம். இசுலாமியர் வாக்கு எமக்குத் தேவையில்லை என்ற வாஜ்பாய் நாக்கு ஜனாதிபதி பதவிக்கு அப்துல்கலாம் பெயரை முன் மொழிந்தது. அத்வானி ரதமோ அவரை இராஷ்டிரபதி பவனுக்கு அழைத்துச் சென்றது. ஏதேன் தோட்டத்துப் பாம்பு **பாங்கு*** சொன்னதைப் போல.

குறளின் இருவரிகளைப் போன்ற உதடுகள், மேல் வரிசைப் பற்களாய் பகவத் கீதை, அடிவரிசைப் பற்களாய் பைபிள், குர் ஆனைப் போன்ற ஏகத்துவ நாக்கு, நெஞ்சில் ஒற்றுமை உணர்வு. சின்னஞ்சிறு வயதில் பறவைகளைப் போலச் சிறகடித்துப் பறக்க ஆசைப்பட்டதை நினைவுபடுத்தும் இரு இமைச் சிறகுகள். வெண் மணற் பரப்பில் ஒயாஸிஸ் போல வெள்ளை விழியில் கருத்த பாவை. விஞ்ஞானத்தின் விளையாட்டு மைதானமான நெற்றி. முக்கியமானது இம்மூளை என்று இரண்டு அடிக்கோடிட்டதைப் போன்ற புருவங்கள். அந்தத் தலைமைச் செயலகத்துக்குப் பொன்னாடை போர்த்தியதைப் போலத் தோள்வரை தாழும் தலைமுடி, சிந்தனையோடு போட்டியிடும் வேக நடைக் கால்கள், விஞ்ஞானப் பூட்டுக்களைத் திறக்கும் கிரணச் சாவிக் கொத்தாய் கைவிரல்கள். அண்மையில் ஒரு நிகழ்ச்சியைத் தொடங்கி வைக்க வந்து குத்துவிளக்கு ஏற்றுகிறார் குடியரசுத் தலைவர்.

"குத்துவிளக்கு
இந்துமதப் பாரம்பரியம்
ஏற்ற என் கையில் இருப்பது
மாதா கோயிலில் எரியும் மெழுகுவர்த்தி
ஏற்றுவது
அப்துல்கலாம்

இந்திய ஒருமைப்பாட்டின்
குறியீடு இதுதான்"

என்று பேச்சைத் தொடங்குகிறார். அவர் பேச்சு மட்டுமல்ல, அவரே நம் பண்பாட்டின் அடையாளம் தான்.

ஸ்ரீஹரிகோட்டாவில் முதல் செயற்கைக் கோள், இந்திய விஞ்ஞானிகள் குழுவோடு இவரால் வடிவமைக்கப்படுகிறது. விண்ணை நோக்கிய அறிவியல் பந்தயத்தில் இந்தியாவா? அது பிச்சைக்காரர் நாடாயிற்றே. அத்துணை அறிவு இந்தியர்கட்கு உண்டா? என ஏகாதிபத்தியவாதிகள் ஏகடியம் பேசிக் கொண்டிருந்தபோது, பிரளயமாகப் புறப்பட்டது ஆரியப்பட்டா. அடுத்த ஐந்தாம் நொடியில் கடல் தண்ணீரில் விழுந்து தற்கொலை செய்து கொண்டது. ஆரியபட்டாவிற்கு நாட்டுப் பற்று அதிகம்,

---

* தொழுகை அழைப்பு

அதனால் தான் விண்ணை நோக்கிச் செல்லாமல், அன்னை மண்ணை நோக்கித் திரும்பி விட்டது என்ற எள்ளல்கள் கொத்திப் பிடுங்க, மீண்டும் 3 வாரத்திற்குள் புதிதாக மற்றொரு செயற்கைக் கோளை அப்துல் கலாம் உருவாக்குகிறார். அக்கினி என்று அதற்குப் பெயர் சூட்டுகிறார். ஏன் இந்தப் பெயர்? என்று பத்தரிகையாளர் கூட்டம் வினா எழுப்பியது. பழந்தமிழ் இலக்கியத்தைச் சான்று காட்டி அக்கினிக்கு விளக்கம் சொல்கிறார். 'ஆரியபட்டா புறப்பட்ட வேகத்தில் கவிழ்ந்து விழுந்து விட்டது. அப்படிப்பட்ட அவலம் இனி வரல் ஆகாது. தீப்பந்தத்தைக் கவிழ்த்தாலும் நிமிர்ந்து தான் எரியும். இந்த அக்கினியும் கவிழ்த்தாலும் நிமிர்ந்து விண்ணோக்கிச் செல்லும் என்ற நம்பிக் கையில் 'அக்கினி' என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது' என்றார். சீறிப் பாய்ந்து சென்றது வானில் அக்கினி. இந்தச் சாதனையைப் பாராட்ட உள்ளங்கை முழுக்க நட்சத்திர அட்சதைகளை வைத்துக் காத்திருக்கிறது வானம். உலகமே மெய் மறந்து கை தட்டியது.

தன் பதவி ஏற்பு விழாவிற்கு முன் வரிசையில் மந்திரிகள் அமர வேண்டாம். படிக்கும் மாணவர்கள்தான் அமர வேண்டும் எனப் பணித்தார். 'மாணவர்க்காக எழுத்துகளாகக் கரையும் சுண்ண மெழுகுவர்த்திகள்தாம் ஆசிரியர்கள், முப்படைத் தளபதியானாலும் அடிப்படையில் நான் ஒரு ஆசிரியன்' எனச் சொல்லி ஜனாதிபதி மாளிகையிலேயே வகுப்புகள் நடத்தி வருபவர்தான் நம் குடியரசுத் தலைவர். தன் 'அக்கினிச் சிறகுகள்' என்ற நூலைத் தன் ஆசிரியர்க்கும், பெற்றோர்க்கும் சமர்ப்பித்த அப்துல் கலாம், தன் 'எழுச்சி தீபங்கள்' என்ற நூலை, வேலூர் மாவட்டம் சக்கரமல்லூர் என்ற சிற்றூரை சார்ந்த மாணவிக்குச் சமர்ப்பித்துள்ளார். அதற்குக் காரணம் சொல்கிறார். மாணவிகள் அடங்கிய கூட்டம் ஒன்றில் கேள்வி ஒன்றைக் கேட்கிறார், "மாணவிகளே இந்தியாவின் எதிரி யார்?"; பெரும்பாலான மாணவிகள் "பாகிஸ்தான்" என்ற போது குடியரசுத் தலைவர் சிரிக்கிறார். எரிமலைக்கு முன்பு பொரிமலையா என்பதைப் போல மெல்லிய புன்முறுவல். சரியான விடை தருக என்கிறார். சக்கரமல்லூர் சக்கரைக் குட்டி,

"வறுமை"

என்ற போது, தாவியது நம் நரைத்த நிலா. அந்தப் பிள்ளை அல்லியை உச்சி மோந்து பாராட்டுகிறது. 'எழுச்சி தீபங்கள்' சமர்ப்பணம் சரித்திரமாகி விட்டது.

பெங்களூருக்குக் கலாம் வருகிறார். வழக்கம் போல் மாணவர்களைச் சந்திக்கிறார். மாணவிகளை நோக்கி "ஐஸ்வர்யாராய், சுஷ்மிதா சென், லாரா தத்தா இம்மூவரும் யார்?" எனக் கேட்கிறார். ஒருமித்த குரலில் "இவர்கள் அனைவரும் உலக அழகிப் போட்டியில் முதற்பரிசு பெற்ற இந்தியப் பெண்கள்" என்று சொன்ன மாணவிகளைப் பார்த்து

"அவர்கள் வெற்றி பெற்றதற்குக் காரணம் என்ன?"

எனக் கேட்டார். சில மாணவிகள் "அவர்கள் மிகச் சிறந்த அழகிகள் என்பது தான் காரணம்" என்றனர். சில மாணவியர் அழகிப் போட்டியில் கடைசிச் சுற்றில் கேட்கப்படும் அறிவுப் பூர்வமான கேள்விக்கு மிகப் பொருத்தமான விடைகளைச் சொன்னதே இப்பெண்கள் சர்வதேச அழகிப் போட்டியில் முதலிடம் பெற்றதற்கான காரணம்" என்றனர். குடியரசுத் தலைவர் "நான் எதிர்பார்க்கும் விடை வரவில்லையே" என்கிறார். ஒரு பிஞ்சுப்பிறை

"அம்மூன்று பெண்களும் சர்வதேச அழகிப் போட்டியில் முதலிடம் பெற்றதற்குக் காரணம்" எனச் சொல்லி நிறுத்த, நிசப்தம். தொடர்ந்து அந்த மாணவி, "நான் போட்டியில் கலந்து கொள்ளாததே" என்று முடித்தபோது, அரங்கம் அதிர்ந்தது. எவரெஸ்ட் குனிந்ததொரு கூழாங்கல்லை எடுப்பது போல அந்தக் குழந்தையைத் தூக்கி எடுத்தார். 'கூழாங்கல் இல்லை இது, இந்த தேசத்து வைரம்' என்று குறிப்பிட்ட போது ஆங்கில நாவலன் எட்மண்ட் பர்க் (Edmund Burke)

"Educational Institution polish pebbles but dims diamonds"

(கல்வி நிறுவனங்கள் கூழாங் கற்களைப் பளபளப்பாக்குகின்றன; வைரங்களை ஒளி குன்றச் செய்கின்றன)

என்ற கூற்றை நினைவு படுத்தியது. குடியரசுத் தலைவரின் கேள்விகள் வைரங்களைப் பட்டை தீட்டக் கூடியவை என்பதால் அவரே ஓர் அதிசயமான பல்கலைக் கழகம் என்பது புலனாகிறது.

Illustrated weekly of India ஆசிரியர், ஜெயில்சிங் குடியரசுத் தலைவர் ஆன போது

"குடியரசுத் தலைவர்கள் ரப்பர் ஸ்டாம்புகளாகி விடுவது வழக்கம். ஆனால் ஜெயில்சிங் குடியரசுத் தலைவராகி இருப்பது முதன் முதலாக ரப்பர் ஸ்டாம்ப் ஜனாதிபதி ஆகியது போல"

என்று எழுதினார். ஆட்சியாளர்கட்கு தாளம் தட்டுவதே ஜனாதிபதிகட்கு வழக்கமாகிவிட்ட சூழலில், அப்துல்கலாம், ஆதாயம் தரும் பதவி குறித்த மசோதாவை மீண்டும் நாடாளு மன்றத்திற்குத் திருப்பி அனுப்புகிறார். சில நாடாளுமன்ற உறுப் பினர்களை, அமைச்சர்களைக் காப்பாற்றும் வகையில் வடிவமைக் கப்பட்ட அந்த மசோதாவின் ஜனநாயக விரோதத் தன்மையைச் சுட்டிக்காட்டி நாடாளுமன்றத்திற்குத் திருப்பி அனுப்பிய போது, ஜப்பானியக் கவிஞர் டான் சூய் (Ton Sui) எழுதிய

**"அரசனுக்குக் கூட
தொப்பி எடுத்து வணங்குவதில்லை
வயற்காட்டுப் பொம்மை"**

என்ற 'ஹைகூ' தான் நினைவுக்கு வந்தது. இந்திய ஜனாதிபதிப் பதவியும் 'வயக்காட்டுக் காவல் பொம்மை தான். ஆனால் அது

கூட தொப்பி எடுத்து அரசனுக்கு வணங்குவதில்லை என்ற தன்மானக் குறிப்பு அப்துல்கலாமுக்குச் சரிவரப் பொருந்துகிறது. அந்த வயற்காட்டுப் பொம்மைக்குள் வைக்கோல். ஆனால் இந்திய வயற்காட்டுப் பொம்மைக்குள் செங்கோல்.

"இராமேசுரக் கடலில்
இருந்து புறப்பட்ட
இந்திய ஆறு
அதற்கு வயது
எழுபத்து ஆறு!

110 கோடி மக்கள்
ஆளுக்கொரு ஆண்டெனக் கொடுக்கும்
அட்சதைத் துளிகளால்
ஆண்டவன் ஆயுள்காலம் வரை
ஆறு ஓடட்டும்!

விளக்கணைக்கும் பள்ளியறை
விலக்கி
விளக்கேற்றும் பள்ளியறை நோக்கி
விருப்பமுற வரும் மாப்பிள்ளையே!

உன்
மூளையில் நிகழ்ந்த
முதல் இரவால்
விண்ணில் செயற்கைக்கோள்

உன்
இதயம் நடத்திய
இல்லறத்தால்
மண்ணில் செயற்கைக் கால்
முன்னது கனமானது
தாயின் கர்ப்ப வயிறு போல்
பின்னது மேலானது
குழந்தையின் சிரிப்பைப் போல

விஞ்ஞான விந்தை நீ!
பூமிக்குள் அதிர்கையில்
பொக்ரான் பேரிகை
மேலே
எங்கள் குழந்தைகள் கையில்
ஏவு கணைத் தூரிகை!

அசல் காந்தியும்
காமராச
நிழல் காந்தியும்
பிசைந்து உன்னைப்
பிரமன் படைத்தாலும்

நகல்படுத்த முடியாத
நடுநிலையாளன் நீ
உன்
வகிட்டைப் போல
2020இல் வல்ல நல்லரசாகும்
இந்தியக் கனவுக்கு
இளைஞர்கள் இருவிழியாய்
இருப்பினும் நீயே
இருப்பாய் கருவிழியாய்!

* *குடியரசுத் தலைவர்*
அப்துல்கலாம் அவர்களின்
பிறந்தநாள் நினைவாக ...

செப்டம்பர் 2006

விதைநெல் வாய்க்கரிசியாகிறது



விலங்குதல் என்றால் குறுக்கே வளர்தல் என்று பொருள். மிருகங்கள் குறுக்கே தான் வளர்கின்றன. அதனாலேயே அவைகட்கு விலங்குகள் என்று பெயர். விலங்கு நிலைக்கு முன்னிலை ஓரறிவு உயிர்களாம் தாவர நிலை. தாவரங்கள் குறுக்காகவும், உயர வாட்டிலும் வளரும். பரிணாமத்தில் விலங்குகள் குறுக்கே வளர்தல் என்ற நிலையை மட்டும் கைக் கொண்டன. குறுக்கு வழியில் வளர்பவையும் விலங்குகள் தான்.

விலங்கு நிமிர்ந்தது. மனிதன் பிறந்து விட்டான். ஆக நிமிர்வே மனித அடையாளம். நிமிர்வே உயர்வு. வளைவே தாழ்வு. வளைவுகள் வைக்கத் தொடங்கி, வாழ்நிலையை தாழ்நிலை ஆக்கிக் கொள்கிறான் இன்றைய மனிதன்.

வணங்குதலும், தாழ்தலும் இறைவனுக்கு மட்டும் தான். மற்ற படைப்புகட்கு இல்லை. ஆண்டவனிடம் மட்டும் தான் அச்சம். அச்சமற்ற தன்மையே, தைரியமே, நிமிர்வு. உயிர்

பிரிந்த உடலைப் பார்த்துப் பிணம் என்று அஞ்சுகிறான் மனிதன். உடலை விட்டுப் பிரிந்த உயிரை, ஆவி, பேய் என்று அஞ்கிறான். உயிரும், உடலும் சேர்ந்த மனிதனைப் பார்த்து எவ்வளவு அஞ்ச வேண்டும்?

தன் மானமும், சுயமரியாதையும் அச்சமற்ற நிமிர்வையே அகமும் புறமுமாகக் கொண்டவை. இவை இரண்டு மற்றவை விலங்குகள். இவை இரண்டுமற்ற அடிமைகளும் விலங்குகள் தான். உலகம் அவர்களுக்குத் தொழுவம் ஆகிவிடுகிறது. உருதுக் கவிதை ஒன்று உரையாடல் வடிவில்.

ஒருவன் : நேற்றைக்கு நம் ஊரில் நிகழ்ந்த, அந்தச் செல்வந்தர் வீட்டு விருந்துக்கு நீ ஏன் வரவில்லை

மற்றவன் : அழைப்பில்லை. அதனால் வரவில்லை.

முன்னவன் : அழைத்தால் தான் வருவாயோ?

இரண்டாமவன் : **இறைவனின் வீடு மஸ்ஜித் (பள்ளிவாசல்). அங்கிருந்து அழைப்பு (பாங்கு) வந்த பிறகு தான் தொழுகைக்கே போகிறேன்.**

இந்த நிமிர்வு பக்தியில் சுயமரியாதை. ஆண்டவனைப் பாடும் வாயால் ஆள்பவனைப் பாட மாட்டேன் என்றான் காஞ்சி நகர்த் தமிழ்ப் புலவன் கணிகண்ணன். அவனை அரசன் நாடு கடத்தினான். தன் குருவிடம் சொல்லிவிட்டுச் சீடப் புலவன் காஞ்சியை விட்டுச் செல்கின்றான். குரு அந்த நிமிர்வை வியந்து, தானும் புறப்பட்டுப் போகும் வழியில், பெருமாளைக் கோவிலில் திருமாலைக் கண்டு, அழிவில்லா உன்னை மட்டுமே பாடுவேன், அழியும் மன்னனைப் பாட மாட்டேன் என்ற கணிகண்ணனே காஞ்சியை விட்டு நீங்குகையில்,

"கணிகண்ணன் போகின்றான். காமரும்
பூங்கச்சி
மணிவண்ணா! உன் பைந்நாகப் பாய்
சுருட்டிக் கொள்"

என்றார். தமிழ் புலவர்களைப் பின் தொடர்ந்து பெருமாள் சென்றான். அதனாலேயே பிறிதொரு புலவர் பெருமாளை

"பைந்தமிழின் பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டலே"

என்று பாடினார். அச்சமற்ற தன்மானமும், சுயமரியாதையும் உள்ள மனிதனை மதித்து, அந்த நிமிர்வை மதித்து ஆண்டவன் சென்றான் என்பது தமிழ் மரபு. அரசன் தன்னைக் காணாது வழங்கிய பரிசிலை மறுத்து

"காணாது ஈந்த பரிசிற்கு யானோர்
வாணிகப் புலவர் அல்லேன்"

என வாட்டும் வறுமை நிலையிலும் சென்ற சங்கப் புலவனின் நிமிர்வும், முற்காலச் சான்றானால்,

"அம்மி கொத்தச் சிற்பி எதற்கு?"

என இளையராஜாக்களிடம் அடிமை ஆகாத கவிக்கோவின் நிமிர்வும் தற்காலச் சான்றாகும்.

எழுத்தாளன் என்பவன் எப்படியிருக்க வேண்டும்?

"எழுதுபவன்
எழுதுகோல் போல
இருக்க வேண்டும்!
எழுதுகோல்
ஒன்றுமில்லா
ஏழை
தாள் கண்டால்
பணிகிறது!
பணம் வைக்கும் சட்டைப்
பைக்குச் செல்கையில்
தலை நிமிர்கிறது"

எழுது கோலின் பணிவும், குனிந்த ஏழையை நிமிர்வடையச் செய்யவே!

ஆபத்திற்கு மனிதன் அஞ்சியிருந்தால் உலகம் என்னவாகி இருக்கும்? சோதனைக்கும், தொடர் தோல்விகளுக்கும் எடிசன் அஞ்சியிருந்தால் இருட்டுத்தான் பாரினைப் பற்றியிருக்கும். காட்டு நெருப்புக்கு மனிதன் அஞ்சியேயிருந்திருந்தால் கைவிளக்கு சாத்தியப்பட்டிருக்காது. அலை மோதுகிறதே; புயல் அடிக்கிறதே; பெருமழை பெய்கிறதே என்றஞ்சி மீன்கள் நிலத்தை நோக்கித் துள்ளினால், காசினி கருவாட்டுக் கடையாயிருக்கும். புயலை எதிர் கொண்டவன்தான், புல்லாங்குழலுக்குள் காற்றை அடக்கி ராகங் கண்டான். வெள்ளம் வராத வரை மனிதன் படகைக் கண்டுபிடிக்கப் பயணப்பட்டிருக்க மாட்டான். பார்வையை இடறும் பாறையைத் தான் படிக்கல் ஆக்கிக் கொண்டான். தன் வயிற்றுப் பட்டினி நெருப்பில் பொசுங்கிப் போகாதவன்தான், அந்த நெருப்பை அடுப்புக்குள் பணியாளாய் ஆக்கிக் கொண்டான். கிழிசல்களே ஊசியைப் பெற்றிருக்க வேண்டும். ஊசித் துவாரமும் தொப்புள்தான். விமானங்களின் இரண்டு சிறகுகள் யார் தெரியுமா? மரத்திலிருந்து கீழே விழுந்த ரைட் சகோதரர்கள் தான்.

ஆனால், வரவர மனிதன் அஞ்சல் நிலையமாகவே ஆகிக் கொண்டிருக்கிறான். விதையில்லாக் கனியாகவே விருந்துகளில் பரிமாறப்படுகின்றான். அரசியல், மத, கறிக் கோழியாகவே ஆகி வருகிறான். எந்தச் சிக்கலுக்கும், ஆபத்திற்கும் ஆட்பட்டு, எதிர் கொள்ளும் திறனை இழந்து வருகின்றான். உழைப்பும், சிரமமும் இல்லாமலேயே உற்பத்தியை ஆக்கி விடலாம் என நம்புகின்றான்.

அவன் வேர்வை கூட உப்பில்லாப் பண்டம் ஆகி வருகிறது. ஆறுகள் அப்படியே நடந்து வந்து, வீட்டுக் குழாய்க்குள் விழ வேண்டும் என்று எண்ணுகின்றான். எந்தத் துன்பமும் மேற் கொள்ளாமல் காற்று வந்து கை விசிறியாகிவிட வேண்டும் எனக் கனாக் காண்கிறான். மழையை எதிர்கொள்ளத் தயாராய் இல்லை; ஷவரே அவனுக்குப் போதுமானதாகி விட்டது. ஏரும் கீறிடாமல், நிலம் சோறிடுமா? விதை நெல்லையே வாய்க்கரிசியாக்க முற்பட்டு விட்டான். பிணமாகும் போது மட்டுமே நிமிர்கிறான்.

ஆங்கிலக் கவிதை ஒன்று அவையெல்லாம் நுழைந்து அலறுகிறது.

"Every body wants to go to heaven
but
No body wants to die"

**"எல்லோரும் சொர்க்கத்திற்குப் போக
விரும்புகிறார்கள்!
ஆனால்
யாரும்
சாவதற்குத் தயாராக இல்லை"**

தற்போதைய மனித மனோபாவத்தை இதனைவிட எப்படித் துல்லியமாகச் சித்தரிக்க முடியும்? தன் குழந்தைக்கான இனிஷியல் எழுத்தைக் கூட இவன் அடுத்தவன் அச்சுக் கூடத்தில் தேடினாலும் ஆச்சரியப்படுவதிற்கில்லை. காய்க்காத கரங்களுக்குக் கனிகள் கிடையாது என்றொரு அவசரச் சட்டம் போட்டால் பரவாயில்லை.

அதுவரை இலவச நிலத்தை மயானமாக்கி, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியைச் சவப்பெட்டியாக்கிக் கொள்ளலாம். வேலையில்லாச் சந்ததிகள் அரசு உதவித் தொகையால் மலர் வளையம் வாங்கலாம். கேஸ் அடுப்பில் மரண விருந்துக்கு, இரண்டு ரூபாய் ரேஷன் அரிசி, இலவச அரிசியோடு வாங்கலாம்!

அக்டோபர் 2006

விழித்தால், விடியும்



மூக்குத்தியைக் கொடுத்து மூச்சினைத் திருடுகிறார்கள். குடம் தந்து விட்டு தண்ணீரைக் கொள்ளையடிக்கிறார்கள். மக்கள் அவர்கள் கட்டிக் கொடுத்த சிறுநீர் அறைகளைப் பாராட்டிக் கொண்டிருக்கும் போது களவாடப்பட்ட சிறுநீரகங்களைப் பற்றி அறியாதவர்களாயிருக்கிறார்கள். சவப்பெட்டிகளைக் கொடுத்தவர்கள்தான் சாவுக்குக் காரணமானவர்கள் எனப் புரியாதிருக்கிறார்கள்.

தேர்தல் தேவதைக்கு எதனைப் படையலிடுவது பொருத்தமாக இருக்கும்? 'சுருட்டு' அநேகமாகச் சரியானதாக இருக்கும். வேட்பாளர்கள் வாக்குப் போட பணந் தருகிறார்கள். சலவை நோட்டுக்களால் மக்களை அழுக்

காக்குகிறார்கள். நீட்டப்பட்ட 500 ரூபாய் நோட்டில் மகாத்மா சிரிக்கிறார். கோட்சே கூட ஒரு முறைதான் கொன்றான். ஆனால் இவர்கள்? கை 'மை' தாங்கும்போதே, ஜனநாயகம் கைம்மையாகி விடுகிறது.

'பட்டினப்பாலை'யில்
"விலைஞர் குரம்பை மாவீண்டவும்
வலைஞர் முன்றில் மீன் புரளவும்"

என்ற காட்சி எதிர்மறையாக மீண்டும் பதிவாகியுள்ளது. கசாப்புக் கடைக்காரன் வீட்டிற்கு ஆடு, மாடுகள் ஆவலாய்ச் சென்றதையும், மீனவர்கள் முற்றத்திற்கு மீன்கள் துள்ளிச் சென்றதையும் பார்த்தோம். ஆம் வாக்குச் சாவடி முன் நின்ற ஓட்டு மந்தைகள் கூட்டமும் அப்படித் தான்.

பலி பீடத்திற்கு இழுத்து வரப்படும் பலியாடு கழுத்தில் கட்டப்பட்ட 'இரட்டை மாவிலை'யை இரையென்று கருதி மகிழுமாம். தலையில் தெளிக்கப்படும் 'மஞ்சள்' நீரை, ஆகா மனிதன் சூரிய வெயில் சூட்டைத் தணிக்க நம்மீது கருணை கொண்டல்லவா நீரைச் சொரிகிறான் என்று எண்ணுமாம். திடீரென்று ஈரநீர் பட்டவுடன், ஆடு தலையைச் சிலுப்பும். ஆஹா சம்மதங் கொடுத்து விட்ட தென அரிவாளால் ஒரே போடு போடுகிறார்கள். ஆட்டு மந்தைக்கு அறியும் அறிவில்லை.

மாட்டுப் பொங்கல் அன்றைக்கு மாட்டையே பொங்கல் வைத்து விடுகிறார்கள். மாட்டுப் பொங்கல் அன்று என்ன நடக்கிறது? 365 நாள்களில், மாட்டுப் பொங்கல் தவிர்த்த ஏனைய 364 நாள்களிலும் அந்த மாட்டைச் சாட்டையால் அடித்தவன், தாற்றுக் கோல் நுனி ஆணியால் கீறி ரத்தம் கசியச் செய்தவன், அடிமைப்படுத்திக் கழுத்தில் நுகத்தடி பூட்டியவன், அந்த ஒரு நாள் மட்டும் மாட்டுக்கு மாலை போட்டுக் கும்பிடுவான். மாட்டுக்குப் போடும் கும்பிடும் ஓட்டுக்குப் போடும் கும்பிடும் ஒன்று தான்.

இராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு கதை மூலம், பரமான்மாவைக் கூடும் பேரின்பத்தைக் கோட்டை விட்டு சிற்றின்பத்தைத் தேடும் ஜீவான்மாக்களின் நிலையை விளக்குகிறார். ஆனால் அக்கதை தேர்தலை முழுக்க நம்பும் மக்களுக்குச் சிறந்த உதாரணமாக இருக்கிறது. கதை இது தான்.

சர்க்கரைக் குவியலைச் சுற்றி, சற்று இடைவெளி விட்டுச் சர்க்கரைத் துகள்களால் ஆன வட்டம் போடப்படுகிறது. சர்க்கரை வாசம் பிடிக்கும் எறும்புகள் சர்க்கரைக் குவியலை மொய்த்து விடாதவாறு போடப்பட்ட இனிப்பு வேலி அது. வளையத்திற்கு

வந்த எறும்புகள் வட்டத்தில் உள்ள சில சர்க்கரைத் துகளை மட்டும் சந்தோஷமாக எடுத்துச் செல்கின்றன. சின்னச் சின்னச் சலுகைச் சர்க்கரைத் துகள் மட்டும் எறும்புகட்குத் திருப்தி அளிக்க, சர்க்கரை அம்பாரத்தை தங்கட்குத் தக்க வைத்துக் கொள்ளும் அரசியல் வணிகர்களைப் பார்க்கலாம். சர்க்கரை உங்களுக்குத் தந்து விட்டுச் சர்க்காரை நாங்கள் வைப்பாக வைத்துக் கொள் கிறோம் என்று எறும்புகளை ஏமாற்றுகிறார்கள் வியாபாரிகள். ஆனால் வியாபாரிகளைப் பாரிகளாக நம்புகிறார்கள் வாக்காளர்கள்.

செயற்கையான முறையில் சினையாக்கப்பட்ட வாக்குப் பெட்டிகள் வாயும், வயிறுமாய் இருக்கின்றன. நேராட்சியாய் இருக்க வேண்டிய ஊராட்சிகள் இன்று ஏலம் விடப்படுவது உச்ச பட்ச அவலம். களவாடும் தளவாடமாக வாக்குச் சீட்டு.

லல்லு பிரசாத் முதலமைச்சராகப் பீஹாரை ஆண்டபோது ஜப்பானிலிருந்து வந்த அமைச்சர்கள் குழு அவரைச் சந்தித்தது. பீஹாரின் அவல நிலையைப் பார்த்தது. முன்னெல்லாம் பீஹாரில் பெரும்பகுதி ஏழைகள் உண்ண உணவின்றி, அங்கு மேயும் மாடுகள் போடும் சாணத்தைக் கழுவி, அதிலுள்ள செரிக்காத கோதுமை மணிகளை எடுத்துச் சமைத்துச் சாப்பிடுவார்களாம். லல்லு வந்து அந்தக் கால்நடைகள் வயிற்றிலும் அடித்து விட்டார். பீஹாரின் பின் தங்கிய நிலையை மாற்ற வேண்டும் என விரும்பி, ஜப்பான் அமைச்சர் குழு, லல்லுவிடம் ''பீஹாரை எங்களிடம் ஒப்படையுங்கள், ஓர் ஆண்டில் அதனை ஜப்பான் ஆக்கிக் காட்டுகிறோம்" என்றார்கள். அதற்கு லல்லு "அது வேண்டாம். நீங்கள் ஜப்பானை என்னிடம் ஒப்படையுங்கள், ஒரு மாதத்தில் பீஹார் ஆக்கிக் காட்டுகிறேன்" என்றாராம். துணுக்குற வேண்டிய நகைச்சுவைத் துணுக்குதான் என்றாலும் இன்றைய ஊராட்சித் தேர்தலில் 15 நாள்களில் தமிழகத்தைப் பீஹார் ஆக்கி விட்டார்கள் என்பதே உண்மை.

> **"சிறந்த அறப்போர் அநியாய ஆட்சியாளன்**
> **முன் சத்தியத்தை எடுத்துரைப்பதாகும்"**

என்றார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள். அவர்கள் சொன்னதாக மிஷ்காத் என்ற தொகுப்பில் மற்றொரு சம்பவம் சுட்டிக் காட்டப்படுகிறது.


"ஒரு முறை இறைவன், வானவர் தலைவர் ஜிப்ரயீல் (அலை) அவர்களுக்கு ஓர் ஊரைப் புரட்டி அழிக்குமாறு உத்தரவிட்டான். ஜிப்ரயீல் (அலை) அவ்வூரில் ஒரு நல்லடியார் இருக்கின்றார், அவர் இறைவனுக்கு மாறு செய்ததில்லை" என்று கூற, இறைவன்

"அது சரி என்றாலும், அவர் நெற்றி, மாறு செய்யும் ஆட்சியாளனைக் கண்டு ஒரு போதும் சுருங்கியதில்லை. குறைந்த பட்சம் வருத்தமோ, கோபமோ கொள்ளவில்லை. எனவே, என் கட்டளையை நிறைவேற்றுங்கள்" என்றான். முதிர்ந்த பாராளுமன்ற ஜனநாயகவாதி திரு செழியன், பத்திரிக்கையாளர் சோ, முன்னாள் காவல்துறைத் தலைவர் லட்சுமி நாராயணன் உட்படச் சிலர், உள்ளாட்சித் தேர்தல் முறைகேடுகளைக் கண்டிக்க ஒரு உள்ளரங்கக் கூட்டத்தை ஒழுங்கு செய்ததை, அரசு தடுத்தது முறைகேடானது. அகமும், முகமும் சுளிக்கச் சிந்தனையாளர்கள் முயன்றதை ஆள்பவர் தடுப்பதை, ஆண்டவர் பார்த்துக் கொண்டிருக்கிறார். மக்களாட்சி, பேச்சு சுதந்திரத்திற்கு வாய்ப்பூட்டும் என்று எதிர்ப்பார்த்தால் வாய் பூட்டும் என்பதே நிதர்சனமாக இருக்கிறது.

குழந்தை கண் மூடிக் கொண்டுதான் பிறக்கிறது. ஆனால் யதார்த்தம் என்ன? பெற்றோர் இருவர் கண் விழித்தார்கள். குழந்தை கண் மூடிக் கொண்டு பிறக்கிறது. ஆம் இருவர் விழிப்போடு இருந்தால் தான் ஒருவர் கண்மூடி நிம்மதியாய் இருக்க முடியும் என்பதையே அது உணர்த்துகிறது. எனவே, விடிந்தால் விழிக்கலாம் என்ற நிலையைவிட்டு மக்கள், விழித்தால் விடியும் என்பதை உணரத் தலைப்பட வேண்டும்.

நவம்பர் 2006

காம்பஸ் கால்கள்



பாரதி தமிழின் பெண் வடிவம். பாரதிதாசன் ஆண்வடிவம். அவரின் தாசன் சுரதா (சுப்பு ரத்தின தாசன் என்பதன் சுருக்கம்) தமிழின் அர்த்தநாரி வடிவம். உவமைக்கு உவமை சொன்ன உவமையிலா உவமைக் கவிஞர். தளர்வறியாத் தன்மானக் கவிஞர். அவரின் அடையாளமே மனவுறுதிதான். தன் காலைச் சொரிவதற்கும் தலை குனியாச் சுயமரியாதைப் பாவலர். சுரணை ஏற்படுத்தும் சூடு அவர் பாட்டுக் கோளத்தின் மத்தியக் கோடு. அவையடக்கம் பாடுவது அன்றைய புலவர்களின் ஆபரண மரபு. கருடன் பறந்த வானத்தில் ஈயொன்று பறப்பதைப் போல, வெடிக்கும் இடிக்கு முன்னே வெட்டுக்கிளி பெருமூச்சு விட்டதைப் போல எனத் தம்மைத் தாழ்த்தி, தமக்கு முன்னர் பாடிய பெரும்புலவர்களை வாழ்த்திப் பாடுவது பழந்தமிழ்ப்

பாவலரின் பரம்பரைக் குணம். பயம் சுரக்கும் இந்தப் பான்மை விடுத்துச் சுயம் சுரக்கும் சொந்த முத்திரை சுரதாவிடம் நயம் சுரக்க வெளிப்படுகிறது. ஆசான் பாரதிதாசனுக்கே அழகிய சான்றிதழ் வழங்கியவர் அவர். பாவேந்தர் பற்றிச் சுரதா

"நிருத்தத்தில் வெற்றிபெற்றான் ஆட்ட னத்தி
நிதியளித்து வெற்றிபெற்றான் குமண வள்ளல்

திருத்தத்தில் வெற்றிபெற்றான் ஒட்டக் கூத்தன்
தீர்ப்பளித்து வெற்றிபெற்றான் கரிகாற் சோழன்

வருத்தத்தில் வெற்றிபெற்றார் வடலூர் வள்ளல்
வாளேந்தி வெற்றிபெற்றான் சேரலாதன்

விருத்தத்தில் பெற்றிபெற்றார் கம்பர் அந்த
வெற்றியினை இவர்பெற்றார் என்னைப் போல"

எனக் குறிப்பிடுகின்றார். மாணாக்கர் சொல்கிறார்: விருத்தம் பாடுவதில் கம்பர் பெற்ற வெற்றியை என் ஆசிரியர் பாரதிதாசன் பெற்றார்; அதுவும் யாரைப் போல 'என்னைப் போல'. சுரதா பாடிய இந்த விருத்தத்தின் கடைசி இரண்டு சீர் புலமை அடிமைத் 'தளை' விடுத்தது. அந்த உறுதிப்பாடு கவித்துவ கம்பீரம்.

மேற்கத்திய நாட்டுக் கவிமரபு பெண்மையை "WEAKER SEX" என்று விளிப்பதுதான். அதனை உடைத்து, பெண்மை திண்மை மிக்கது. அதனைவிட வலிமையுள்ளது உலகில் வேறெதும் இல்லை என்பதைப் புரட்சியாளர் வள்ளுவர்

"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்"

என்கிறார். குட்டு வைக்கும் காற்றில் குலைந்து விடும் குமிழியல்ல பெண். புயலை உள்வாங்கிப் பூபாளமாய் வெளிப்படுத்தும் புல்லாங்குழல்.

'மயூரி' என்றொரு திரைப்படம். தன் பாதசதங்கைக்குப் பார்ப்போர் இதயங்களையே பரலாக்கி விடும் பரதக் கலைவாணி சுதாசந்திரன். அப்படத்தின் கதாநாயகி அவர்தான். 'தோகை' மயில்கள் குத்தாட்டம் போடும் திரையில், உள்ளபடியே ஒரு தோகைமயில். கைவழி நயனம் செல்ல, கண்வழி மனமும் செல்ல, மெய்வழி பார்ப்போர் விழிகள் தொடர ஆடுவதால் அவர்மயில் தான். மெல்லத் திறந்து பார்க்கும் சதங்கை விழிகளில் கண்ணீர் துளிர்க்க ஆடுகிறார். காரணம் அவரின் ஒரு கால் முழுமையாகவும், மற்றகால் விபத்தில் வெட்டப்பட்ட பாதிக்கால் என்பதால் பாதியாகவும் இருப்பதே. வேகக் காற்றைப் போல் விசையாகச் சுற்றுகிறார்; சுழல்கிறார். வெட்டுண்டு, மரக்காலால் ஒட்டுண்டு ஆடுகிறார் என்பது கொஞ்சமும் தெரியாமல் ஆடுகிறார். எத்தகைய நெஞ்சுறுதி! மரக்காலால் அட்சதை அரிசியை அளந்து கொண்டிருக்கிறார்.

மாணவர்களோடு படம் பார்த்துக் கொண்டிருந்தேன். மயூரி சுதாசந்திரன், விரகு நாட்டியங்கள் மத்தியில் விரத நாட்டியமாய்ப் பரத நாட்டியத்தை ஆடுவது பற்றிக் கேட்டேன். ஒரு மாணவர் பம்பரம் போல் சுழன்றாடுகிறார் என்றார். ஒற்றைக் காலால் ஆடுவதால் அப்படிச் சொல்கிறாயா என்றேன். மற்றொரு மாணவர் கணிதம் பயில்பவர். அவர் சொன்னார் ஆடும் மயூரியின் கால்கள் ஜாமெண்ட்ரி பாக்ஸிலிருக்கும் காம்பஸைப் போல என்றார். நான் துள்ளிக் குதித்தேன். காம்பஸின் ஒரு கால் முழுமையாக இருக்கும். மற்றொரு கால் பாதியாகத் தான் இருக்கும். யோசிக்காமல் சட்டென வெளிப்பட்டாலும், அந்த உவமையின் பொருத்தம் உணர்ந்து சிலிர்த்தேன். மற்றொரு மாணவர் "மயூரியின் கால்கள் காம்பஸ் போல என்பது மிகவும் பொருத்தம். ஏன் தெரியுமா? பாதிக் காலாக மரக்கட்டையைக் காலாக இணைத்திருக்கிறார்கள்; காம்பஸில், மரத்தாலான பென்சில் செருகியிருப்பதைப் போல" என்றவுடன் புளகப் பூரிப்பில் மாணவர்க்குப் பரிசொன்றை அளித்தேன். மயூரியின் ஒரு காலை பூமி தாங்கியது. மறுகால் பூமியில் படாது. பூமி இரசிப்பின் லயிப்பில் உயர்ந்து, உயர்ந்து அந்த அரைக்காலையும் தாங்கியதோ என என் உள்ளம் இன்னும் வியக்கிறது. காம்பஸின் ஒரு கால் உறுதியாக இருந்தால்தான், அதன் பணி சிறக்கும். மறுகாலாம் குறைகால் கூட இணைக்காலின் உறுதியால் தான் சரிவரப் பணியாற்ற முடியும் என்று தோன்றுகிறது.

மறுநாள் காலை JOHN DONNE கவிதைகளைப் பார்த்துக் கொண்டிருந்த போது, இதே காம்பஸை வைத்து, அவர் பாடிய பாடல் ஒன்றின் கருத்து என்னைக் கவர்ந்தது. கணவனும் மனைவியும் காம்பஸின் இருகால்களைப் போல என்ற JOHN DONNE

"நீ
என்னை விட்டு
விலகுகிறாய்
காம்பஸின்
ஒரு காலைப் போல
மீண்டும் சேர்வதற்காகத்தான்
ஒரு
கால்
உறுதியாக நின்றால் தான்
மறுகாலால்
வட்டத்தை ஒழுங்காக
வரைய முடியும்"

என்கிறார். அழகான படிமம்; அதுவே இல்வாழ்வின் இயல்பான குறியீடாக ஆளப்பட்டுள்ளது.

உணர்வுப் பூர்வமாக இணைகிறவர்கள், உணர்வின் எழுச்சி அடங்கியவுடன் விலகி விடுவார்கள். நிலவாகத் தெரிந்த முகம் அப்பளமாக நொறுங்கி விடும். இன்பத்துப்பால் சுரக்கும்

திருக்குறளின் இரண்டு வரிகளைப் போலத் தென்பட்ட இதழ்கள் எச்சில் படிக்கமாக எடுபட்டு விடும். காதலர்கள் அறிவுப் பூர்வமாக இணைய வேண்டும். அதனால் தான் சங்க காலத்தில் காதலர்களைத் தலைவன், தலைவி என்றார்கள். தலை மூளையுள்ள இடமல்லவா. காம்பஸ் கூடத் தலையால் இணைந்துள்ளது. அதன் ஒரு கால் பிரிந்தாலும் உறுதியாக நிற்கும் அந்த ஒற்றைக் காலைச் சுற்றித்தான் வட்டம் போட்டுக் கொண்டேயிருக்கும். பிரிவு கூடக் கூட அன்பு வட்டம் சுருங்காது பெரிதாகிக் கொண்டே தானிருக்கும். அதனால் தான் தாகூர்,

> "It is not Separation
> but
> elongation of love"

(காதலில் பிரிவென்பது பிரிவல்ல; அன்பின் விரிவு)

என்கிறார். அருகில் இருக்கையில், நாம் விரும்பும் அந்த ஒரு முகம் தான் தென்படும். ஆனால் பிரிவில் எதனைப் பார்த்தாலும் அந்த முகம் தான். காண்பவையெல்லாம் அவையே போறல்.

காம்பஸின் ஒரு கால் உயரமாக இருக்கும். மறுமுனை உயரம் குறைந்திருக்கும். நுட்பமாகப் பார்த்தால் உயர்ந்த கால், தன் பணிவால் தாழ்ந்திருக்கும். மற்றொருகால் குறைக்கால் அல்ல. அது பணிக்காக உயர்ந்திருக்கும் (வட்டம் போட). இரண்டும் சமமான கால்களைப் பெற்றதை ஜாமெண்ட்ரி பாக்ஸில் டிவைடர் (Divider) என்பார்கள். ஆனால் ஜான்டன் பிரிக்கும் டிவைடரைக் குறியீடாகக் கொள்ளாமல், இணைந்தே இருக்கும் காம்பஸைக் காதலர்களின் குறியீடாக்கியது சாலப் பொருத்தம். சமமாய் இருக்கும் வாழ்வு சுகமாய் இராது. தண்டவாளங்கள் இணையாது. குறுக்கும், நெடுக்குமாய்ச் சென்றாலும் கோலக்கோடுகள் இணையும். புள்ளிகள் இணையும்.

காம்பஸின் முழுமையான கால் கூர்மையானது. அது பெண்ணைப் போல, மறுமுனை ஆணைப் போலக் கூர்மையற்றது தான். உலக இயக்கத் தேவைக்காகத் தான் இந்த வேறுபாடு. பெண் உறுதியாக இருந்தால்தான் ஆணின் பணி முழுமையாக முடியும். காம்பஸின் ஒரு கால் உறுதியில் தான் மற்ற காலின் பணி நிறைவாக அமையும். கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் பத்திரமாகக் கரை திரும்புவது, கரையில் இருக்கும் மீனவப் பெண்ணின் ஒழுக்க உறுதியில் தான் என்பது இன்றுவரை அவர்களிடம் நம்பிக்கையாக விளங்குகிறது. வேட்டைக்குச் செல்லும் முல்லை நிலத்து ஆயர்களின் அம்பு சரியாக இலக்கினை அடைவதற்குக் காரணம், அவர்களின் பெண்கள் நிறைவுறுதியோடு இருப்பதுதான் என்று கலித்தொகையில் முல்லைக்கலி

"தாம்பிழையார் தாம் தொடுத்த கோல்"

எனக் குறிப்பிடுகிறது.


"புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை"

என்று வள்ளுவம் பேசுவதும் எண்ணத் தக்கது. ஆணின் பெருமிதம் பெண்ணைச் சார்ந்தே இருக்கிறது. 'பத்து பிள்ளை பெத்தவள், கணவன் செத்தால், ஒத்தையாய் நின்று பத்தையும் தாங்குவாள்; பத்தும் சேர்ந்து ஒத்தைப் பெத்ததாயைத் தாங்குவதில்லை' என நாட்டுப்புறத்தின் நாவுகளில் தொட்டில் கட்டிய சொலவடை உண்டு. இன்னொரு பார்வையில் காம்பஸின் குறைகால், தன்னோடு, இன்னொன்றை இணைத்துத்தான் பணியாற்ற முடியும் என்பதனையும் சுட்டி, தன் இணை இழந்தால் மற்றொன்றை இணைக்கும் ஆணுலகைப் படம்பிடித்துக் காட்டுகிறது. ஆனால் பெண் கணவனை இழக்கிற போது குடும்பத்தின் எல்லாச் சுமைகளையும் தான் தாங்குவாளே தவிர தனக்கென ஓர் இணையைத் தேடுவது அபூர்வம். மனைவி இறந்தால் ஆண் புது மாப்பிள்ளை. ஆனால் பெண் புதுப் பெண் ஆவதில்லை. இது உள்ளம் சுடும் உண்மை.

JOHN DONNE-இன் காம்பஸைச் சுற்றிக் கொண்டேயிருந்தால், கருத்துகள் புதுபுதிதாய்ப் பற்றிக் கொண்டேயிருக்கின்றன. நீங்கள் சுற்றினால் இன்னும் கிடைக்கலாம். கவிஞன் பேனா காம்பஸின் முழுக்கால். இரசிகன் அடுத்த கால். காதலன் காதலி போலத்தான்.

டிசம்பர் 2006

செந்நீரைக் திருப்பிய செம்மீன்



ஊசி விற்க வந்த வெள்ளையர்கள், உண்டாக்கிய கிழிசல்களால், கந்தலாய்க் கிடந்த இந்தியச் சேலையை மாற்றி, மூவண்ண முகூர்த்தச் சேலையைத் தன் பாட்டுத் தறியிலே போட்டுத் தந்த பாவலன் பாரதி. அவன் எழுதிய 'பாஞ்சாலி சபதம்' பாரத விடுதலையின் தொன்மக் குறியீடு. "ரௌத்திரம் பழகு" என்று புதிய ஆத்திச் சூடி புனைந்தவன் கோபப்பட்ட இரண்டு இடங்கள் பாஞ்சாலி சபதத்தில் பளிங்கெனப் புலப்படுகின்றன. தருமத்தின் தனிமை தீர்க்க வந்த தருமராசன், சூதில் படிப்படியாக எல்லாச் செல்வங்களையும் இழக்கிறான். பாரதி மௌனமாக இருக்கிறான். நாட்டைப் பணயம் வைத்தவுடன், அவனால் தாளமுடியவில்லை. பாடுவது ஒரு 'கண்ட காவியம்' என்பதை மறக்கிறான். சூடு அளக்க வந்த 'தர்மா மீட்டர்' வெப்பம் ஏறி வெடிப்பதைப் போல வெடிக்கிறான்.

"வாயில் காத்து நிற்போன் - வீட்டை
வைத்திழத்தல் போலும்
கோயில் பூசை செய்வோர் - சிலையைக்
கொண்டு விற்றல் போலும்
ஆயிரங்கள்ஆன நீதி
அவையுணர்ந்த - தருமன்
தேயம் வைத்திழந்தான் - சீச்சீ!
சிறியர் செய்கை செய்தான்"

எனப் பேனாவால் காறி உமிழ்கிறான். சிற்றரசர்கள் ஆங்கிலேயரிடம் தேசத்தை இழந்தது இரத்தத்திலுள்ள சிவப்பு அணுக்களின் எண்ணிக்கையைக் கூட்டியிருக்க வேண்டும். ஆளவந்தவர்கள் நாட்டின் உரிமையாளர்கள் அல்லர், காவலர்கள்.

இந்தச் சரணக்காட்சி பாடுகையில் அவன் பல்லவி போல

"தாயம் உருட்டலானார் - அங்கே
சகுனி வென்று விட்டான்"

எனத் திரும்பத் திரும்பக் கொதிக்கிறான். 'தாயம்' விளையாட்டு தாயம் (உரிமை) வைத்து விளையாடிய மன்னர்களைக் குறிக்கிறது. உரிமை என்பதைக் குறிக்கும் தொன்மைச் சொல் தாயம்.

"பால்தர வந்த பழவிறல் தாயம்"

என அரசுரிமை ஊழ் விதிப்படி வந்தது என்பதைப் புறநானூறு பேசுகிறது. அரசியலே தாயமாகி விட்டது. ஒருவரை ஒருவர் வெட்டி, வெளியேற்றித்தான் முன்னேற்றம் நிகழ முடியும். தாயம் என்ற சொல் பாரதியின் கவிதையில் இன்னும் ஆழ அதிர்வுகளை ஏற்படுத்துகிறது. தாய விளையாட்டில் சோழிகளை வைத்து விளையாடுவார்கள். கடல் இல்லாத தென்னக மதுரை, திருநெல்வேலிப் பகுதிகளில் புளியங் கொட்டையைச் சோழிகளுக்குப் பதிலாக வைத்து விளையாடு வார்கள். புளியங்கொட்டையை எடுத்து அதனைப் பாதியாகத் தேய்த்துக் கொள்வார்கள். பின்னர் தாய விளையாட்டிற்குப் பயன்படுத்துவார்கள். பாரதியும் இதனைச் சிறுவயது முதலே கண்டிருக்க வேண்டும். விளையாட்டில் 'தாயம்' என்றால் எதுவோ அதுதான் அரசியல் தாயத்திலும். 5 அல்லது 7 புளியவிதை முத்துக்கள் பயன்படுத்தப்படும். எது தாயம்? நான்கு (ஐந்தாக இருந்தால்), ஆறு (ஏழாக இருந்தால்) கொட்டைகள் கவிழ, ஒன்று மட்டும் நிமிர்ந்திருக்கும் நிலைதான் தாயம். ஆம்! ஒருவனை நிமிர்த்த மற்ற அனைவரையும் கவிழ்ப்பதுதான் அரசியல் தாயம். புளியங் கொட்டையில் பாதி தேய்க்கப்பட்டே தாயத்தில் பயன்படுத்தப் பட்ட புளியவிதை மேல்பகுதி கருப்பாக, அடிப்பகுதி வெள்ளையாக இருக்கும். தாயம் தொடங்கும். வெள்ளையன் ஒருவனை நிமிர்த்த, மற்ற எல்லாக் கருப்பர்களையும் கவிழ்த்த நிலையைத்தான் பாரதி தாயம் உருட்டலானார் என்ற பல்லவியில் வெளிப்படுத்துகிறான். உருட்டல் புரட்டல்களால் நாடு அடிமைப்பட்டுள்ளதே என்ற கோபம் சுரலயப் பிரளயமாகத் தெறிக்கிறது.

துச்சாதனன் ஒற்றை யாடையில் இருக்கும் பாஞ்சாலியின் துகிலைப் பற்றித் தெருவழியே இழுத்து வருகின்றான்.

''ஆவென்று அலறித் துடிக்கின்றாள்
மாடு நிகர்த்த துச்சாதனன் அவள்
மைத்துகில் பற்றி இழுக்கின்றான்
நீண்ட கருங்குழலை நீசன் கரம்பற்றி
முன்னிழுத்துச் சென்றான் வழிநெடுக மொய்த்தவராய்
என்ன கொடுமையிது என்றே பார்த்திருந்தார்''

இந்தக் காட்சியில் துகிலைப் பற்றியிழுத்த துச்சாதனன் மேலோ, சட்டையைத் தானே உரித்துக் கொள்ளும் பாம்பினைக் கொடியாகப் பெற்றுள்ள துரியோதனன் மேலோ. பாரதிக்குச் சினம் வரவில்லை. மாறாக நடப்பது கொடுமையெனத் தெரிந்தும், தடுப்பது கடமையென அறிந்தும், வேடிக்கை பார்க்கும் மக்களைப் பார்த்துக் கொதிக்கிறான்.

''வீரமிலா நாய்கள் விலங்காம் இளவரசன்
தன்னை இழுத்துத் தராதலத்தில் போக்கி,
பொன்னை அவள் அந்தப் புரந்தன்னில் சேர்க்காமல்
நெட்டை மரங்கள் என நின்று புலம்பினார்
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணை யாவதுண்டோ?''

எனக் கூக்குரலிடுகின்றான். துச்சாதனனைப் பார்த்து மக்கள், தலையசைத்தால் கூட மறுத்ததாகி விடுமென அஞ்சி, வெறுமனே பார்த்து இருந்தார்கள். சாக்கடையில் மொய்க்கும் ஈக்கள் அதனைத் தூர்த்துவிட முடியுமா? எனவே அவர்களை வீரமிலா நாய்கள் எனக் கொட்டி முழங்குகிறான். தென்னை, பனை, தேக்கு, பாக்கு போன்ற நெட்டை மரங்கட்குக் கிளைகள் இல்லை. குட்டை மரங்கட்குக் கிளைகள் உண்டு. நின்ற மக்கள் கைகளை நீட்டித் தடுக்கவில்லை. எனவே கைக் கிளை நீட்டாத மக்களை நெட்டை மரங்கள் என்றது சாலப் பெருத்தமானது.

முண்டாசுக்குக் கீழே முறுக்கி நிமிர்ந்திருக்கிறது பாரதியின் மீசை. வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு முன்பு கருப்பினம் நிமிர்ந்து நிற்க வேண்டும் என்பதற்காக. பாரத மாதாவின் வடிவமான பாஞ்சாலியின் மானங் காத்தவனும் கருப்பு நிறக் கிருஷ்ணன் தான். பாரதியின் கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் என்ற முப்பெரும் பாடல்களிலும் வெள்ளைக்கெதிரான கறுப்பு வண்ணம் தான் நுட்பமாகத் தெரிகிறது. மண்விடுதலைக்காகவும், பெண் விடுதலைக்காகவும் பாரதி பாஞ்சாலி சபதத்தில் தன் வெகுளியை முழுக்க வெளிப்படுத்தினான்.

''செத்த மீன் தான்
ஓட்டத்தோடு
செல்லும்''

என்கிறது ஒரு புகழ்மிக்க ஆங்கிலப் பழமொழி. ஆட்சி, அதிகாரம் என்ற ஓட்டத்தோடு செல்வது அடிமைக் கூட்டம். உயிருள்ள மீன்

நீரோட்டத்திற்கு எதிராக நீந்தும். தவறுகிற ஆட்சியாளர்களுக்கு எதிர் இயக்கம் நடத்தும் விடுதலை உணர்வு என்பது உயிர் இருப்பதன் அடையாளமாகும். எதிர்நீச்சல் போடுவது மட்டுமல்ல, நீரோட்டத்தைத் தன் செவுளால் தன் போக்கிற்கு மாற்றிய மீன் பாரதி.

கவிக்குயில் சரோஜினி நாயுடுவின் சகோதரர் ஹரீந்திரநாத் சட்டோபாத்தியாயா

> "A true - born writer is a
> true - born fighter:"

என்று குறிப்பிடுகின்றார். அச்சு அசலாக இந்த இலக்கணம் அக்கினிக் குஞ்சுகளை அடைகாத்த பாரதிக்கே ஏற்றது. எல்லா அடிமைத் தனங்களோடும் சமரசமின்றி எதிர்த்துப் பாடியவன், கட்டுரைகள் எழுதியவன் மட்டுமல்ல கடைப்பிடித்தவனும் ஆவான்.

> 'சந்தித் தெருப்பெருக்கும்
> சாத்திரம் கற்போம்'

என்று துப்புரவுப் பணிக்குச் 'சாஸ்திர அந்தஸ்து' தருகிறான்.

> "நந்தனைப் போலொரு பார்ப்பான்
> நானிலத்தில் உண்டோ?"

என்று எழுதிய அவன் கைதான் கனகலிங்கம் என்ற தலித் தோழருக்கு பூணூல் அணிவித்தது. அவன் சனாதன மாட்டுத் தோலால் ஆன பறையை, தருப்பை எரித்து வளர்த்த நெருப்பில் வாட்டி, முரசு கொட்டியவன். அவன் எழுதுகோலை விதைத்தால் பெரியாரின் கைத்தடிகள் விளையும்.

–பாரதி 125ஆம் ஆண்டு நினைவாக...

அயல்மகரந்தச் சேர்க்கை



அப்துல் காதர்



அயல்மொழிக் கவிதைகள். கருத்துக்கள் எனும் மையத்தின்மேல் வட்டம் வரையும் கருவியின் (காம்பஸ்) கூர்மையான. முழு நீளமுள்ள காலினை ஊன்றி மற்றொரு காலில் நம்நாட்டு இலக்கிய உணர்வூறும் பேனாவைச் செருகி.
ஒருமைப்பாட்டுணர்வெனும் சில வட்டங்களைக் காதர் இந்நூலின் தாள்களில் வரைந்துள்ளார்.

-சிலம்பொலி செல்லப்பனார்.



விவேகானந்தமும். இராமலிங்கமும்.
பரமஹம்சமும்.அண்ணல் நபிமொழியும்
அமுதவாசகங்களோடு பின்னிப் பிணைந்து
மானுட வாழ்வின் மறக்கமுடியாத
அனுபவங்களைத் தருகின்றது
பேராசிரியரின் வித்தகத்தமிழ்.

-கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம்



பார்வை புதிதாய்
எண்ணம் புதிதாய்
சொல்லாடல் புதிதாய்
பாயும் தமிழ் அவர்.
தமிழினத்தை மயக்கும்
இலக்கியத்தின் நயன் அல்ல.
தமிழினத்தை இயக்கும்
இலக்கியத்தின் பயன்.

-கவிஞர் காசி ஆனந்தன்